


358

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

நமது தமிழ் நாடு

கன்னியாகுமரி மாவட்டம்



KVC0091

V211
K1
358

'சோமலெ'

358

நமது தமிழ்நாடு (3)

கன்னியாகுமரி மாவட்டம்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : செப்டம்பர், 1961
உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூ. 3·00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

சென்னை சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர்,

உயர்திரு. மு. ரா. பெருமாள் முதலியார்,

எம். ஏ, எல். டி.

அவர்கள் அன்புடன் வழங்கிய

சிறப்புரை

திரு. 'சோமலெ' பல ஊர்களையும் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்தவர். உற்று நோக்கும் ஆற்றலை மிகுதியாகப் பெற்றவர். கண்ணிருந்தும் பாராமல், காதிருந்தும் கேளாமல் சுற்றுப் பயணம் செய்யும் பலரைப்போன்றவர் அல்லர் திரு. 'சோமலெ'. தாம் காணும் இடங்களையும் காட்சிகளையும் கூர்ந்து பார்த்து, அவற்றைப் பற்றிய செய்திகளையெல்லாம் திரட்டி, அவற்றைத் தெளிவாகவும் அழகாகவும் இனிய எளிய 'தமிழில் சொல்லோவியங்களாகத் தீட்டித் தருகிறார். அவற்றைப் படிப்பவர் அந்த இடங்களையும் காட்சிகளையும் நேரிற் காண்பதைப் போன்ற உணர்ச்சியுடன் சுவைக்கின்றனர். ஆகவே, இவருடைய பயண நூல்கள் இவருடைய உற்று நோக்கும் ஆற்றலுக்கும் எழுத்து வன்மைக்கும் எடுத்துக்காட்டுக்களாகத் திகழ்கின்றன. இத்தகைய நூல்களை எழுதுவதன்மூலம் திரு. 'சோமலெ' தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் நிறைந்த தொண்டு செய்கிறார். தமிழில் பயண நூல்களின் துறை நாளுக்குநாள் விரிவடைவதற்கும், தமிழர்கள் ஏனைய நாடுகளிலும் ஏனைய ஊர்களிலும் வாழும் மக்களையும் அவர்கள் வாழ்க்கை முறைகளையும் நன்கு அறிந்து விரிந்த அறிவையும் பரந்த மனப்பான்மையையும் பெறுவதற்கும் திரு. 'சோமலெ' அவர்களின் நூல்கள் துணை செய்கின்றன.

இன்றைய பாரத நாட்டில் ஒற்றுமைக்கு ஊறு விளைக்கக்கூடிய சக்திகள் உருவாகிக்கொண்டு வருகின்றன. அவற்றை முளையிலேயே கிள்ளி யெறியாவிட்டால் நாட்டின் ஐக்கியம் குலைந்து போகும். பாரத நாட்டின் பல்வேறு ராச்சியங்களில் வாழும் மக்களும் தங்கள் தங்களுடைய தனிப்பட்ட மொழி, கலை, வாழ்க்கைமுறை முதலியவற்றை உணர்ந்து போற்றிப் பெருமிதமடைவதுபோலவே ஏனைய ராச்சிய மக்களினுடைய மொழி, கலை, வாழ்க்கை முறை ஆகியவற்றையும் உணர்ந்து பாராட்டி மதிக்கக்கூடிய மன நிலையைப் பெறுவார்களானால் இன்று நமது நாட்டில் தலைதூக்கும் பிளவுச் சக்திகள் மறைந்து, எல்லாரும் இந்நாட்டு மக்கள் என்ற உணர்ச்சியடிப்படையில் பாரத சமுதாயம் ஓங்கி வளரும். இத்தகைய உணர்ச்சியொருமைப் பாட்டுக்கு உதவும் வகையில் திரு. 'சோமலெ' போன்றவர்கள் பல நூல்களை எழுதி உதவ முன்வர வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம் என்னும் இச்சிறு நூல் கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றிய செய்திகளை நமக்குத் தருகிறது. இந்நூலில் பொதிந்து கிடக்கும் பல செய்திகளையும் அம் மாவட்ட மக்கள் கூட அறிந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இந்நூலைப் படிக்கும்போது இந்த மாவட்டத்தில் சாவதானமாகச் சுற்றுப் பயணம் செய்து, இங்கு வாழும் மக்களுடன் அளவளாவி மகிழ்வது போன்ற உணர்ச்சியுண்டாகிறது. இந்த மாவட்டத்தின் வரலாறு, இயற்கையமைப்பு, தட்ப வெப்ப நிலை, மழை, ஆறுகள், குளங்கள், கடற்கரைப் பகுதிகள், மக்கள் செய்யும் தொழில்கள், வாணிபம், போக்குவரத்து வசதிகள், கோயில்கள், கோட்டைகள், பள்ளிகள், கல்லூரிகள், நூல் நிலையங்கள்,

மருத்துவ நிலையங்கள், மக்கள் உண்ணும் உணவு, அவர்கள் பாடும் பாட்டுக்கள், வழக்கிலிருக்கும் பழமொழிகள் முதலிய எத்தனையோ செய்திகளை இந்நூலைப் படிப்பதன் மூலம் தெரிந்துகொள்ளுகிறோம். தமிழ் நாட்டுடன் புதிதாக இணைந்த கன்னியாகுமரி மக்களை இதுவரையிலும் அதிகமாகத் தொடர்பில்லாத அயலார்போல் நினைத்துக்கொண்டிருந்த எனக்கு இந்நூலைப் படித்தபின் கன்னியாகுமரி மக்கள் நம்மவர்கள் என்ற எண்ணம் பலமாகத் தோன்றியது. அந்த எண்ணத்தின் பயனாக உருவான உணர்ச்சி கன்னியாகுமரி மக்களையெல்லாம் உடன் பிறந்தார்போல் தழுவிக்கொள்கிறது. ஆகவே, தமிழர் அனைவரும் இந்நூலைப் படிப்பதன் மூலம் சிறந்ததோர் ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பெறுவர் என்பது உறுதி.

கன்னியாகுமரி மாவட்டத்தின் வரலாற்றையும் நில நூலையும் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்கள், இந்த நூல் ஒரு சிறந்த ஆதார நூலாக இருக்கிறது என்பதை எளிதில் உணர்வார்கள். ஆகவே, இது பள்ளிக்கூடங்களிலும் நூல் நிலையங்களிலும் கட்டாயமாக இடம்பெற வேண்டியதொரு நூல்.

இந்நூலாசிரியர் ஏனைய மாவட்டங்களைப்பற்றிய நூல்களையும் விரைவில் எழுதி வெளியிடுவாராக!

சைதை,
1—9—'61.

மு. ரா. பெருமாள்

முன்னுரை

கன்னியாகுமரி தமிழ் நாட்டின் தென் எல்லேயாகும்; இந்தியாவின் தென் எல்லேயுமாகும். தமிழ் நாட்டுக்கு வட எல்லேயாக வேங்கடமலேயும் இந்திய நாட்டுக்கு வட எல்லே யாக இமயமலேயும் அமைந்துள்ளன. வட எல்லேயருகே கிழக்கேயிருந்து மேற்கேயுள்ள அகலம் மிகக் கூடுதலாக இருந்தும் தெற்கே வரவர, அது படிப்படியாகக் குறைந்து, கிழக்கேயும் மேற்கேயுமுள்ள கடற்கரைகள் இரண்டற இணேந்துவிடுகின்றன. இவை இவ்வாறு இணேயும் முனேயே கன்னியாகுமரி எனப்படுகிறது. இதனுல் குமரி முனே "இந்திய நாட்டின் கோடி" (Land's End of India) என்றும் குறிப்பிடப்படுகிறது. பாரதத் தாயின் பாதச் சிலம்பொலி யென வங்காளக்குடாக் கடல், அரபிக் கடல், இந்தியப் பெருங் கடல் ஆகிய மூக்கடல்களும் கூடி முழங்கும் ஓங்குபுகழ் சிறப்புடையது கன்னியாகுமரி.

புகழ் மண்டிக் கிடக்கும் இத்தலத்தின் பெயரைக்கொண்ட பெருமை கன்னியாகுமரி மாவட்டத்துக்கு உண்டு. வாழையும் தென்னேயும் வளர்ந்தோங்கி, நெல்லும் கன்னலும் சிறந்தோங்கி, செல்வம் பொழியும் ரப்பரும் மிளகும் சீராய்ப் பயிராகி, இஞ்சியும் மஞ்சளும் விளேந்து, முக்கனியும் எத் திங்களும் காய்த்து, அணு ஆக்கத்துக்கு அடிப்படையான மணல் அள்ள அள்ளக் குறையாது அமைந்து, கோடையின் கொடுமை தெரியா இயற்கை நலம்பெற்று, உடல் உரத்துக் கேற்ற நல்வாழ்விடங்கள் மலிந்து வளங்கொழிக்கிறது இச்சிறு மாவட்டம். எனவே, உருவத்தாலும் மக்கள் தொகையாலும் இதனினும் பெரிய மாவட்டங்களேவிட, இது சிறந்த பகுதி யாகும்.

வரலாற்றுக் காலந்தொட்டுத் தமிழ் நாட்டின் ஒரு பகுதி யாக இருந்தும் 17-ஆம் நூற்றுண்டு முதல் 1956 வரை வேற்று

அரசியலில் இருந்தமையால். இம்மாவட்டம் தமிழ் நாட்டு மக்களுக்கு வெளிநாடுபோன்று காட்சியளிக்கிறது. இம் மாவட்டத்தைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் முறையில் யான் மேற்கொண்ட முயற்சியின் விளைவே இந்நூல்.

இந்நூலை உருவாக்க யான் 1958 முதல் முயன்று வந்திருக்கிறேன். இதற்குமுன் மும்முறை இம் மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோதிலும், மீண்டும் அண்மையில் இருமுறை சென்று விரிவாகச் சுற்றி நூலாக்கும் கண்ணோட்டத்துடன் பல இடங்களைக் கண்டும் செய்திகளைச் சேகரித்தும் அன்பர்களிடம் துருவி வினவியும் பல நாட்களைக் கழித்தேன். இவற்றின் பயனே இந்நூல்.

இவ்வகையில் எனக்குப் பெரிதும் உதவியவர் கவிமணியின் மருகரும் என் இனிய நண்பருமான புத்தேரி திரு. கே. குமாரசாமிப் பிள்ளை; அவர்க்கு என்னுடைய நன்றி முதற் கண் உரித்தாகும். அடுத்து, செட்டிநாடு அண்ணமலை தொழிற் கல்லூரியில் பயின்ற குமரி மாவட்டத்து மாணவர்களும் இப்போது பல அலுவல்களில் இருப்பவர்களுமாகிய திருவாளர்கள் சுசீந்திரம் நி. ம. இராகவன், திருப்பதிசாரம் எஸ். பெருமாள் பிள்ளை, சிறைமடம் நீலகண்டப் பிள்ளை போன்ற நண்பர்களுக்கும், புத்தேரி திரவியம் பிள்ளை, திருப்பதிசாரம் தம்பபெருமாள் பிள்ளை, நீண்ட நாட்களாக என் மதிப்பிற்குரிய நண்பர்களாக இருந்துவருபவர்களான டாக்டர் பா. நடராசன், திரு. டி. எஸ். இராமசாமிப் பிள்ளை, எம். எல். ஏ., திரு. வில்லியம், எம். எல். ஏ., புலவர் உமைதாணுப் பிள்ளை, புலவர் மு. சண்முகம் பிள்ளை, குமரி மாவட்டத்திலுள்ள செய்தி விளம்பரத்துறை அலுவலர்களான திரு. பாபு ஜோசுவா டேனியல், திரு. சொரிமுத்து செட்டியார், தமிழ்நாடு மீன்வளத்துறைத் தலைவர் எச். கே. காஜி, ஐ. ஏ. எஸ்., 'காதி, இன்ஸ்பெக்டர்' திரு. சிவசாமி, பி. எஸ்சி.(டெக்), எழுத்தாள அன்பர்களான திரு. பா. சொ. லிங்கம், கோட்டாறு திரு. ஆ. சுப்பையா, இடலாக்குடி

செ.ப.ஜமால் மும்மத், நாகர்கோயில் திரு. சுந்தர இராமசாமி, கவிஞர் தே. ப. பெருமாள் ஆகியோர்க்கும் இன்னும் இந் நூலில் ஆங்காங்கே குறிப்பிடப்பெற்றிருக்கும் தமிழன்பர்களுக்கும் தமிழ்நாடு அரசாங்கத்தின் செய்தித்துறை உதவி நெறியாளர் திரு. கு.ராஜவேலுக்கும் வரை படங்கள் எழுதிய ஓவியர் கிருஷ்ணமூர்த்திக்கும் விரைந்து அச்சிட்டுதவிய மாருதி அச்சகத்தார்க்கும் யான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

சென்னை சைதை ஆசிரியர் கலலூரி முதல்வர் மு ரா. பெருமாள் முதலியார் அவர்கள் இத்தகைய நூல்கள் வெளி வர வேண்டுமென்று பல்லாண்டுகளாக என்னை வற்புறுத்தி னர்கள். தக்க கருத்துக்களையும் அவ்வப்போது கூறினர்கள். உறுதியான தமிழ்ப்பற்று, அதைச் செயல்படுத்தும் ஆற்றல், செய்யும் வினையில் செம்மை—இவற்றின் வடிவமே பெருமாள் முதலியார் அவர்கள். அன்னரின் சிறப்புரை இந் நூலை அணி செய்கிறது. அவர்களுக்கு என் சார்பாகவும் வாசகர்களின் சார்பாகவும் நன்றி கூற விரும்புகிறேன்.

நெற்குப்பை,
2–9–1961.


'சோமலெ'

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
10	7	தென்கிழக்குப்	தென்மேற்குப்
13	கீழிருந்து 2	நானயங்களை	நாணயங்களை
56	6	ஈவு	விகிதம்
167	9	வத்தல்	வற்றல்
168	13	தனது	தமது

உள்ளுறை

1.	தோற்றுவாய்	...	9
2.	வாழும் மக்கள்	...	14
3.	ஆலயங்களின் சிறப்பு	...	23
4.	மருத்துவ மனைகள்	...	27
5.	கல்வி நிலையங்கள்	...	32
6.	கலைப் பெருமைகள்	...	40
7.	நிலவளமும் நீர்வளமும்	...	42
8.	புவியியல் வளம்	...	47
9.	வேளாண்மை	...	55
10.	கனிவளம்	...	57
11.	காட்டு வளம்	...	59
12.	ரப்பர்த் தோட்டங்கள்	...	61
13.	பிற தொழில்கள்	...	63
14.	கூட்டுறவு இயக்கம்	...	72
15.	வாணிகப் பெருக்கும் சந்தைகளும்	...	73
16.	போக்குவரத்து	...	75
17.	வரலாறு	...	81
18.	இந்திய விடுதலைப் போர்	...	88
19.	இணைப்பு இயக்கம்	...	90
20.	இணைப்புக்குப் பின்	...	99
21.	நாஞ்சில் நாட்டுத் தமிழ்	...	101
22.	காணத்தக்க இடங்கள்	...	139
23.	அகத்தீசுவரம் வட்டம்	...	164
24.	தோவாளை வட்டம்	...	173
25.	கல்குளம் வட்டம்	...	180
26.	விளவங்கோடு வட்டம்	...	188
27.	பிற்சேர்க்கை	...	189


கன்னியாகுமரி மாவட்டம்
வட்டங்கள்
திருநெல்வேலி மாவட்டம்
கேரள இராச்சியம்
விளவங்கோடு வட்டம்
கல்குளம் வட்டம்
தோவாளை வட்டம்
அகத்தீசுவரம் வட்டம்
அரபிக் கடல்
கன்னியாகுமரி
மன்னார் குடா



குமரி முனையில் ஞாயிறு தோற்றம்

படம் உதவி :
சென்னை அரசாங்கச் செய்தித் துறை.



பத்மனாபபுரம் அரண்மனை

படம் உதவி:
சென்னை அரசாங்கச் செய்தித் துறை.

கன்னியாகுமரி மாவட்டம்

1. தோற்றுவாய்

தமிழ்நாட்டின் மாவட்டங்களிலெல்லாம் பரப்பால் சிறியது கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். உருவங்கண்டு எள்ளாமை வேண்டும் என்ற வாக்குக்கேற்ப, இம் மாவட்டம் பிற மாவட்டங்களுக்கெல்லாம் இல்லாத பெருமைகள் பலவற்றைப் பெற்று விளங்குகிறது.

பெருமைக்குரிய இச்சிறப்புக்களில் தலையாயது தமிழ் நாட்டின் — அதனோடு இந்தியாவின் — தென் எல்லை யாகவுள்ள ஓங்கு புகழ்க் குமரித்துறையை உடையதாக இருப்பதும் அதையே மாவட்டத்தின் பெயராகப் பெற்றிருப்பதும் ஆகும்.

அடுத்த சிறப்பு இயற்கையான எல்லைகளைப் பெற்றிருப்பதாகும். வடக்கே மலைகள், கிழக்கே கணவாய், தெற்கே கடல், மேற்கேயும் பெரும்பகுதி கடல்—இவ்வாறு தெளிவான ஒழுங்கான இயற்கை அரண்களுக்கிடையே இம்மாவட்டம் அமைந்துளது.

அசம்புமலை, மகேந்திர மலை (5427 அடி), இரண்டாம் வரி மலை, மருந்துவாழ் மலை என்னும் மலைகளும், பழை

யாறு, கோதையாறு போன்ற பல ஆறுகளும், குறைவற்ற குளங்களும், வளம் நிறைந்த காடுகளும், 42 மைல் (68 கி. மீ.) நீளமுள்ள கடற்கரையும் இம்மாவட்டத்துக்கு வாழ்வளிக்கின்றன.

தமிழ்நாட்டில் மிகுதியான மழை உடையது நீலகிரி மாவட்டம் ஆகும். அதற்கு அடுத்தபடியாக அதிகமான மழை இம்மாவட்டத்தில் பெய்கிறது. தென்கிழக்குப் பருவக் காற்ருல், சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களிலும் மழை பெய்வது இம்மாவட்டத்தின் . தனிச் சிறப்பாக இருந்து வருகிறது. கடற்கரைப் பகுதிகளில் ஓராண்டுக்கு 20 அங்குலம் மழையும் மலைப்பகுதிகளில் 150 அங்குலம் (4332 மில்லி மீட்டர்) மழையும் பெய்கிறது. வடகிழக்குப் பருவக்காற்ருல் ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலும் மிகுதியான மழை பெய்வது வழக்கம். எவ்வளவு மழை பெய்த போதிலுங்கூட, வெள்ளம் தங்காது கடலில் விழுந்து விடுவது இம்மாவட்டத்தின் இயற்கை அமைப்பின் விந்தைக்குச் சான்ருகும். சாலையின் மேல்பாகம் வழியாகக் கால்வாய் நீர் ஓடுவதும் பள்ளத்திலிருந்து மேட்டுக்குத் தண்ணீர் செல்லுவதும் இம்மாவட்டத்தில் காணத்தக்க அரிய காட்சிகளாகும். குடி நீர் தெளிவானதாக இருப்பது, ஆனி ஆடி மாதங்களில் சாரல் வீசுவது, பல ஆண்டுகளில் கோடையின் கொடுமை தெரியாதிருப்பது போன்ற பிற சிறப்புக்களும் இச் சிறுபகுதிக்கு உண்டு.

இம்மாவட்டத்தின் இரு வட்டங்களுக்கு—அகத்திசுவரம், தோவாளை—நாஞ்சில் நாடு என்ற பெயர். நாஞ்சில்நாடு முன்னர்த் தென் திருவிதாங்கூரின் நெற்களஞ்சியமாக இருந்தது; இப்போது தென் தமிழ் நாட்டின் நெற் களஞ்சியமாக விளங்குகிறது. குறிஞ்சி,

முல்லை, மருதம், நெய்தல் என்னும் பல்வகை நிலங்களும் இவ்விரு வட்டங்களில் அடங்கியிருப்பது சிந்தித்து மகிழத் தக்கதாகும்.

எஞ்சிய இரு வட்டங்களான கல்குளத்திலும் விளவங் கோட்டிலும் ஓரளவு நெல் வேளாண்மையும், பேரளவு வள்ளிக்கிழங்கும் புன்செய்த் தானியங்களும் வாழையும் மலைத் தோட்டப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

மாவட்டமெங்கும் பழக் கனிகளும், உலோகக் கனி களும் நிறைந்துள்ளன. மலைபடு பொருள்களும் மலிந்து கிடைக்கின்றன.

இச் சிறப்புக்களுக்குரிய குமரித் தமிழகம் 1956 வரை வேற்று ஆட்சியில் இருந்தமையால், தமிழ்நாட்டிலுள்ள மக்களுக்கு நன்கு தெரியாத ஒரு பகுதியாக இருந்து வந்தது. இலங்கை, மலேயா நாடுகளைவிட நமக்குத் தொடர்பு குறைந்த நெடுந்தொலைவிலுள்ள ஒரு வெளி நாடு என்று எண்ணும் அளவுக்குத் தொடர்பற்றிருந் தோம். இன்றும் இப்பகுதிக்குள் சென்றதும் எத்தனையோ மாறுதல்களைக் காணவும் கேட்கவும் நேரிடுகிறது. பல தலைமுறைப் பழக்கத்தால் இங்கு வாழும் தமிழரின் பேச்சில் மலையாளம் ஒலிக்கிறது. ''யாது ஊர்?'' (எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் என்ற பொருளில்) என்று குமரித் தமிழர் கேட்கும்போதும், ''எங்கே தாமசிக்கி றீர்கள்?'' என்று வினவும்போதும் புதியதொரு சூழ் நிலையில் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டு மக்கள் குமரி மாவட்டத்தை 'மலை யாளம்' என்று குறிப்பிட்டு வந்தனர்; குமரி மாவட்டத் தினர் தமிழ்நாடு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தது என்ற பொருளில் 'பிரிட்டிஷ்' என்று கூறி வந்தனர்.

வீடுகளின் அமைப்பை உற்று நோக்கும்போதும் மாறுதலை உணரலாம். உயர்ந்த தளத்தில் பெரும்பாலும் தோட்டங்களுடன் கூடிய தனிக் கட்டிடங்களே குமரிப் பகுதியில் உள்ளன. அரசாங்கக் கட்டிடங்களைக் காணும் போதும் அவற்றின் தனித்தன்மையை நன்கு அறியலாம். அவ்வலுவலகங்களின் அறிக்கைப் பலகைகளின் தோற்றமும் இத்தகையதே.

மக்களுடைய பழக்கவழக்கங்களிலும் சில மாறுதல்கள் குறிப்பிடத்தக்கன.

மருமக்கள் தாயமுறையைக் கடைப்பிடிக்கும் சில சமூகங்கள் இங்கே உள்ளன. கிறித்தவ சமயத்தைப் பின்பற்றும் மக்கள் இம்மாவட்டத்தில் 100-க்கு 50 பேர் இருக்கின்றனர். இம்மாவட்டத்திலுள்ள ஏழை மக்களில் சிலர்—மலையாளத்து மக்களைப் போல—இங்கே பயிரிடப் படும் மாச்சினி என்னும் மரவள்ளிக் கிழங்கை உண்ணு கின்றனர். இம்மாவட்டத்தில் தமிழ் நாட்டில் வேறெங் கும் இல்லாத அளவுக்கு மக்கள் நெருக்கமும் காணப் படுகிறது. இதனால் வேலையின்மையும், பருவத்துக்கு ஏற்றவாறு வேலை செய்யும் மனப்பான்மையும் இங்குள்ள மக்களிடம் உள்ளன. ஒருவரே ஒரு நேரத்தில் கொத்த ராகவும், பிறகு தச்சராகவும், பின்னர்ப் பனையேறுபவ ராகவும் வேலை செய்யுங் காட்சிகளை இங்கே காணலாம்.

வீடு கட்டுவதற்கு, பிற மாவட்டங்களைப்போலச் சுடுசெங்கலைப் பயன்படுத்தாது இங்கே பச்சைக் கல்லையே பாவிக்கின்றனர்.

கல்வித் துறையில் இம்மாவட்டம் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. ஆண்பாலரிலுஞ்சரி பெண் பாலரிலுஞ்சரி கல்வி அறிவில்லாதவர்களைக் காண்பது அருமையே.

ஆட்சி முறையில் காணும் மாறுதல்களில் ஒன்று, சிறு நகரங்களிலும் நகராண்மைக் கழகம் இருப்பதாகும். தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களை நோக்க, இங்கே நகராண்மைக் கழகமாகக் கருதத்தக்கது நாகர்கோயில் ஒன்று மட்டுமேயாகும்.

போக்குவரத்துத் துறையில் இணைப்புக்குப் பின் இம் மாவட்டம் பெருவளர்ச்சியடைந்திருக்கிறது. ஆயினும், இரயில் போக்குவரத்து இல்லாத மாவட்டம் தமிழ் நாட்டில் இது ஒன்றுமட்டுமேயாகும்.

ஆண்டு முறையில் இங்கே கொல்லம் ஆண்டுக் கணக்கு நிலவி வந்தது. பிறந்த ஆண்டைத் தெரிவிக்கவும், ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது இன்ன ஆண்டில் என்பதை இயம்பவும் இங்குள்ள மக்கள் கொல்லம் ஆண்டைக் குறிப்பிட்டுப் பிறகு 825 சேர்த்து, கி. பி. ஆண்டினைக் கணக்கிட வேண்டியவர்களாக உள்ளனர்.

நாணய முறையிலும் ஒரு சிக்கல் இருந்தது. முன்னர் விலைகள் திருவிதாங்கூர் நாணயத்தில் இருந்தன. திருவிதாங்கூர் நாணயம், இந்திய நாணயத்தினின்றும் மதிப்புக் குறைந்ததாக இருந்தது. ஐதராபாத் ரூபாய் 116-க்குப் பிரிட்டிஷ் இந்திய ரூபாய் 100 சமமானது என்ற ஏற்பாடு இருந்தது போலவே, பிரிட்டிஷ் இந்திய ரூபாய்க்கு $28\frac{1}{2}$ சக்கரமும் திருவிதாங்கூர் ரூபாய்க்கு* 28 சக்கரமும் சமம் என்று கருதப்பட்டது. இடைப்பட்ட அரைச்சக்கரம், நாணயங்களை மாற்றும் வட்டக்காரருக்கு வழங்கப்பட்டது. 16 காசு கொண்டது ஒரு சக்கரம்.

---

* திருவிதாங்கூர் ரூபாய் என்பது ஏட்டில் மட்டுமே உண்டு; கணக்குகளில் மட்டும் காணக்கூடியது இது. இவ்வாறு நாணயம் வெளியிடப் பட்டதில்லை. திருவிதாங்கூர் ரூபாய் கடவுள் போன்றது: கண்ணால் காண இயலாதது என்பர்.

எனவே, ஒரு ரூபாயை (16×28=) 448 காசுகளாக மாற்ற இயலும். இவ்வளவு சிறு நாணயத்துக்குக் கூடப் பொருள்களை வாங்கக்கூடிய நிலை இருந்தது. இப்போது கொல்லம் ஆண்டு மறைந்து வருகிறது. திருவிதாங்கூர்ச் சக்கரமும் மாய்ந்துவிட்டது.

இம்மாவட்டத்தில் கொலையும் கொள்ளையும் குறைவாக நிகழுகின்றன. சட்டத்துக்குக் கட்டுப்பட்டு அரசின் ஆணைக்கு அடங்கி அமைதியாக வாழும் இயல்பு இங்கு வாழும் மக்களிடையே இருந்துவருகிறது.

2. வாழும் மக்கள்

தமிழ்நாட்டின் நிலப் பரப்பளவில் 100-க்கு 1·3 பங்குள்ள குமரி மாவட்டத்தில், தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் 100-க்கு மூன்று பங்கினர் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் வாழும் மக்களின் தொகை ஏறத்தாழப் பத்து லட்சம் ஆகும். பரப்பளவை நோக்க இது மிகுதி. ஒரு சதுரமைலுக்கு 1267 பேர் வாழ்கிறனர். 1951-க்கும் 1961-க்கும் .இடைப்பட்ட 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் வேறு எந்த மாவட்டத்தையும்விட இங்கு மக்கள் பெருக்கம் கூடுதலாக இருக்கிறது. இதற்கு இரு காரணங்கள் உண்டு; ஒன்று பிறப்பு மிகுதி, மற்றொன்று மலையாளிகள் குடியேற்றம்.

குமரி மாவட்டத்தில் பல்வகைச் சமூகத்தினர் வாழ்கின்றனர்.

நாஞ்சில் நாட்டு வேளாளர், சாம்பவர், யாதவர், நம்பியார், நாடார், பரவர் (பரதவர்) ஆகிய சமூகத்தினரும் இப்பகுதியில் உள்ளனர். பரதவர்கட்கு முக்குவர்

(கடலில் முழுகி முத்தெடுப்பவர் என்னும் பொருளில்) என்ற பெயரும் உண்டு. மலையாளம் பேசும் நாயர், நம்பூதிரி ஆகியோர் சிலருள்ளனர். முஸ்லிம்களும் ஆங்காங்கே உள்ளனர்.

மலையினத்தவர்

மலையினத்தவர் ஈராயிரம் பேருளர். இவர்கள் களியல், பெருஞ்சாணி, பேச்சிப்பாறை, வெள்ளாம்பி, கூவைக்கல், ஐந்துகாணி என்னும் இடங்களில் உள்ளனர். தாம் வாழும் இடத்தில் வளம் குறைந்ததும் பிறிதோர் இடம் நோக்கித் தங்கள் குடியிருப்பையே மாற்றியமைக்கும் இயல்பு இவர்களிடம் இருந்துவருகிறது. இவர்களுக்கு நிலையான குடியிருப்பை' அமைக்க அரசாங்கம் முயன்று வருகிறது. மலைமீது கிடப்பதையெல்லாம் கண்டபடி தின்று வானம்பாடிகளாகத் திரியும் இந்த இனத்தவர் எங்குச் செல்லவும் கடல்போன்ற பரந்த பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தைக் கடக்க வேண்டியதிருப்பதால் இவர்கட்கு அரசாங்கம் படகுகள் வாங்கிக் கொடுத்துப் படகோட்டிகளை நியமித்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் 30,000 பேர் இம் மாவட்டத்தில் உள்ளனர், பள்ளர் என்ற சமூகத்தார் இம் மாவட்டத்தில் இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

நாஞ்சில் நாட்டு வேளாளர்கள்

இச்சமூகத்தினர் இம்மாவட்டத்திற்கு மட்டுமே உரியவராக உள்ளனர்.

இவர்களின் முன்னோர்கள் மன்னர் மதிக்க வாழும் மக்களாயிருந்தனர். திருவிதாங்கூர் மன்னர்களிடம்

இவர்கள் பெற்றிருந்த உரிமைகள் அளவுகடந்தன. வலிய மேலெழுத்து (அக்கவுன்டென்ட் ஜெனரல்), படைத் தலைமை போன்ற அலுவல்களில் இவர்களே இருந்து வந்தனர்.

அரண்மனையில் நிகழும் பிள்ளைப்பேறு, திருமணம், மரணம் போன்ற எச்செயலுக்கும் நாஞ்சில் நாட்டாருக்கு மன்னவன் நீட்டு அனுப்பி வந்தான்.

நாஞ்சில் நாட்டார் செங்கோல் வேந்தருக்கு உற்ற துணைவர்களாக இருந்து தொல்குடிச் சிறப்பும் செல்வச் செழிப்பும் பல உரிமைகளும் பெற்று, தாம் வாழும் சிற்றூர்களில் பல்வேறு ஊழியர்களும் தம்மைச் சூழ்ந் திருக்க நடுநாயகமாக விளங்கி வந்தனர்.

திருவிதாங்கூர் அரசர்களின் நம்பிக்கைக்கு உரிய வராக இருந்ததால் இவர்கள் வாழும் நாஞ்சில் நாட்டில் வரிகள் மரியாதையாகக் கேட்டு வாங்கப்பட்டன. இதற்குக் 'கேள்விக் கரம்' என்று பெயர் இருந்தது. ஏனைய இடங்களில் வரி வசூலிக்கும் அலுவலகங்கள் ''அதிகாரக் கச்சேரி'' என்ற பெயர் இருந்தன. அரச குடும்பத்தின் தொடர்பால், நாஞ்சில் நாட்டு வேளாளர் ஓணப் பெருநாளையும் வைணவ சமயத்துத் திருவிழாக் களையும் கொண்டாடி வந்தனர். சித்திரா பவுர்ணமி நாளில் சித்திரகுப்தன் கதைகளைப் படித்து வந்தனர்.

கணித இயலில் வல்லுநராகவும், வேளாண்மையில் ஈடுபாடுடையவராகவும், சிக்கனத்தின் சின்னமாகவும், உழைப்பின் உருவமாகவும் இவர்கள் விளங்குகின்றனர். இச்சமூகம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையை ஈன் றெடுத்ததால் பெரும் புகழ் பெற்றிருக்கிறது.

சொத்துக்களைப் பங்கிடும்போது தமிழ்நாட்டி லிருப்பது போன்று மக்கள்வழி வகுக்காது மருமக்கள்

வழியாகப் பாகம் செய்யும் வழக்கம் திருவிதாங்கூர் அரச குடும்பத்திலும் நாயர், ஈழவர் சமுதாயங்களிலும் உண்டு. திருவிதாங்கூர்த் தமிழகத்தில் வாழ்ந்த கிருஷ்ணவகைக் காரரும் வேளாளரும் அரச குடும்பத்தின்பாலிருந்த பற்றுதலால் அம்முறையையே பின்பற்றுவாராயினர். அசாமிலுள்ள நாகர்களிடம் மருமக்கதாய முறை யிருப் பதற்கும் நாகர்கோயில் என்னும் ஊர்ப் பெயரில் ''நாக'' என்னுஞ் சொல் இருப்பதற்கும் தொடர்புபடுத்தி மருமக்கள்தாய முறைக்குக் காரணங் கூறுவாருமுளர்.

மருமக்கள்தாய முறையால் காரணவான் தன் மக்களுக்கு அன்றி தம் அக்காள் தங்கை மக்கள் நலத்தி லேயே நாட்டமுடையவனாக இருந்து வருவது இங்குள்ள நிலையாகும். அக்காள் மகளை மணந்துகொள்ளலாகாது என்ற பழக்கமும் உண்டு. குடும்பங்களில் பெண்டிருக்கு மிகுதியான உரிமைகள் ஏற்பட்டுள்ளன. இச்சமூகத்தின ருக்கு உறவும் திருவனந்தபுரம் பகுதியில் வாழ்பவர்களுட னேயேதான் கூடுதலாக இருந்து வருகிறது. நெல்லை மாவட்டத்து வேளாளர் மக்கள்தாய முறையினர் ஆகையால் அவர்களுடன் நாஞ்சில் நாட்டு வேளாளர்க்குக் கொள்வினை கொடுப்பினை கிடையாது.

இந்த முறையால், பெருஞ் சொத்துக்கள் பிரிக்கப் படாமல் பேணி வைக்கப்பட்டிருந்தன. பின்னர், மனைவிக்கும் குழந்தைக்கும் ஒரு பங்கு; ஒவ்வொரு சகோதரிக்கும் ஒரு பங்கு என்ற உகந்துடைமை முறை சில காலம் நிலவி வந்தது. அக்காள் மக்களுக்குக் கூடுதலான பங்கு கொடுக்கும் தாரவாத் முறையும் சில காலம் இருந்து வந்தது. பாதி தலை எண்ணியும் பாதி கிளை அல்லது சாகை எண்ணிப் பாகமாகக் கொண்டதுமான சட்டம் 1930-இல் நிறைவேற்றப்பட்டது. இப்போது,

இந்தியாவெங்கும் அமலிலுள்ள இந்து பாகப் பிரிவினைச் சட்டத்தாலும் மக்கள் மனத்தில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட கருத்தாலும், மருமக்கள் தாயமுறை மறைந்து மக்கள் தாயமுறை பரவி வருகிறது.

நாடார்கள்

இவர்களும் இம்மாவட்டத்தில் முக்கியமான இனத்தவர் ஆவர் ; எல்லா வட்டங்களிலும் இவர்கள் வாழ்கின்றனர் ; வாணிபத்தில் சிறந்து விளங்குகின்றனர் ; இந்து நாடார்கள் கிறித்தவ நாடார்கள் என்று இரு மதத்தாரும் உள்ளனர்.

இஸ்லாமிய மதம்

இந்து மதத்தினருக்கு இம்மாவட்டம் முக்கியமாக இருப்பது போன்றே, பிறமதத்தினருக்கும் இம்மாவட்டத்துடன் தொடர்புகள் உள்ளன. எல்லா மாவட்டங்களிலும் போல, இங்கும் பல இடங்களில்—குறிப்பாகக் கடலோரப் பகுதிகளில்—இஸ்லாமிய மதம் பரவியிருக்கிறது. முஸ்லிம்கள் வாழும் ஊர்களில் முக்கியமானவை ஆளூர், திட்டுவிளை, தற்கலை, திருவிதாங்கோடு, குளச்சல், தேங்காய்ப் பட்டினம், இடலாக்குடி முதலியன.

முஸ்லிம்கள் வாழும் ஊர்களிலெல்லாம் பள்ளிவாசல்கள் உண்டு. உலகெங்குமுள்ள முஸ்லிம்களைப் போலவே, இவர்களும் 'ஒன்று தெய்வம், ஒன்று மதம், ஒன்று மக்கள் சாதி' என்ற கருத்தினராக வாழ்கின்றனர். இம்மாவட்டத்து முஸ்லிம்களில் பலர் பேராசிரியர்களாகவும், கவிஞர்களாகவும், தமிழாசிரியர்களாகவும், கல்வித்துறை அலுவலர்களாகவும், வழக்குரைஞர்களாகவும் இருந்து வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்து முஸ்லிம்களுக்குப் பெருமை தேடித் தந்தவர் எண்ணற்ற கவிதைகளும் உரை நடை நூல்களும் ஆக்கியவரான கலைக்கடல் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் மகாமதி சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் ஆவார்.

இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவர்கள் 40,000 பேர் குமரி மாவட்டத்திலுள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினர் மலேயா போன்ற கடல்கடந்த நாடுகளுடன் தொடர்பு கொண்டவர்கள். ஏனையோர் பாய் மிடைந்தும், மெழுகு வத்தி செய்தும், பிற சிறு தொழில்களில் ஈடுபட்டும் வாழ்ந்து வருகின்றனர்.

பௌத்த சமயம் ஒரு காலத்தில் இங்கே பரவி யிருந்திருக்கக் கூடும் என்பதற்குக் கல்வெட்டுக்களும் பௌத்த விக்கிரகங்களும் ஆதாரமாக உள்ளன. இவ்வாறே சமணமும் பரவியிருந்ததற்கு, புற்று வழிபாடு களும் பிற சான்றுகளும் காணப்படுகின்றன.

கிறித்தவ மதம்

சமய அடிப்படையில் கிறித்தவப் பெருமக்கள் இம் மாவட்டத்தில் முக்கியமான இனத்தவர் ஆவர். இவர் களில் கத்தோலிக்கர், பிராடஸ்டன்டு என்று இரு பிரி வினரும் உள்ளனர். கிறித்தவப் பெருமக்களால் இப் பகுதியில் கல்விப் பெருக்கமும் சிற்றூர்களிலும் சிறு தொழில்களும் மருத்துவ நிலையங்களும் ஏற்பட்டிருக் கின்றன.

கிறித்தவம் இந்தியாவில் முதலில் பரவிய இடங் களுள் குமரி மாவட்டமும் ஒன்று. நூற்றுக்கணக்கான தேவாலயங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இவற்றுள் குருசாடியிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயமும், குமரி

முனையிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயமும் மிகப்பழமை யானவை. கோட்டாற்றிலுள்ள கத்தோலிக்கத் தேவால யமும் நாகர்கோயிலிலுள்ள 'ஹோம் சர்ச்' என்ற பிரா டஸ்டண்டு தேவாலயமும் மிகப் பெரியவையாகும்.

இம்மாவட்டத்தில் இரண்டு லட்சம் கத்தோலிக் கரும் ஒன்றே முக்கால் லட்சம் பிராடஸ்டண்டுகளும் வாழ்கின்றனர். கத்தோலிக்கப் பாதிரிகளின் தலைமை இடங்கள் (Parishes) 50 ஊர்களில் உள்ளன; இவர் களுடைய முயற்சியால் 100 தொடக்கப்பள்ளிகள், 30 உயர்நிலைப்பள்ளிகள், 4 அனாதை விடுதிகள், 2 ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள், 3 மருத்துவ நிலையங்கள், மிளகுமூடு, கன்னியாகுமரி, பள்ளியாடி, குளச்சல், கீழ் ஆசாரிப் பள்ளம், குலசேகரம் ஆகிய இடங்களில் தொழிற் பள்ளிகள் ஆகியவை நடைபெறுகின்றன. இவ்வாறே பிராடஸ்டண்டுப் பெருமக்களும் பல இடங்களில் தங்களுடைய தேவாலயங்களை அமைத்தும் கல்வி நிலையங்கள் நிறுவியும் உள்ளனர். மருத்துவ நிலையங் களைச் சீரிய முறையில் நடத்துவதில் இவர்கள் திறமை யானவர். லண்டன் மிசன், சால்வேசன் ஆர்மி போன்ற பல பிரிவுகள் பிராடஸ்டண்டுகளில் உள்ளன.

கன்னியாகுமரியின் புகழ் இயேசுநாதர் பிறக்கு முன்னே மேலைநாடெங்கும் பரவியிருந்தது. இதனால் இப்பகுதியைக் காணக் கலங்களில் வந்த மேனாட்டார் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே கடற்கரைச் சிற்றூர் களிலெல்லாம் தங்கள் சமயத்தைப் பரப்பினர்; பரதவரை மதம் மாற்றினர்; பின்னர்ப் பிற சமூகத்தினரும் இயேசுவின் மதத்தைப் பின்பற்றலாயினர். இதன் விளைவாக இன்று குமரி மாவட்டமெங்கும் அழகிய தேவாலயங்கள் பல காணப்படுகின்றன.

கத்தோலிக்க மதம் இங்கே பரவியதற்குத் தலைமை இடமாக இருந்தது கோட்டாறு. இங்குள்ள அர்ச். சவேரியார் மேற்றிராசன கோவில் சிலுவை வடிவத்தில் அமைந்தது. டிசம்பர் மூன்றும் நாளில் ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் திருவிழாவுக்கும் இதையடுத்துக் கன்னியாகுமரியில் நிகழும் திருவிழாவுக்கும் கத்தோலிக்கர் தென்னிந்தியாவெங்குமிருந்து வருகின்றனர். இந்தியாவின் அப்போஸ்தலரான அர்ச். சவேரியார் கோட்டாற்றில் பூசை செய்தவர் ஆகையால், கோட்டாறு சவேரியார் கோயில் கத்தோலிக்கருக்குப் புண்ணிய இடமாக விளங்கி வருகிறது. கோட்டாற்றுச் சவேரியார் கேட்ட வரம் தருவார் என்பது மக்கள் நம்மிக்கை.

1544-இல் திருவிதாங்கூரை அடைந்த சவேரியார், வர்த்தகம் மிகுந்த தொன்னகரான கோட்டாற்றில் வந்து தங்கினர். இவர் இந்நகரில் தங்கியிருந்து வருங்காலத்தில் விசயநகர அரச குடும்பத்திலுள்ள ஓர் அரச குமாரனும், மதுரையில் கவர்னராக இருந்தவருமான விட்டளன் என்பான் கி. பி. 1545-ம் வருடம் ஜூலை மாதம், தென் திருவிதாங்கூர்மீது படையெடுத்து, கோட்டாற்றைக் கொள்ளையடிக்க ஆரல்வாய்மொழி என்னும் அரண்பொழி (Aramboly)க் கணவாய் வழியாக வந்தான். அவனை எதிர்த்துப் போரிடத் திருவிதாங்கூர் அரசன் படை திரட்டிப் புறப்பட்டான். இச்செய்தியைக் கேட்டுக் கோட்டாறு வாசிகள் மிகுந்த கவலை அடைந்தார்கள். இதனையறிந்த புனித சவேரியார், தம் சீடர்களுடன் சென்று திருவிதாங்கூர்ச் சேனையின் முன்னணியில் நின்று, ஒரு கரத்தில் இயேசுவின் உருவம் தாங்கிய திருச்சிலுவையைப் பிடித்துக்கொண்டு கோட்டாறு நகரின் வடபக்கமிருக்கும் வடசேரி முஜாவரி பங்களாவினருகி

லுள்ள மைதானத்தில் (இப்போது அந்த மைதானத்தில் வடசேரிக் கத்தோலிக்கர்கள் அப்புனித சவேரியார் வந்த நினைவாக ஒரு கோவிலை அமைத்துள்ளனர்) சந்தித்து, மறு கரத்தால் எதிரிகளைப் பின்னே போகும்படி சைகை காட்டினர். இதனைக் கண்ட விட்டளன் சேனை, ஏதோ ஒரு பரமாத்மா தோன்றி தங்களை எதிர்க்க வந்திருப்பதாக எண்ணி வெருண்டு புறங்காட்டி ஓடிற்று. உயிர்ச்சேதமில்லாமலும் இரத்தம் சிந்தாமலும் வெற்றி யடைந்த மக்கள், அப்புனிதரை வாயார வாழ்த்தித் துதித்தார்கள். இச்செய்தியைக் கேள்வியுற்ற திரு விதாங்கூர் அரசர், அப் புனித சவேரியாரை வர வழைத்து, மிகவும் அன்புடன் தழுவி உபசரித்து, நன்றி செலுத்தி, அப்புனிதரை நோக்கி, "இங்கு நான் பெரிய அரசனென்று அழைக்கப்படுகிறேன்; நீங்கள் இங்கு பெரிய தந்தையாக அழைக்கப்படுவீர்கள்" ("I am called the great king, and henceforth yon shall be called the great father") என்று மொழிந்தார்.

அதன் பின்னர், திருவிதாங்கூர் அரசர், "இந்நாட்டி லுள்ள எல்லா மக்களும் நமது பெரிய தந்தையாகிய புனித சவேரியாருக்கு மிகுந்த மரியாதை செலுத்த வேண்டுமென்றும், கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொள்ள மனமுள்ளவர்கள், அம்மதத்தில் சேரத் தடை செய்தல் கூடாதென்றும் கட்டளையிட்டு விளம்பரம் செய்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியில் கிறித்தவ மதம் பொதுவாக இந்தியாவிலும், சிறப்பாகக் கடலோரப் பகுதிகளிலும், குறிப்பாகத் திருவிதாங்கூரிலும் பெருவளர்ச்சி பெற்றது.

3. ஆலயங்களின் சிறப்பு

முக்கடலும் கூடும் குமரித்துறையையுடைய இம் மாவட்டம் வரலாற்றுக் காலந்தொடங்கிப் புகழ்பெற்ற கோயில்களை உடையது. குமரியன்னை கோயில் கொண்டிருக்கும் கன்னியாகுமரி, அரிய சிற்பங்களும் இசைத் தூண்களும் எழுநிலைக் கோபுரமும் உடைய சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோயில், கர்ப்பக் கிரகத்தில் எப்போதும் நீர் ஊறிக்கொண்டிருக்கும் நாகர்கோயில் நாகராஜா கோயில், ஆறுபடை வீடுகளில் ஒன்றான வேளிமலைக் குமரர் கோயில், வைணவத் திருப்பதியான திருப்பதிசாரம் திருவாழ்மார்பன் கோயில், திருவனந்தபுரத்தில் இருப்பதுபோன்ற ஒற்றைக்கால் மண்டபம் உள்ள திருவாட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயில், விநாயகர் ஆறு மாதம் வெளுப்பாகவும் ஆறு மாதம் கறுப்பாகவும் காட்சியளிக்கும் கேரளபுரம் கோயில், சமணக் குகைக் கோயில் உள்ள குழித்துறைச் சித்திரால் என்ற இடம் ஆகியவை இம்மாவட்டத்திலுள்ள முக்கியமான கோயில்களாகும்.

குமரியம்மனிடம் உள்ள ஈடுபாட்டாலும், மலையாள நாட்டிலிருந்தும் கடல்வழியாகவும் கிறித்தவ,மதம் பரவியதன் எதிரொலியாலும் குமரி மாவட்டத்திலுள்ள இந்துக்களிடம் சமயப் பற்று மிகுந்திருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பல ஆலயங்களில் சைவ வைணவக் கோயில்கள் சேர்ந்தே இருக்கின்றன. அம்பிகை வழிபாடும் சாஸ்தா வழிபாடும் சில இடங்களில் முருகன் வழிபாடும் சிறந்து விளங்குகின்றன. எல்லாக் கோயில்களிலுமே தந்திர முறையில் பூசைகள் செய்யப்

பெறுகின்றன. வழிபாட்டுக்கு வரும் பொதுமக்கள் நீராடி, தூய ஆடை அணிந்து இடுப்புக்குமேல் சட்டைகள் அணியாமல் சமயச் சின்னங்களைக் கூசாமல் அணிந்துகொண்டு வருகின்றனர். எக்காரணத்தைக் கொண்டும் இம்மாவட்டத்துக் கோயில்களின் சந்நிதிகளில் மின்சார விளக்குகள் போடப்படுவதில்லை.

1812-ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனியே சொத்துக்கள் இருந்துவந்தன. அப்போது திருவிதாங்கூரை ஆண்டுவந்த இராணி லட்சுமிபாயின் ஆணைப்படி கோயில் சொத்துக்கள் யாவும் அரசாங்க உடைமைகள் ஆக்கப்பட்டுக் கோயில்களின் செலவுக்கு வேண்டிய நிதி அரசாங்கத்தாரால் வழங்கப்பெற்றது. ஆகையால், இம்மாவட்டத்துக் கோயில்களுக்கென்று தனியே சொத்துக்கள் இல்லை. ஆலயங்களுக்காக 1812-இல் ஒதுக்கப்பட்ட 10 லட்சம் ரூபாய்த் தொகை 1-11-1956 இல் 51 லட்சம் ரூபாயாகப் பெருகியிருந்தது. அது மூவர்கொண்ட தேவஸ்வக் குழுவினரிடம் ஒப்படைக்கப் பெற்றது. அத்தொகையிலிருந்து, தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்ட கோயில்களின் பங்காக ரூபாய் 13½ லட்சம் திருவிதாங்கூர்–கொச்சி அரசாங்கத்திலிருந்து தமிழ்நாடு அரசாங்கத்துக்கு மாற்றப்பட்டது. இப்பொருளைக்கொண்டும் அரசாங்க நிதியிலிருந்து ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகையுடன் மக்கள் கொடுக்கும் காணிக்கைகள் உண்டியல் வருவாய் ஆகியவற்றைக் கொண்டும் அறநிலையப் பாதுகாப்புத் துறையினர், தேவஸ்வக் குழுவின் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வருகின்றனர். இக்குழுவின் உதவி ஆணையர் ஒருவர் சுசீந்திரத்தில் இருந்துவருகிறார். நாகர்கோயில், பூதப்பாண்டி, பத்மநாபபுரம், குழித்துறை, செங்கோட்டை ஆகிய ஐந்து ஊர்களில் பார்வையாளர் அலுவலகங்கள் உள்ளன.

இந்த அலுவலகங்களுக்கு உட்பட்ட கோயில்களின் விவரம் வருமாறு:

தொகுதி	பெரிய கோயில்கள்	சிறு கோயில்கள்	மிகச் சிறிய கோயில்கள்	சொத்துள்ள தனிக் கோயில்கள்
நாகர்கோயில்	15	34	43	3
பூதப்பாண்டி	8	22	36	6
பத்மநாபபுரம்	16	32	66	2
குழித்துறை	8	29	57	1
செங்கோட்டை	7	12	67	7

இத்தொகுதிகள் ஒவ்வொன்றிலுமுள்ள கோயில்களுக்கு மானேஜர் எனப்படும் மேலாளர், ஸ்ரீகாரியம், சந்திரம் என்ற ஆட்சி அலுவலர்கள் உள்ளனர். திருப்பணி வேலைகளைச் செய்வதற்குத் தனி அலுவலர்களும் திரு ஆபரணங்கள், பாத்திரங்கள் ஆகியவற்றைப் பாது காக்கவும் கணக்கெடுக்கவும் கண்காணிப்பாளர்களும் உள்ளனர்.

பெரும்பாலான கோயில்களில் தென் கன்னட மாவட்டத்துப் போற்றிமார் அர்ச்சகராக உள்ளனர். இவர்கள் கர்ப்பக்கிரகத்தைவிட்டு வெளியே வந்துவிட்டால் நீராடித் தான் மீண்டும் கர்ப்பகக்கிரகத்துக்குள் நுழைவது மரபு.

தனிப்பட்டவர்கள் நடத்தும் கோயில்களில் பல ஊழல்கள் ஏற்பட்டு, நீதிமன்றம் நியமிக்கும் அலுவலரால் (ரிசீவர்) கோயிலின் ஆட்சிமுறை நடைபெற்று வருவது இம்மாவட்டத்தில் பெரிய அளவில் பரவியிருக்கிறது.

நாஞ்சில்நாட்டு வேளாளர்கள் வாழும் சிற்றூர்களில் ஊர்தோறும் தங்கள் கோயிலைக் கவனிப்பதற்கென்று அவர்கள் அற நிறுவனங்கள் அமைத்துள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ள சில கோயில்களுக்கு வாணத் தொழிற்சாலே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டிலுள்ள சைவ ஆதீனங்கள் சிலவற்றின் கிளே நிலேயங்கள் இம்மாவட்டத்திலுள்ளன. திருவாவடு துறை ஆதீனத்துக்கும் திருப்பனந்தாள் ஆதீனத்துக்கும் இம்மாவட்டத்தில் ஏராளமான சொத்துக்கள் உள்ளன. சர். சி. பி. இராமசாமி ஐயர் திவாஞக இருந்த காலம் தொடங்கி, கிறித்தவ சமயத்துக்கு இந்து மக்கள் மாறு வதைத் தடுக்கும் முயற்சி ஏற்பட்டது. அதனுல் இராமசாமி ஐயருடைய ஆணேக்கு அடங்கி அதுமுதல் ஆதீனங்கள் குமரி மாவட்டத்தில் தங்களுக்குக் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியையேனும் இங்கேயே செலவு செய்ய முன்வந்தனர்.

திருப்பனந்தாள் ஆதீனத்தார் சுசீந்திரத்தில் திரு விழாக்கால மண்டகப் படியும் தேவாரப் பாடசாலேயும் ஏற்படுத்தியுள்ளனர். கன்னியாகுமரியில் அமாவாசை நாளில் அம்மனுக்கு வழிபாடு நடத்தி வருகின்றனர். சுசீந்திரம், ஆசிராமம், தரிசனங்கோப்பு முதலிய ஊர் களில் ஆதீன மடங்கள் உள்ளன.

சுசீந்திரத்திலுள்ள அன்னே கோயிலின் முன்னேற்ற நங்கை, வேழிமலேக் குமரன், பத்மனுபபுரம் சரசுவதி யம்மன் ஆகிய உற்சவ விக்கிரகங்கள் யானேமீதேற்றப் பட்டு ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழாவுக்கு—இணேப்புக்கு முன்னர்ப் போலவே இப் போதும்—எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு இறைவனின் உருவங்கள் எடுத்துச் செல்லப்படும் வைபவம் காணத்தக்கதாகும்.

4. மருத்துவ மனைகள்

இயற்கையெழில் நிறைந்த குமரி மாவட்டம் உடல் நலத்தோடு வாழ்வதற்குரிய பகுதிகளில் ஈடும் இணையு மின்றி விளங்குகிறது. முப்புறமும் கடல் சூழ்ந்திருப்ப தோடு தென்றல் காற்று வீசுவதும் இப்பகுதியின் சிறப்பு. வடக்கே மலைத்தொடர் இருப்பதால் வாடைக்காற்று அடிப்பதில்லை. எனவே, இங்குள்ள மக்கள் நல்ல உடல் நலத்தோடு வாழ்கின்றனர். கேரளத்தில் காணப்படும் நோய்கள் இங்கே தலைகாட்டுவதில்லை. தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களைவிட இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சராசரி வயது மிகக் கூடுதலாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மருத்துவ மலை

மூலிகை வளங்களும் இம்மாவட்டத்தில் மிகுந் துள்ளன. கன்னியாகுமரிக்கு அருகே கோடி மலையாகக் காட்சியளிக்கும் மருத்துவ மலை எனப்படும் மருந்துவாழ் மலை எண்ணற்ற மூலிகைகளைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கிறது. உடல் நலத்துடன் வாழ்வதற்கேற்ற குன்றாகவும் இது அமைந்திருக்கிறது. கேரளத்தில் பெரும் புகழ் பெற்ற அறிஞராகவும் மக்களுக்கு வழி காட்டிய பெரு மகானாகவும் விளங்கிய ஸ்ரீ நாராயண குரு இம்மலையில் பல ஆண்டுகளைக் கழித்தார்.

இம்மலை நாகர் கோயிலிலிருந்து எட்டாவது மைலில் (13 கிலோ மீட்டர் தொலைவில்) இருக்கிறது. இதன் உயரம் 400 அடி (120 மீட்டர்). இதில் ஏறுவதற்குப் படியில்லை. இதன் உச்சியிலிருந்து பார்த்தால் குமரி மாவட்டத்தின் பெரும்பகுதி தெளிவாகத் தெரிகிறது.

ஆற்றலும் ஆர்வமும் உடையவர் அனைவரும் கட்டாயம் காணவேண்டிய பகுதிகளுள் இம்மலையும் ஒன்று.

இராமாயணப் போரில் இலக்குவனைக் காப்பாற்ற அனுமன் கொண்டுபோன சஞ்சீவி மலையின் ஒரு பகுதியே இது என்பது புராண வரலாறு.

அமல்பொரி, ஆடாதோடை, இருவேலி, கொடுவேலி, துளசி, தும்பை, தூதுவேளை, வில்வம், விளாத்தி, வெட்டிவேர், இராமிச்சம், அரிதாரம், தேவதாரம், எட்டிமட்டி, கோவைப்பாவை, நாகவல்லி, அதிவிடயம், குன்றி, நங்கை, நாகப்பூசத்தி, அகில், கருடக்கொடி, கருவேல், வெல்வேல், பொன் ஆம் கண் நீ என மருத்துவர் வாழ்த்திக் கூறும் பொன்னாங்கண்ணி பச்சிலை, தேள்கடி மருந்தாகப் பயன்படும் சில பச்சிலைகள், வெண்குட்ட நோய் நீக்கப் பயன்படும் நீர்மேல் நெருப்பு போன்ற மூலிகைச் செல்வங்கள் அள்ள அள்ள அணுவளவும் குறையாத அளவிலிருந்தும் அவற்றுக்கு எருவிடுவாரில்லை, களையெடுப்பாரில்லை, கட்டிக் காப்பாரில்லை, அணைப்பாரும் இல்லை, கொள்ளுவாரும் இல்லை என்ற நிலையில் உள்ளன.

இம்மலையருகே நாட்டு மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவும் கடமை தமிழ்நாடு அரசாங்கத்தினர்க்கு உண்டு. அதை அவர்கள் விரைந்து செயலாற்றுவது நலம் பயக்கும்.

வர்ம வைத்தியம்

குமரி மாவட்டத்திற்கென்று சிறப்பாக உள்ள மருத்துவ முறை வர்ம வைத்தியம்' என்பது. கை கால் சுளுக்குகளை எடுப்பதற்கும் நரம்பு மருத்துவம் செய்வதற்கும் இது சீரிய முறையாக இருப்பதாகத் தெரிகிறது.

மேனாட்டு மருத்துவ முறை

மேனாட்டு மருத்துவ நிலையங்கள் குமரி மாவட்டத்தில் மிகுதியாக இருக்கின்றன. நாகர்கோயில் நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள ஊர்களிலும் நோக்குமிடமெல்லாம் கிறித்தவப் பெருமக்கள் நடத்தி வரும் மருத்துவ நிலையங்கள் உள்ளன. இக்காரணத்தால் நாகர்கோயில் நகரை மருத்துவ நிலையங்கள் நிறைந்த நகரம் (City of Hospitals) என்று கூறினும் தகும்.

இத்தகைய மருத்துவ நிலையங்களுள் குறிப்பிடத் தக்கவை புத்தேரி காதரைன் பூத் மருத்துவ நிலையம் (Catherine Booth Hospital) நெய்யூர் லண்டன் மிசன் மருத்துவ நிலையம், உரியாவிளை லண்டன் மிசன் தொழு நோய் மருத்துவ நிலையம் என்ற மூன்றும் ஆகும்.

காதரைன் பூத் மருத்துவ நிலையம்

இது, நாகர்கோயில் நகர எல்லைக்குட்பட்ட வடசேரி கலுங்கடியில் இருக்கிறது. இதனை சால்வேஷன் ஆர்மி என்ற இயக்கத்தினர் நடத்தி வருகின்றனர். மருந்து கொடுக்கும் நிலையமாக இது 1895-இல் தொடங்கப் பெற்றது. 1897-இல் இதற்குரிய கட்டிடங்கள் கட்டப் பெற்றன. 1961-இல் இம்மருத்துவ விடுதி 500 படுக்கைகளும் கண், எக்ஸ்-ரே, பல், புற்றுநோய் மருத்துவங்களுக்குத் தனித்தனிப் பகுதிகளும், நர்சுகளுக் குரிய பள்ளிக்கூடமும் கொண்டு சிறந்ததொரு நிறுவன மாகப் புகழ் பெற்றிருக்கிறது. டாக்டர் டபிள்யு. ஏ. நோபல் என்ற அமெரிக்க மருத்துவர் இங்கே பணியாற்றி வருகிறார். இந்த மருத்துவ மனையைச் சேர்ந்த தொழு நோய் நிலையமும் (குமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய் மொழி, செம்பன்விளை, கோதநல்லூர் ஆகிய இடங்

களிலும் கோளத்திலுள்ள பத்தனபுரம், கங்களை ஆகிய இடங்களிலும் உள்ள) கிளை மருத்துவ நிலையங்களும் தலைமை நிலையத்தைப் போலவே செம்மையாய்ச் செயலாற்றி வருகின்றன.

நெய்யூர் மருத்துவ மனை

நெய்யூர்ப் பகுதியில் வயிற்றுப்புண் நோய் மிகுதியாக இருப்பதால் லண்டன் மிசன் மருத்துவமனை இந்நோய் நீக்க முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இவ்வகை நோயைக் குணப்படுத்தும் அறுவை சிகிச்சை மருத்துவரில் உலகப் புகழ் பெற்ற டாக்டர் சோமர்வெல் என்பார் சென்ற தலைமுறையில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் பணியாற்றிய காரணத்தால் நெய்யூர் மருத்துவ மனையின் பெயரும் ஆழிசூழ் உலகெங்கும் அன்றுபோல் இன்றும் பரவி யிருக்கிறது. இம்மருத்துவமனை இங்கிலாந்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளாலும் மதிக்கப்படும் வகையில், கன்னியாகுமரி மெடிகல் மிஷனால் நடத்தப்பட்டு வருகிறது.*

குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் மருத்துவமனை இதுவே. 1838-இல் தோன்றி சிறிது சிறிதாக வளர்ந்து இப்போது 270 படுக்கைகளுடன் விளங்குகிறது. நாள் தோறும் 50 அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

பிற நிலையங்கள்

தனிப்பட்டவர்கள் நடத்தும் மருத்துவ மனைகளும் பிற எந்த மாவட்டத்தையும்விட நன்முறையிலும் பெருந் தொகையாகவும் கன்னியாகுமரி மாவட்டத்தில்

---

* Royal College of Surgeons of England has recognised this Hospital as a Post—graduate Surgical Training Centre for House Surgeons appearing for Final F. R. C. S. Examination.

உள்ளன. இதற்குக் காரணம் அரசாங்க மருத்துவ நிலையங்களின் அருமையும் கிறித்தவ சமயத் தொடர்பால் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவக் கல்வியில் உயர் பயிற்சி பெற்றதும் ஆகும். தனியார் நடத்தும் இம்மருத்துவ மனைகளில் முதல்தரமான நிலையங்கள் பல உண்டு.

கல்விப் பெருக்கத்தால், நோயின் அறிகுறி தோன்றிய வுடனேயே மருத்துவரிடம் செல்லும் மனப்பான்மை இம்மாவட்டத்து மக்களிடம் உண்டு. குடும்பத்தோடு மருத்துவரிடம் செல்லுவோரும் உள்ளனர். இதனுல் ஏராளமான தனிப்பட்ட மருத்துவர்கள் மாதந்தோறும் பல்லாயிரம் ரூபாய் வருவாய் பெற்று வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இவ்வருமானங்களுக்கு வரி விதிக்கப்பட்டு வருகிறது.

தனிப்பட்ட மருத்துவர்கள் நடத்தும் மருத்துவ மனைகளுள் டாக்டர் மத்தியாஸ் நடத்தி வரும் தேசபந்து மருத்துவ நிலையம் முக்கியமான ஒன்ருகும்.

அரசாங்க மருத்துவ நிலையம்

அரசாங்க மருத்துவ நிலையங்களுள் ஆசாரிப் பள்ளத்தில் அமைக்கப்பட்டுள்ள நுரையீரல் நோய் நீக்க நிலையம் குறிப்பிடத்தக்கது. 1956 வரை இம் மாவட்டத்தில் ஒருவரும் அரசாங்க மருத்துவ நிலையங் களுக்குச் செல்ல விரும்பவில்லை. குமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைந்த பின்னர் அரசாங்க மருத்துவ நிலையங்கள் பெருகியுள்ளன; அவற்றிலும் நல்ல முறையில் நோய் நீக்கம் பெறலாம் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நாகர்கோயிலில் ஒன்பது லட்சம் ரூபாய்ச் செலவில் மாவட்ட மருத்துவ நிலையம் ஏற்பட்

டிருக்கிறது. தக்கலை, குளச்சல் ஆகிய நகரங்களிலும் பெரிய மருத்துவ நிலையங்கள் கட்டப்பெற்றுள்ளன. நாகர்கோயிலில் உடல்நல ஆய்வுத் துறையின் கிளை (Regional Public Health Laboratory) தொடங்கப் பெற்றிருக்கிறது.

சித்த மருத்துவர்

சித்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர் இம் மாவட்டத்தில் பலர் இருந்தும் இம்முறைப்படி நோய் நீக்கம்பெறும் நோயாளிகள் கடுமையான பத்தியமாக இருக்க விரும்பாமையால் இவ்வாறு மருத்துவம் செய்து கொள்ளுவோர் தொகை சுருங்கிவிட்டது.

5. கல்வி நிலையங்கள்

கல்வித் துறையில் கன்னியாகுமரி மாவட்டம் சிறந்த நிலையில் இருக்கிறது.

தொடக்கக் கல்வி

கேரளத்துடன் சேர்ந்த பகுதியாக இம்மாவட்டம் இருந்ததால், இங்கே கல்விப் பெருக்கத்தைக் காண இயலு கிறது. கட்டாயக் கல்வி முறை இருந்து வருகிறது. *1951* கணக்கெடுப்பின்படி, இம்மாவட்டத்தில் *100* பேருக்கு *85* பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர் ஆவர். *1961* கணக்கெடுப்பில், இத்தொகை இன்னும் கூடுதலாக இருக்கும்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வி

இத்துறையிலும் இம்மாவட்டம் உயர்வடைந்திருக் கிறது. அரசாங்கம் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள்,

கிறித்தவ மிசனரிமார் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் என்று இம்மாவட்டத்து உயர்நிலைப் பள்ளிகளைப் பிரிக்கலாம். பிற மாவட்டங்களைப் போல இங்கு மாவட்டக் கழகப் பள்ளிகள் கிடையாது; காரணம் மாவட்டக் கழகமே இல்லை. தனிப்பட்டவர்களின் கொடையால் அமைந்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. அவற்றுள் தேசிகவிநாயகம் உயர்நிலைப் பள்ளியும் வடசேரி எஸ். எம். ஆர். வி. உயர்நிலைப் பள்ளியும் நன்முக நடைபெற்று வருகின்றன. பெண்கள் கல்வி, பிற மாவட்டங்களைவிட இம்மாவட்டத்தில் கூடுதலாக இருக்கிறது. பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் நாகர்கோயிலிலுள்ள ''டத்தி ஸ்கூல்'', சென் ஜோசப் கான்வன்டு இரண்டும் குறிப்பிடத்தக்கன.

அரசாங்கம் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் மிகுதியாகும். இதற்கு சர். சி. பி. இராமசாமி ஐயர் காரணம் என்பது நன்றியறிவுடன் குறிப்பிடத்தக்கது. இத்தகைய பள்ளிகளில் முக்கியமானது நாகர்கோயில் எஸ். எல். பி. (ஸ்ரீ லட்சுமி பாய்) உயர்நிலைப் பள்ளியாகும். இப் பள்ளியின் கவினுறு கட்டிடம் கண்டோர் வியக்கும் தோற்றப் பொலிவுடன் மேடையான இடத்தில் அமைந் திருக்கிறது. இணைப்புக்குப்பின் இதனை முதல் தடவையாகக் கண்ணுற்ற நம் கல்வியமைச்சரே, ''இது என்ன கல்லூரிக் கட்டிடமா ?'' என்று கேட்டார் எனின், இதன் பெருமையை மேலும் கூற வேண்டுவதில்லையே?

ஏறத்தாழ 500 தொடக்கப் பள்ளிகளும், 122 உயர்நிலைப் பள்ளிகளும் இம்மாவட்டத்தில் 1960-இல் நடைபெற்று வருகின்றன. இதே ஆண்டில், இம்மாவட்டத்தைப் போன்று நான்கு பங்கு மக்கள் தொகையுள்ள மதுரை மாவட்டத்தில் 75 உயர்நிலைப் பள்ளிகள்

உள்ளன என்பதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ள லாம். இவ்வாறு இம்மாவட்டம் கல்வி நிலையில் உயர் வடைந்திருப்பதற்குக் கிறித்தவ மிசனரிமார்களும் திருவிதாங்கூர் அரசாங்கமும் செய்த பணிகள் பாராட்டத் தக்கவையாகும். ஆசிரியர்களின் ஊதியங்கள் தமிழ் நாட்டின் எஞ்சிய மாவட்டங்களை நோக்க இங்கே கூடுதலாக இருப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

தொழிற் கல்வி

ஆசிரியர் பயிற்சிக்காக ஐந்து பள்ளிகளும், பல்தொழிற் கல்லூரி (பாலிடெக்னிக்) ஒன்றும் இம் மாவட்டத்தில் உள்ளன. பல்தொழிற் கல்லூரி தமிழ் நாடு அரசாங்கத்தாரால் 1959-இல் தொடங்கப் பெற்றது. இப்பள்ளியில்* எல். சி. ஈ., எல். எம். ஈ., எல். ஈ. ஈ. படிப்புகளுக்குரிய வகுப்புகள் மூன்றுண்டுகளுக்கு நடைபெறுகின்றன.

நாகர்கோயிலிலுள்ள SMRV டெக்னிகல் இன்ஸ்ட் டிட்டியூட்டில் கைத்தறி நெசவு, விசை நெசவுத் துறை களில் பயிற்சியளிக்கும் கல்வி 12 மாதங்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

நாகர்கோயில் பயனியர் மோட்டார் சர்வீஸ் தொழிற் சாலையில் தமிழ்நாடு அரசாங்கத்தார், தொழிற் பயிற்சி நிலையம் (Industrial Training Institute) ஒன்றை நடத்தி வருகின்றனர்.

உடற்பயிற்சிக் கல்வி

உடற்பயிற்சிக் கல்விக்கென இம்மாவட்டத்தில் நிறுவனம் எதுவும் இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் வேறு

* Government polytechnic, Nagercoil.

எந்த மாவட்டத்தையும்விட உடற்பயிற்சி ஆசிரியர்கள் இம்மாவட்டத்தினரில் கூடுதலாக இருப்பது குறிப்பிடத் தக்கது.

கன்னியாகுமரி—குருகுல ஆசிரமம்

இது 1952 முதல் கன்னியாகுமரியில் நடைபெற்று வருகிறது; திக்கற்ற குழந்தைகளுக்குத் துணை புரிவதற் காக ஏற்பட்டது. தமிழ் இலக்கியங்கள், சமய நூல்கள், நீதி நூல்கள், நூல் நூற்றல் போன்ற கைத் தொழில்கள் இங்கே கற்பிக்கப்படுகின்றன. பொதுமக்கள் வழங்கும் நன்கொடையால் இக் குருகுலம் நடத்தப்படுகிறது. இதற்குரிய கட்டிடங்கள் நாகர்கோயிலில் 1961-இல் கட்டப்பட்டு வருகின்றன.

ஆட்சி முறை

உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கல்வி நிறுவனங்கள் பிறவற்றுக்கும் அரசாங்கம் மானியம் வழங்கும் முறை இம் மாவட்டத்தில் ஒரு வகையாகவும் தமிழ்நாட்டின் எஞ்சிய மாவட்டங்களில் ஒரு வகையாகவும் இருந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில்—கேரள மாநிலத்தில் போல — ஒவ்வொரு பள்ளியும் மாணவர்களிடம் வசூலிக்கும் சம்பளத்தை அரசாங்கக் கணக்கில் கருவூ லத்தில் கட்டிவிடுகிறது; ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை ஒவ்வொரு திங்களிலும் அரசாங்கம் மொத்தமாக அந்தந்தப் பள்ளிக்கு வழங்குகிறது. ஏனைய மாவட்டங் களில், பள்ளி நிருவாகிகளே வசூலாகும் பணத்தை வைத்துக்கொண்டு, ஆண்டுக்கொரு முறை மட்டும் மொத்தமாக "மானியம்" பெறுகின்றனர். கன்னியா குமரி மாவட்டத்து வழக்கத்தையே தமிழ்நாடெங்கும் பின்பற்ற வேண்டுமென்ற கருத்து அரசாங்க வட்டாரங் களில் நிலவி வருகிறது.

கல்லூரிகள்

இம்மாவட்டத்தில் கலைக் கல்லூரிகள் இரண்டு உள்ளன. இம்மாவட்டத்து மாணவர் ஒரு சிலர் திருவனந்தபுரத்திலும் பெரும்பாலோர் தமிழ்நாட்டின் பல கல்லூரிகளிலும் பயின்று வருகின்றனர்.

தொழில் துறைக் கல்லூரி ஒன்றுகூட இம்மாவட்டத்தில் இல்லை. 1950-க்கும் 1956-க்கும் இடையே, இம்மாவட்டத்து மாணவர்கள் கேரளத்துக் கல்லூரிகளில் இடம் கிடையாது அல்லற்பட்டனர். 1956-இல் இம்மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்துவிட்டதன் விளைவாகப் பொறியியல், மருத்துவ, விவசாய, கால்நடைக் கல்லூரிகளில் மாவட்டத்தின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு இவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோயில்

இம்மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் கல்லூரி இதுவே.

இதை லண்டன் மிசனரி சொசைட்டியின் கன்னியாகுமரிக் கிளையினர் நடத்தி வருகின்றனர். செப்டிமஸ் ஆர். ஸ்காட் என்ற கல்வியாளர் 1809-இல் தொடங்கிய ஒரு பள்ளியே பிற்காலத்தில் பெருவளர்ச்சி பெற்றதால், கல்லூரிக்கு அவர் பெயர் சூட்டப்பெற்றிருக்கிறது.

1819-இல் இது நாகர்கோயில் செமினரி என்ற பெயரில் பல பள்ளிகளுக்கு இணைப்பான கல்வி நிலையமாக ஆயிற்று. 1893 வரை உயர்நிலைப் பள்ளியாகவும் அதன் பிறகு சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த இண்டர்மீடியட் கல்லூரியாகவும் இருந்தது. 1938-இல் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகம் ஏற்பட்டதால், இக் கல்லூரி அப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1950-இல் கேரளப் பல்கலைக் கழகத்துடனும், 1956

முதல் மீண்டும் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும் இக்கல்லூரி இணைக்கப்பட்டிருக்கிறது.

1950-இல் பி. எஸ். சி,, பி. ஏ. (கணிதப் பாடப்) படிப்புக்களும், 1953-இல் பி. ஏ. பொருளாதாரப் பாடமும், 1954-இல் பி. ஏ. இரசாயனப் பாடமும், 1955-இல் பி.ஏ. பௌதிகப் பாடமும், 1956-இல் உயிரியல் பாடமும் கற்பிக்கத் தொடங்கப்பெற்றன.

ஓராயிரத்துக்கு மேற்பட்ட மாணவரும் மாணவியரும் இக்கல்லூரியில் பயின்று வருகின்றனர். கல்லூரியின் கட்டிடம் நாகர்கோயில் நகரின் நடுவே நன்கு அமைந் திருக்கிறது ; ஆனால், வளர்ச்சிக்கு வேண்டிய காலி இடங்கள் போதிய அளவில் இல்லை. கல்லூரி நூல் நிலையத்தில் பழமையான நூல்கள் பல உள்ளன.

இக் கல்லூரியில் இருபாலரும் கல்வி பயிலுகின்றனர்.

தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோயில்

1952-இல் இக்கல்லூரி தொடங்கப்பெற்றது. இது கோட்டாறு தேசிகவிநாயகர் அற நிறுவனத்து மூல தனத்தை வைத்தும் பல்வேறு ஊர்களிலுள்ள கோயில் களின் நன்கொடையைக் கொண்டும் டி. எஸ். இராமசாமி பிள்ளை எம்.எல்.ஏ.யைத் தலைவராகக் கொண்ட குழுவால் தொடங்கப் பெற்றது. நாகர்கோயில் நகரை யொட்டிய கோட்டாற்றில் செட்டித் தெரு பிள்ளையார் கோயில் பகுதியில் விரிந்து பரந்த இடத்தில் இக் கல்லூரியின் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பொருளுதவி செய்திருப் பவர்கள் மிகப் பலர். அவர்களுள் திருவிதாங்கூர் மன்னர் சித்திரைத் திருநாளும், திருப்பனந்தாள் ஆதீனத் தலைவரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இக்கல்லூரியின் முதல்வராக இருந்த (பொருளாதாரப் பேரறிஞர்) டாக்டர் பா. நடராசன் இக்கல்லூரியின் விரைந்த வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டிருக்கிறார். இக்கல்வி நிலையத்தை உருவாக்கியவர் என்று இவரைச் சொல்லலாம். தமிழ்ப் பேராசிரியர்—திரு. இலக்குவனார்—ஒருவரைக் கல்லூரித் தலைவராக (1958-59-இல்) ஆக்கிய பெருமை தமிழ்நாட்டில் இக்கல்லூரிக்கே உரித்தாகும். வழிபாட்டு மண்டபத்தில் கடவுள் இயல்பு—சமய இயல்பு—அறநெறி இயல்பு பற்றி, காலையில் ஆசிரியர்கள் சொற்பொழிவு ஆற்றி வருவது இங்கு நாள் தோறும் நடைபெறும் நிகழ்ச்சியாகும். கல்லூரி நூல் நிலையத்தில் தமிழிலும் பொருளாதாரத் துறையிலும் சிறந்த நூல்கள் உள்ளன.

தமிழ் எம் ஏ. வகுப்பு இக்கல்லூரியில் 1956 முதல் நடைபெற்று வருகிறது. பிற பாடங்களில் பி.ஏ., பி.எஸ்.சி. பி.காம். படிப்புக்கள் உள்ளன. இருபாலரும் இங்கே கற்கின்றனர்.

நூல் நிலையங்கள்

வேறு எந்த மாவட்டத்தையும்விடக் கூடுதலாக, இங்கு நூல் நிலையங்கள் உள்ளன. இவற்றுக்கு வாசிப்பு சாலை என்று பெயர். இவ்வாறு இம்மாவட்டத்தில் 150 நிலையங்கள் உள்ளன. இவை தனிப்பட்ட நிறுவனங்களால், அரசாங்க மானியத்துடன் நடத்தப்பெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் அமலிலுள்ள சென்னை பொது நூல் நிலையச் சட்டம் இன்னும் (1961 தொடக்கம் வரை) இம்மாவட்டத்தில் அமலாக்கப்படவில்லை.

இம்மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில், இணைப்புக்குப் பின், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்

காலத்தில் நூல் நிலையங்களுக்கென நிதி வழங்கப்பட்டு தமிழ் நூல்களும் ஏராளமாக வாங்கப்பெற்றுள்ளன.

இங்குள்ள பொது நூல் நிலையங்களில் தாழக்குடி ஸ்ரீ கிருஷ்ண விலாசம் நூலகமும் நாகர்கோயிலில் கிளப் நூலகமும் மிகப் பழமையானவை. நாகர்கோயில் கிளப் நூலகத்தைப் பாதுகாக்க அரசாங்கம் ஆவன செய்யுமாயின் நலமாக இருக்கும். இம்மாவட்டத்திலுள்ள எல்லா நூலகங்களிலும் மலையாள மொழியிலும் நூல்கள் உள்ளன.

இம்மாவட்டத்தின் பொது நூலகமாக (டிஸ்டிரிக்ட் சென்ட்ரல் லைபரரி) நாகர்கோயில் வடசேரியிலுள்ள கவிமணி நிலையத்தை, தமிழ்நாடு அரசாங்கம் எடுத்து நடத்துவதென்று முடிவு செய்திருக்கிறது. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பெயரும் புகழும் என்றும் நிலைத்து அன்னாருடைய தமிழ்த் தொண்டினை நினைவூட்டும் மண்டபமாக அமைய வேண்டுமென்ற எண்ணத்துடன் காலஞ்சென்ற திரு. நயினார், திரு. சத்தியநேசன் ஆகியோரும் பிறரும் அயராது உழைத்து ஏழத்தாழ 40,000 ரூபாய்வரை பொதுமக்களிடமிருந்து வசூலித்து 1954-இல் இம்மண்டபத்தைக் கட்டி முடித்தனர். கவிமணி அவர்கள் பயன்படுத்திய நூல்களும், ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும் (வரலாறு, கல்வெட்டுத் தொடர்புடைய) அரிய நூல்களும் இந்நூலகத்தின்கண் உள்ளன.

ஏனைய நூலகங்களுள் குறிப்பிடத்தக்கது நாகர்கோயில் சச்சிவோத்தம சி. பி. இராமசாமி ஐயர் சஷ்டியப்தபூர்த்தி பூங்காவிலுள்ள நகராட்சி நூலகம்ஆகும்.

இவற்றுள் பலவற்றுக்குச் சொந்தக் கட்டிடம் உண்டு. வானொலிப் பெட்டிகள் பெரும்பாலான இடங்களிலுள்ளன.

6. கலைப் பெருமைகள்

இசை

இசைக் கல்வெட்டுக்கள் இம்மாவட்டத்துச் சுசீந்திரம் கோயிலில் உள்ளன.

வில்லுப் பாட்டு இம்மாவட்டத்தில் மிகவும் பரவியுள்ளது. திருமலை நாயக்கரின் பிரதிநிதியாக ராமப்பய்யன் இப்பகுதியைப் படையெடுத்தபோது அவரை எதிர்த்துப் பொருதிய போராட்ட நிகழ்ச்சிகள் ''இரவிக்குட்டிப் பிள்ளை போர் சரித்திரம்'' என்ற பெயரில் இன்றும் வில்லுப் பாட்டாகச் சித்திரிக்கப்பட்டு மக்கள் உள்ளங்களை ஈர்த்து வருகின்றன. இவ்வாறு கலைத்தொன்மை நிறைந்த பகுதியில் தோன்றியவராகிய என். எஸ். கிருஷ்ணன், இவ்விருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வில்லுப் பாட்டினைத் தமிழ்நாடெங்கும் பரப்பினுர்.

இசைத் துறையில் இணையற்ற தொண்டு செய்த இரு பெருமக்கள் இம் மாவட்டத்தினரே. ஒருவர் கீர்த்தனை செய்தும் வீணை வாசித்தும் புகழ் பெற்ற இசைச் செல்வர் திருவனந்தபுரம் இலக்குமணப் பிள்ளை; மற்றொருவர் எண்ணற்ற கீர்த்தனைகளை இயற்றி இசைத் தமிழுக்கு ஏற்றம் தந்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆவார்.

வாழும் மக்களில் இசைத் துறையில் குறிப்பிடக்கூடிய கலைஞர்கள் வாய்ப்பாட்டுப் புகழ் நாகர்கோயில் ஹரிஹரன், மிருதங்கம் நாகர்கோயில் கணேசன், பிடிலிலும் ஐரோப்பிய இசையிலும் வல்லுவரான நாகர் கோயில் ஜே. எஸ். சந்திரா, புல்லாங்குழல் புகழ் நாகர் கோயில் ஜே. சாம்ராஜ் ஆகியோர் ஆவர்.

நாடகம், திரைப்படம்

காலஞ் சென்ற என். எஸ். கிருஷ்ணனும் இந்நாளில் பெரும்புகழ் பெற்றவர்களாகிய நடிகர் ஔவை டி. கே. சண்முகம், டி. கே. பகவதி ஆகியோர் தமிழ்நாட்டின் கலைவளத்தைப் பெருக்கி, கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு உணர்ச்சியூட்டிய பெருமைக்கு உரியவர்கள் ஆவர். "நாரதர்" நாகர்கோயில் மகாதேவன், திரைக் கதை எழுதுபவராகிய நாஞ்சில் ராஜப்பா, திரைப்படத் தொழில் நுட்பம் நிறைந்தவரான நாகூர் காசிலிங்கம் ஆகியோரும் இம்மாவட்டத்தினரே. இவர்களும் இன்னுஞ் சில கலைஞர்களும் இம்மாவட்டத்தினராக இருந்தும், இவர்களை இம்மாவட்டத்தினர் என்று பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. இதற்குக் காரணம் இவர்கள் அனைவரும் சென்னை மாநகர் வாழ்நராகி விட்டதேயாம். "மலையில் பிறந்தாலும் உரலில்தானே மசிய வேண்டும்?"

நடனம்

ஔவை சண்முகம் கலைக் கழகம் நாகர்கோயிலில் நடனப் பள்ளி ஒன்றை நடத்தி வருகிறது.

மிருதங்கம் வாசிப்பதில் பெரும் புலமை பெற்றிருந்த வில்லிப் பிள்ளை என்பார் சில தலைமுறைகளுக்கு முன் சுசீந்திரத்தில் வாழ்ந்தார். அரசனின் ஆணையை மறுத்ததால், ஆண்டவனை வணங்கி ஆலயத்தில் அவர் வாசிக்கும் போது கேட்க அரசனே சுசீந்திரத்துக்கு வந்ததாக "கொன்றைப் பத்து" என்ற பனுவல் கூறுகிறது. 108 கதலிப் பழங்களையுடைய வாழைக் குலையை மண்டபத்தின் மேல்பாகத்தில் கட்டித் தொங்கவிட்டு அதன் கீழே வில்லி அமர்ந்து மிருதங்கத்தை இசைத்தான். தாள வரிசையின் இறுதியில் முத்தாப்புக் கொடுத்தபோது ஒவ்வொரு

பழமும் தாமே வரிசையாக நழுவி விழுந்ததாம். இதை விவரிக்கும் பாடல்களில் ஒன்றைக் கீழே காண்க.

" கட்டுங் கதலிக் குலைத்தாள வீற்றின்
கனியொன்று தீர்ந்திடவே
வட்டப் பரிவுத் திரைக்குள் நின்று
வகைசேர் தாளம் நூற்றெட்டும்
விட்டு விளங்க வஞ்சிநகர் வேந்தன்
மகிழ்வில்லிப் பிள்ளைக்
கொட்டுக் கிசைந்தக் கூத்தனை நான்
கொன்றை நிழலிற் கண்டேனே!"

7. நிலவளமும் நீர்வளமும்

குமரி மாவட்டம் நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய தாகும். நாஞ்சில் நாடு, ஏனைய பகுதிகளைவிட வள மிக்கது ஆகும். இதை, மனோன்மணியத்தில், பேரா சிரியர் சுந்தரம்பிள்ளை பின்வருவாறு கூறுகிறார் :

இரண்டாம் அங்கம்—முதற்களம்

குடிலன் வாக்கு :

"வஞ்சிநாடதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன்று உளது அதன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே ?
மருதமும் நெய்தலும் மயங்கி அங்கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும் ;
மழலை வண்டானம் புலர் மீன் கவர."

கே. என். சிவராஜ பிள்ளை, 'நாஞ்சில் வெண்பா' என்னும் நூலில் நாஞ்சில் நாட்டுச் சிறப்புக்களை அழகாகப் பாடியுள்ளார்.

பழையாறு, கோதையாறு போன்ற ஆறுகளும் நூற்றுக்கணக்கான கால்வாய்களும் இம்மாவட்டத்தில் உள்ளன. 3045 குளங்களும் இருக்கின்றன; இவற்றுள் தேரூர், சுசீந்திரம், பறக்கை, புத்தேரி, தாழைக்குடி ஆகிய ஊர்களையொட்டிப் பெரிய குளங்கள் உள்ளன. குளங்களால் பெயர்பெற்ற ஊர்கள் எண்ணிறந்தன. கோட்டாறு, வெள்ளாறு, திருவாட்டாறு என்பன ஆறுகளால் பெயர்பெற்றுள்ளன.

இவ்வாறு நீர்வளம் நிரம்பியிருப்பதால் நாஞ்சில் நாடு எனப்படும் அகத்தீசுவரம் தோவாளை வட்டங்கள் தஞ்சை மாவட்டம் போலத் தமிழ்நாட்டின் நெற் களஞ்சியமாக உள்ளன. விளவங்கோடு வட்டம் நெய்யாறு திட்டத்தால் வளமடைந்து வருகிறது.

சிற்றாறு பட்டணங்கால் திட்டம், மாம்பழத்து அணைத்திட்டம், பொய்கைத் திட்டம், முக்கடல் அணை யைப் பெரிய அணையாகக் கட்டும் திட்டம் ஆகியவையும் நிறைவேறினால் இம்மாவட்டத்தின் வளம் இன்னும் கூடுதலாக இருக்கும்.

பறளையாறு

இது மகேந்திரகிரிக்கு வடக்கே தோன்றி, அருவிக் கரை திருவாட்டாறு ஆகிய இடங்கள் வழியே பாய்ந்து தாம்பிரபரணியுடன் கலக்கிறது. பொன்மலையில் இவ் வாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டப்பெற்றிருக்கிறது.

வள்ளியாறு

இது அசம்பு மலைக்கு அண்மையில் தோன்றி, கல்குளம் வட்டத்தின் வழியாகப் பாய்ந்து அரபிக்கடலில் கலந்து விடுகிறது. பத்மனுபபுரமும் இரணியலும் இதன் கரையில் இருக்கின்றன.

பழையாறு

"வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை படுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்பது சிலப்பதிகாரம். இப்பஃறுளியாறு கடல்கோளுக்கு இறையான குமரிக் கண்டத்தில் இருந்ததாகவே தமிழறிஞர் கருதுகின்றனர்.

பழையாறு என்பதே பஃறுளி என்று திரிந்தது என்றும் அந்த ஆறே இன்றும் குமரி மாவட்டத்தில் மலையில் தோன்றி மணக்குடிக் காயலில் கலக்கும் பழையாறு என்றும் குமரி மாவட்டத்தினர் சிலர் கருதுகின்றனர். இக்கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களும் நிலவுகின்றன. பல கால்களால் நடந்து குமரி நாடெங்கும் பரந்து வளப்படுத்தும் ஆறு பழையாறு, என்பர் சிலர். இக் கருத்துப்படக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை,

"ஆயிரம் காலால் நடந்து—நடந்தமு
தன்னை பழையா றளிக்கும் நாடு"

என்று பாடியுள்ளார்.

இந்த ஆற்றை வைத்தே அகத்தீசுவரம், தோவாளை வட்டங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள.

இந்த ஆற்றால் கிடைக்கும் ஊற்றுத் தண்ணீரே நாஞ்சில்நாட்டின் வளத்துக்கு அடித்தளமாக இருக்கிறது.

பாண்டியன் அணை

இது பெருஞ்சாணி அணைக்குக் கீழே உள்ளது. பத்தாம் நூற்றாண்டில் பாண்டிய அரசர்கள் இந்த

அணையைக் கட்டினர். 18-ஆம் நூற்றுண்டில் இந்த அணை நீர்ப்பாசனத்துக்குப் பயன்படாத நிலையை எய்தியது. அப்போது திருவிதாங்கூரை ஆண்டுவந்த மார்த்தாண்டவர்மா மன்னர் பரளியாற்றில் சிறிது கீழ்ப் பாகத்தில் புதிய அணை ஒன்றை அமைத்துப் பழைய அணையின் பலன் தொடர்ந்து கிடைக்க ஆவன செய்தார்.

கோதையாறு அணை

நாஞ்சில் நாட்டை நெற்களஞ்சியமாக்கும் பெருமை பழையாற்ருேடு இந்த ஆற்றுக்கும் உண்டு.

மிர்–ஹெர்ஸ்லி என்னும் ஆங்கிலேயப் பொறியியல் அறிஞர் கோதையாற்றின் நீரோட்டத்தைத் தடுத்து அதில் ஓர் அணை கட்டவேண்டுமென்று 1837–இல் கூறினர். 1869-இல் திருவிதாங்கூரில் தலைமைப் பொறியியல் அலுவலராக இருந்த மிர்-பார்ட்டன் என்பாரும் அதைப் போன்ற கருத்தொன்றினைத் தெரிவித்தார். இவற்றின் விளைவாக 1894-இல் தொடங்கி 1905-இல் பேச்சிப்பாறை அணை 27 லட்சம்ரூபாய்ச் செலவில் கட்டி முடிக்கப்பெற்றது. இத்தேக்கத்தில் 350 கோடி கனஅடி வரை தண்ணீரைத் தேக்கிவைக்கலாம். இதனுல் 56,000 ஏக்கர் நிலத்தின் பாசனத் தேவையை நிறைவேற்ற இயலுமென்று முதலில் கணக்கிடப் பெற்றிருந்தது. அந்த எண்ணம் முற்றிலும் நிறைவேருததால், குறையை ஈடு செய்யப் பரளியாற்றின் குறுக்கே பெருஞ்சாணி அணை வேலை மேற்கொள்ளப்பட்டது.

கோதை ஆற்றுக்குத் தாம்பிரபரணி * என்றும் குழித்துறை ஆறு என்றும் பெயருண்டு. இவ்வாற்றின்

* நெல்லை மாவட்டத்துத் தாம்பிரபரணி வேறு: இது வேறு இவை யிரண்டும் பொதிகைமலையின் இரு பகுதிகளில் தோன்றுகின்றன,

கரையில் முன்சிறை, குழித்துறை, தேங்காய்ப்பட்டினம் ஆகிய நகரங்களுள்ளன.

பெருஞ்ராணி அணை

இது 1953 செப்டம்பர் 2-இல் திருவிதாங்கூர் கொச்சி இராசப் பிரமுகரால் திறந்து வைக்கப்பெற்றது. பேச்சிப்பாறை அணையால் பயனடையும் நிலங்களுக்குத் தண்ணீர் அளிக்க உறுதி செய்வதோடு புதிதாக 6000 ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்யவும் இது உதவுகிறது. அணை கட்டும் வேலை 1948-இல் தொடங்கி 1953-இல் முடிவாயிற்று. இதற்கு 46 லட்சம் ரூபாய்வரை செலவாயிற்று. இந்த அணையால் உண்டாக்கப்பெற்ற நீர்த் தேக்கத்தின் பரப்பு 33·34 சதுர மைல் ஆகும். இந்நீர்த் தேக்கம் திருவனந்தபுரத்திலிருந்து தென்கிழக்கே 58 கி. மீ. தொலைவிலும் தமிழ் நாட்டிலுள்ள குலசேகரம் என்னுமிடத்திலிருந்து 10 கி. மீ. கிழக்கேயும் எழிலுடன் அமைந்திருக்கிறது.

பிற சிறு அணைகள்

பூதப்பாண்டி அணை, குமரி அணை, ஆசிரமாம் அணை என்பன இம்மாவட்டத்திலுள்ள சிறு அணைகளாகும்.

நெய்யாறு திட்டம்

கேரள மாநிலத்தில், திருவனந்தபுரத்திலிருந்து 30 கி. மீ. தென்கிழக்கேயுள்ள செம்பிலமேடு என்னுமிடத்தில் வரும்போது அந்த இடத்தில் தண்ணீரைத் தேக்கிவைத்து அணை கட்டி அங்கிருந்து இரு கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனத்துக்கு வகை செய்வதற்காக ஏற்பட்ட திட்டத்திற்கு நெய்யாறு திட்டம் என்று பெயர்.

வலது பக்கத்திலுள்ள கால்வாய் கேரள மாநிலத்துக்கு மட்டுமே பயன்படுவது. இடதுபுறமுள்ள கால்வாய்

கேரளம் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களிலும் சேர்ந்து மொத்தம் 19,100 ஏக்கர் நிலத்துக்குப் பயன் படுவது. இடது பக்கத்துக் கால்வாயை வெட்டும் வேலே 1958 சூலே 27–இல் முதலமைச்சர் காமராஜரால் தொடங்கி வைக்கப்பெற்று 1961-இல் முற்றுப்பெற்றது: இக்கால்வாய்க்கு மொத்தம் 105 லட்சம் ரூபாய் செலவாகி யிருக்கிறது. இது ஏறத்தாழ 40 கி. மீ. தொலேவுக்குக் கேரளத்தில் சென்று பிறகு தமிழ்நாட்டுக்கு வருகிறது. இதன்பயனுகத் தமிழ்நாட்டில் விளவங்கோடு வட்டத்தில் ஏற்கெனவே பாசனத்திலுள்ள 2000 ஏக்கர் நிலங் களுக்கு நீர் வசதி உறுதிப்படுகிறது. புதிதாக இவ் வட்டத்தில் 7,200 ஏக்கர் விளேச்சலுக்கு வருகிறது. அணேக்கட்டுக்கும் கால்வாய்களுக்கும் சேர்த்து ஏற்பட்ட செலவில் தமிழ்நாட்டின் பங்காக 92 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

8. புவியியல் வளம்

கதிரவன் தோன்றுவதையும் மறைவதையும் காணக் கன்னியாகுமரிக்குச் செல்லுபவர்கள் கடற்கரையெங்கும் ஒளிவீசும் கருமணலேயும் காணலாம். இம்மணல் அலங் காரப் பொருளாகப் பயன்பட்டு வந்தது. ஆனுல், இங்கே உலாவிச் சென்ற கிரிகார் என்ற பாதிரியார் இதை ஆராய்ந்து பார்த்து, ''இது உலோகக் கலப்புள்ள மணல்'' என்று கூறினுர்.

கடற்கரை நெடுக நடந்து சென்ருல் ஊருக்கு ஊர் இம்மணலின் நிறம் மாறுவதைப் பார்க்கலாம். இம் மணலில் ரூட்டைல், இல்மனேட், ட்டிட்டானியம், மோனஸைட் என்னும் கனிப்பொருள்கள் அடங்கியிருப்ப தாலேயே இம்மணல் இவ்வாறு ஒரு தனி நிறம் பெற்று,

பொன் மணலாக இருக்கிறது. இந்தக் கனிப்பொருள் களின் பயன் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ளு வோம்.

ரூட்டைல் (RUTILE)

சில உலோகங்கள் செய்யவும் ட்டிட்டானியம் காம் பவுண்டுகளைச் செய்யவும் இக்கனிப் பொருள் உதவுகிறது. இம்மாவட்டத்துக் கடற்கரை மணலில் 3 முதல் 5% வரை ரூட்டைல் இருக்கிறது. எஞ்சிய 95-97% பிற கனிப் பொருள்கள் ஆகும். இதைப் பிரித்தெடுப்பது கடினம். இதற்கு வேண்டும் இயந்திரங்கள் நம் நாட்டில் இல்லை. ஆகையால் இல்மனைட், மோனஸைட் இரண்டையும் எடுத்த பிறகு எஞ்சிய மணலைக் கடலில் கொட்டிவிடு கிறார்கள்.

இல்மனைட் (ILMENITE)

ரஷ்யாவில் இல்மன் என்ற மலையில் முதலில் இப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இதன் பெயர் "இல்மனைட்" ஆயிற்று. இதிலிருந்து பிரித்தெடுக் கப்படும் "ட்டிட்டானியம் ஆக்சைடு" பலவகையான செயல்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. வெடிமருந்தும் வெள்ளைப் பெயிண்டும் செய்யவும் இது உதவுகிறது.

உலகத்திலேயே, இரண்டாவது பெரிய அளவில் இல்மனைட் கிடைக்கும் நாடு இந்தியாதான். இந்தி யாவில் இது கிடைக்கும் இடங்கள் கன்னியாகுமரி மாவட்டம், அதையொட்டிய நெல்லை மாவட்டக் கடற் கரையில் ஒரு சிறு பகுதி, கேரளக் கடற்கரை ஆகியனவாம்.

உலகின் பொருளாதாரத்தில் இல்மனைட்டு இன்றி யமையாப் பொருளாக ஆகிவருகிறது. 1956-க்குப் பிறகு

இந்தியா ஆண்டுதோறும் மூன்று இலட்சம் டன் இல்மனைட்டை ஏற்றுமதி செய்துவருகிறது.

இது பெரும்பாலும் அமெரிக்காவுக்கே ஏற்றுமதியாவதால், இதன்வாயிலாக நம் நாட்டுக்கு "டாலர்" செலாவணி கிடைத்துவருகிறது. இந்தியாவின் இல்மனைட்டில் 92 பங்கு கேரளத்திலும் ஏனைய 8 பங்கு கன்னியாகுமரி மாவட்டத்திலும் எடுக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் எடுக்கப் பெறும் இல்மனைட்டின் அளவு 30,000 டன் ஆகும்.

ட்டிட்டானியம் (TITANIUM)

இல்மனைட் மணலை விஞ்ஞான முறைப்படி சுத்தம் செய்து வெண்மையான ஆக்சைடைப் பெறலாம். இதற்கு ட்டிட்டானியம் என்ற பெயர். இது இன்றைய உலகில் விலை மதிக்க இயலாத அருமையான பொருளாக இருக்கிறது.

வர்ணங்கள் மங்காமல் இருக்கவும், கனமில்லாத தாளில் ஒரு புறம் எழுதினால் பின்புறம் தெரியாமல் இருப்பதற்கும், ரப்பர்களில் வெடிப்பு ஏற்படுதைத் தடை செய்யவும், பிளாஸ்டிக் பொருள்களைப் பளபளப்பாக்கவும் ட்டிட்டானியம் தேவைப்படுகிறது. இதற்காக வர்ணம், ஏர்மெயில் காகிதம், பிளாஸ்டிக் பொருள்கள், ரப்பர், சந்தன நிறம் கொண்ட எனாமல் ஆகியவற்றில் ட்டிட்டானியம் பொடியைக் கலக்கிறார்கள். அச்சிடும் மையின் கண்கவர் வனப்பு மிகுதியாவதற்கு அந்த மையிலும் ட்டிட்டானியம் பொடியைச் சேர்ப்பது உண்டு.

ட்டிட்டானியம், இரும்பு எஃகு ஆகியவற்றைவிடக் கனத்தில் குறைவாகவும் ஆனால் அவற்றைவிட உறுதியாகவும் இருக்கிறது. ஆகையால் கடைசல் வேலைக்குச்

சிறு அளவு ட்டிட்டானியம் கலந்த எஃகு உபயோகப்படுத் படுத்தப்படுகிறது.

துணிகளை வெளுப்பதற்கும் துணிகளில் ஏற்பட்ட கறைகளை நீக்கவும் கண்ணீர்ப் புகை உண்டாக்கவும்கூட இந்த ட்டிட்டானியம் தேவைப்படுகிறதாம். ஆகாயவிமா னத்தின் பகுதிகளுக்கும் மின்சாரக் கருவியின் உறுப்புக் களுக்கும் ட்டிட்டானியம் பயன்படுகிறது. அல்ட்ரா வயலட் விளக்குகளின் காந்தத்தைக் கூடுதலாக்க மின் சாரம் பாயும் முனைகள் ட்டிட்டானியம் கலந்த கலவை யால் செய்யப்படுகின்றன.

இந்த ஆக்சைடு இறுக்கப்படின் இதன் ஒளி வைரத் தினும் கூடுதலாக இருக்கும். இதனால் செய்யப்பட்ட மணிகள் இப்போது ஏராளமாக விற்பனைக்கு வருகின்றன. இணையற்ற உறுதி, மங்காது ஒளிவிடும் தன்மை, வெப்பத் தைத் தாங்கும் ஆற்றல்—இத்துணையும் அமைந்தே ஒரே கனிப்பொருள் ட்டிட்டானியம்தான்.

மோனஸைட்

நம்நாட்டுக் கடல் மணல் தரும் கணக்கற்ற செல்வங் களிலெல்லாம் தலையான செல்வம் மோனஸைட் என்பது.

உலகத்தில் மோனஸைட்டுக் கிடைக்கும் இடங்களில், அவற்றில் 3 முதல் 6% தான் தோரியம் என்னும் பொருள் இருக்கிறது. இந்தியாவில் அகப்படும் மோன ஸைட்டில் 8 முதல் 10·5% வரை தோரியம் காணப்படு கிறது. பிற பகுதிகளில் (கேரளத்தில்) கிடைக்கும் மோனஸைட்டைக் காட்டிலும் கன்னியாகுமரி மாவட் டத்து மோனஸைட், கூடுதலான அளவு தோரியம் உடையதாக இருக்கிறது. தரமான பொருளாகவும், அள்ள அள்ளக் குறையாத அளவினதாகவும் இது இருக்

கிறது. பல ஆண்டுகள் அயல்நாட்டார் கடலோரமாக வந்து நமக்குத் தெரியாமல் இதை அள்ளிச் சென்றும் நமக்கு இதன் அருமையும் இதனை அள்ளிச் சென்றனர் என்பதும் தெரியாதிருந்தன

உலகில் பிற இடங்களில் மோனஸைட்டை வெட்டி எடுக்க வேண்டியதிருக்கிறது. எனவே, அங்கு மோன ஸைட்டுப் பெற, சுரங்கத்தில் வேலை செய்வது போலப் பாடுபட வேண்டும். குமரி மாவட்டத்தில் கையால் அள்ளியே இதைப் பெறலாம் ! நித்தம் தவம் செய் குமரி அல்லவா ?

உலகத்திலேயே மிகுதியான அளவு மோனஸைட் இருக்கும் நாடு இந்தியாதான்.

அணுக்குண்டு செய்ய உதவும் யுரேனியம் இப்பொரு ளில் இருப்பதால், மணலை யாரும் எடுக்கக்கூடாதென்றும், சில குறிப்பிட்ட அளவு தோரியம் உள்ள மோன ஸைட்டை ஏற்றுமதி செய்யக் கூடாதென்றும் அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. "தூய வெண்ணிற அலைகொண்ட கடலருகே துக்கத்தின் குறியான கருமணல் ஏனோ ?" என்று கடற்கரை வாழ்நர் முன்னர்க் கவலைப்பட்டனர். அறிவியலின் ஆற்றலால் மணலின் மதிப்புத் தெரிந்திருப் பதால், இப்போது இதற்கென நியமிக்கப்பட்ட காவலர்கள் கண்ணை இமை காப்பதுபோல இம்மணலைக் கண்காணித்து வருகின்றனர்.

ஜர்க்கான் (ZIRCON)

இல்மனைட் மணலில் இருக்கும் கனிப்பொருள்களில் இதுவும் ஒன்று. இல்மனைட் மணலில் 3 முதல் 6% ஜர்க் கானாக இருக்கும். பீங்கான் தொழிற்சாலை, மிக உயர்ந்த வகை எஃகு செய்யும் தொழிற்சாலை ஆகியவற்றின்

சூளைக்கு ஜர்க்கான் தேவைப்படுகிறது. எவ்வளவு சூடும் ஜர்க்கானை ஒன்றும் செய்யாது.

இந்தியாவில் ஜர்க்கான் தேவை ஓராண்டுக்குச் சில நூறு டன்கள்தான். ஆகையால் ஜர்க்கானை எடுக்கும் முயற்சி இந்தியாவில் செய்யப்படவில்லை. இதற்கு வேண்டும் இயந்திரச் சல்லடைகளும் இந்தியாவில் இல்லை.

கார்னட்டு மணல் (GARNET)

உப்புத்தாளில் உபயோகப்படுத்த உதவும் இப் பொருளும் இம்மாவட்டத்தில் கடற்கரையில் அகப் படுகிறது.

இதுவரை நாம் குறிப்பிட்ட புவியியல் பொருள்கள் கிடைக்கும் இடங்களில் மணவாளக்குறிச்சி, குளச்சல் அருகேயுள்ள முத்தம்புதூர், கன்னியாகுமரி—லீபுரம் பகுதிகள் முக்கியமானவையாகும். வேளி மலையிலிருந்து வள்ளியாறு கொண்டு வரும் மணல் மழைக்காலத்தில் கடல் மணலுடன் சேர்ந்து இத்தன்மையைப் பெறுகிறது என்றும் அறிஞர் கருதுகின்றனர். மண்டைக்காடு முதல் கரியப்பட்டினம் வரை இக்கனிப் பொருள்கள் கப்பல் கப்பலாக ஏற்றக்கூடிய அளவு பரவிக் கிடக்கின்றன.

"கல்குரியஸ்"

கடினமான மணற் பாறைகளும் கன்னியாகுமரி அருகே உள்ளன. 1960 மே மாதத்தில் பெரு மழையால் முட்டம் என்னும் இடத்தில் ஏற்பட்ட 5 அடி விட்டமும் 18 அடி ஆழமும் உள்ள பள்ளத்திலிருந்து ஒரு கல்லை எடுத்து ஆராய்ச்சியாளருக்கு அனுப்பினர். அது கடின மான மணற்கல் என்றும் கல்குரியஸ் என்பது அதன் பெய ரென்றும் புவியியல் ஆராய்ச்சியாளர் கூறினர்.

இம்மாவட்டத்தின் பிற பகுதிகளில் மென்மையான நுண் துளைகளுள்ள பாறைகள் உள்ளன.

பிற பொருள்கள்

கட்டிடம் கட்டுவதற்கு உதவும் கற்கள், பென்சில் உட்பகுதியிலுள்ள கிராபைட், ஒருவகை இரும்புப் படிவம் (small heaps of iron slag), சுண்ணும்புக் கற்கள் (Tufaceous Limestone and Kankar) ஆகியவையும் இம் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரவிபுதூர், மருங்கூர்ப் பகுதிகளில் இரும்பு கலந்த கற்களும், ஆரல் வாய்மொழியிலிருந்து வெள்ளமடம் வரை சுண்ணும்புப் படிவங்களும் உள்ளன. தங்கம், வெள்ளி, ஈயம், பெட்ரோல் ஆகியன கிடைப்பதற்குரிய அறிகுறிகள் உள்ளன; ஆனுல், இவைபற்றி நன்ருக ஆராய்ந்த பிறகே உறுதியாகச் சொல்ல இயலும்.

மணவாளக்குறிச்சி மணல் தொழிற்சாலை

(திருவாங்கூர் மினரல்ஸ் லிமிடெட், மணவாளக்குறிச்சி).

குமரிக் கடற்கரையில் குவிந்து கிடக்கும் மணற் செல்வத்தைப் பயன்படுத்த 1900-ஆம் ஆண்டு முதல் அயல் நாட்டார் முயன்றனர். 1911-இல் ஐரோப்பியர் அதற்காக ஒரு தொழிற்சாலையை மணவாளக்குறிச்சியில் அமைத்தனர். மணல் குவியலிலிருந்து ட்டிட்டானியம், மோனஸைட் ஆகியவற்றைப் பிரித்தெடுப்பதற்காக இத்தொழிற்சாலை ஏற்பட்டது. 1917-இல் ஹாப்கின்ஸ் வில்லியம்ஸ் பாக்டரி என்ற தொழிற்சாலை ஏற்பட்டது. இது இல்மனைட் தயாரிப்பதற்காக மட்டும் ஏற்பட்டது.

கேரளத்தில் கொல்லத்துக்கு வடக்கே 10 மைல் (16 கி. மீ.) தொலைவிலுள்ள சேவராயில் ஐரோப்பியர் நடத்தி வந்த மணல் தொழிற்சாலைகள் இரண்டை,

திருவிதாங்கூர் அரசாங்கம் 1947-இல் எடுத்துக் கொண்டது. 1951-இல் மணவாளக்குறிச்சியிலும் ஒரு தொழிற்சாலை, திருவிதாங்கூர் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது. இம்மூன்று தொழிற்சாலைகளும் சேர்ந்து "திருவாங்கூர் மினரல்ஸ் லிமிடெட்" என்ற நிறுவனத்தின் வாயிலாக இப்போது இந்திய அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிலில் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு 5% பங்கு உண்டு.

கடற்கரையிலிருந்து எடுக்கப்படும் மணலைத் தூய்மையாக்கி, பலவகைக் கனிப்பொருள்களாக மணவாளக்குறிச்சி தொழிற்சாலையில் பிரித்து எடுக்கிறார்கள். உற்பத்திச் செலவு அதிகமாவதால், இங்கு கார்னட் தயாரிப்பது கிடையாது. எட்டு மணி நேர வேலைக்கு 17 டன் இல்மனைட் பிரிக்கப்படுகிறது. இது டன் 50 ரூபாய் விலைக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மோனசைட் நாள்தோறும் நான்கு டன் செய்யப்படுகிறது. இதன் விலை டன் ஒன்றுக்கு 325 ரூபாய் ஆகும். ஜர்க்கான் உற்பத்தி செய்யும் வேலை இங்கு நடைபெறவில்லை. மிகக் குறைந்த அளவு மோனசைட் உள்ள இல்மனைட்டும், மிக மிகக் குறைந்த அளவு தோரியம் உள்ள மோனசைட்டும்தான் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தோரியம் கூடுதலாக உள்ள மோனசைட்டிலிருந்து தோரியத்தைப் பிரித்து எடுக்க அதை ஆல்வாய் நகரிலுள்ள, "இந்தியன் ரேர் எர்த்" தொழிற்சாலைக்கு அனுப்புகிறார்கள். இங்கிருந்து தோரியம் அனைத்தும் பம்பாய் டிராம்பேயிலுள்ள அணு ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பப்படுகின்றன.

இந்த நிறுவனம் இந்திய அரசாங்கத்தின் அணு ஆராய்ச்சி அமைச்சரவையின் ஆளுகைக்குட்பட்டது;

இந்நிறுவனத்துக்கு 1959—60-இல் 45 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. அதில் 28·57 லட்சம் ரூபாய் கேரள, தமிழ்நாடு அரசாங்கங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டது. இந் நிறுவனத்தால் ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் பெறுமான வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கிறது.

9. வேளாண்மை

வேளாண்மைத் துறையில் குமரி மாவட்டம் சிறந்து விளங்குகிறது. பரப்பளவில் சிறியதாக இருந்தும், இங்கே 65,000 ஏக்கரில் இரண்டு போகம் விளைகிறது. இம்மாவட்டத்தின் உற்பத்தி ஒரு லட்சம் டன் அரிசி யாகும். (தஞ்சை மாவட்டத்தில் 8 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகிறது.)*

குமரி மாவட்டத்தில் சராசரி மழை 55 அங்குலம் (1350 மி.மீ.) ஆகும். ஆண்டுதோறும் 10 மாதங்களுக்கு இங்கே மழை பெய்கிறது. நெல் தவிர, மரவள்ளிக் கிழங்கு, சோளம், உளுந்து, பயறு, பருப்பு ஆகியவையும் சாகுபடி செய்யப்படுகின்றன. நெல் வேளாண்மை நாஞ்சில் நாட்டில் மிகுதி. சிறப்பாக நாஞ்சில் நாட்டு வேளாளருக்கு, நிலம் வைத்துக்கொள்வதில் ஆர்வம் அதிகம். இங்கு ஏக்கர் 10,000 ரூபாய் வரை, விலை நிலவி வருகிறது. திருவிதாங்கூர் இராச்சியத்தில் தமிழர்—மலையாளி என்ற உணர்ச்சி ஏற்பட்டபோது, விவசாய வருமான வரிச் சட்டம் கொண்டுவரப்பட்டது; அப்போது

---

* குமரி மாவட்டத்தின் பரப்பளவு ... 646 சதுர மைல்.
தஞ்சை மாவட்டத்தின் பரப்பளவு ... 3740 ,,

தேயிலை ரப்பர்த் தோட்டங்களுக்கு வரி விலக்கு வழங்கப்பட்டுத் தமிழரை மட்டும் பாதிக்கும்படியாக விவசாய வருமான வரி போடப்பட்டது என்பதும் எண்ணத்தக்கது ஆகும்.

இம்மாவட்டத்தில் மக்கள் தொகைக்கும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கும் 4 : 1 என்ற ஈவு (1956-இல் 2,08,469 கால்நடைகள் இருந்ததாகக் கணக்கிடப் பெற்றது) இருப்பது ஒரு சிறப்பு ஆகும். தமிழ்நாட்டுடன் இப்பகுதி இணைந்த பின்னர், கால்நடைத் துறையில் பெரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கொட்டாரத்துக்கு அருகே கோழிப் பண்ணை ஏற்பட்டிருக்கிறது. மாட்டுப் பண்ணை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது. ஜப்பானிய வேளாண்மை முறை பரப்பப்பட்டு வருகிறது.

சம்பா, வால்சிறு முண்டகன் என்ற இருவகை நெல் வித்துக்கள் இங்கு நெடுங்காலமாகப் பயிரிடப்பெற்று வருகின்றன. இவற்றைச் சித்திரையிலேயே பயிரிட்டு ஆவணி புரட்டாசியில் கருது அறுப்பர். இணைப்புக்குப் பின், ஆடுதுறை, கோயம்புத்தூர் நெல் வித்துக்களும் பயிரிடப்படுகின்றன.

மழை மிகுதியாகப் பெய்யும் காலத்தில் பச்சை அரிசி மட்டுமே இம்மாவட்டத்தில் அறைக்க இயலுகிறது; புழுங்கலரிசி அறைக்க இயலாது. பர்மா நாட்டில், அக்காலங்களில் மின்சார சக்தியால் அவித்த நெல்லைக் காய வைக்கிறார்கள்; இத்தகைய வசதி இம்மாவட்டத்தில் ஒரு சில நெல் அறைக்கும் இயந்திரங்களிலாவது ஏற்படுவது நன்று.

இம்மாவட்டத்தில் 1959—60-இல் விவசாய வருமானவரி 13·67 லட்சம் ரூபாய் வசூலிக்கப்பெற்றது.

இது, தமிழ் நாட்டில் நான்கு மாவட்டங்களில் வசூலானதைவிடக் கூடுதலாகும்.*

பழங்காலத்தில் கலப்பைக்கு நாஞ்சில் என்ற பெயர் வழங்கி வந்தது. ஒரு நாட்டு ஆடவரைப் பற்றிக் கூறும் போது புலவர் குறுங்கோழியூர் கிழார், அவர்களுக்குக் கலப்பை தவிர வேறு போர்க் கருவி ஒன்றுமே தெரியாது என்று கூறுகிறார். பயிர்த் தொழிலில் சிறந்திருந்த காலம் அது. குமரி மாவட்டத்தின் வளமான பகுதியான நாஞ்சில்நாடு பயிர்த் தொழிலில் பண்டைக்கால முதல் சிறந்திருத்தமையாலேயே நாஞ்சில்நாடு என்னும் பெயரைப் பெற்றது என்று கொள்ளுவதும் பொருந்தும்.

10. கனிவளம்

தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய கனிவளமாகிய உலோகங்கள் கிடைப்பது போலவே உடல் வளர்ச்சிக்கு உதவும் கனிவளமாகிய பழங்களையும் உடைய பெருமை கன்னியாகுமரி மாவட்டத்துக்கு உண்டு. முக்கனிகளாகிய வாழை, மா, பலா ஆகியவை கிடைக்கின்றன.

வாழைத் தோட்டங்கள் இம்மாவட்ட மெங்கும் உள்ளன. ஏத்தம்பழம், மட்டிப்பழம், தேன்கதலி என்பன இம்மாவட்டத்திற்கே சிறப்பாக உரிய வாழைப் பழ வகைகளாகும்.

(மணிகட்டிப்) பொட்டல் பலாப்பழமும் சூரங்குடி மாம்பழமும் இம்மாவட்டத்தில் பெரும்புகழ் பெற்றவை.

---

* இராமநாதபுரம் 1·57, வட ஆற்காடு 1·16, செங்கற்பட்டு 2·26, திருநெல்வேலி 2·51, சேலம் 4·28, ஆக 11·78 லட்சம்.

மாரி, கோடை ஆகிய இரு பருவங்களிலும் மாம்பழம் காய்ப்பது இம்மாவட்டத்தின் பெருஞ்சாதனையாக இருக்கிறது.

பழங்களுக்கு அடுத்தபடியாக, காய்கறிகள் இம் மாவட்டத்தில் நன்கு பயிரிடப்படுகின்றன. இம்மாவட்ட மக்கள் முந்திரியை ''கொல்லமாவு'' என்று கூறுவர். குழித்துறையில் முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலை இருக்கிறது.

அரசாங்கத்துப் பழ ஆராய்ச்சி நிலையம், கன்னியாகுமரி

இது நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் சாலையில், குமரி முனையிலிருந்து ஒன்றரை கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள பஞ்சலிங்கபுரம் என்னும் இடத்தில் இருக்கிறது. 1922-இல் திருவிதாங்கூர் அரசாங்கம் தொடங்கிய பழத்தோட்டம், தமிழ்நாடு அரசாங்கத்தால் பழ ஆராய்ச்சி நிலையமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இந் நிலையத்தின் பரப்பு 17½ ஏக்கர் ஆகும்.

இப்பழத் தோட்டத்தில் பலவகையான பழமரக் கன்றுகள் ஆக்கம் செய்யப்படுகின்றன. மா, பலா, கொய்யா, திராட்சை, மாதுளை, எலுமிச்சை, சப்போட்டா ஆகிய பழ மரங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஒட்டுமாங்கன்றுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏராளமான மாம்பழ வகைகள் இருப்பது இந்த நிலையத்தின் சிறப்புக்குச் சான்றாக உள்ளது. இம் மாவட்டத்தில் பழமரங்கள் இல்லாத இடமேயில்லை. இந்தச் சிறந்த நிலையை ஆதரிப்பதற்குக் குடியானவர்களுக்கு உதவியாக இப்பண்ணையிலிருந்து பழமரக் கன்றுகள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகின்றன.

11. காட்டு வளம்

கன்னியாகுமரி மாவட்டம் பரப்பளவில் சிறியதாக இருந்தபோதிலும் காட்டு வளம் நிறைந்தது. இம் மாவட்டத்திலுள்ள காடுகளின் பரப்பளவு 440 சதுர கி. மீ. ஆகும். இவை கடல் மட்டத்தில் தொடங்கி 4000 அடி வரை செல்லுவதால் அடர்த்தியான காடுகள் காணப்படுகின்றன. இவற்றில் வேங்கை, கரடி, புலி, செந்நாய், சிறுத்தை, யானை, கடுவாய், காட்டுப்பன்றி, மான் ஆகியன வாழ்கின்றன. ஆகையால் இம்மாவட்டத்தில் பேச்சிப்பாறைத் தேக்கத்திற்கு அருகே காடுவாழ் உயிரினங்களுக்கு ஓர் உயிரினக்கூடம் (Game Sanctuary) அமைக்க அரசாங்கத்தார் திட்டமிட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தின் வெப்பநிலையும் நிலவளமும் தேக்கு, முள்ளிலவு, மட்டிப்பால் போன்ற விலையுயர்ந்த மரங்கள் வளர்வதற்கு ஏற்றதாக இருக்கின்றன. தமிழ் நாட்டுடன் இப்பகுதி இணைந்ததிலிருந்து தமிழ் நாட்டுக்குக் காடுபற்றுக்குறை இருப்பதைப் போக்க இம் மாவட்டத்தில் 800 ஏக்கர் காடுகளில் தேக்குத் தோட்டங்கள் ஆக்கம் செய்யவும், 600 ஏக்கர் காடுகளில் தீக்குச்சி போன்ற மென்மரங்கள் வளர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரக்கு உற்பத்திக்காக ஆண்டு தோறும் 15 ஏக்கர் நிலத்தில் பூவன்மரத் தோட்டங்கள் உண்டாக்கப்படுகின்றன. பீடி சுற்றுவதற்கு உதவும் இலைகளைத் தரும் மரங்களைப் பயிரிடவும் கன்னியாகுமரி ஏற்ற இடமாக இருக்கிறது. தமிழகத்தில் பீடித் தொழில் பல்கிப் பெருகி வருவதாலும் பீடி சுற்றுவதற்கான இலைகள் ஒரிசா, மத்தியப்பிரதேசம், ஐதராபாத் போன்ற இடங்களிலிருந்து வரவழைக்கப்படுவதாலும் இவ்வகை

மரங்களைக் குமரி மாவட்டத்துக் காடுகளில் வளர்ப்பது பயன் தரும்.*

கடற்கரையோரமுள்ள காடுகளில் புன்னை, நாவல், புங்கம், பூவரசு, சவுக்கு மரங்கள் வளர்கின்றன. அந்தக் காடுகளில் கிடைக்கும் சில்ல அர்ப்பிசிதடி ஆகிய மரங்கள் மீன்பிடிகாரர்கள் படகுகட்டுவதற்கு உதவுகின்றன. பிற பகுதிகளிலுள்ள காடுகளில் தேக்கு, ஈட்டி, வேங்கை மரங்களுள்ளன. ரப்பர் மரங்கள் பெரிய அளவில் பயிரிடப்படுகின்றன.

காகிதம்

இம்மாவட்டத்தின் காட்டு வளத்தால் காகித ஆலை தொடங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. பொன்மனை என்னுமிடத்தில் பத்திரிகைக் காகிதம் செய்யும் தொழிலைத் தொடங்க வணிகர் சிலர் அரசாங்கத்தின் இசைவை வேண்டியிருக்கின்றனர் (1961).

கையினுல் காகித அட்டை ஆக்கும் தொழில், கூட்டுறவுச் சங்க மூலம் நடைபெற்று வருகிறது.

மரம் அறுவை

காட்டு வளம் மிகுதியால் மரம் அறுக்கும் வேலை இம் மாவட்டத்தில் கேரளத்தில் போலவே பெரிய அளவில் நடைபெறுகிறது. மரவேலைத் தொழிலில் சிறந்த கலைஞர்கள் உள்ளனர். மார்த்தாண்டம் தச்சுத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 1½ லட்சம் ரூபாய்ச் செலவில் புதிய இயந்திரங்களைக்கொண்டு மார்த்தாண்டம் தொழிற் குடியிருப்பில் மரச் செயப்படுபொருள்கள் (Furniture) ஆக்கி விற்பனை செய்துவருகிறது.

நாஞ்சில் நாட்டுக் காடுகளில் விளையும் மூங்கில் மரம் வாகனம் தூக்குவதற்காகத் தமிழ்நாடெங்குமுள்ள பெரிய கோயில்களில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

* இம்மாவட்டத்தில் பீடி சுற்றும் தொழிலாளர் 5000 பேர் உள்ளனர்.

12. ரப்பர்த் தோட்டங்கள்

குமரி மாவட்டத்தின் மண்வளம் ரப்பர்ப் பயிருக்கு ஏற்றது. கேரளத்தில் பயிராவதைவிடச் சிறந்த தரமும் கூடுதலான உற்பத்தியும் குமரி மாவட்டத்தில் விளையு மென்பது அறிஞர் கருத்து. மலேயா நாடு ரப்பர் உற்பத் தியில் உலக நாடுகளிலெல்லாம் சிறந்து விளங்குகிறது. அந்த நாட்டு ரப்பருக்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடிய ரப்பர் கன்னியாகுமரி மாவட்டத்தில் பால்குளம், மகேந் திரகிரி, அசம்புகிரி, காரிமணி, பாலமூர், வேளிமலை, முக்கம்பாலா, குதிரைக்குழி, நியூ ஆம்பாடி, வைகுண்டம், சிவலோகம், காந்திமதி, மாரிதி, ஓமனபுரம், காமதேனு, கிரீன்ஹாங், தேவகிரி போன்ற தோட்டங்கள் குறிப் பிடத் தக்கவை. இதுபோன்ற 51 தோட்டங்கள் விளவங் கோடு வட்டத்திலும், இரண்டு தோட்டங்கள் கல்குளம் வட்டத்திலும், ஒரு தோட்டம் தோவாளை வட்டத்திலும் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பு 5000 ஏக்கர் தான். அவ்வாறிருந்தும் இவற்றின் உற்பத்தி இந்தி யாவின் ரப்பர் உற்பத்தியில் இருபதில் ஒரு பங்காகும்.

1957-இல் ரப்பர் உற்பத்தி நிலை வருமாறு:

கேரளம்	...	2,46,785	ஏக்கர்	21,496 டன்
தமிழ்நாடு	...	10,856	,,	1,847 ,,

இவ்வாறு தமிழ்நாட்டில் ரப்பர் உற்பத்தியளவு, பரப்பளவை நோக்கக் கூடுதலாயிருப்பதற்குக் காரணம் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில இடங்களில் ஓராண் டுக்கு 90 அங்குலம் மழை பெய்வதாகும். மலேயா நாட்டில் 99·6 அங்குலம் மழை பெய்கிறது.

இந்நிலையில் தனிப்பட்டவர்கள் ரப்பர் பயிரிடுவ தோடு நாம் அமைதியடைய இயலாது என்பதை

உணர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசாங்கம் ரப்பர் பயிரிட முனைந்திருக்கிறது. தோவாளை, கல்குளம் வட்டங்களில் 1960 முதல் 8 ஆண்டுகளுக்குள் 3000 ஏக்கர் பரப்புள்ள காடுகளில் ரப்பர் பயிரிட முடிவு செய்தனர். கிரிப்பாறைப்* பகுதி, வீராப்புலிக் காடுகள், அசம்புக் காடுகள் ஆகியவற்றில் ரப்பர் பயிரிடுவதற்காக 32 லட்சம் ரூபாய்ச் செலவில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் பலனாக 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆண்டுதோறும் 40 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்குமென்று கணக்கிடப் பெற்றிருக்கிறது. இத்திட்டம் செயல்படுவதற்கு வேண்டிய சாலைகளும் கட்டிடங்களும் பெருஞ்சாணை ஏரியைச் சுற்றி அமைக்கப்பெற்றுள்ளன. 1959—60 இல் 150 ஏக்கர் பரப்பில் மட்டுமே ரப்பர் பயிரிடப்பெற்றிருக்கிறது. 1960—61-இல் 400 ஏக்கர் பயிரிட ஏற்பாடாயிருக்கிறது. இவ்வாறு 1968 அளவில் 3000-க்கு மேல் 3500 ஏக்கருக்குள் பயிரிடப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் விளையக்கூடிய மருந்துக்குப் பயன்படும் மரங்கள் வளர்வதற்கும் குமரி மாவட்டம் ஏற்றதாக இருப்பதால் அவற்றையும் பயிரிட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

சைக்கிள், மோட்டார் கார், பஸ், ஆகாயவிமானப் போக்குவரத்துக்கள் இந்தியாவில் மிகப் பெரிய அளவில் விரிவடைந்து வருவதால் ரப்பர் தேவை இந்தியாவுக்கு அடுத்த 50 ஆண்டுகளில் பலமடங்காகிவிடும். ஆகையால், இம் மாவட்டத்தில் குறைந்தது 50,000 ஏக்கர் ரப்பர் பயிரிடுவதற்குத் திட்டம் வகுத்து அப்பொறுப்பை அரசாங்க வணிகக்குழு ஒன்றிடம் ஒப்படைக்க முன்

---

* நாகர்கோயில்—பாலமூர்ச்சாலையில், நாகர்கோயிலிலிருந்து 15 மைல் (25 கி. மீ.) தொலைவிலுள்ள நடிக்காரன்கோணம் அருகே உளது.

வரவேண்டும். அல்லது, உடனடியாகத் தனியார் ரப்பர் பயிரிட ஊக்குவிக்க வேண்டும். ரப்பர் டயர்கள் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்சாலை நிறுவுவதும் இன்றியமையாதது. தமிழ்நாட்டின் பொருளாதாரக் கட்டுக்கோப்பில் ரப்பர்த் தோட்ட வளர்ச்சிக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டாக வேண்டும்.

13. பிற தொழில்கள்

தேயிலை

தோவாளை, கல்குளம் வட்டங்களில் 1115 ஏக்கர் பரப்பில் தேயிலை உற்பத்தியாகிறது. இம்மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களின் மொத்த உற்பத்தி ஓராண்டுக்கு இரண்டரை லட்சம் கிலோ (5½ லட்சம் புவுண்டு) பிளாக் டீ ஆகும் (Black Tea).

காப்பி

தோவாளை, கல்குளம் வட்டங்களில் மலைப்பகுதிகளில் 180 ஏக்கர் பரப்பில் காப்பித் தோட்டங்கள் உள்ளன. ஆனால், இவற்றில் உற்பத்தியாகும் காப்பிக் கொட்டையின் அளவு மிகக் குறைவாகும்.

தென்னை

நெல் வேளாண்மைக்கு அடுத்தபடி தென்னை சாகுபடி இம்மாவட்டத்தில் முக்கியமாக இருக்கிறது. ஏறத்தாழ 38,000 ஏக்கர் பரப்பில் தென்னை மரங்கள் பயிரிடப் பெற்றுள்ளன. கன்னியாகுமரி முதல் தேங்காய்ப் பட்டினம் வரை கடற்கரை எங்கும் தென்னை மரங்கள் நீண்டுயர்ந்து வளர்ந்து வளமான காட்சி நல்குகின்றன.

ஓர் ஏக்கர் தென்னைத் தோட்டத்தின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய் என்பதிலிருந்து இவற்றின் பெருமையை உணரலாம்.

இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தென்னை பயிரிடுவதற்காகத் தென்னை நாற்றுக்கள் வழங்குவதற்கு நாகர்கோயில் ஆசாரிப் பள்ளத்தில் தென்னை நாற்றுப் பண்ணை தொடங்கப் பெற்றிருக்கிறது. இங்கிருந்து நாட்டு நாற்று, நடுத்தரக் குட்டை (பச்சை) நாற்று, ஜாவா பெரிய நாற்று ஆகிய தென்னை நாற்றுக்கள் இம்மூன்று மாவட்டங்களுக்கும் வழங்கப்படுகின்றன. நாகர்கோயிலில் கிருஷ்ணன் கோயில் என்ற இடத்தில் தென்னை மரத்திற்கு ஊறு விளைக்கும் புழுக்களைத் தாக்கும் பூச்சிகளை வளர்க்கும் நிலையம் ஒன்று அமைக்கப்பெற்றிருக்கிறது.

கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற்ற குடிசைத் தொழிற்சங்கங்களில்கல்செக்குகளில் தேங்காயெண்ணெய் ஆட்டி விற்பனை செய்யப்படுவது இம் மாவட்டத்தின் சிறப்பாகும். இவ்வாறு ஆட்டப்படும் எண்ணெய் உடலுக்கு உறுதியளிக்கிறதாம்.

இம்மாவட்டத்தின் மக்கள் சமையலுக்குத் தேங்காய் எண்ணெய்யையே பயன்படுத்துகின்றனர். தோசை சுடவும் நாரங்காய்க் கறிக்கும் மட்டுமே நல்லெண்ணெய் இவர்களுக்குத் தேவைப்படுகிறது.

கயிற்றுத் தொழில்

தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் தேங்காய், ஓலை, கயிறு திரிக்கும் நார் ஆகியவற்றிலிருந்து கயிறு முறுக்கும் தொழில் ஏற்பட்டிருக்கிறது. 5000-க்கு மேற்பட்ட குடும்பங்கள் இத் தொழிலால் பிழைக்கின்றனர்,

கடலோரத்திலுள்ள கொல்லங்கோடு, வைக்காலூர், தேங்காய்ப் பட்டினம், பூந்துறை, குளச்சல், மணவாளக் குறிச்சி, பழையகடை, ஈத்தாம்பொழில், மணக்குடி, மண்டைக்காடு, இராசாக்கமங்கலம் என்னும் இடங்கள் கயிறு முறுக்கும் தொழிலில் சிறந்து விளங்குகின்றன.

கயிற்றுத் தொழிலுக்கு ஆதரவு தரவும், காலநிலைக் கேற்ற புதிய கருவிகளை இத்தொழிலுக்குப் பயன்படுத்தப் பயிற்சியளிக்கவும் ஈத்தாம்பொழிலில் தமிழ்நாடு அரசாங்கம் கயிற்றுத் தொழில் கலைக்கூடம் ஒன்றை நடத்தி வருகிறது.

பனந்தும்புத் தொழில்

இத் தொழிலில் 2000 பேர் ஈடுபட்டுள்ளனர். பல வகையான பிரஷ்கள் செய்வதற்காகப் பனந்தும்பு வெளிநாட்டாருக்குத் தேவைப்படுகிறது. குளச்சலிலும், கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் சில இடங்களிலும் இத் தொழில் பெரிய அளவில் நடைபெறுகிறது.

இவ்விரு வட்டங்களிலும் பனைமரங்கள் பல்லாயிரக் கணக்கிலுள்ளன. துணைத் தொழில்களாக பனந்தும்பு செய்வது, பனை வெல்லம் காய்ச்சுவது, பனை ஓலைக் கூடைகள் மிடைவது ஆகியவை பரவியுள்ளன. பனை நுங்கு சர்பத் இம்மாவட்டத்தில் அனைவரும் விரும்பிக் குடிக்கும் ஒருவகைப் பானமாகும்.

பனைநாரை விலைக்கு வாங்கி அவித்து அதற்குப் பல வண்ணங்களை வழங்கி, குறித்த அளவுகளில் பிரஷ்களுக்கு ஏற்ப வெட்டி, பேல்போட்டு வெளிநாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையைக் குளச்சலில் ஆங்கிலேயர் நடத்தி வருகின்றனர்.

மிளகு

சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் கைகண்ட மருந்துகளாகும். இவற்றுள் ஒன்ருன மிளகு இந்தியாவிலும் இந்தோனேசியாவிலும்தான் மிகுதியாக விளைகிறது.

இந்தியாவில் மிளகு உற்பத்தியாகும் ஒரு சில இடங்களில் கன்னியாகுமரி மாவட்டத்து விளவங்கோட்டுப் பகுதி ஒன்று. மிளகுக்கு நல்ல விலை கிடைப்பதால் அதனையே நம்பி வாழும் மக்கள் இப்பகுதியில் உள்ளனர்.

மிளகுக் கொடியை வளர்க்கும் சிலர் வெற்றிலைக் கொடிகளையும் தோட்டங்களில் பயிரிட்டு வருகின்றனர். குமரி மாவட்டத்து வெற்றிலை உருவில் பெரியதாகவும் சுவையில் காரமாகவும் இருக்கிறது. ஈத்தாம்பொழில் என்னுமிடத்தில் இளந்தளிர் வெற்றிலைக்கொடிகள் பயிரிடப்படுகின்றன.

பாக்கு

தடிக்காரன் கோணம் என்னும் மலையடிவாரப் பகுதியில் பாக்கு மரங்கள் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்திலிருப்பது போன்று பலன் தரக்கூடிய சிறந்தவகைப் பாக்கு மரங்கள் நடுவதற்கேற்ற கன்றுகளைப் பயிரிட்டு நாற்று வழங்க, இம்மாவட்டத்திலும் அரசாங்கத்தார் ஒரு பண்ணை அமைத்து வருகின்றனர்.

புல் தைலம்

இது மலையில் வளரும் புல்லிலிருந்து ஆக்கப்படுவது. நறுமணப் பொருள்களில் சேர்க்கவும், வெட்டுக்காயங்களைக் குணப்படுத்தும் பல்வேறு மருந்துகளைச் செய்யவும்

இத் தைலம் இன்றியமையாதது. இதனை ஆங்கிலத்தில் லெமன்கிராஸ் ஆயில் (Lemongrass Oil) என்பர்.

குமரி மாவட்டத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் இதுவும் ஒன்று. இந்தியாவில் இத்தைலம் கேரளத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுமே உற்பத்தியாகிறது. ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்றுமதியாவதால் இத் தைலத்தின் விற்பனையால் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய் வெளிநாட்டு நாணயச் செலாவணி கிடைக்கிறது.

புகையிலை

தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம் வட்டங்களில் ஏராளமான இடங்களில் புகையிலை பயிரிடப்படுகிறது. யாழ்ப்பாணப் புகையிலை விளைவதற்கேற்ற காலநிலை இம்மாவட்டத்தில் உண்டு. ஆகையால் புகையிலை பயிரிடுவோருக்குத் தரமான யாழ்ப்பாண விதைகள் வழங்கப்பெறுகின்றன.

பருத்தி

தோவாளை வட்டத்தில் ஆரல்வாய்மொழிப் பகுதியில் சில இடங்களில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தின் மலைச்சாரல்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் ஊடுபயிராகவும் நீண்ட இழைப் பருத்தி 1960 முதல் பயிரிடப்பட்டு வருகிறது. சாதாரணக் கம்போடியாப் பருத்தியைவிட இவ்வகைப் பருத்தி மும்மடங்கு ஊதியம் தரக்கூடியது.

இம்மாவட்டத்தில் நாகம்மாள் பஞ்சாலை என்ற ஒரு பஞ்சாலை மட்டுமே 1961-இல் இருந்து வருகிறது. நீண்ட இழைப் பருத்தி சாகுபடி பெரிய அளவில் ஏற்பட்டால்

இம்மாவட்டத்தில் மேலும் பல பஞ்சாலைகள் ஏற்படக் கூடும்.

கரும்பு

முன்சிறைப் பகுதியில் கரும்பு நன்றாக விளைகிறது. கரும்பு வேளாண்மைக்கு இம்மாவட்டத்தில் நல்ல வாய்ப்புக்கள் உள்ளன.

உப்பளங்கள்

குமரி மாவட்டத்தின் முக்கிய உற்பத்திகளுள் உப்பும் ஒன்று. கேரளத்தின் உப்புத் தேவையை இம்மாவட்டத்தி லுள்ள உப்பளங்களே நிறைவேற்றி வருகின்றன. கன்னியாகுமரி முதல் குளச்சல் வரையில் இத்தொழிலில் ஏறத்தாழ 3,000 பேர் ஈடுபட்டுள்ளனர்.

தாமரைக்குளம், புத்தளம், கோவளம், பால்குளம், தட்டாரிருப்பு, இராசாக்காமங்கலம், குளச்சல் ஆகிய இடங்களிலுள்ள உப்பளங்கள் முக்கியமானவை. ராஜராஜ சோழன் காலத்தில் மணக்குடி உப்பளமும், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வாரியூர் உப்பளமும் புகழ் பெற்றிருந்தன.

மீன் பிடித்தல்

இந்திய நாட்டின் கடற்கரை 3,535 மைல் (5,691 கி. மீ.) நீளமுடையது. தமிழ்நாட்டின் கடற்கரை 620 மைல் (999 கி. மீ.) நீளமும், குமரி மாவட்டத்தின் கடற்கரை 42 மைல் (68 கி. மீ.) நீளமும் உடையது ஆகும்.

மீன் பிடிக்கும் தொழிலை நம்பி 36 கிராமங்கள் உள்ளன. 75,000 பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 1227 படகுகளையும் 10,000-க்கு மேற்பட்ட கட்டுமரங்

களையும் மீன் பிடிக்கும் பொறிகளாகப் பயன்படுத்தி மாதந்தோறும் ஓராயிரம் டன்னுக்கு மேல் கடல் மீனைப் பிடித்து வருகின்றனர். சிறந்த மீனினங்கள் அகப்படுவதால் இம்மாவட்டத்து மீன்கள் இலங்கைக்கும் ஏற்றுமதியாகின்றன.

மீன்பிடி தொழிலின் கேந்திரமான இடமாகக் குளச்சல் இருந்து வருகிறது. கன்னியாகுமரி, செண்பகராமன் புத்தன்துறை ஆகிய இடங்களும் இத்தொழிலில் சிறந்து விளங்குகின்றன. குளச்சலில் குளிர்பதன நிலையம் அமைத்தும், மீன்பிடி தொழிலுக்கு உதவியாக இயந்திரப் படகுகள் வழங்கியும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறைந்த விலையில் பருத்தி நூல்களையும் நைலான் நூல்களையும் வழங்கியும், மீனவர்கள் இரவுக்காலத்தில் கரை தெரிந்து திரும்பிவர உதவியாக வழி காட்டும் விளக்குகள் நிறுவியும் அரசாங்கத்தார் மீனவர்களின் நிலையை உயர்த்தி வருகின்றனர்.

மணக்குடி காயலில் 360 ஏக்கர்ப் பரப்பில் ஒரு மீன் பண்ணையை (Estuarine Fish Farm) அரசாங்கத்தார் ஏற்படுத்த, 1961-இல் வேலை தொடங்கியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீனின் அளவு 21,500 மெட்ரிக் டன் ஆகும்.*

கன்னியாகுமரியில் கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் (Marine Biological Research Station) நிறுவப்பெற்றிருக்கிறது. இங்கு பலவகை ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.†

---

* மெட்ரிக் டன் — 2,000 பவுண்டு.

† 1. Study of Meterology and Hydrography of the Coastal waters.
2. Analysis of the Plankton of the inshore waters of Cape Comorin.
3 Biology of important food fishes landed in the area.
4. Study on the Lobster Fishery of the District.
5. Study of the trend of Commercial Fishery at Cape Comorin.

சங்கு குளிக்கும் தொழிலும் சிறு அளவில் நடைபெறுகிறது. மீன் ஈரல் எண்ணெய் எடுக்கும் சிறு தொழிற்சாலைகளும் இம்மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளன.

கடலில் அகப்படும் சில பொருள்களிலிருந்து (Sea Moss, Lichen) உணவு வகைகளை உற்பத்தி செய்யும் திட்டமும் அரசாங்கத்தினரால் வகுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் மூன்றும் திட்டக் காலத்தில் குளச்சலில் நிறைவேற்றப்படக் கூடும்.

இணையம் என்னும் கிராமத்தில் மீனுலர்த்தும் பண்ணை கட்டப்பட்டிருக்கிறது.

கைத்தறித்தொழில்

இம்மாவட்ட மக்களில் எட்டில் ஒரு பங்கினர்—அதாவது ஏறத்தாழ ஒரு லட்சம் பேர்—கைத்தறித் தொழிலில் தொடர்புடையவர்களாக இருந்தனர். மொத்தம் 20,000 கைத்தறிகள் உள்ளன.

கோட்டாறு, வடசேரி, இரணியல் மார்த்தாண்டம் ஆகிய ஊர்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் மிகவும் புகழ்பெற்றவை. இடலாக்குடி, ஆளூர், குளச்சல், பள்ளியாடி, காலப்பள்ளம், பூட்டேற்றி, உண்ணாமலைக் கடை, தொடுவெட்டி ஆகிய இடங்களிலும் கைத்தறிகள் பெருந் தொகையாக உள்ளன.

வடசேரியில் சாலியர் சமூகத்தினரும், கோட்டாற்றில் பட்டு நூல்காரரும் இத்தொழிலில் சிறந்து விளங்குகின்றனர். வடசேரியில் மெத்தை விரிப்புகளும் 80-ஆம் இலக்கம் 100-ஆம் இலக்கம் நூல்களான வேட்டிகளும் நன்கு நெய்யப்படுகின்றன.

இம்மாவட்டத்திலிருந்து ஆண்டுதோறும் 17 லட்சம் கெஜம் துணி வெளி மாவட்டங்களுக்கு விற்பனையாகிறது. கைத்தறித் துணிகளின் விற்பனைக்கென அரசாங்க ஆதரவுடன் ஒரு குழு அமைந்துள்ளது.

பல தலைமுறைகளாகப் பொதுமக்களாலும், இணைப்புக்குப்பின் அரசாங்க உதவியாலும் நூல் நூற்கும் தொழில் நிலவி வருகிறது. மீன்பிடி வலைகள் கதர் நூலால் ஆக்கப்படுகின்றன.

அரசாங்கக் கதர்த்துறையின் கீழ் 650 நெசவாளர் இம்மாவட்டத்திலுள்ளனர். கையால் நூற்ற நூலைக் கொண்ட தேங்காய்ப்பூத் துண்டுகள் (Khadi Turkey Towels) இம்மாவட்டத்தில் மட்டுமே நெய்யப்படுகின்றன.

திருப்பூருக்கு அடுத்தபடி கதர் உற்பத்தியில் சிறந்து விளங்குவது குமரி மாவட்டமே.

வலைபின்னலும் வனப்புத் தையல் தொழிலும் கண்ணைக் கவரும் முறையில் இம்மாவட்டத்துப் பெண்களால் நெடுங்காலமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

ஏனைய தொழில்கள்

கொட்டாரத்திலும் செட்டிகுளத்திலும் ஓடு செய்யும் தொழிற்சாலைகள் ஏராளமாக உள்ளன,

குறிப்பிடத்தக்க தொழில்களாக இம்மாவட்டத்தில் இருப்பவை மணவாளக்குறிச்சி மணல் தொழிற்சாலையும், நாகம்மாள் பஞ்சாலையுமே. கூட்டுறவு முறையில் இம்மாவட்டத்தில் ஒரு பஞ்சாலை அமைக்க தமிழ்நாட்டு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது (1961).

வெண்ணிற மணல் கிடைப்பதால் கண்ணாடித் தொழிற்சாலையும், சுண்ணாம்பும் வெள்ளைக்கல்லும்

கிடைப்பதால் தோவாளை வட்டத்திலுள்ள லாயத்தில் சிமிண்டுத் தொழிற்சாலையும் தொடங்க வாய்ப்பு உண்டு.

கீழ்க்கண்ட தொழில்களை இம்மாவட்டத்தில் அமைக்கலாமென்று, பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசியக் குழுவினர் தெரிவித்துள்ளனர் : (Techno. Economic Survey of Madras—Ncaer).

பெருந்தொழில்கள்

சர்க்கரை ஆலை.

சிறுதொழில்கள்

தோல் பொருள்கள் ; பழங்களைப் பதனிடுதல் ; மேசை, நாற்காலி, இன்னபிற மரச்சாமான்கள் செய்தல் ; மாட்டு எலும்பு உரம் செய்தல் ; பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தி; இயந்திரப் பொம்மைகள் செய்தல்; வண்ணத் தொழில் (Paints & Varnishes) ; மின்சாரக் கருவிகள், கம்பிகளுக்குத் துணைப்பொருள்கள் (Electric Appliances & Wiring Accessories) ; Weldmesh & Wire Netting Brushes ; Builders Hardware ; Weighing Machine.

14. கூட்டுறவு இயக்கம்

குமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைந்தபின்னர் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்றிருக்கிறது. 1957-இல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் 1958-இல் மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கமும் ஏற்பட்டுள்ளன. நில அடமான வங்கிகளும் பல இடங்களில் விவசாய வங்கிகளும் தொடங்கப் பெற்றுள்ளன.

மகளிர்க் குடிசைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கயிற்றுத் தொழிலாளர் கூட்டுறவுச்

சங்கங்கள் ; கைக்குத்தல் அரிசிக் கூட்டுறவுச் சங்கங்கள், ஓடு மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தேனி வளர்ப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பனை நார் ஆக்குவோர் கூட்டுறவுச் சங்கங்கள், சுண்ணும்புக்கல் ஆக்குவோர் கூட்டுறவுச் சங்கங்கள், மீன்பிடிக்காரர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன.

15. வாணிகப் பெருக்கும் சந்தைகளும்

கன்னியாகுமரி சிறிய மாவட்டமாக இருந்தபோதிலும் வளம் நிறைந்த பகுதியாக இருக்கிறது. வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் யாவும் இங்கே உற்பத்தியாகின்றன என்று சொல்லினும் தவறில்லை. இன்றியமையாப் பொருள்களான உப்பும் நெல்லும் இங்கிருந்தே திருவிதாங்கூர்ச் சீமைக்குப் பல தலைமுறைகளாகச் சென்று வந்திருக்கின்றன. கோட்டாறு வேட்டி, இரணியல் நேரியது (தேங்காய்), தக்கலைச் சீனி ஆகியவை இங்கிருந்து திருவிதாங்கூரின் வடபகுதிகளுக்குச் சென்ற வண்ணமாக இருக்கின்றன. வாழைப்பழமும் காய்கறியும் மலையாளச் சீமைக்கும், தேங்காய், புல் தைலம், பலவகை மரங்கள், மிளகு, ரப்பர் ஆகியவை தமிழ் நாட்டுக்கும், மீன் இலங்கைக்கும் ஏற்றுமதியாகிறது. கயிற்றுப் பொருள்களும் பனந்தும்பும் முந்திரிப் பருப்பும் அமெரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு அனுப்பப் படுகின்றன. இவ்வகை வாணிகப் பெருக்கத்தால் கனக மூலச் சந்தை, திங்கட்கிழமைச் சந்தை, கருங்கல் சந்தை,

களியக்காவிளைச் சந்தை, தொடுவெட்டிச் சந்தை, தாலியறுத்தான் சந்தை என்ற பல சந்தைகள் பெரிய அளவில் இம்மாவட்டத்தில் கூடுகின்றன. பல நூறாயிரம் ரூபாய்க்குப் பொருள்களைக் கொள்ளவும் கொடுக்கவும் ஏற்றவாறு இச்சந்தைகள் இயங்கி வருகின்றன.

கனகமூலம் சந்தை

இது நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியாகிய வடசேரியில் ஞாயிறு, வியாழன் ஆகிய இரு நாட்களிலும் கூடுகிறது. நெல்லை மாவட்டத்துப் பொருள்கள் சில இச்சந்தை வழியாகக் கோட்டயம்வரை செல்லுகின்றன. காய்கறிகள் இங்கிருந்து திருவனந்தபுரத்திற்கும், தேங்காய் பாண்டிய நாட்டின் பல பகுதிகளுக்கும், கருவேப்பிலை கொச்சிப் பகுதிக்கும் செல்லுகின்றன.

இச்சந்தை ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுவதை சர் தாமஸ் மன்ரோ விரும்பவில்லை. அவர் திருவிதாங்கூர் அரசாங்கத்துக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் பிரதிநிதியாக இருந்தார். ஞாயிற்றுக்கிழமை இயேசு கிறித்துவை வணங்குவதற்கு மட்டுமே ஏற்பட்டது என்ற உறுதிப்பாடு அவருக்கு இருந்தது. ஆகையால் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, சந்தை ஞாயிற்றுக்கிழமை கூடாது வேறொரு நாளில் கூட அவர் செய்த முயற்சிகள் பலிக்கவில்லையாம்.

கனகம், மூலம் என்னும் சொற்களே இச்சந்தையின் பெருஞ்சிறப்பை உணர்த்துவனவாகும்.

திங்கள் சந்தை

மண்டே மார்க்கெட் என்ற பெயரில் இச் சந்தை திங்கட்கிழமை தோறும் இரணியலில் கூடுகிறது. காய்கறிகள் முதல் கைத்தறித் துணிகள்வரையும் கன்று காலி

தொடங்கிக் கோழிமுட்டை வரையிலும் இங்கே பெரிய அளவில் விற்பனையாகின்றன. குமரி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய சந்தை இதுவே.

கருங்கல் சந்தை

இங்கு கிழங்கு வகைகளும் இறைச்சி வகைகளும் பெரிய அளவில் விற்பனையாகின்றன. உரிய காலங்களில் இச்சந்தைக்கு வெளியூர் வணிகர்கள் வந்து கருப்புக்கட்டி, புளி, மரச்சீனி ஆகியவற்றைக் கொள்முதல் செய்கின்றனர்.

களியக்காவிளைச் சந்தை

இச்சந்தை திங்கட்கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் கூடுகிறது; வெற்றிலை வணிகத்துக்கும், இலவம் பஞ்சு விற்பனைக்கும் புகழ்பெற்றது.

தாலியறுத்தான் சந்தை

இச்சந்தை கொட்டாரத்துக்கும் கன்னியாகுமரிக்கும் இடையேயுள்ள மகாதானபுரத்தில் செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் கூடுகிறது. கால் நடைகள், காய்கறி வகைகள், கிழங்கு வகைகள் இங்கு மிகுதியாக விற்பனையாகின்றன.

16. போக்குவரத்து

கப்பல் போக்குவரத்து

இம்மாவட்டம் 42 மைல் (68 கி. மீ.) நீளத்துக்குக் கடற்கரை உடையது. கடலோரமாக ஏராளமான சிற்றூர்கள் உள்ளன. இவற்றில் மீன் பிடிப் படகுகள் மிகுதியாக உள்ளன. சிறு துறைமுகம் என்று குறிப்பிடக் கூடியவை குளச்சல், தேங்காய்ப்பட்டினம், மணக்குடி

கோவளம், லீபுரம், மார்த்தாண்டம் ஆகியவை. இத் துறைமுகங்களிலிருந்து கயிறு, கயிற்றுப் பொருள்கள், தேங்காய், பனைவெல்லம், மரவள்ளிக்கிழங்கு மா ஆகியவையும் ஆண்டுதோறும் 1000 டன் கருவாடும் படகுகளில் தூத்துக்குடித் துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்குக் கப்பல்களில் செல்லுகின்றன. எனவே, இம்மாவட்டத்தின் பொருளாதாரத்துக்குத் தூத்துக்குடி துறைமுகத்தின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும்.

குளச்சல் துறைமுகம்

இதுவே இம் மாவட்டத்தின் துறைமுகங்களுள் முக்கியமானது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் இத் துறைமுகத்துக்கும் பேபிலோன், கிரீசு, ரோம் நாடுகளுக்கும் வணிக உறவு இருந்தது. தூத்துக்குடியிலிருந்து 125 மைல் தொலைவிலும், கொச்சி துறைமுகத்திலிருந்தும் 125 மைல் தொலைவிலுமாக—அவை இரண்டுக்கும் நடுவே—அமைந்திருப்பது இத் துறைமுகத்தின் சிறப்பு. இத் துறைமுகத்திலிருந்து திருவனந்தபுரம் 35 மைல் (57 கி. மீ.) தொலைவில் இருக்கிறது. குளச்சலில் சிறு கப்பல்கள் மட்டுமே வர இயலும். கடற்கரையிலிருந்து அரைக் கிலோமீட்டர் தொலைவில் ஆழ்கடலில் பெரிய கப்பல்கள் நங்கூரம் போடுகின்றன. கூலியாட்கள் மலிவாகக் கிடைப்பதால், படகுகள் மூலம் இல்மனைட்டு மணலும் மானஸைட் மணலும் பனைமர நாறும் ஏற்றுமதி செய்யப்படுறன்றன. ஒரு டன் அல்லது இரண்டு டன் அளவு பொருள்களை ஏற்றக்கூடிய படகுகள் (Canoe) இங்கு 148 உள்ளன. இங்குள்ள மீன் பிடிக்கும் படகுகள் கப்பல்களுடன் கட்டி இழுக்கும் அமைப்புடன் கூடியனவாக உள்ளன.

நீரோடியிலும் முட்டத்திலும் இணையம் புத்தன் துறையிலும் கலங்கரை விளக்குகள் நிறுவப்பட்டு வருகின்றன.

குளச்சல், லீபுரம் ஆகிய இரு இடங்களிலும் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

லீபுரம் (ஸ்ரீமூலபுரம்) துறைமுகம்

மன்னார்குடாவில் கனகப்பாபுரத்துக்கும் முட்டத்துக்கும் நடுவே, கன்னியாகுமரிக்கு அருகே லீபுரம் இருக்கிறது. இங்கு, கடல் அதனுடைய ஆரவாரம் எதுவும் இன்றி அமைதியாக இருப்பதால் ஆண்டு முழுவதும் கப்பல்கள் வரப்போக ஏற்ற துறைமுகமாக இது இருக்கிறது. எனினும் முன்னாள் மலையாள அரசாங்கங்கள் இதைப் பேணாமையால் இத்துறைமுகம் சீரழிந்துவிட்டது.

இந்தியாவின் பாதுகாப்புக்காக இப்பகுதியை இந்திய அரசாங்கம் திருவிதாங்கூர் மஹாராஜாவிடமிருந்து எடுத்துக்கொண்டு லீபுரம் துறைமுகத்தை நடத்த வேண்டுமென்று பிரிட்டிஷ் தளபதி லார்டு கிச்சினர் இந்த இடத்தை 1908-இல் பார்வையிட்டபோது கூறினார்.

தோடு

நீர்வழிப் பாதை அல்லது கால்வாயை இம்மாவட்டத்தினர் 'தோடு' என்பர். கேரளத்திலுள்ள தோட்டோடு தொடர்ச்சியாக அரபிக்கடல் ஓரமாகக் குமரி மாவட்டம் வழியாகத் தூத்துக்குடிவரை கால்வாய் வெட்டுவது நலம் என்று இம்மாவட்டத்தார் சிலர் கருதுகின்றனர். குமரி மாவட்டத்தில் நாஞ்சில்நாடு நீங்கிய ஏனைய பகுதிகளில் கடலோரமாகத் 'தோடு' வழிநீர்ப் போக்குவரத்து, கொச்சிவரையில் உண்டு.

சாலைப் போக்குவரத்து

ஊர்திகள் : தமிழ்நாட்டிலேயே தனிப்பட்டவர்கள் கார் வைத்திருப்பது இந்த மாவட்டத்தில்தான் குறைவு ; 1959-இல் இம்மாவட்டத்தில் 309 பேர் மட்டுமே கார் வைத்திருந்தனர். இம்மாவட்டத்து மக்கள் விவசாயிகளாக இருப்பதும், இங்கு தொழில் வளர்ச்சி ஏற்படாததும், இம்மாவட்டம் மிகச் சிறிய அளவினதாக இருப்பதும் இதற்குக் காரணங்கள் ஆகும்.

பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் (லாரிகள்) தமிழ்நாட்டிலிருந்து திருவனந்தபுரத்துக்குச் செல்லுவன யாவும் இம்மாவட்டத்தின் வழியேதான் செல்லுகின்றன. செங்கோட்டை கொல்லம் வழி மலைப் பாதையாக இருப்பதால், இவ்வழியேதான் போக்குவரத்து நடைபெறுகிறது. இதனுல் இம்மாவட்டத்தில் இவ்வகை வண்டிகள் மிகுதியாகச் செல்லுகின்றன.

பொதுமக்கள் ஏறிச் செல்லும் வண்டிகளில் டவுன் பஸ், வெளியூர் பஸ் என்ற இரு பிரிவுகள் உள்ளன. நாகர்கோயில் நகரில் ஆறு வழிகளில் டவுன் பஸ்கள் செல்லுகின்றன. இவை அரசாங்கப் போக்குவரத்துத் துறையினரால் நடத்தப்படுகின்றன.

வெளியூர் பஸ்கள் தனிப்பட்டவர்களால் சில பகுதிகளில் நடத்தப்படுகின்றன. பெரும்பான்மையான இடங்களுக்கு அரசாங்கப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பஸ்கள் செல்லுகின்றன. திருவனந்தபுரத்துக்குத் தமிழ்நாடு அரசாங்க பஸ்களும், கேரள அரசாங்க பஸ்களும் செல்லுகின்றன. பொதுவாக, நாட்டு வளத்தாலும் மக்கள் தொகை மிகுதியாலும் இரயில் வசதியின்மையாலும் இம்மாவட்டத்தில் பஸ் போக்குவரத்து பல்கிப் பெருகியிருக்கிறது.

அரசாங்க பஸ் போக்குவரத்து

தூத்துக்குடி, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகர்களுக்கு நாகர்கோயிலிருந்து அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையினர் எக்ஸ்பிரஸ் பஸ்களை 1960 முதல் ஏற்படுத்தியுள்ளனர். 1961-இல், இவ்வாறு தஞ்சாவூர், சேலம் ஆகிய நகரங்களுக்கும் நாகர்கோயிலிலிருந்து பஸ் போக்குவரத்து ஏற்படக் கூடுமென்று தெரிகிறது.

இம்மாவட்டத்தில் கேரள அரசாங்கத்தினர் பஸ்களை நடத்தி வந்ததால் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசாங்கமும் பஸ் போக்குவரத்தை நடத்தி வருகிறது. சென்னை நகரிலும் கன்னியாகுமரியிலுமாக அமைந்த ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத போக்குவரத்துக்களை இணைப்பதற்காகவே, நெடுந்தூர பஸ்கள் விடப்பட்டன.

தமிழ்நாடு அரசாங்கத்தின் பஸ் போக்குவரத்துத் துறையினர் இம்மாவட்டத்தில் பெரியதொரு அலுவலகம் வைத்துள்ளனர். நாகர்கோயிலருகே இராணி தோட்டத்தில், இவர்கள் கட்டிக்கொண்டிருக்கும் போக்குவரத்துத் தொழிற்கூடம் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகளுள் ஒன்றாக இருக்கும்.

சாலைகள்

இம்மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் இரண்டு உள்ளன. ஒன்று காசி-கன்னியாகுமரிச் சாலை; மற்றொன்று கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் வழியாகக் கொச்சிக்குச் செல்லும் சாலை. கடற்கரையோரமாக மற்றொரு தேசிய நெடுஞ்சாலை மூன்றாம் திட்டக் காலத்தில் போடப்படக்கூடும். இம்மாவட்டத்தில் இதன் நீளம் 68 கி. மீ. ஆக இருக்கும். கன்னியாகுமரி—திருவனந்த

புரம் தேசிய நெடுஞ்சாலையில் சுசீந்திரம், நாகர்கோயில், உதயகிரி, தக்கலை, பத்மனாபபுரம், குழித்துறை, கொல்லங்கோடு ஆகிய ஊர்கள் உள்ளன. குளச்சல், மணவாளக்குறிச்சி ஆகிய ஊர்கள் இச் சாலையின் தெற்கேயும், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி முதலிய அணைகள் சாலையின் வடக்கேயும் அமைந்துள்ளன.

இரயில் போக்குவரத்து

தமிழ்நாட்டில் இரயில் வசதி இல்லாத மாவட்டம்* இது ஒன்றே. இது இம்மாவட்டத்து மக்களின் பெருங் குறையாக இருந்து வருகிறது. வளமான இம்மாவட்டத்தில் இரயில் பாதை போட, இடம் பெறுவதும் எளிதன்று.

திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிவரை இரயில் பாதை போடவேண்டுமென்று மாநில அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கிறது. இந்த வேண்டுகோள் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடுமென்றும் இதற்காக மூன்று கோடி ரூபாய் ஒதுக்கிவைக்கப் பெறலாமென்றும் தெரிகிறது. நாட்டின் தென்கோடிக்கு இரயில் பாதை ஏற்பட்டால் குமரியைக் காணவரும் வெளிநாட்டினரும் நம் நாட்டினரும் பெரிதும் பயனடைவர்.

விமானப் போக்குவரத்து

இம்மாவட்டத்தில் விமான நிலையம் இல்லை. மிக அருகேயுள்ள விமான நிலையம் திருவனந்தபுரம் விமான நிலையம் ஆகும்.

---

* அவுட் ஏஜன்சி வசதி நாகர்கோயில் நகருக்கு உண்டு. அவுட் ஏஜன்சி பஸ்கள் ஒவ்வொரு இரயிலுக்கும் நாகர்கோயிலிலிருந்து திருநெல்வேலி சந்திப்புக்குச் செல்லுகின்றன.

அஞ்சல் துறை

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அஞ்சல் துறையொன்று இருந்தது. மூன்று சக்கரம் மதிப்புள்ள அஞ்சலட்டைகளை சமஸ்தானத்துக்குள் எழுதுவதற்கு அந்நாளில் வாய்ப்பு இருந்தது. 1947-க்குப் பிறகு இந்தியாவெங்கும் அஞ்சல் அலுவலகங்கள் ஒரே ஆட்சியில் நடத்தப்பெற்று வருகின்றன.

17. வரலாறு

இம்மாவட்டம் தொன்மையான பெருமை உடையது; (நாஞ்சில் வள்ளுவன் என்னும்) நாஞ்சில் பொருநனைப் பற்றிப் புறநானூறு குறிப்பிடுகிறது.

இப்பகுதி ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாண்டிய அரசர்களால் ஆளப்பட்டு வந்தது என்பது பாண்டியன் அணை, பாண்டியன் கால்வாய், பூதப்பாண்டி, அழகிய பாண்டியபுரம் என்ற பெயர்களால் உறுதிப்படுகிறது.

அழகிய பாண்டியபுரத்துக்கு 'அதிகன் ஊரான அழகிய பாண்டியபுரம்' என்னும் பெயர் ஓலைச் சுவடிகளில் காணப்பெறுவதும் அவ்வூரிலிருந்து எட்டு கி. மீ. தொலைவிலுள்ள தாழைக்குடியின் அருகே ஔவையாருக்குக் கோயில் கட்டப்பெற்றிருப்பதும் கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதிகமான் நெடுமான் அஞ்சிக்கு இப்பகுதியுடன் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

பாண்டிய அரசர்களின் செல்வாக்குக் குறைந்தபின் இப்பகுதி மூன்றாகப் பிரிந்தது :

(1) கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும் சேர்ந்த புறத்தாய நாடு.

இப்பகுதி ஒரு மண்கோட்டையால் வளைக்கப்பட்டிருந்தது. இக் கோட்டைக்கு 'வட்டக் கோட்டை' என்று பெயர். 9-ஆம் நூற்றுண்டில் இது மண்கோட்டையாக இருந்தது. இதன் பரப்பு 3¾ ஏக்கர். இதை 1725-இல் திருவிதாங்கூர் அரசரான மார்த்தாண்ட வர்மா கல்கோட்டையாகக் கட்டி கடல் வழி வரும் கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றினர். அதற்கான காவல் கோபுரங்களையும் அமைத்தார். இக்கோட்டையின் சிதைந்த பகுதிகளையும் இதனுள் இருந்த நான்கு மாளிகைகளின் நலிவுற்ற நிலைமையையும் இன்றும் குமரி முனைக்கு வடகிழக்கே 5 கி. மீ. தொலைவிலுள்ள ஓரிடத்தில் காணலாம்.

(2) நாஞ்சில் குடியரசு.

இது மங்கலம் முதல் மணக்குடி வரை பரவியிருந்தது. அகத்தீசுவரம் தோவாளை வட்டங்களில் புறத்தாய நாடு நீங்கிய பகுதி இவ்வாறு பெயர் பெற்றிருந்தது.

(3) வேணாடு.

இது கல்குளம், விளவங்கோடு என்னும் இரு வட்டங்களையும் தன்னகத்தே கொண்டது. வேணாட்டு அரசன் சேர பரம்பரையைச் சேர்ந்தவன். தலைமுறை தலைமுறையாக அவனுடைய நாட்டின் பரப்பு விரிவடைந்து அதற்கேற்பத் தலைநகரமும் கல்குளம் வட்டத்துப் பத்மநாபபுரத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டது.[1]

1729-இல் மார்த்தாண்ட வர்மா என்ற மன்னர் வேணாட்டின் அரசரானதைத் தொடர்ந்து அடுத்த 220

---

1. திருவிதாங்கூர் அரசவம்சம் இப்பத்மநாபபுரத்திலேயே தோன்றிற்று.

ஆண்டுகளுக்குச் சீருடனும் சிறப்புடனும் விளங்கிய திருவிதாங்கூர்ச் சீமையின் பொற்காலம் பொலிவுடன் தொடங்கியது. மார்த்தாண்ட வர்மரும் அவர் கால்வழி வந்தவர்களும் திருவனந்தபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் பத்மநாப சுவாமியின் அடிமைகளாக (தாசர்) திருவிதாங்கூர் நாட்டை ஆட்சி புரிந்து வந்தனர்.

இவ்வாறு இப்பகுதியை ஆண்ட அரசின் தலைநகர் திருவனந்தபுரத்துக்கு மாற்றப்பட்டதாலும் அதற்கு வடக்கேயுள்ள பகுதிகளும் அந்த அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டதாலும் இப்போது கன்னியாகுமரி மாவட்டம் என்று சொல்லப்படும் தென் திருவிதாங்கூரில் இடையிடையே ஆட்சியினரின் வலுக் குறைந்தது. வரலாற்றுப் புகழ் பெற்ற கன்னியாகுமரியும் வளமிக்க நாஞ்சில் நாடும் தங்களுக்குக் கிடைக்க இவ்வாய்ப்புக்களைத் தமிழ் நாட்டு அரசர்கள் பயன்படுத்துவாராயினர். பாண்டியர்கள், பிற்காலச் சோழர்கள், விசயநகரத்து ராயர்கள் இவ்வாறு பல அரசர்கள் குமரிப் பகுதியையும் நாஞ்சில் நாட்டையும் தமதாக்கிக்கொள்ளப் பல நெடு நூற்றாண்டுகளாக முயன்றவண்ணமாக இருந்தனர்.

இப்படையெடுப்புக்களைப்பற்றி, புலவர் செ.சதாசிவம் எழுதியிருக்கும் பின்வரும் குறிப்பு இங்கே குறிப்பிடத் தக்கது.

*"வளமிகுதி நாஞ்சில் நாட்டுக்கு நன்மையை அளிக்கவில்லை. நேர்மாறாக ஓயாத பேராபத்துக்கே காரணமாகத் தீர்ந்தது. மூவேந்தர்களின் கண்ணும் கருத்தும் இதன்மீது பதிந்துகொண்டே இருந்தன. அதனால் ஒரு காலத்தில் நாஞ்சில் வள்ளுவனிடம் சுதந்திர நாடாக இருந்த இது, பின் பலர் கைக்கும் மாறும் ஒரு

* சேர நாடும் செந்தமிழும் — வித்துவான் செ. சதாசிவம்,

பண்டம்போல ஆயிற்று. வேற்றரசர்களின் படையெடுப்பாலும் முற்றுகையாலும் இந்நாடு அனுபவித்துள்ள அல்லலும் தொல்லையும் கொஞ்சமல்ல. அவர்கள் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு இதனைக் கைப்பற்றவும், இதில் தம் ஆட்சியை நிலைநாட்டவும் புரிந்த செயல்களே இந்நாட்டின் சரித்திரம்.

பலப்பல தடவைகளில் சோழர்களும் பாண்டியர்களும் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்நாட்டிலுள்ள ஊர்ப் பெயர்களே காட்டும். கோட்டாறான மும்முடி சோழபுரம், கோட்டாறான சோழ கேரளபுரம், தேரூரான அழகிய சோழநல்லூர், புதுக் கிராமமான ராஜநாராயண சதுர்வேதி மங்கலம், சுசீந்திரமான சுந்தரபாண்டிய சதுர்வேதி மங்கலம், சுசீந்திரமான சுந்தர சோழ சதுர்வேதி மங்கலம் முதலான பெயர்கள் அதற்கு உதாரணங்கள். கேரளத்தோடு சேர்க்கப்பட்ட பின்னரும்கூட இதற்குத் தொல்லை தணிந்துவிடவில்லை. கொல்லம் 850 (கி. பி. 1675) முதல் பல தடவையும் நாயக்கர் படைகள் இந்நாட்டுக்குள் புகுந்து வரிதண்டியும், கொள்ளையடித்தும், துன்புறுத்தியும் வந்திருக்கின்றன. இதனால் நாடும் பயிரும் நலிவடைந்தன.

அரசரிடம் மக்கள் இதுபற்றி முறையிட்டுக் கொள்ளவே, அவர் தீர்வையில் குறைவு செய்து நீட்டு அனுப்பினது மட்டுமன்றி அதனை வீர விளையிலும், வடசேரி குதிரைப் பந்தி விளையிலும், வையாழி விளையிலும் கல்வெட்டி அதன்படிப் பிரமாணமாக நடந்து கொள்ளுமாறும் செய்தார்."

சோழ அரசனின் அமைச்சர் ஒருவர் கன்னியாகுமரியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்த செய்தி (இப்போது

இடிந்து கிடக்கும்) குகாநாத சுவாமி கோயில் கல்வெட்டி லிருந்து தெரிகிறது. இச்சாசனச் செய்யுள் பின் வருமாறு:

''தெண்டிரை நீர்த் தென்குமரி மானகர்த்தண்ணீர்ப்பந்தல்
எண்டிசையும் ஏத்த வினிதமைத்தான்—விண்டிவரும்
ஐந்தெரியலான் அய்யனம்பி அடல்வளவன் மந்திரி
தென்மங் கலக்கால மன்.''

எனவே சோழ அரசர் கையிலும் குமரி நாட்டின் சில பகுதிகள் சில காலம் இருந்தன.

விசயநகரத்து அரசர்களின் கையாட்களாக மதுரையை ஆண்டுவந்த நாயக்க மன்னர்களும் தமிழ்கூறு நல்லுலகத்தின் தென்கோடியாகிய குமரித் துறையைத் தங்களதாக்கிக்கொள்ள ஆசைப்பட்டனர். இந்த ஆசை யின் விளைவாக நாஞ்சில் நாட்டின்மீது இடையிடையே படையெடுத்தனர். ஒரு தடவை திருமலை நாயக்கனின் அமைச்சனான தளவாய் ராமப்பய்யன் என்பவன் தானே நேரில் தலைமை தாங்கிப் போர்ப் படையுடன் இங்கு வந்தான்.

18-ஆம் நூற்றாண்டில் ஆர்க்காட்டு நவாப்பு கன்னியாகுமரிப் பகுதியை வேணாட்டு அரசனுக்குப் பரிசாக வழங்கினான். திப்பு சுல்தானின் படையெடுப்புக் காரணமாகத் திருவிதாங்கூர் அரசர்களுக்கும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பெனியாருக்குமிடையே 1805-இல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின்படி திருவிதாங்கூர் அரசர்கள் 1947 வரை ஆண்டுதோறும் எட்டு லட்சம் ரூபாய் வெள்ளைக்காரருக்குக் கப்பம் கட்டி வந்தனர்.

திருவிதாங்கூர் அரசர்களின் ஆட்சியில் இப்பகுதியில் அமைதி நிலவிற்று ; வளம் பெருகிற்று ; கல்வி சிறந்தது ; நெறித்தவம் பரவியது. மக்கள் அரசரிடம் பேரன்புடையவராகவும் அரசர் தென்திருவிதாங்கூர்த் தமிழரிடம் பெரு நம்பிக்கையுடையவராகவும் இருந்து வந்தனர்.

குடியாட்சி முறை பரவியதும் மலையாளி தமிழர் என்ற பிரிவினை மனப்பான்மை உண்டாயிற்று. தமிழராகிய சி. பி. இராமசாமி ஐயர் திருவிதாங்கூர் திவானாக இருந்த காரணத்தால் இந்த மனப்பான்மை வலுத்தது. தேசிய இயக்கத்தால் ஏற்பட்ட எதிரொலியும் நிலைமையை மோசமாக்கியது. 1947 ஆகஸ்டு 15-ஆம் நாளில் இந்தியா அரசியல் விடுதலையடைந்தபோது பிற தனியரசுகளைப் போல, திருவிதாங்கூர் இந்திய நாட்டுடன் இணையாது தனித்து நின்றதால் மக்கள் உள்ளங்களில் குமுறல் ஏற்பட்டது. இந்திய நாடெங்கும் மொழி வழியாக மாநிலங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் நாளும் வளர்ந்தது. எண்ணெய்யும் தண்ணீரும் போல மலையாளிகளும் தமிழரும் வாழ நேரிட்டது.

1947 இறுதியில் திருவிதாங்கூர் இந்திய யூனியனுடன் இணைந்தது. 1949 ஜூலை முதலாம் நாளில் திருவிதாங்கூர் கொச்சி ஆகிய இரு இராச்சியங்களும் ஒன்று சேர்ந்து திருவிதாங்கூர்—கொச்சி என்ற புதிய ஆட்சி இந்திய யூனியனின் உறுப்பு இராச்சியமாக உருவாயிற்று. திருவிதாங்கூர் மன்னரான சித்திரைத் திருநாள் பாலராம வர்மா மகாராஜா இப்புதிய ஆட்சியில் அரசப் பிரமுகரானார். இவ்வாறு இராச்சியத்தின் அளவு பெருகியதில் மலையாளிகள் தொகை கூடிற்று ; தமிழ் பேசும் மக்கள் முன்னிலும் சிறுபான்மையினர் ஆயினர். திருவிதாங்கூர்—கொச்சி அமைப்பு. ஐக்கியக் கேரளம் அமைப்பதற்கான

முதற்படியாக இருந்ததையறிந்த தமிழ் மக்கள் தாங்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்ந்துவிட வேண்டுமென்று பெருங் கிளர்ச்சி செய்தனர். மொழிவழி மாநில அமைப்புக்குக் குழுவின் அறிக்கைக்கு இணங்க 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி தொடங்கி அகத்தீசுவரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் வட்டங்கள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட்டன. இவை கன்னியாகுமரி மாவட்டம் என்ற பெயரில் தனி மாவட்டமாகப் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

தமிழ் நாட்டு மாவட்டங்களில் இதுவே பரப்பில் சிறிய மாவட்டமாகும். இதன் பரப்பளவு 646 சதுர மைல் (4,13,120 ஏக்கர்). சிறிய மாவட்டமாக இருப்பதால் மாவட்டம் அனைத்தும் ஒரே கோட்டமாகக் கருதப்பட்டு தக்கலையில்* அலுவலகம் வைத்து நடத்தப்படுகிறது. இந்த அலுவலர் நாகர்கோயிலிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு (கலெக்டர்) உட்பட்டவர். நான்கு வட்டங்களும் ஆட்சி வசதிக்காக 64 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் பட்டியலை இந்நூலின் பிற்சேர்க்கையில் காண்க.

---

* கோட்ட ஆட்சி அலுவலகம், திருவிதாங்கூர் சமஸ்தான காலத்திலேயே இருந்தது. அப்போது இந்த அலுவலகம் திருவனந்தபுர மாவட்டத்தைச் சேர்ந்திருந்தது.

இரணியல், கல்குளம், விளவங்கோடு, அகத்தீசுவரம், தோவாளை என்ற ஐந்து வட்டங்கள் இருந்தன. இரணியல் வட்டம் கல்குளம் வட்டத்தின் ஒரு பகுதியாக இருந்துவருகிறது இரணியல் வட்டம் இணைப்புக்கு முன்னரே மறைந்துவிட்டது.

கல்குளம், விளவங்கோடு வட்டங்களுக்கு "இடைநாடு" என்ற பெயர், (அகத்தீசுவரம் தோவாளை வட்டங்களுக்கு நாஞ்சில்நாடு என்பதுபோல)

18. இந்திய விடுதலைப் போர்

இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்ட வீரர்களில் பூலித்தேவரும் கட்டப்பொம்மனும் முதல்வராவர். இவ்வாறு கேரளத்தில் வெள்ளைக்காரர்களை எதிர்த்த பெருமை வேலுத்தம்பி தளவாய் என்பவருக்கு உண்டு. இவர் பிறந்த ஊர் கல்குளம் வட்டத்திலுள்ள தலைக் குளம் என்னும் ஊராகும்.

இவர் 1765-இல் பிறந்து 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கம் வரை வாழ்ந்தவர் ; வேணாட்டு அமைச்சராக இருந்து நீதியான, நேர்மையான ஆட்சி புரிந்தவர் ; அடிமைத் தளையறுக்க, வெள்ளையரை எதிர்த்த வேங்கை என்றும், தன்மானங்காக்கத் தன் தலையைத் தம்பியிடங் கொடுத்த வீரன் என்றும் வரலாறு இவரைப் பாராட்டு கிறது ; இவர் புகழ் பரப்பும் நாடகங்கள் இன்றும் நடைபெறுகின்றன. இவர் பயன்படுத்திய வாள், இவரது குடும்பத்தாரால் இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரப்பிரசாதுக்கு அன்பளிக்கப்பெற்று, புது தில்லியிலுள்ள தேசியப் பொருட்காட்சி மண்டபத்தில் வைக்கப் பெற்றிருக்கிறது.

குறிப்பிடத்தக்க மற்றெருரு தலைவரான புரட்சி வீரர் செண்பகராமன் பிள்ளை, இந் நூற்றுண்டின் தொடக்கத் திலேயே அரசியல் கிளர்ச்சி செய்து நாடு கடத்தப் பட்டவர் ; வீர சாவர்க்காருடன் வைத்து எண்ணத்தக்க தியாகி ஆவார். இவர் எப்போது எங்கு எவ்வாறு உயிர் நீத்தார் என்பதுகூடத் தெரியவில்லை.

குமரி மாவட்டத்து மக்கள்—இந்திய நாட்டுப்பற்று மிக்கவர்கள். எனினும் அவர்கள் தனியரசு ஒன்றில் வாழ்ந்ததாலும் திருவிதாங்கூர் அரச குடும்பத்தினருடைய

அளவு கடந்த அன்புக்குக் கட்டுப் பட்டிருந்ததாலும், வலிய எப்போராட்டத்திலும் பெரிய அளவில் ஈடுபட வில்லே. ஆனுல், பிரிட்டிஷ் இந்தியாவில் குமுறல்களும் கிளர்ச்சிகளும் இருந்தபோது தங்களுடைய ஆதரவு யார்மாட்டு இருந்ததென்பதை அவர்கள் தெரிவிக்கவும் தவறவில்லே. வேதாரணியத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்தபோது இம்மாவட்டத்தினராகிய இடலாக்குடி டாக்டர் எம். இ. நாயுடு (இறந்தது 1958) அதில் கலந்து கொண்டார்; தீண்டாமை விலக்குக்காகப் பாடுபட்டு அரசாங்கப் பரிசையும் இவர் பெற்ருர்.

கேரளத்தில் தீண்டாமையை ஒழிக்க வைக்கம் என்ற இடத்தில் ஈ. வே. இராமசாமிப் பெரியாருடன் ப. வரத ராசுலு நாயுடுவும் ஏனையத் தமிழர்களும் அறப்போர் நடத்தினர். அந்த அறப்போரில் மகாத்மா காந்தியடி களின் வருகையால் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. வரலாற்றில் பெரும் புகழ்பெற்ற வைக்கம் அறப்போருக்கு வழி காட்டியது கொல்லம் 1101-இல் சுசீந்திரத்தில் கோயில் சாலேகளே அரிசனங்கள் பயன்படுத்த இசைய வேண்டும் என்று கோரி நடத்தப்பட்ட அறப் போராகும்.

கோயில்களேத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடும் முயற்சியும் திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்திலும் அதன் ஒரு பகுதியாயிருந்த குமரி மாவட்டத்திலுமே இந்தியாவில் முதல் தடவையாக வெற்றி பெற்றது. இதைப் பாராட்டும் முறையில் மகாத்மா காந்தியடிகளே கொல்லம் 1114-இல் (கி. பி. 1939) இப்பகுதிக்கு வருகை புரிந்தார்.

இந்தியாவில் அரசியல் விடுதலேப் போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் புதுச்சேரிக்குச் சென்றதுபோல்—வேறு சிலர் பிரிட்டிஷ் போலிசின் கொடுந் தண்டனேயிலிருந்து

தப்பித்துக்கொள்ள இப்பகுதியில் சிலகாலம் வாழ்ந்தனர். இதனாலும் இப்பகுதி மக்களின் அரசியல் உணர்ச்சி பெருகிற்று.

கதர் இயக்கத்திலும் இம்மாவட்டம் பின்தங்கி விடவில்லை. குமரி மாவட்டத்தில் தேசிய ஆர்வத்தை ஊக்குவித்தவர்களுள் செய்குத்தம்பிப் பாவலரும் சிவதாணுப் பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

பாரதத் தாயின் பாதச் சிலம்பொலியென முக்கடல் முழங்கும் கன்னியாகுமரியில் காந்தியடிகளின் அஸ்தி கரைக்கப்பட்ட புனித இடத்தில் காந்தி மண்டபமும், மாவட்டத் தலைநகராகிய நாகர்கோயிலின் நடுநாயக மான இராமசாமி ஐயர் பூங்காவில் கலைஞர் என். எஸ். கிருஷ்ணன் நிறுவிய காந்தி ஸ்தூபியும் காந்தியடிகளின் தொண்டுகளையும் அவருடைய இயக்கத்தின் விளைவாக இந்திய நாடு அடைந்த விடுதலையையும் நினைவூட்டுஞ் சின்னங்களாக நின்று நிலவி வருகின்றன.

19. இணைப்பு இயக்கம்

இப்பகுதியின் பல நூற்றாண்டு வரலாற்றில் 1945 முதல் 1956 வரையுள்ள 11 ஆண்டுகள் மிக முக்கியமான காலப் பகுதியாகும். மொழிவழியாக இப்பகுதியைத் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்ற இயக்கம் 1945-இல் தோன்றி 1956-இல் வெற்றி பெற்றது.

முதலில் திருவிதாங்கூர் அரசாங்கத்தாலும் பின்னர் திருவிதாங்கூர் - கொச்சி அரசாங்கத்தாலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாகவும் கன்னியாகுமரி முதல் காசர்கோடு வரையிலும் உள்ள பகுதிகளை

யெல்லாம் தன்னகத்தே அடக்கிய ஐக்கிய கேரளத்தை உருவாக்க வேண்டுமென்று திருவிதாங்கூர்ச் சமஸ்தானக் காங்கிரசுத் தலைவர்கள் முயன்றமையாலும் அவற்றின் எதிரொலியாக அண்டை மாநிலங்களில் சிதைந்தும் சிதறியும் கிடக்கும் தமிழ்ப் பகுதிகள் அனைத்தையும் தமிழ் நாட்டாட்சிக்குட்படுமாறு அமைக்க வேண்டுமென்ற எண்ணம் தமிழ் மக்கள் எல்லோர் உள்ளத்திலும் ஏற்றம் பெற்றது. இதன் விளைவாகத் தென் எல்லைப் போராட்டமும் வட எல்லைப் போராட்டமும் தொடங்கின.

'குமரியைக் கொள்ளை கொடோம்', 'வேங்கடத்தை விடமாட்டோம்' என்ற குரல் எங்கும் ஒலித்தது. பல ஆண்டுகள் போராட்டத்திற்குப்பின் குமரன் முதல் குமரி வரை என்று எல்லை கூறும் அளவுக்குத் திருத்தணிகையும் கன்னியாகுமரியும் தமிழகத்தின் இயற்கையான எல்லைகளாக (மலையும் கடலும்) அமைந்திருக்கின்றன. வடக்கே ஆண் தெய்வமும் தெற்கே பெண் தெய்வமும் தமிழகத்தின் எல்லை காக்கும் கடவுளராக—குமரனும் குமரியுமாக—இருந்து வரும் சிறப்பும் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றுக்கே உரியது.

இழந்த குமரியை மீட்கும் முயற்சியில் கன்னியாகுமரித் தமிழர்களுக்குத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் பேராதரவு கொடுத்தனர். சிறப்பாகத் தமிழரசுக் கழகம் இப்பணியில் ஈடுபட்டது. போராட்டத்தின் வலுவை அடக்குவதற்காகத் திருவிதாங்கூர், திருவிதாங்கூர் - கொச்சி அரசாங்கங்கள் மேற்கொண்ட வன்முறைச் செயல்களுக்கு ஆளாகி இன்னல் பல அடைந்து குமரி மாவட்ட மக்கள் கல்லடிக்கும் சொல்லடிக்கும் இலக்காயினர்; தடியடிக்கும்

துப்பாக்கிச் சூட்டுக்கும் ஆளாயினர். உயிர்களைப் பலியிட்டனர். ஆகையால் இந்த இயக்கம் வரலாற்றில் இடம்பெறத்தக்கது.

திருவிதாங்கூரிலுள்ள தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஓரமைப்பு வேண்டுமென்ற உணர்ச்சி நாகர் கோயிலிலுள்ள திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் ஊழியர்களுக்கு 1945-இல் உண்டாயிற்று. அந்த ஆண்டு டிசம்பர் 16-ஆம் நாள் நாகர்கோயிலில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. மக்கள் ஆதரவு பெற்ற தலைவர்களாகிய திருவாளர்கள் இரா. வேலாயுதம் பிள்ளை, கே. நாகலிங்கம், காந்திராமன், எஸ். ஸ்ரீ. வி. தாஸ், ஆர். கே. ராம், முத்தையா, வி. மார்க்கண்டன், பி. எஸ். மணி ஆகியோர் முயற்சியால் அக்கூட்டம் நடைபெற்றது. திரு. எஸ். நத்தானியேல் தலைமையில் அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் அன்றே தொடங்கப்பெற்றது.

தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவை இந்த அமைப்புக்குப் பெறுவதற்காகவும் திருவிதாங்கூர்த் தமிழர்களின் நிலையைத் தமிழ்நாட்டி லுள்ள பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தெரிவிப்பதற் காகவும் 1946 தொடக்கத்தில் குமரி மாவட்டத் தலை வர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தனர். அப்போது அவர்கள் திரு. காமராசரைச் சந்தித்தனர். "சுசீந்திரத்தில் மட்டும் சில தமிழர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டிய அளவுக்குக் கன்னியாகுமரிப் பகுதியில் தமிழர்கள் உண்டா?" என்று திரு. காமராசர், அவர்களைக் கேட்டாராம். திருவிதாங் கூரில் 15 லட்சம் தமிழர்கள் இருப்பதாக அவர்கள் கூறியது திரு. காமராசருக்கு மட்டுமல்ல தமிழகத்திலுள்ள பல

ருக்குப் புதிய செய்தியாக இருந்தது. இதற்குக் காரணம் இங்கு வாழும் மக்கள் தமிழகத்திற்கு வரும்போது தாங்கள் மலையாளத்திலிருந்து வருவதாகச் சொல்லி வந்ததும் மலையாளச் சாயலோடு தமிழைப் பேசியதுமாகும்.

1946-இல் சர். சி. பி. இராமசாமி ஐயர் என்ற தமிழர் திவானாக இருந்தார். அவருடைய தூண்டுதலின் பேரில் திருவிதாங்கூர்ச் சமஸ்தானக் காங்கிரசின் செல்வாக்கைக் குறைக்க அதிலுள்ள பிற்போக்குவாதிகள் புதிய அமைப்பு ஆரம்பித்தனர் என்றும் தமிழர், அனைவரும் நாட்டின் நலனுக்கு ஊறு விளைப்பவர் என்றும் மலையாளத் தலைவர்கள் பிரசாரம் செய்து வந்தனர்.

1947-இல் தேசியக் கொடி பறப்பதற்கு சர். சி. பி. இராமசாமி ஐயர் தடை விதித்தார். அதை எதிர்த்து அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் ஊழியர்கள் தடையை மீறிக் கொடியேற்றினர்.

1947-இல் தமிழர் காங்கிரசின் கிளைகள் பல பகுதிகளிலும் தொடங்கப்பெற்றன. முன்னர் நாம் குறிப்பிட்டிருக்கும் தலைவர்களோடு சி. உமைதாணு, எஸ். தவசி, ஏ. சிதம்பரநாதன், சி. மாதேவன் பிள்ளை, டி. நாகலிங்கம், வி. உமைதாணுப்பிள்ளை போன்ற பலரும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டனர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இயக்கத் தலைவர்களுக்கு அவ்வப்போது அறிவுரை கூறி அவர்களை ஊக்கி வந்தார். செய்குத்தம்பி பாவலர், ரஜாக், டாக்டர் எம் இ. நாயுடு, தமிழறிஞர் பி. சிதம்பரம் பிள்ளை, தேவஸ்வக் குழுவின் தலைவரான சாமிநாதப்பிள்ளை ஆகியோரும் நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், கலைஞர்களான டி. கே. சண்முகம், டி. கே. பகவதி ஆகியோரும் தினமலர் ஆசிரியர் டி. வி. ராமசுப்பையரும் ஒல்லும் வகையாலெல்லாம் உதவி

செய்து இணைப்பு இயக்கத்துக்கு உறுதுணையாக இருந்து வந்தனர்.

இதன் பின்னர் இரவிப்புத்தூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் என்ற பெயர் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் என்று மாற்றப்பட்டது. திருவிதாங்கூரிலேயே தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் நீங்கி தமிழ் நாட்டுடன் இணையவேண்டும் என்ற உணர்ச்சி உருவானதையே இப்பெயர் மாற்றம் அறிவித்தது.

இக்கட்டத்தில் நாகர்கோயிலில் திருவிதாங்கூர்ச் சமஸ்தானக் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. தமிழர்கள் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறையில் கடையடைப்புச் செய்து கறுப்புக் கொடியுடன் ஊர்வலம் வந்தனர். ஐக்கியக் கேரளம் அமையும்போது திருவிதாங்கூர்த் தமிழர்களுக்குச் சுய நிர்ணய உரிமை அளிக்கப்படும் என்ற தீர்மானம் நாகர்கோயிலில் நடை பெற்ற சமஸ்தானக் காங்கிரஸ் மாநாட்டில் நிறை வேற்றப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், திருவிதாங் கூர்த் தமிழர்களின் கிளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்தது. சர். சி. பி. இராமசாமி ஐயர் பதவியி லிருந்து விலகி மலையாளக் காங்கிரஸ்காரர்களின் ஆட்சி தொடங்கியது, இந்த இயக்கத்தை மேலும் வலுப் படுத்தியது. எம். சிவதாணுப்பிள்ளை, ஏ. நேசமணி, கே. சிவராமப்பிள்ளை, பி. தாணுலிங்கநாடார், என். ஏ. நூர்முகமது, டி. டி. டானியேல், டி. தாமஸ், ஆர். தாணுப்பிள்ளை, ஆர். பொன்னப்ப நாடார், பி. இராம சாமிப்பிள்ளை ஆகியோரும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசில் .சேர்ந்தனர். திருவிதாங்கூரிலுள்ள தமிழர்

களின் ஒரே அரசியல் கட்சி என்ற பெருமையைத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் பெற்றது. தமிழர்கள் வாழும் எல்லா இடங்களிலும்—சிற்றூர் களிலும்கூட—நாள்தோறும் கூட்டங்கள் நடைபெற்றன சில இடங்களில் மலையாளக் காங்கிரஸ்காரர்களுக்கும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களுக்கும் கைகலப்பும் ஏற்பட்டது. தேங்காய் எறியாலும் கல்லெறியாலும் பலர் காயமடைந்தனர். இவ்வாறு தமிழர் தாக்கப்பட்டபோது தாக்குதலைக்கண்டித்து ஆவன செய்ய ம. பொ. சிவஞானம், ப. ஜீவானந்தம் ஆகிய தலைவர்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்றனர்; தென் திருவிதாங்கூரில் பல கூட்டங்களில் பேசித் தமிழர் கோரிக்கைகளுக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்தனர். தமிழர் பலர் மீது போலிசாரால் வழக்குகள் தொடரப்பட்டன. அடக்கு முறை நாளும் அதிகரித்தது. அதை அறிந்து, காமராசர் இப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்தபோது திருவிதாங் கூர்த் தமிழர்களின் விழிப்புணர்ச்சியை நேரில் கண்டார்.

1948-இல் திருவிதாங்கூர்ப் பிரதிநிதித்துவச் சபைக்கு நடைபெற்ற தேர்தலில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் அபேட்சகர்கள் இப்போது குமரி மாவட்டத்தி லுள்ள நான்கு வட்டங்களிலும் வெற்றிபெற்றனர். இதன் பின்னரே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொண்டது.

1948 மார்ச் 16-இல் திருவிதாங்கூர்ச் சமஸ்தான காங் கிரசின் சார்பாகத் திருவிதாங்கூர் அரசாங்கத்தின் முதல் அமைச்சராகப் பட்டம்தாணுப் பிள்ளை பதவியேற்ருர். அப்போது எதிர்க்கட்சியாகத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் 14 உறுப்பினர்களுடன் இயங்கிவந்தது. சட்ட சபையில் எதிர்க்கட்சியாக இருந்ததால் தமிழர்களின்

நிலையை வெளியுலகுக்குத் தெரிவிக்க நல்லதொரு வாய்ப்பு இருந்துவந்தது.

அடுத்துப் பதவிக்கு வந்த டி. கே. நாராயணப்பிள்ளை காலத்தில் திருவிதாங்கூரையும் கொச்சியையும் இணைக்கும் முயற்சி தொடங்கப்பெற்றது. ஐக்கியக் கேரளம் அமைப்பதற்கான அடிப்படை முயற்சியே இது என்பதை அறிந்து இதை எதிர்த்துத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ், தலைவர் ஏ. நேசமணியின் தலைமையில் சட்டமறுப்பு இயக்கம் நடத்திற்று. இதன் பயனாகத் திருவிதாங்கூர்த் தமிழர்களுக்கு மொழிவழி மாநிலம் அமைக்கும்போது ஆவன செய்யப்படும் என்று சர்தார் வல்லபாய்ப் பட்டேல் உறுதி கூறிக் காமராசரை நாகர்கோயிலுக்கு அனுப்பிவைத்தார். இதன் பிறகு போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட தலைவர்களும் விடுவிக்கப் பட்டனர். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் செங்கோட்டை, தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, சிற்றூர் ஆகிய வட்டங்களிலும் செயல்படத் தொடங்கிற்று.

இணைப்பு இயக்கம் இவ்வாறு பெருகி வந்த நிலையில் பி. இராமசாமிப் பிள்ளை கட்சி, பி. தாணுலிங்க நாடார் கட்சி எனத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. பலருடைய சமரச முயற்சியின்பேரில் **1953** மார்ச் **29**-இல் பிரிந்தவர் மீண்டும் கூடினர். பி. இராமசாமிப் பிள்ளையின் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் முன்னிலும் வேகமாக இயங்கிற்று. தேவிகுளம், மூணாறு போன்ற இடங்களில் போராட்டம் நடைபெற்றது. செங்கோட்டையில் நீதிமன்றத்தின்முன் மறியலும் தனிநபர் அறப்போரும் நிகழ்ந்தன. அக்காலத்தில் (திருவிதாங்கூர் கொச்சியில்) ஆட்சி செய்த

பட்டம் தாணுப்பிள்ளை பிரஜா சோஷலிஸ்டு கட்சியின ராயிருந்தும், அவருடைய அடக்குமுறையைக் கண்டித்து அக்கட்சியைச் சேர்ந்த டி. எஸ். இராமசாமிப்பிள்ளை, எம்.எல்.ஏ. கட்சியிலிருந்து விலகிக்கொண்டார்.

இவ்வாறு 1954-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்த் தமிழகமெங்கும் தமிழர் இயக்கம் பரவியது. நாள் தோறும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கைதாயினர். மாணவர் - போலீசார் கைகலப்பு நடந்தது. மொழிவழி மாநில அமைப்புக்குழு நியமனமாகியிருப்பதால் போராட்டத்தைக் கைவிடும்படி தமிழர்களைக் கேட்டுக்கொண்டு தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு அறிக்கை வெளியிட்டார். ஐக்கியத் தமிழக அமைப்புக்காக, காந்திராமன் உண்ணாவிரதமிருந்தார்.

1954 ஆகஸ்டு 11-ஆம் நாள் தமிழர்களால் விடுதலை நாளாகக் கருதப்பட்டு எங்கும் கடையடைப்பு, ஊர் வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அன்று தொடுவெட்டியிலும் மார்த்தாண்டத்திலும் போலீசார் சுட்டதால் சிலர் உயிரிழந்தனர். இதன் விளைவாக டாக்டர் லோகையா பிரஜா சோஷலிஸ்டு கட்சியிலிருந்து விலகிக் கொண்டார். டி. எஸ். இராமசாமிப்பிள்ளை பட்டம்தாணுப்பிள்ளையின் அமைச்சரவையில் நம்பிக்கை யில்லை என்ற தீர்மானத்தை 1955 பிப்ரவரி 8-இல் கொண்டுவந்தார். அது நிறைவேறியதால் பட்டம் தாணுப்பிள்ளையின் அரசாங்கம் கவிழ்ந்தது.

1955-இல் ஏ. நேசமணி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார். திருவிதாங்கூர் கொச்சி முதலமைச்சரான பனம்பள்ளி கோவிந்தமேனன் காலத்தில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள்மீது தொடரப்பட்டிருந்த

வழக்குகள் யாவும் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

மொழிவழி மாநில அமைப்புக் குழுவினரிடம் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் அளித்த வேண்டுகோளில் தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை, நெய்யாற்றின்கரை. தேவிகுளம், பீர்மேடு, சிற்றூர்வட்டங்களைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தது.

1955 அக்டோபர் **10**-ஆம் நாள் மொழிவழி மாநில அமைப்புக்குழு இந்திய அரசசங்கத்திடம் அளித்த அறிக்கையில்தோவாளை,அகத்தீசுவரம்,கல்குளம்,விளவங்கோடு வட்டங்களையும், செங்கோட்டை வட்டத்தின் ஒரு பகுதியையும் தமிழ்நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று சிபார்சு செய்தது. இந்தச் சிபார்சை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. எஞ்சிய வட்டங்களையும் தமிழ்நாட்டுடன் சேர்ப்பதற்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சிகளும் தேவிகுளம், பீர்மே வட்டங்களைப் பெறுவதற்காகத் தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் **20-2-1956**-இல் செய்த கிளர்ச்சியும் பயனடையவில்லை.

1956 மார்ச்சு மாதத்தில் மாநில அமைப்புச் சட்டம் சென்னைச் சட்டசபையிலும் இந்தியப் பாராளுமன்றத்திலும் நிறைவேறி அதிகார மாற்றுதலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. தமிழ்நாட்டுடன் சேரும் கோயில்களுக்காக திருவிதாங்கூர் கொச்சி தேவசுவ நிதியிலிருந்து **13½** லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது.

பிற மாவட்டங்களை நோக்கிப் புதிதாகச் சேரும் தமிழ்ப் பகுதிகளின் பரப்புச் சிறியதாக இருப்பதால் அவை அனைத்தையும் திருநெல்வேலி மாட்டத்துடன் சேர்த்து

விடலாம் என்றும் அல்லது திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கோடியிலுள்ள சில வட்டங்களைப் புதிதாக இணையும் பகுதிகளுடன் சேர்த்து ஒரு மாவட்டம் உருவாக்கலாம், என்றும் எண்ணம் இருந்தது. இறுதியாக செங்கோட்டை பகுதி திருநெல்வேலி மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டது. ஏனைய வட்டங்களுள்ள பகுதி கன்னியாகுமரி மாவட்டம் என்ற பெயரில் நாகர்கோயிலைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு தனிமாவட்டமாக அமைக்கப்பெற்றது. இப்பகுதியில் அமலிலிருந்த திருவிதாங்கூர் - கொச்சி சட்டங்களில் சில திருத்தங்கள் செய்து 'சென்னைச் சட்டசபை' புதிய சட்டங்களை இயற்றியது.

1956 நவம்பர் முதல்நாளில் கன்னியாகுரி மாவட்டம் உருவாயிற்று. தென்திருவிதாங்கூர்த் தமிழர்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்து தாயை அடைந்த சேய் என அகமிக மகிழ்ந்தனர். முதல் அமைச்சர் காமராசர் அதிகார மாற்றத்தை நாகர் கோயிலில் ஒப்புக்கொண்டார். வரலாறு தோன்றிய காலந்தொட்டே தமிழகத்தின் எல்லையாக உள்ள கன்னியாகுமரி தமிழ்நாட்டு ஆட்சியில் அமைந்ததையெண்ணி, தமிழர் அனைவரும் உள்ளம் பூரித்தனர்.

20. இணைப்புக்குப் பின்

1947 முதல் 1949 வரை திருவிதாங்கூர் அரசாங்கத்தாலும், 1949 முதல் 1956 வரை திருவிதாங்கூர்-கொச்சி அரசாங்கத்தாலும் இப்பகுதி புறக்கணிக்கப்பட்டு வந்தது. அரசாங்கத்தின் செலவுகள் இப்பகுதியில் மிகக் குறைவாகவே செய்யப்பட்டன. 1951-இல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமலுக்கு வந்தபோதும் இப்பகுதியில் எவ்வித

மான வளர்ச்சித் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலை திருந்தியிருப்பதே, இணைப்புக்குப்பின் ஏற்பட்டுள்ள முக்கிய மாறுதலாகும்.

மொழியின் அடிப்படையில் இணைப்பு இயக்கம் நடைபெற்றது. இணைப்புக்குப் பிறகு இங்கே தமிழ் அரியாசனம் ஏறியிருக்கிறது. தமிழ்க் கல்வி பெருகியிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களாகத் தமிழ்நாட்டில் வாழ்கிறோம் என்ற இன்பமான எண்ணம் இம்மாவட்ட மக்களிடையே நிலவி வருகிறது.

இம்மாவட்டதின் நிலையை நன்கறிந்துகொள்ள, புதிதாக சர்வே நடைபெறுகிறது. புள்ளி விவரக் கணக்குகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. முன்னர் நாகர்கோயில் நகரில்கூடத் தெருக்கள் பலவற்றுக்குப் பெயரில்லாமல் இருந்தன. இப்போது தெரு இல்லாமல் இருக்கலாம்; ஆனால் பெயரில்லாமல் இராது!

இன்பச் சுற்றுலா வருவோர் தொகை பெருகியிருக்கிறது. போக்குவரத்துப் பெருக்கமும் ''நாகர்கோயில்'' என்னும் பெயர்ப் பலகை தாங்கிய பஸ்கள் தமிழ் நாடெங்கும் காணப்படுவதாலும் குமரியைக் காண வேண்டுமென்ற நினைவு எல்லோர் உள்ளங்களிலும் இடம் பெற்றிருப்பதும் இதற்குத் துணையாக உள்ளன.

வேலையில்லாதோர் மிகுந்த மாநிலத்தில் இருந்தமையால் 1956–வரை இம்மாவட்டத்தவர்க்கு வேலை கிடைப்பது அருமையாக இருந்தது. இணைப்புக்குப்பின் வேலை பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் பெருகியுள்ளன. மின்சாரம் முன்னர் பள்ளிவாசலிலிருந்து வந்துகொண்டிருந்தது. இப்போது தமிழ் நாட்டு மின்சார இணைப்பிலிருந்தே இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

மின்சாரத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் பெரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இணைப்புக்குப் பின் ஏற்பட்ட இன்னல்கள் இரண்டு. ஒன்று, வாழ்க்கைச் செலவு கூடுதல். மற்றொன்று, தலை நகரமும் உயர்நீதிமன்றமும் நெடுந்தொலைவில் இருப்பது; இதனால் பெரிதும் வருந்துபவர் வழக்காடுபவர்களே. இவ்வினத்தவர்க்கு இம்மாவட்டத்தில் குறைவில்லை.

நாகர்கோயிலிலிருந்து . முத்துக்குழிவயல், தடிக்காரன் கோணம், பேச்சிப்பாறை என்னும் இடங்களுக்கும், கன்னியா குமரியிலிருந்து கோவளத்துக்கும் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யவும் இந்நான்கு இடங்களையும் முட்டத் தையும் நல்வாழ்விடங்களாக வளர்க்கவும் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். சுற்றுலா வருபவர்கள் கன்னியாகுமரியில் சூரிய உதயம், மறைவு இவற்றைக் கண்ட பின்னர் வட்டக்கோட்டை, கோவளம், மருத்துவ மலை, சுசீந்திரம், முட்டம், மணவாளக்குறிச்சி, பத்மனாப புரம், உதயகிரி, முத்துக் குழிவயல், தடிக்காரன்கோணம் பேச்சிப்பாறை ஆகிய இடங்களுக்கு நான்கு நாட்களில் அழைத்துச் செல்லவும் அரசாங்கப் போக்குவரத்துத் துறையினர் ஆவன செய்யவேண்டும்.

21. நாஞ்சில் நாட்டுத் தமிழ்

கன்னியாகுமரி மாவட்டத்திள்ள நான்கு வட்டங் களில் இரண்டின் பொதுப் பெயர் நாஞ்சில்நாடு என்ப தாகும். ஏனைய இரண்டும் நாஞ்சில் நாட்டைச் சேர்ந் தவை அல்ல. எனினும், இம்மாவட்ட முழுவதிலும் பேச்சுவழக்கில் இருந்துவரும் தமிழை, நாஞ்சில் நாட்டுத் தமிழ் என்று குறிப்பிடுவதில் தவறொன்றுமில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் தமிழ்நாட்டின் ஏனைய பகுதி மக்கள் நுழைந்தவுடனேயே அங்கே பேசப் படும் தமிழ்மொழியின் ஒலியிலுள்ள மாறுதலை உணர்ந்து தான் ஆகவேண்டும். அங்குள்ள மக்கள் அனைவரும் மலையாள மொழியைக் கற்றவர்கள் ஆவர். மலையாள அரசுக்கு உட்பட்ட பகுதியாகவே இம்மாவட்டம் 1956 வரை இருந்தது. இங்கு வாழ்வோர் மலையாள அரசாங் கத்தின் அலுவலராக இருந்தனர். வீட்டிலும்கூட மலையாள மொழியே பேசிய தமிழர் பல நூறுயிரம் உண்டு. மருமக்கள் தாயமுறையால், தமிழ்நாட்டில் கொள்வினைகொடுப்பினை இல்லாத சமூகங்களும் உண்டு.

மலையாள ஆட்சிக் காலத்திலும் இம்மாவட்டத்து மக்களில் அரசாங்க வேலை வேண்டுமென்று விரும்பி யவர்கள் மட்டுமே மலையாள மொழியைக் கற்றுவந்தனர். 1945 வரை பெரும்பாலும் மலையாளப் பள்ளிக்கூடங் களே இப்பகுதியில் இருந்தன. சர். சி. பி. இராமசாமி ஐயர் ஆட்சியில், தமிழ்மொழியைப் படிப்பதற்கு வசதிகள் மிகுதியாகச் செய்து கொடுக்கப்பட்டன. அதுவரை தமிழர் மலையாளிகளாக ஆகிவந்தனர். பணிக்கர். பிள்ளை, நாடார், செட்டியார் என்ற சாதி யினர் மலையாளத்திலும் இருப்பதால், தம் நலங்கருதி அரசாங்க உதவி பெறும்பொருட்டுத் தமிழர் பலர் மலை யாளிகள் ஆயினர். அதாவது தமிழைமறந்து, மலையாளத் தைத் தாய்மொழியாகக் கொண்டனர். ''மன்னன் எவ்வழி குடிகள் அவ்வழி.''

சர். சி. பி. இராமசாமி ஐயர் காலத்திலேயே அரசாங்கப் பள்ளிகளில் தமிழ்மொழிக்கு இடம் தரப் பட்டது. அவருடைய ஆதரவில் நாடார்களும் கிறித் தவர்களும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களை நடத்தத் தொடங்

கினர். இந் நிகழ்ச்சிகளின் விளைவாக, தமிழுணர்ச்சி இம்மாவட்ட மக்களிடையே ஏற்பட்டது.

1956-க்குப் பின் இம்மாவட்டத்தவர் மலையாள மொழியைக் கற்பது அருகிவிட்டது. அரசியல், கலை, மொழி, கல்வித் தொடர்பு அனைத்தும் தமிழ்நாட்டுடன் மட்டுமே இவர்களுக்கு இருந்து வருகிறது. இம்மாவட்டத் தினர் பலர் தமிழ்நாடெங்கும் பல்வேறு அலுவல்களில் உள்ளனர். அவ்வாறே தமிழ் நாட்டின் பிற மாவட்டத் தினர் கன்னியாகுமரி மாவட்டத்தில் அலுவல் பார்க்கின் றனர். இவற்றின் பயனாக, இம்மாவட்டத்து மக்களுடைய பேச்சுத் தமிழ் மாறிவருகிறது. 1980 அளவில், இம் மாவட்டத் தமிழ் அதனுடைய தனித்தன்மையின் பெரும் பகுதியை இழந்துவிட்டாலும் வியப்படைதற்கில்லை.

கன்னியாகுமரி, சுசீந்திரம், நாகர்கோயில், கோட் டாறு ஆகிய இடங்களில் மிகப் பழமையான கல்வெட்டுக் களும் முன்சிறையில் இராஜராஜ சோழனின் செப்பேடும் உள்ளன. இப்பழமைச் சிறப்புக்கு வேறு சான்றுகளும் உள்ளன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பெற்றவாறு ஆண்டுக் கணக்கு ஆவணி மாதத்திலேயே தொடங்கும் முறை இம்மாவட்டத்தில் உண்டு. ஓணத்தை ஒட்டி, ஆவணியில்தான் புதுக்கணக்கு எழுதுகின்றனர்.

செந்தமிழே கொடுமலையாளம் என்பது இம் மாவட்டத்தவரின் கருத்து. இது முற்றிலும் உண்மையே. இப்பகுதியில் வழங்கும் அரிய தமிழ்ச் சொற்களை, பிற மாவட்டத்தினரும் பயன்படுத்துவது நன்று. தமிழ்த் தொடர்புமிக்க இம்மாவட்டத்தில் தமிழகத்தின் பெருமைக்குரிய குமரிமுனையில் தமிழ் மொழியைக் கற்பிப் பதற்கென, புலவர் கல்லூரியொன்று அமைப்பது சாலச்

சிறந்தது. அதற்கான முயற்சிகளில் அரசினரும் அமிழ்தினு மினிய தமிழ்மொழிப் பற்று மிக்காரும் முனையவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தினரின் பேச்சில் ''ஓய்'' என்னும் விளிச்சொல் மிகுதியாக இருக்கும். வா, போ என்பதற்கு முறையே ''வாடை, போடை'' என்று அசைச் சொல் சேர்ப்பது இவர்களுடைய வழக்கம்.

மேற்குத்திசையை'படிஞாயிறு'என்று கூறுவர். உடன் பிறந்த மூத்த சகோதரரை 'அண்ணன்' என்றும் உடன் பிறந்தார் போன்று பழகுகின்ற ஆடவரை 'அண்ணச்சி' என்றும் அழைப்பர். கழுத்தைக் குறிக்கும் 'குரல் வளை' என்ற சொல்லை 'குதவளை' என்பர். எலும்பை, 'ஏல்' என்று சொல்லுவர். மிதித்தலைச் 'சமட்டுதல்' என்று கூறுவர்; இச்சொல் தணிகைப் புராணத்தில் ஆளப்பெற் றிருக்கிறது. 'காலையில் வந்தான்' என்பதற்கு, 'காலத்தே வந்தான்' என்பர். 'விளங்கவில்லை' என்னும் பொருள் பட, 'மனசிலே ஆகலை' என்று தெரிவிப்பார்கள். 'சோர்வடைந்தேன்' என்ற கருத்தில் 'முசிந்துச்சேன்' என்ற சொல்வழக்குப் பயன்படுத்தப்படுகிறது; 'முசி யாமல் துதிக்கின்றிலை' என்று அருணகிரிநாதரின் கந்தர் அலங்காரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

''புனல்'' என்ற ஆங்கிலச் சொல்லையே பிற மாவட் டங்களிலெல்லாம் தமிழிலும் ஆளுகிறார்கள். குமரி மாவட்ட மக்கள் இதை ''வைத்தூற்றி'' என்று வழங்கி வருகிறார்கள். வைத்து ஊற்றுவது ''வைத்தூற்றி'' தானே?

கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்பெறும் அறிக் கைப் பலகைகள் அறிவிப்புப் பலகைகள் ஆகியவற்றில் எழுதப்பெற்றுள்ள தமிழிலும் ஒரு மாறுபாட்டைப் பார்க்கலாம். சான்று:

பாற்பற் ஷாப்
ஜில்லா கோற்டு
ரெஸ்டாறன்று
லிமிற்றெற்று

'ற' கரத்தை இவ்வாறு கடுமையாக எழுதுவதுபோல ஒலிப்பதும் கடுமையாகவே ஒலிப்பர். உச்சரிப்பில் அழுத்தம் ஏற்றுவது இம்மாவட்டத்தின் தனித்த இயல்பு. சொல் அழுத்தமும் வாக்கிய அழுத்தமும் சற்று விறைப்பாகவே இருக்கும். இதற்கும் மலையாள அழுத்தத்துக்கும் பொருத்தம் இருப்பதால் இம்மாவட்டத்துத் தமிழை ஒரு வகை மலையாளச் சார்புடையது என்று கூறலாம்.

ஒலிநிலையில் 'ழ', 'ல' என்ற ஒலிகளுக்கிடையே இம் மாவட்டத்தில் வேற்றுமை காண இயலாது. 'ரு', 'ன' பேதமும் இங்கே கிடையாது.

சொல் நிலையில் மதிப்புச்சொல் உருபான 'கள்' விகுதி இம்மாவட்டத்தில் மிகக் குறைவாகவே பயன்படுத்தப் படுகிறது. தந்தையை 'நீ' என்று அழைப்பது பெருவழக்கு. 'கிறு', 'கின்று' என்பவை 'ற' அல்லது 'உஆ' எனத் தேய்ந்து நிற்பதும் குறிப்பிடத்தக்கது.

பேச்சுவழக்கில் தன்மை ஒருமை விகுதியான "அன்" அங்கு பெருவழக்காக இருக்கிறது. சான்று:

வருவேன்—வருவன்

நடப்பேன்—நடப்பன்.

வீடு ஒன்று அதைச் சுற்றிய மதில் சுவர் ஒன்று என்று அமைப்பது இம்மாவட்டத்தில் உண்டு. வீடுகள் உயர்ந்த தளத்தில் கட்டப்பட்டிருக்கும். அவர் "வீட்டிலிருக்க மாட்டார்" என்று குறிப்பிட "அவர் 4 மணிக்கு இறங்கி விடுவார்" என்பர். வேட்டிக்கும் "சீரை" (சேலை) என்று

கூறுவர். ஓர் ஆடவன், "டேய் என் சேலையை எடுத்து வா" என்று கூறுவான்! சீரை என்னுஞ் சொல் ஆடை என்ற பொருளுடையது; * சீலை, சேலை என்பன சீரையின் மரூஉக்கள் ஆகும். ஆடவர் கட்டும் உடைய முண்டு என்றும் பெண்டிர் உடுத்தும் சேலையைக் கண்டாங்கி என்றும் சொல்லுவர். வேலைகாலியில்லை என்பதைக் குறிக்க "ஒழிவில்லை" என்று கூறுவர். விறகு நிறுத்துப் போடும் சிறுவன்கூட "செம்மையாய்ப் போட்டேன்" என்று சொல்லுவதையும் குமரி மாவட்டத்தில் கேட்டின் புறலாம்.

ஒரு துறையில் புலமை பெற்றவர் "ஆசான்" எனப் படுகிறார். $பெயரையொட்டி இப்பட்டமும் இடம் பெறுகிறது. இசை, மருத்துவம், சிலம்பம், மற்போர் போன்ற பல கலைகளில் ஆசான்கள் உள்ளனர். அவர்கள் பெயர் "அருணாசல ஆசான்", "சுப்பிரமணிய ஆசான்" எனப்படும்.

இசையாசிரியர்கட்கு "அண்ணாவி" என்ற பட்டப் பெயர் உண்டு. நாதசுவரம் வாசிப்பவருக்கும் 'அண்ணாவி' என்ற பெயர் வழங்குகிறது. மேளத்தைத் 'தவுல்' என்றும் 'கொட்டு' என்றும் கூறுவர். ஜாலராவை 'சிஞ்சி' என்பர். இசை பயிலுபவர் தொகை இங்கே மிகுதியாக இருக்கிறது.

இப்பகுதியில் 'பாடகம் சொல்வது' என்ற பழக்கம் பழங்கால முதல் பரவியிருக்கிறது. காவியம், இதிகாசம், புராணம் என்பவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒரு சில பகுதிகளை எடுத்துக்கொண்டு அபிநயித்துக் காட்டுவதே

---

* சீரை தை இய வுடுக்கையர்—திருமுருகாற்றுப்படை.

$ நரம்புச் சுளுக்கு எடுப்பவனுக்கும் ஆசான் என்ற பெயர் உண்டு. கேரளத்தில் ஆசான் என்பது சாதிப்பெயர்.

பாடகம் எனப்படும். இங்ஙனம் பாடகம் சொல்வதற்குக் கம்பராமாயணப் பாடல்கள் இப்பகுதியில் பெரிதும் பயன் பட்டு வந்திருக்கின்றன.

சித்திரை வைகாசி மாதங்களில் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று கம்பராமாயணச் சொற் பொழிவுகள் செய்து பின்னர் அங்கேயே குடியிருந்து வரு பவர்களும் குமரி மாவட்டத்தினருள் உள்ளனர். சென்னை மாநகரில் 'கம்பன் சொசைட்டி' நிறுவி அதைத் திறம்பட நடத்தி வருபவர் இம்மாவட்டத்து நல்லபெருமாள் ஆவார்.

இனி, இம்மாவட்டத்து வழக்குச் சொற்கள் சிலவற்றைத் தெரிவிப்போம் :

அண்ணன், அண்ணுச்சி-இவ்விரு சொற்களும் இங்கே வழக்கி லுள்ளன.

அணை சீலை, அணவடைப் பழம், அணவடைத் துணி-குழந்தைக்குப் போடும் துணி.

அத்தப்புலக்காரன்-போக்குப் புகலற்றவன் ; பொருளில் லாதவன்.

அக்கம்-கோடி, முனையிலுள்ள இடம்.

அற்றம்-கோடி, முனையிலுள்ள இடம்.

அகத்தே வா-உள்ளே வா.

அம்மாச்சான்-அம்மான் ; தாய் மாமன்.

அரங்கு-வீட்டிலுள்ள "ஸ்டோர் ரூம்" ; உக்கிராணம்.

அவயம்-சத்தம்.

இராப்பாடி-கார்த்திகை மார்கழி மாதங்களில் இரவில் மட்டும் வரும் குடுகுடுப்பைக்காரன்.

இப்பகுதியிலுள்ள செய்திகளைச் சரிபார்த்தும், சில குறிப்புக்கள் தந்தும் உதவிய டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், எஸ் எல். பி. உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் உமைதாணுப் பிள்ளை, தென்திருவாங்கூர் இந்துக் கல்லூரி முதல்வராயிருந்த பேராசிரியர் இலக்குவனர், மதுரை பத்மா கல்லூரி தமிழாசிரியர் திருவாட்டி ஔவையாரம்மாள் ஆகியோருக்கும் ஏனைய அன்பர் சிலருக்கும் என் நன்றி உரியது.

இஞ்சி-கோபப்படுபவன்; முன்கோபி.
இஞ்ஞாணி-மிகக் கீழே.
இடவழி-இரண்டு பக்கத்திலும் படிப்பறை இருக்க நடுவே உள்ள இடைவழி, இடவழியாயிற்று.
இடுகூறு-பண்ணைக்காரனுக்கு நெல்லாகக் கொடுக்கும் கூலி.
இடிசாமம்-இல்லாததைச் சொல்லுவது.
இடிகல்-பாக்கு உரல்.
ஈரம்-அருள், கருணை.
உச்சாணிக் கொப்பு-மிக உயர்ந்த இடம்.
உசுப்பு வெள்ளம்-கத்திரி மிளகு முதலியன நட்ட மறுநாள் பாய்ச்சும் தண்ணீர் (உயிர்ப்பு வெள்ளம் என்பதன் மரூஉ.)
உருப்படி-நகை.
ஏத்தன்காய்-ஒருவகை வாழைக்காய்; நேந்திரங்காய்.
ஏத்தம்பழம்-நேந்திரம்பழம், ஒருவகை வாழைப்பழம்.
ஏவுள்ளா-கணவன் மனைவியை அழைக்கும் முறை (எல்லா, எலு, எலுவா முதலிய சொற்களைத் தலைவன், தலைவி பாவிப்பரென்று தொல்காப்பிய அகத்திணை கூறும்.)
ஒக்கல்-இடுப்பின் மேற்பகுதி (ஒக்கல் என்பதன் மரூஉ.)
ஓர்மை-நினைவு.
ஓங்கரித்தல்-வாந்தியெடுத்தல்.
கயந்தலை-குழந்தை, பிள்ளைகள் (மென்மையான தலை என்ற பொருளில் இங்கு பயன்படுத்தப்படுகிறது. தொல்காப்பிய உரியியலில் 'தடவும் கயவும் நளியும் பெருமை' என்று வருகிறது.)
கரம்-வரி, தீர்வை, தரம்.
கருக்கு-இளநீர்.
கருமத்த மாடு-எருமை மாடு (அகநானூற்றில் ''காரான்'' என்று குறிப்பிடப்படுகிறது.)
கருதி வைத்தல்-பேணி வைத்தல், கருத்துடன் செய்தல்.
கணக்கன் கோடாலி-திறமையுடையவன், திறமையற்றவனை யும் குறிக்கும் (இடமறிந்து பொருள் கொள்க.)

கள்ளுள்ளி மாங்கன்-ஒருவகைப் பிச்சைக்காரன், பிடிவாதமுடையவன்; பிச்சை வாங்கிப் போகான், குழந்தைகளைப் பயமுறுத்துபவன்.

கண்பேறு-கண் வைப்பது என்று இதனை வேறு சில மாவட்டங்களில் சொல்வதுண்டு. சிலர் சில பொருள்களைப் பார்த்தால், அப்பொருள்கள் காணுமற்போம் அல்லது அழிந்துவிடும் அல்லது உடையும் அல்லது களவு போகும். கறவை மாட்டைச் சிலர் பார்த்தால், மாடு எறியும். சிலர் ஆடு மாடுகளைப் பார்த்தால் அவற்றுக்குக் கால் ஒடியும், சிலர் வளரும் பிள்ளைகளைப் பார்த்தால் அவற்றுக்கு நோய் வரும்.

கண்டுகட்டி-கணக்குப் பார்த்து முடிவு செய்வது.

காணிக்கிறேன்-காண்பிக்கிறேன்.

காயல்-ஏரி.

காவடி-போக்கிரி என்னும் பொருளிலும் இச்சொல் ஆளப்படுகிறது.

கிரிஷி-பயிர்.

கிறிச்சானுக்கு மறிச்சான்-நாம் நினைப்பதற்கு முரணுன ஒன்றை மற்றவன் சொல்லுவது ; ஏட்டிக்குப் போட்டி.

கிடா-எருமையின் ஆண்பால்.

குண்டணி-கோள் சொல்லுபவன்.

கும்மறிச்சான்-கொழுத்துத் திரிபவன், திமிர் பிடித்தவன்.

குன்னுலித்தனம்-குற்றம் செய்தவன் அதை செய்யாததுபோல் நடிப்பது.

கும்பிடு கள்ளன்-கும்பிட்டுக் கும்பிட்டு ஏமாற்றுபவன்.

குருத்துவம்-நன்றி (அவன் குருத்துவம் கெட்டவன்.)

கூனை-தண்ணீர்க் கபலை ஏற்றம்.

கூதறை-வம்பு பேசுபவன் ; ஒழுக்கமற்றவன்.

கைக்கூலி-லஞ்சம்.

கூளப்புறத்து-வந்தவர்களை யெல்லாம் பரிகசிப்பவன்.

கொச்சம்மா-சின்னம்மா (குச்சு-கொச்சு, மலையாளத்தில் பெருவழக்கு.)

கொள்ளாம்-தேவலாம் ; நன்று (ஒப்பிட்டுப் பார்த்துத் தேர்ந் தெடுத்ததைக் குறிக்கும் சொல்.)

கொல்லாங் கொட்டை-முந்திரிக் கொட்டை (கொல்லத்தி லிருந்து பரவிய கொட்டை ; மணிலாவிலிருந்து பரவிய நிலக்கடலே மல்லாக்கொட்டை எனப்படுவது போல.)

கொட்டாரம்-அரசரின் அரண்மனே. கோஷ்டகாரம் என்பதின் மருஉ.

கொமைக்காதே-கிண்டல் செய்யாதே; கேலி பண்ணுதே.

கோள்-லாபம் (வியாபாரத்தில் கோள் குறைவு.)

கோணயன்-முட்டாள்.

சட்டம்பி-சண்டியன் ; "ரௌடி."

சப்பட்டை-பயனற்றது. அந்த ஆள் சப்பட்டை ; அந்த ஆரஞ்சுப் பழம் சப்பட்டை.

சம்மந்தி துவையல்-உப்பு, மிளகு, மஞ்சள், புளி, தேங்காய் முதலியவை கலந்த ஒரு கறி.

சமிட்டாதே-உதைக்காதே.

சண்டி-வேண்டாத செயல்களே மட்டுமே செய்பவன்.

சக்கரக் கள்ளன்-பணம் ஈட்டுவதற்குத் தவருன முறைகளேக் கடைப்பிடிப்பவன் ; கஞ்சன் (சக்கரம்—திருவிதாங்கூர் நாணயம்.)

சக்கைப் பழம்-பலாப்பழம் (ஜாக் புரூட் என்பதன் சிதைவு.)

சாமத்துரோகி-பழிபாவத்திற்கு அஞ்சாதவன்.

சாக்கோட்டிக்காரி-கருப்பிணி (பிள்ளேத்தாய்ச்சி என்று சில சமூகத்தார்]குறிப்பிடுவர்). கருவை வயிற்றில் தாங்குவ தால் வாயிலெடுத்து உடல் மெலிபவள் என்பது பொருள்.

சாடாதே-தவ்வாதே, தாண்டாதே.

சிங்கியடித்தல்-மிகவும் துன்பப்படுதல்.

சிமிச்சா-பகட்டுக்காரி.

சிமிச்சாலக்கா-மேனி மினுக்கி மிரட்டித் திரிகிறவள்.

சிமிச்சான்-பகட்டுக்காரன்.

சுக்குச் செட்டி-சிக்கனமானவன்.

சுண்டு-உதடு.

சுணை-மரியாதையாக நடப்பவன் (சூடு, சுணை, மானம், மரியாதை, கொஞ்சமாவது இருக்கா உனக்கு? என்று சேர்த்துச் சொல்லுவர்.)

செவிடு-கன்னம்.

தட்டு-மாடி.

தட்டுக் கல்-பாக்குத் தட்டும் கல் உரல்.

தடியன்காய்-நீளமான பூசனிக்காய்.

தந்தி நடத்தல்-திறமையாக நடத்தல்.

தந்தித்தார்-திறமையாக நடத்தினர்.

தாக்கோல்-திறவுகோல்; தாழக்கோல் என்ற தொல்காப்பியச் சொல்லின் மரூஉ.

தாமசம்-தங்கியிருக்கும் இடம்.

தீயல்-தேங்காய் மல்லி வற்றல் இவற்றை வறுத்துப் புளி கரைத்துக் கருங்குழம்பு வைத்து மரக்கறி வகைகளுடன் வேகவைத்த கறி.

தெறி பேசுதல்-எதிர்த்துப் பேசுவது.

தெம்மாடி-ஏமாந்துவிடுபவன்.

நடைமுட்டி-நடக்கச் சக்தியில்லாதவன்.

நரிகட்டி இழுத்தல்-நாற்றுப்பாவிய மறுநாள், நாற்றங்காலில் தண்ணீர் வடிவதற்காக, வாய்க்கால்களில் சிறிய கல்லை வைக்கோலால் பொதிந்து ஒரு கயிற்றால் நீளமாகக் கட்டியிழுப்பது.

நச்சுவாக்கு, கரிவாக்கு-தீங்கைத் தரும் சொல், பலிக்கும் தீய வாக்கு.

நச்சூத்து-சொன்ன சொல் கேளாதவன்; தடையாக இருப்பவன் (இவன் ஒரு பெரிய நச்சூத்து.)

நசுநாறி-எடுத்த காரியத்துக்கெல்லாம் இடையூறாக எதையாவது முனங்குபவன்.

நாரங்கி-எலுமிச்சம்பழம் (இருமச்சம்பழம் என்று சொல்லுவர்.)

நாத்தூன் நங்கை-நாத்தினர், கணவனுடன் பிறந்த பெண்.

நீட்டு-அரசர் ஆணைப்படி.

நெட்டூரம்-பிடிவாதம்.

நெட்டூரக்காரி-பிடிவாதக்காரி.

நொண்டங்காய்-புளியம் பிஞ்சு.

பட்டி-நாய் ; ஒருவித எச்சரிக்கைக் குறிப்பு.

படிப்பறை-உயரமான இடம் ; சூழமரப் படிகளை வைத்துக் கட்டுவதால் இவ்வாறு பெயர் ஏற்பட்டது. (படி+ அறை.)

பந்தயம்-நெற்களஞ்சியம், பத்தயம்புரை என்றுஞ் சொல் லுவர்.

பயங்கரக் கூட்டம்-மிகப் பெரிய கூட்டம்.

பள்ளம் குழி-மேடு பள்ளம் (குழி ஆழமானது.)

பரிமாறிக்கலாம்-பயன்படுத்திக் கொள்ளலாம், புழங்கிக் கொள்ளலாம்.

பாண்டி-வட்டுப் போட்டு நொண்டி விளையாடுதல் (வட்டு— கோடு.)

பாண்டியாடுதல்-பல்லாங்குழி ஆடுதல்.

பிரி-விசிர் பிடித்தவன், பைத்தியக்காரன்.

பிரதமன், பிரசமன்-தேங்காய்ப்பால், பருப்பு, பலாப்பழம் சேர்ந்த பாயசம்.

பிரவிர்த்தி-பழக்க வழக்கம்.

பீச்சாளி-வாய்ச் சொல் வீரன், எடுத்ததற்கெல்லாம் பயப்படு பவன்.

புத்திமுட்டு-ஏதாவது ஓர் உதவி பெறும்போது அல்லது ஒரு பொருளை இரவல் கேட்கும்போது இச்சொல்லைப் பயன் படுத்துவர். சான்று ; புத்திமுட்டாக இருக்கு ஒரு அஞ்சு ருபா கொடுங்க.

புதுச் சக்கரம்-கள்ளத்தனமாகப் புதுப் பணக்காரர் ஆனவர்.

பூராப்பு-கவலையற்ற நிலை.

புறத்தே வா-பின்புறமாக வா.

பொட்டிக்கலே-திறக்கவில்லே.

பொல்லாதவன்-கெட்டிக்காரன், கொடியவன் என்ற பொருளும் உண்டு.

மம்மா-மிகவும் பெரியவன். ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொள்ளும் போது "நீ என்ன மம்மாவா?" என்பர்.

முடுக்கு-சந்து, சிறு தெரு.

முண்டு-வேட்டி.

வங்கன்-உடம்பில் சிரங்கு பிடித்தவன்.

வரிக்கமுவு-ஒன்றுக்கும் உதவாதவன்.

வல்லம்-தேங்காய் கட்டுவதற்காகத் தென்னே ஓலேயால் மிடையப்படும் ஒருவகைக் கூடை.

வள்ளம்-படகு.

வட்டு-சக்கரம்.

வண்டவாளேயம் - மறைவான செய்திகள் அம்பலத்துக்கு வருதல்.

வாரியல்-விளக்குமாறு.

வாள் அறுப்பு-மரம் அறுப்பு வேலே.

வாவெட்டி-வாய்ப் பேச்சாலேயே காரியத்தைச் சாதித்து விடுபவன்.

வீதி-அகலம்.

வெறைக்குது-குளிருகிறது.

விட்டாளி-வீட்டாள்; சாப்பாட்டு ராமன்.

விடாலியோ-கள்ளன் ஓடுகிருன் பிடியுங்கள்.

வாழ்வரசி, வாவரசி-கணவனேடு வாழ்பவள்.

வெள்ளக்குடி-வேலேக்காரனுக்கு மத்தியானச் சாப்பாடு.

வெடிச்சாங்குட்டி-ஒரு செயலே வடிவாக நிறைவேற்றிவைக்கும் ஆற்றல் மிக்கவன், வெடிச்ச பயல்.

தமிழ்த் தொண்டர் பலரை இம்மாவட்டம் ஈன்றெடுத்திருக்கிறது.

தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது அதங்கோட்டு ஆசான் தலைமையில் என்பர். அவன் வாழ்ந்த ஊரான அதங்கோடு இப்போது திருவிதாங்கோடு எனப்படுகிறது. இவ்வூர் நாகர் கோயிலிலிருந்து 16 கி. மீ. தொலைவிலும் தக்கலையிலிருந்து 5 கி. மீ. தொலைவிலும் இருக்கிறது. தொல்காப்பியம் ஆக்கிய புலவரும் இப்பகுதியினரே என்பது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை கருத்தாகும்.

மனோன்மணியம் ஆசிரியரும் தமிழின் தனித்தன்மையைச் சிறப்பித்துப் பாடிய அறிஞருமான பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, இசைப் புலமையோடு இலக்கிய அறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இலக்குமணப் பிள்ளை, "ஒரும் அவதானம் ஒருசாறு செய்திந்தப் பாரில் புகழ்படைத்த பண்டிதராம்" செய்குதம்பிப் பாவலர், கம்பன் கவியமுத முட்டிய குமரேசப் பிள்ளை, பக்திரசக் கீர்த்தனைகள் பாடிய நீலகண்டசிவம், ஆராய்ச்சி வல்லுநர் கே. என். சிவராஜப் பிள்ளை, சட்டத்துறை அறிவோடு தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபாடும் உடையவராயிருந்த கே. ஜி. சேஷு ஐயர், சென்பகராமன்பள்ளு ஆசிரியர் (இவர் பெயர் தெரியவில்லை)*, சாணக்கிய சூத்திரம் பாடிய கணபதி ஆச்சாரி, கந்தபுராணக் கிர்த்தனை பாடிய நீலகண்ட ஆச்சாரி, பண்டித முத்துசாமிப்பிள்ளை இவ்வாறு எண்ணற்ற தமிழ் அன்பர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். பதினெண் சித்தருள் ஒருவரான பீர் முகமது, ஞானக் குறவஞ்சி, ஞானத்திரட்டு என்னும் நூல்களை ஆக்கியுள்ளார். ஞானி

* சென்பகராமன் பள்ளு ஆசிரியர் காளிங்கராயர் என்பவர் என்றும் அவர் ஒரு கிறித்தவர் என்றும் சிலர் கருதுகின்றனர்

யார் சாகிபு, திருமெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு என்னும் நூலை இயற்றியிருக்கிறுர்.

தசாவதானி பி. ஆறுமுகம் பிள்ளை (1890-1958) இலக்கிய, இலக்கணம், சோதிடம் ஆகிய பல்துறை அறிவு படைத்திருந்தார். தாணுமாலையான் சதகம், சேர மண்டலச் சதகம் என்னும் நூல்களை ஆக்கியுள்ளார்.

சீருப்புராணத்துக்குக் கீர்த்தனை பாடிய செய்கு அப்துல் காதர் இம்மாவட்டத்தினரே.

சேர மன்னர்களும் சேரநாட்டு அறிஞர்களும் செய்துள்ள தமிழ்ப்பணி மிகப் பெரிது; இடமின்மையால் இங்கே அவற்றைக் குறிப்பிட இயலவில்லை. அத்தொண்டுகளின் விவரம் ரா. இராகவ அய்யங்காரால் எழுதப் பெற்று கேரளப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப் பெற்றிருக்கிறது.

இப்பகுதி இன்றளவும் தமிழ்த்தாய்க்கு அரும்பணியாற்றும் எண்ணற்ற பெரும் புலவர்களையும் அறிஞர்களையும் தந்து வருகிறது. இவர்களுள் முதல்வரிசையில் குறிப்பிடத்தக்கவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை (1876-1954) ஆவார். பாடிய வாய் தேனூறும் பாடல்களை இயற்றியும் கல்வெட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகளை வெளியிட்டும் ஏனைய ஆராய்ச்சியாளருக்கு உதவும் அறிவூற்ருக விளங்கியும் தென்திருவிதாங்கூர்த் தமிழரிடையே இளங்கவிஞர்கள் எழுத்தாளர்கள் தமிழாசிரியர்கள் ஆகிய பலரைத் தோற்றுவித்தும் பொதுமக்களிடையே தமிழுணர்ச்சியையூட்டி, தமிழ் நாட்டோடு குமரிமாவட்டம் இணையும் இயக்கத்திற்கு இலைமறை காய் மறையாய் ஊக்கியும் இவர் செய்திருக்கும் தொண்டுகள் தமிழர்கள் என்றென்றும் நன்றியுடன் பாராட்டத்தக்கனவாகும். கவிமணி குடும்பத்தினரான கே. குமாரசாமிப்

பிள்ளையும் குற்றால லிங்கம் பிள்ளையும் கவிபாடும் ஆற்றல் பெற்றுத் தமிழ்ப் பணியாற்றிவருவது பாராட்டுக்குரியது.

சிறந்த ஆராய்ச்சி அறிஞர்களுள் சுசீந்திரம் என்னும் அரிய நூலின் ஆசிரியராகிய டாக்டர் கே. கனகசபாபதிப் பிள்ளை, பொருளாதாரப் பேரறிஞர் டாக்டர் பா. நடராசன், மொழிநூல் துறையில் பெரும்புலமை பெற்றுள்ளவர்களாகிய கேரளப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து மொழிநூல் துறையின் துணைப் பேராசிரியரான சண்முகம் பிள்ளை ஆகிய இருவரும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவரும் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, 'சௌபாக்கியம்', 'பாக்கிய லெக்ஷ்மி' ஆசிரியர் பா. சொ. லிங்கம், 'தாமரை' ஆசிரியர் ப. ஜீவானந்தம், ருஷ்ய நாட்டில் 'ரேடியோ மாஸ்கோ' வில் தமிழ் ஒலிபரப்பாளராக உள்ள மணிவர்மன், சென்னை வானொலி நிலையத்தில் பணிபுரியும் அமீது, கவிஞர் தே. ப. பெருமாள், 'தமிழ் கல்சர்' வெளியீட்டின் ஆசிரியர் குழு உறுப்பினரும் நாவன்மை படைத்தவரும் தமிழ்நாடு கல்வித்துறைத் துணை இயக்குநருமான முகமது கனி போன்ற பலர் தமிழ்ப் பணியாற்றி வருகின்றனர்.

இந்தியாவிலேயே முதலில் தொடங்கப்பெற்ற அச்சகங்களில் ஒன்று கன்னியாகுமரிக்குச் சில மைல் தொலைவில் வடக்கேயுள்ள புதிக்கையில் (Pudikail) என்னுமிடத்தில் ஏற்பட்டது.

தமிழில் ஏற்பட்ட முதல் இதழும் இம்மாவட்டத்தில் தான் தொடங்கப்பெற்றது. இச்சிறப்புக்குரிய 'தியாக நாடு' என்னும் பத்திரிகை நாகர்கோயிலில் 1874-இல் தொடங்கி இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

'திருவாங்கூர் அபிமானி', 'தமிழன்', 'கன்னியாகுமரி,' 'சுவிசேஷ தூதிகை', என்ற இதழ்களும் இம்மாவட்டத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்கன.

19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தமிழில் வெளியான ஊர்திரி விலங்கியல், வனவிலங்கியல் என்னும் நூல்களும் கிரீன் எழுதிய 'மருந்துச் சரக்குகளின் பெயர்'* என்னும் நூலும் நாகர்கோயிலில் அச்சிடப் பெற்றவையே.

நாகர்கோயில் கவிமணி மன்றம், இடலாக்குடி சதாவதானி பாவலர் மன்றம் முதலியன சிறந்த வகையில் இயங்கித் தமிழ்த் தொண்டு புரிந்து வருகின்றன.

இம்மாவட்டத்தில் (இணைப்புக்கு முன்னர்) இலக்கிய விழாக்களை நடத்திய சிறப்பு தமிழன்பர்களான ப. ஜீவானந்தம், வெ. நாராயணன் ஆகியோருக்கு உரியது.

மலையாள மொழியறிவால் இங்குள்ள தமிழறிஞர்கள் மலையாள மொழியிற் சிறந்த நூல்களைத் தமிழாக்கித்தர வல்லவர்களாக உள்ளனர். இப்பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் சில நாவல்களைத் தமிழில் தந்துள்ள சுந்தரராமசாமி குறிப்பிடத்தக்கவர்.

நாட்டுப் பாடல்கள்

பிறப்பிலும் வாழ்விலும் இறப்பிலும் இம்மாவட்டத்தார் புனையும் கவிதைகள் எண்ணிறந்தன. ஓராட்டு எனப்படும் தாலாட்டும், வாழ்வுக்குத் திருமண வாழ்த்தும், இறப்புக்கு ஒப்பாரியும் அமைந்தவை.

---

* Domestic Animals.
Wild Animals.
Vocahularies of Materia Medica and Pharmacy.

ஓராட்டுப் பாட்டு

காணிக்கை நேர்ந்தோம்
கைநிறையப் பொன்தந்தோம்
மாணிக்கம் நேர்ந்தோம்
மடிநிறைய மணிநேர்ந்தோம்
ஆறடைக்கும் கோரை
அணையடைக்கும் நாட்டார்கள்
ஊரடைக்க வாக்குரைக்கும்
உத்தமரோ உங்களம்மான்
பாம்பஞ்சா கீரி
படைக்கஞ்சார் உங்களம்மான்
ஆம்மல் வாய்க்கமுது ஊட்ட
ஆ பலவும் தந்தாரோ

பெண் குழந்தைக்குப் பாடும் ஓராட்டு

கல்லைப் பெண்ணாக்கி வைத்த
கண்ணன் மருமகளோ ?
பால்போல் நிலாவடிக்க
பார்வதியாள் பந்தடிக்க
பார்வதியாள் அடிக்கும் பந்தை
பதித்தடிக்க வந்தவளோ
பரத்தி மகள் தெய்வானை
பத்தினியா ளிங்கிருக்கக்
குறத்தி மேல் ஆசைகொண்டு
வேலவர் குறவேடம் கொண்டாரோ?

ஓராட்டுப் பாட்டு, பாடுகிறவர்களைப் பொறுத்துச் சற்று மாறுபடும். தாய் பாடினால், ''உங்கள் அப்பா'' என்று புகழ்வார். பாட்டி பாடினால், ''சமர்த்தருடைய பேரரசோ'' என்று பாடுவாள்.

இன்னுஞ் சில தாலாட்டுகளைக் கேட்போம் :

ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ
ஆரடித்து நீயழுதாய் அடித்தாரைச் சொல்லியழு
ஆரடித்த கண்ணீரு ஆருய்ப் பெருகியது
ஆருய்ப் பெருகி ஆனைகுளித் தேறி
குளமாய்ப் பெருகி குதிரை குளித்தேறி
வாய்க்காலாய் ஓடி வழிப்போக்கர் கால்கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்து இருமச்சு வேரோடி
மஞ்சைக்குப் பாய்ந்து மருதோணி வேரோடி
தாழைக்குப் பாய்கையிலே ததும்பியதாம் கண்ணீரு
வாழைக்குப் பாய்கையிலே வற்றியதாம் கண்ணீரு
செல்வி அழலாமோ உன் செல்லவாய் நோவாதோ
அன்னம் அழலாமோ உன் அமுதவாய் நோவாதோ
செல்லவாய் நோக உனை சினத்தார் மனம்நோக
அமுதவாய்நோக உனை அடித்தார் மனம்நோக
வஞ்சிவளர்பிறையோ வளர்பூமிநாட்டாளோ
இஞ்சி இளங்குருத்தோ இளவாழை நெய்க்குறுத்தோ
வாசலிலே வன்னிமரம் வம்மிசங்கள் ராஜகுலம்
ராஜகுலம் ஆளவந்த ராஜகிளி நீதானோ ?
காற்றடியாக் கோட்டையிலே கர்ணனுக்குத்
தொட்டில் கட்டி
பேருசொல்லித் தாலாட்ட ராமர்பிள்ளைவரம் தந்தாரோ
காற்றடிக்கும் வேளையெல்லாம் கர்ணன் சத்தம்
காதில்விழ
தென்காசி மூலையில் ராமர் திருப்பாதம் பட்டதென்று
பொன்காசு தாளமிட புறப்பட்டார் உங்களப்பா
பூணுலாம் புத்தகமாம் பூமிக்கெல்லாம் பஞ்சவர்தாம்
பஞ்சவர்கள் பேர்சொன்னால் பறந்துவிடும்
பால்முனிகள்
ஆற்றிலே அம்பூணி ஆண்டவரைப் பூசைபண்ணி

பூசைபண்ணும் வேளையெல்லாம் புத்திரியே
வேணுமென்று
ஆராரும் பொன்னாலே தில்லை அம்பலமும் கல்லாலே
அம்பலத்துக்குள்ளிருக்கும் அகத்தியரும் கல்லாலே
அகத்தியர்க்குப் பூசைசெய்யும் நம்பிமுடி பொன்னாலே
நம்பிநடைதிறக்க நாட்டியங்கள் ஆடிவர
நாட்டியத்தைப் பார்க்கவந்த நாயகத்தை ஆரடித்தார்
கல்லைக் கயிருக்கி கருமலையை மத்தாக்கி
இரவைப் பகலாக்கி இராச்சியத்தை உண்டுபண்ணி
இராச்சியத்தை ஆளவந்த ராஜகிளி நீதானோ
தெற்கே சிறுதாலை தென்மதுரை நைத்தாலை
செல்வர் மகள் கண்ணுறங்க சென்றுமணம் வீசாதோ
வடக்கே சிறுதாலை வடமதுரை நைத்தாலை
வரிசைமகன் கண்ணுறங்க வந்துமணம் வீசாதோ
தாழை ஒருமரம்தான் தாழைபூத்தாலும் ஆயிரம்தான்
தாழைசுற்றிப் பூஎடுக்கும் தர்மருட பேரரசோ
பின்னை ஒருமரம்தான் பிள்ளைபூத்தாலும் ஆயிரம்தான்
பிள்ளைசுற்றிப் பூவெடுக்கும் பீமனுட பேரரசோ
கண்ணுறங்கு கண்ணுறங்கு—கண்ணே கண்மணியே
நீ உறங்கு.

விளையாட்டுப் பாடல்கள்

குமரி மாவட்டத்திற்கேயுரிய பல விளையாட்டுக்கள் உள்ளன.

இவற்றுள் களச்சி, சுக்கு, தம்பலம், ஊஞ்சல் போன்றவை குறிப்பிடத்தக்கன.

களச்சி விளையாடும் சிறுமிகள்,

'ஓரி ஒருவலை ஓராழம் தண்ணியிலே
தண்ணீர்க்குளத்தில் தாமரை இலையிலே'

என வரும் பாடல்களைப் பாடுவர் ; இவை கேட்பதற்கு இனிமை வாய்ந்தவை.

மணலைக் குவித்து இரு கட்சியாருக்கு நடுவே வைத்து அதனைச் சடுகுடுப்போல ஆடும் விளையாட்டு நாஞ்சில் நாட்டில் உண்டு. இது 'சுக்கு விளையாட்டு' எனப்படும். மணலை எடுத்தற்கு 'உப்பெடுத்தல்' என்று பெயர்.

'காராம் புலியைக் கொல்வேன் கொல்வேன், கடும்புலியைத் தின்பேன் தின்பேன்' என்று பாடி இளைஞர்கள் விளையாடும் ஒரு விளையாட்டும் உண்டு.

'கீச்சுக் கீச்சுத் தம்பலம், கீயாக் கீயாத் தம்பலம், மாச்சி மாச்சித் தம்பலம், மாயா மாயாத் தம்பலம்' எனப் பாடி விளையாடும் ஒரு விளையாட்டு உண்டு. மணலை நெடுகக் குவித்து இரு பக்கமும் சிறுவரோ சிறுமியரோ உட்கார்ந்துகொள்வர். சிறிய குச்சு ஒன்றை எடுத்து, இருவருள் ஒருவர் மணலினுள் புதைத்து வைப்பர். எதிரிலுள்ளவன் இரு கை விரல்களையும் கோத்து மறைத்து வைத்திருக்கும். குச்சு இருப்பதாகத் தான் நினைக்கும் இடத்தில், கையை வைத்து மூடுவான். அதில் குச்சு அகப்பட்டால் அவன் வெற்றி பெற்றவனுவான்.

'மாது மாது மன்னவன் கோது' எனப் பாடி மண்ணிலே குழிகளைத் தோண்டி அதனுள் சிறு கல்லையோ சோளி முதலியவற்றையோ மறைத்து வைத்து எடுத்து விளையாடும் விளையாட்டு உண்டு.

வேனிற்காலத்தில் பலவகை மரங்களில் ஊஞ்சல் கயிறு இட்டு அதில் உலக்கையைக் கோத்துச் சிறுவரும் சிறுமியரும் விளையாடுவர். ஊஞ்சல் ஆடும்போது,

'காடு விளையட்டும், கண்டாங்கி நெய்யட்டும்' என்பது போன்ற பாடல்களைப் பாடுவர்.

திருமண வாழ்த்துப் பாடல்கள்

குமரி வாவட்டத்தில் மண நிகழ்ச்சிகளில் பலவகை யான வாழ்த்துப் பாடல்கள் பாடப்பெறுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே தருவோம் :

சங்ககால இலக்கிய வாழ்த்தை ஒத்து, கருத்துச் செறிவோடு பாடப்பெறும் ஒரு வாழ்த்து :

" ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி
மூங்கில்போல் தழைத்து முசியாமல் வாழ்ந்திடுவீர்!"

குத்தல், கிண்டல், நையாண்டி என்னும் சுவைகள் நிறைந்த வாழ்த்துக்களுக்குச் சான்ருகப் பின்வரும் பாடலைக் காண்க :

" வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
வரிசையுடன் வாழ்த்துகிறேன்
என்றன் தங்கையைக் கேட்டுவந்த கதையினை
இந்தச் சபைநடுவே எல்லோரும் கேட்டிடுவீர்
கல்லேறி மலைகடந்து கடியவனமும் தான்கடந்து
ஆறுபல கடந்து ஆழியும்தான் கடந்து
ஐந்துதெருக் கடந்து அம்பலமும்தான் கடந்து
....
....
அயலூர் சோதிடரை
ஆள்விட்டு அழையுமென்ருர்
உள்ளூர் சோதிடரை
உடனே அழையுமென்ருர்
சோவி பரத்துமென்ருர்
சோதிடங்கள் பாருமென்ருர்
பரிசம் பரிசமென்று
பத்துலட்சம் தந்தாலும்
பாவையாள் தானுடுக்கும்
பட்டுவிலை பிடியாது."

" வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன் வரிசையுடன்
வாழ்த்துகிறேன்
இந்தச்சபை நடுவே எல்லோரும் கேட்டிடுங்கள்
சம்மந்தம் சம்மந்தம் எங்கள் தலைமுறையாய் சம்மந்தம்
சம்மந்தம் செய்யவந்த சமர்த்தன்மார் கோடியுண்டு
பெண்ணின் பெருமைகளும் பேரன்மார் வீரியமும்
பணத்தின் பெருமைகளும் பாட்டன்மார் கீர்த்திகளும்
மேலான உத்தியோகம் மேலெழுந்து தன்குலந்தான்
பேரான உத்தியோகம் பேஷ்கார் தகசீல்தார்
இவர்கள் குலத்துதித்த ஏந்திழையை மாலையிட
என்னபாடு பட்டார் இந்திரனுர் உங்கள் அண்ணன்
எனக்குத் தரவேணும் இதுவே தருணம் என்றூர்
வேறே பெண்வேண்டாம் வேண்டாம்காண் கல்யாணம்
அசலூருப் பெண்ணுக்கு ஆசையில்லை மன்னருக்கு
மாமா மகளையே மாலையிட வேணுமென்றூர்
இல்லையென்று சொன்ஞல் ஏற்றிடுவேன் சந்நியாசம்
காவிநனைப்பேன் என்றீர் காசிக்கும் போவேன் என்றீர்
பால்செம்பெடுப்பேன் என்றீர் பரதேசம் போவேன்
என்றீர்
கவலையால் அத்தான் கன்னியாரி சென்றீரோ
கன்னியாரி தேவியிடம் உங்கள் கவலையை
மொழிந்தீரோ
கல்கண்ட இடமெல்லாம் காணிக்கை இட்டீரோ
கோவில்கண்ட இடமெல்லாம் கும்பிட்டு வந்தீரோ
கானக்கருங்குழலாள் கன்னிகையாள் எங்கள் அக்காள்
வீணைதனையெடுத்து விரலால் ஒலி எழுப்பி
உத்தமியாள் பாடுவதை ஒதுங்கிநின்று கேட்டீரோ
பைங்கொடியாள் பாடுவதை பதுங்கிநின்று கேட்டீரோ
பாட்டின் அழகிலே பைங்கொடியே வேணுமென்றீர்
குரலின் இனிமையிலே குலக்கொடியே வேணுமென்றீர்

உங்கள் இரக்கத்தைப் பார்த்து நாங்கள் எல்லோரும்
சம்மதித்தோம்
ஈசனருளா லெங்கள் ஏந்திழையைக் கைப்பிடித்தீர்
செய்தோமே கல்யாணம் சிரஞ்சீவியா யிருங்கள்!"

இவ்வாறு திருமண நாளன்று திருமணம் முடிந்தவுடன் மணமக்களை மணையிலிருத்தி மணமகளின் தங்கையோ, மணமகனின் தங்கையோ வாழ்த்துவது வழக்கம். அதில் ஒருவரையொருவர் பழித்துக் கூறுவதும் பெருகி வந்தது. இதனால் மணவீட்டில் மனத்தாங்கல் ஏற்பட்டு இப்பொழுது வாழ்த்துதல் குறைந்துவிட்டது. எனினும் மாமி மருமகள் சண்டை குறையவில்லை.

மாமி மருமகள் சண்டை

மாமி : வீட்டுவேலை பார்க்காமலே வெளியே என்னடி
வெட்கம் கெட்ட மூளி,—உன்னை [ஜோலி,
வெட்டிக்காகக் கட்டிக்கொண்டு
பட்டதெல்லாம் கேலி.

மருமகள் : அத்தை என்ன குத்தம் செய்தேன் இத்தனை
கோபம்
உனக்கடங்கிப் பதுங்கி வாழ்ந்துவந்தேன் ஐயோ
நான் பாவம்.

மாமி : பசப்புக்காரக்குட்டி நீயும் பாசாங்குக்காரி
படபடத்தநீலி
என் பையனைக் கெடுத்திட்டாய்—ஐயோ பெரும் நீலி.

மருமகள் : உங்களுக்கும் உம்மகனுக்கும் உண்மையாய்
நடந்தேனே மாமி
நான் உடல்நெரிய வேலைபார்த்து இப்படிப்
போனேனே.

மாமி : தட்டுவாணி மகளே நீயும் தடபுடலாய்ப் பேசி
சரிக்குச் சரியாச்சு—உன்
சாவகாச தோசமடி நாவுகொளுத்துப் போச்சு
இந்தாடி உன் தாயும் தகப்பனும் என்னடி சீரு
கொடுத்தா—அவர்
எத்தனை வண்டியை விடுத்தார்—நீங்கள்
இருந்த இருப்பை மறந்து போட்டு
என்னிடம் சண்டையைத் தொடுத்தாய்
இருக்கட்டும் பயவரட்டும், சந்திசிரிக்கட்டும் மானம்
கெடட்டும்
ஏண்டி இவ பேசினது உங்க எல்லோருக்கும் காது
கேட்டுதா
இவளைக் கட்டிமாரடித்து என் குடும்பமும் வாழ்ந்ததா.

மருமகள் : அருமை மாமி பெருமை குலைய அப்படி என்ன
செய்தேன்
உங்கள் ஆக்கினையைமீறி ஆருஆரிடத்தில்
சொன்னேன்
எங்கள் ஆத்தா அப்பன் மீதிலிந்த கோபம் ஆகுமா
என்னை அடித்தாலும் வைதாலும் அனுதை நானம்மா

ஒப்பாரி

மாரடித்தல் என்ற பழக்கம் இங்கு உண்டு. இறந்தவர்களை நினைந்து 16 நாட்களுக்குப் பெண்டிர், 'அம்மாடி', 'தாயாரே' என்று சொல்லி முற்றத்திலே சுற்றிச் சுற்றி வந்து இரு கைகளாலும் மார்பிலே அடித்துக்கொள்ளும் பழக்கம்—சிறப்பாக நாஞ்சில் வேளாளரிடம் உண்டு. குறிப்பிட்ட சில சுற்றுக்கள் வந்த பிறகு அவர்கள் 'குரல் விடுதல்' உண்டு; இது சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் குரவைக்கு ஒப்பாகும்.

ஒப்பாரி (தாயார் இறப்பிற்குச் சொல்லுவது)

" கத்தரியும் பாவலும் கலந்து படர்ந்திடத்தில்
கருணரம்மை போனவுடன் கசந்தோம் பிறந்திடத்தை
வெள்ளரியும் பாவலும் வீசிப் படர்ந்திடத்தில்
வீமரம்மை போனவுடன் வெறுத்தோம் பிறந்திடத்தை
வேலியிலே வெள்ளறுகு வீமரோ என்பொறப்பான்
வீம்ருக்கு வந்தவா எங்களை விலையா மதிக்கலையே
கள்ளியிலே வெள்ளறுகு கருணரோ எம்பொறப்பான்
கருணருக்கு வந்தவா எங்களைக் காசாமதிக்கலையே
மானம் இருட்டி மழையிருட்டி வந்தாக்கால்
இந்த, மாதளம்பூத் திண்ணையிலே எங்கள்
மக்களருமை யார் அறிவார்
பூமி இருட்டி பொழுதிருட்டி வந்தாக்கால்
இந்த, பூப்போல திண்ணையிலே எங்கள்
பிள்ளையருமை யார் அறிவார்
சித்தகத்தி யானேம் சிலநாள் கரும்பானேம்
முற்றும் கசப்பானேம் முற்றத்து வேம்பானேம்
வேணுமென்ற காலத்தில் வேம்பும் கரும்பானேம்
வேண்டாத காலத்தில் கரும்பும் கசப்பானேம்
வீதியிலே போறவர்கள் வெள்ளிரதம் ஏதென்பார்
வீமருட அம்மை செத்து வெள்ளிரதம் போகுதென்பார்
தரையிலே போறவர்கள் தங்கரதம் ஏதென்பார்
தருமருட அம்மை செய்து தங்கரதம் போகுதென்பார்
முக்குக்கு முக்குக்கு முடிமன்னர் தோள்மாற்ற
சந்திக்குச் சந்தி சரிமன்னர் தோள்மாற்ற
தீர்ததக் கரையிலே தீவெளிச்சம் யாதென்பார்
ஸ்ரீராமா அம்மை செத்து தீப்பட்டு வேகுதென்பார்
ஆற்றங்கரையிலே அனல் வெளிச்சம் யாதென்பார்
அருச்சனர் அம்மை செத்து அனல்பட்டு
வேகுதென்பார்

பூத்த முருங்கைதான் பொன்பதித்த மாளிகைதான்
பொன்பதித்த மாளிகையில் போய் இறங்க நீதியில்லை
காய்த்த முருங்கைதான் கல்பதித்த மாளிகைதான்
கல்பதித்த மாளிகையில் கால்வைக்க நீதியில்லை."

* * *

' கத்திரிக்காய் எங்களுக்கு
கைலாசம் உங்களுக்கு
வாழைக்காய் எங்களுக்கு
வைகுந்தம் உங்களுக்கு
பாவைக்காய் எங்களுக்கு
பரலோகம் உங்களுக்கு
சேர்ந்தீர்களோ? சேர்ந்தீர்களோ ?'

இராப்பாடியின் பாடல்

இராப்பாடி பாடுபவன் 'பிரேத வண்ணான்' எனப் படுவான். இவனைப் பார்க்கச் சிறு குழந்தைகள் அனுமதிக்கப்படமாட்டார்கள். இவன் பகலிலே ஊர்ப் பக்கங்களில் வரமாட்டான் என்பது ஐதீகம். இவனுடைய பாடல்கள் உருக்கமாகவும் இனிமையாகவும் இருக்கும். பழந் தமிழ்நாட்டுப் பண்ணை இவனுடைய இசையில் கேட்டு மகிழலாம்.

இராப்பாடி பாடும் குரல் ஊர்க் கோடியில் ஒலிக்கும்; அதனோடு உடுக்கையின் ஓசையும் கலக்கும். இதனைக் கேட்ட இல்லத்தரசிகள் 'சுழகு' எனப்படும் முறத்தில் நெல்லும் கரியும் பிற பொருள்களும் வைத்து அச் சுழகை வாசலில் விட்டுக் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே வந்துவிடுவர்.

இராப்பாடி, வளம் மிகுந்த நாஞ்சில்நாட்டு நெல் வளப்பத்தை வரிசைப்படுத்தும் பாடல் இது :

வாசரமுண்டான் வீரமுண்டான்
ஆனைக்கொம்பன் அறுவங்குருவா
மைக்கொறுவா மொட்டக்கொறுவா
சீரகச்சம்பா தெய்வீகச் சம்பா
கருடச் சம்பா கொத்தமல்லிச் சம்பா
புனுகுச் சம்பா பூம்பாளை
தட்டாரவெள்ளை நேந்திரப்பள்ளி
சொர்ணவாரி செம்பிலி
சீதா போகம் பனங்குறுவா.

தனக்குப் பரிசில் வழங்காதவர்களை இராப்பாடி வசைவதும் வழக்கம். ஒரு வசைப்பாட்டையும்தான் கேட்டு வைப்போமே ?

‘ சண்டாள மருதநாயகம் பிள்ளை—அவன்
சாதியிலே வெள்ளாளப் பிள்ளை
இருப்பது ஈனக்குடித் திண்ணை—அவன்
குடிப்பது கூந்தப்பனைக் கள்ளு
கடிப்பது கருவாட்டு மண்டை—அவன்
படுப்பது பரத்தையர் வீடு.

ஊடற் பாடல்

மனைவி : எத்தனைதாம் புத்திகளை எடுத்துரைத்தும்
சாராயத்தை
நித்தமும் போய்க் குடிக்கிறாயே நீயும்ஒரு ஆம்பிளையா
உன்னோடென்னடா பேச்சு—என்னை
ஒதுக்கிப் போடுடா தீச்சு
கஞ்சிக்கு உப்பில்லை காத் தம்பிடி கையிலில்லை
நஞ்சைக் குடித்துச்சாவு நாசம்கெட்ட வேசைமகனே
உனக்கும் ஒரு பெண்டாட்டி உன் ஒழுங்குக்கொரு
வைப்பாட்டி.

*இப்பாடல்களைத் தெரிவித்தவர் என் இனிய நண்பர் டாக்டர் பா.நடராசன் ஆவார்.

கணவன் : கடன் வாங்கிப் போடுகிறேன் காரியத்தை
நடத்துகிறேன்
மரியாதையாகஇரு மானங்கெட்ட மூளி நீயும்
பாலுக்காசை எங்கே—உன்
பவுரைக் காட்டாதே இங்கே.

மனைவி : கடன்வாங்கிக் கடன்வாங்கி
காலம் எல்லாம் கழித்தயானல்
கடன்காரன் வந்துன்னே
கழுத்தைப்பிடித் திழுத்திடுவான்
உன்னேடு நடவாது—என்னே
ஒதுக்கிப் போடிப்போது.

கணவன் : உன் பாட்டன் பூட்டன் சொத்துக்களேப்
பணயம் வைத்துக் குடித்தேனே
பட்டைமுகம் பாராதவன் பரகதி அடையமாட்டான்
பட்டுச் சேலேயை அவிழ்த்து வையடி
தட்டான்தாலியைக் கழற்றி வையடி
போடி போவடி அதோ தெரியுது குருசடி.

ஒவ்வொரு சமூகத்துக்கும் உரிய நாட்டுப்பாடல்களும் உள்ளன. சக்கிலியப் பெண்ணின் தந்தைக்கும் 'பகடை' என்று பெயர். அவன் தன் குலத்தொழிலின் பெருமையைக் கூறுகிருன்:—

மாடறுப்போம் தோலுரிப்போம், ஓ நயினரே
மாட்டிறச்சி தனேப்புசிப்போம் ஓ நயினரே
அடியறுப்போம், செருப்பு தைப்போம் ஓ நயினரே
அழுகவைத்து வாலறுப்போம் ஓ நயினரே!

செட்டியார் ஒருவர் தன் மகனுக்கு வாணிப நெறியினேப்பற்றிப் பின்வருமாறு நல்லுரை பகருகின்ருர்:

இல்லையென்றால் ஒருவர் கிட்ட இரப்பதற்கு போகாதே
கொடுப்பாரை விலக்காதே கோள்சொல்லித் திரியாதே
கட்டிவைத்த முதலழிய கச்சவடம் பண்ணாதே
செட்டியாய்ப் பிறந்தவர்க்கு திரவியமே தெய்வமப்பா

முதலியார் ஓலைகள்
(கி. பி. 1467)

பெருமாள் சீபத்மநாப பெருமாளுக்கு நாம் கல்ப்பித்த சங்கரநாராயண மார்த்தாண்டன் பூசை நடக்கும் சீபத்ம நாபன் திருமடத்தில் பூசைக்கும் நமக்காரம் உள்பட்ட வகைக்கும், நாஞ்சிநாட்டு அழகிய பாண்டியபுரத்தில் கிழ்ப்பற்றில் தெக்கடைய விட்டுக்கொடுத்த பற்றுக்கு எல்கையாவிது: கிழ் எல்கை தெய்வேந்திரன் குன்றுக்கும் பொய்கைப் பட்டி மலைக்கும் மேற்கு, தென் எல்கை செவ்வரி வீரன் மலைக்கும் மலையில் நின்றும் தென் பாறை குளத்துக்கு பாயிற காலையாற்றுக்கும் தெள்ளாந்தி குளத்தின் நீர் நக்கலுக்கும் வடக்கு, மேல் எல்கை வட பாறை பற்றில் தோப்புக்கும் அரசடி கோணத்திற்கும் கேசவ நல்லூர் குளத்தின் நீர் நக்கலுக்கும் அலத்துறை காலுக்கும் கிழக்கு வட எல்கை அலத்துறை ஆத்துக்கும் தெற்கும், ஆக இந்நான்கு எல்கைக்கும் உள்ளும்— முன்னாள் இம் மடத்து விட்டுக்குடுத்த வடபாறை பற்றையும் திருசரம்கோப்பு பற்றையும் உள்ப்பட கையாண்டு போதுகிறபற்று, உடன் விட்டுக்குடுத்த பாட்ட உளவான கொற்றன் பாறை பற்றில், கல்பகமங்கல கேசவன் கிழ்ணன் தானம் நிலம் இரண்டு மாவும்–காராம்பு செட்டு திரு வெங்கிடமுடையான் சரசோதி தானம் நிலம் இரண்டு மாவும்—ஆக தானம் நிலம் நாலு மாவும் நீக்கி உள்ள நிலமும், அரியன் காடேற்று உள்ளிட்ட பற்று நிலவும், ஆக பற்று இரண்டிநால் உள்ள நிலம் அடங்கலும்,

கரவும் காராண்மை உள்படவும், விட்டுக்கொடுத்து—தங்கள் காணியாட்சை பற்றுன கடம்போடு விளாகம், சுந்தரம் குழி, புயங்கன் காடேறு, வாகுவிளைத்திருத்து, பூவன்குழி, முத்தலைப் பறம்பு, மேட்டு முத்தலை பறம்பு, வாழைவல்லான், பெறைபள்ளச்சை பழனம், கணக்கன் கோணம், பள்ளச்செய், பள்ளச்செய்பத்தல் முகம், கீள் பள்ளச்செய், குருகார்பள்ளம், பட்டாரிகோணம், தலை செட்டு காடேறு, காரி காடேறு, புறவடைப்பு, கொல்லன் காடேறு, வாகையோடு காடேறு, (தென்னுஞ்சிகுளம், தென் சோதி புது) குளம், கசந்தவிளைத்திருத்து, துடிக் கொம்பு, ஆற்றன்கால், பரசுராமன் திருத்து, நாகன் காடேறு,—ஆக பற்று 27-ஞல் இறங்கல்முது தருசு உள்பட நிலம் நூற்றி அன்பத்திரண்டு மாகாணியின் கீழ் மாகாணியும்—மற்றும், இவ்வெல்கைக்குள் காடுமேடும், கரைப் பற்று, மலைப்பற்று, பட்டி வாரியம், ஊத்தைபாட்டம், காணுப்பாட்டம், பாசிவிலை, ஆனைமறை, குற்றதெண்டம், புறமுதல், செக்கு இறை, தறிகடமை, பட்டடை, தரகு, உள்ளாயம், இடங்கை வலங்கை, கொழுந்துகடமை, வெருகும், புலியும், கும்புளும், ஆயணிபும், மரவடை மாவடையும், மற்றும் நாம் கொள்ளு கோழ்முறைப்பாடு எற்பேர்ப்பட்டதும், கூட அறு நூற்று நாற்பத்திமூணும் ஆண்டு கார்முதலுக்கு விட்டுத்தரவும் குடுத்த அளவுக்கு தாங்களும் இம்மரியாதியிலே, இன்னுள் முதல்கு சீபராங்குச தாஸர்க்கு குடிமையும் வழங்கி, இவ் எல்கைக்கு உள் பட்ட பற்றில் வகைப்படியே உள்ள நெல் வக கரைப்பற்று பணவகை உள்பட கொண்டு போதும்; கொள் முறைப் பாடு எற்பேர்பட்டதும், ஷை பற்றில் மடத்தில் கொண்டு சென்று குடுத்து போதும்படி, 642 ஆண்டு ஆனி மாதம் 31வ கற்பித்தளவுக்கு, இம்மரியாதியிலே, இவ் எல்கைக்கு தோரணவும் இடுவித்துகொண்டு, குடிமையும் வழங்கி,

நெல்வகை பணவகை உள்பட முதலாம் முதல் அடங்கலும் மேற்படி மடத்தில் கொண்டுசென்று, குடுத்து போதும் படி அழகிய பாண்டியபுரம் நகரத்தாருக்கு நீட்டு இட்டு விடு என்று திருவுள்ளமாய நீட்டு.

—திரு. எஸ். ராஜம் வெளியீடு, 'சாசனமாலை'

குமரி மாவட்டத்துப் பழமொழிகள்

சீனிக்கிழங்கு தின்ற பன்றி செல்லறுத்தாலும் நிற்காது (ருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவுமாம் என்ற கருத்தை உடையது.)

கண்டவன் கொள்ளையும் கணியாகுளப் போரும் (கணியா குளத்தில் 1635 அளவில் பாளையமடித்த மதுரை நாயக்கர் படைகள் அங்கே தங்கியிருந்து குடிகளைப் பலவாறு துன்புறுத்தினராம். இதைக் குறிக்கும் பழமொழி இது.)

நிமிர்ந்தால் வானம் குனிந்தால் பூமி (தனக்கு ஒன்றும் தொடர்பில்லை என்ற கருத்தில் கூறுவது.)

உழவனுக்கு உழவுக் கம்புதான் மிச்சம் (எச்சமென்பது மருவி வழங்குதல்.)

தான்போகிற இடத்துக்குத் தம்பியை அனுப்பாதே.

உதடு தேய்வதைவிட உள்ளங்காலைத் தேயவிடு (சொல்லாதே, செய் என்றபடி.)

ஒக்கலில் பிள்ளையை வைத்து ஊரெங்கும் தேடினளாம்.

உன்வாயில் நாகராஜா பிரசாதத்தைத்தான் போட வேண்டும் (நாகர்கோயில் நாகராஜர் கோயிலில் கோயில் பிரசாதமாக மண்ணைத்தான் வழங்குவர்.)

ஆவணியில் அகலநடு. ஐப்பசியில் அணைத்து நடு.

மங்கலம் முதல் மணக்குடி வரை (மங்கலம், வட எல்லையிலுள்ள மலைநாட்டு ஊர்; மணக்குடி, குமரிமுனை

யருகே யுள்ள ஊர். எனவே இது மாவட்ட எல்லை பற்றிய பழமொழி.)

கன்னியாகுமரி முதல் கடுக்கரை வரை (காசி இராமேசுவரம், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரை என்பது போல இம்மாவட்டத்தினர் தங்கள் எல்லையை இவ்வாறு குறிப்பிடுவர்:- "கன்னியாகுமரிமுதல் கடுக்கரை வரை உன் இடம்தான் அப்பா. நிறுத்து!")

பொறியைத் தட்டடா புத்திகெட்ட ஆசாரி (விவரம், "குறவன் தட்டுவிளை" என்னும் ஊரின் தலைப்பில் காண்க.)

கட்டிவைத்த முதலழிய கச்சவடம் பண்ணுதே (ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்கை ஊக்கார் அறிவுடையார் என்னுங் குறட் கருத்தைத் தழுவியது.)

கோட்டாறு சேவியர் கேட்டவரம் தருவார்.

பெயர்கள்

இம்மாவட்டத்தில் வழங்கும் பெயர்களிலும் ஒரு தனித்தன்மையைக் காணலாம். மக்களின் பெயர்கள், வீடுகளின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள் இம் மூன்றையும் பற்றிக் கூறுவோம்.

மக்களின் பெயர்கள்

மலையாளிகள் அம்மனைப் பகவதி என்று கூறுவர். கன்னியாகுமரித் தமிழர்களும் குமரியம்மனை 'பகவதி' என்றே குறிப்பிட்டு வழிபட்டு வருகின்றனர். இதனால் பகவதி, பகவதியப்பன் என்ற பெயர்கள் கன்னியாகுமரித் தமிழரிடையே மிகுதியாக உள்ளன.

தமிழகத்தின் பிற பகுதிகளில் அரிதாகவும் கன்னியா குமரி மாவட்டத்தில் பெருவழக்காகவும் உள்ள சில பெயர்களாவன :—

பூதலிங்கம், நீலகண்டன், சாத்தாங்குட்டி, கோலப்பன், யோகீஸ்வரன், வேலப்பன், பரமார்த்த லிங்கம், தாணு, உமைதாணு, தாணுமாலே, தாணு லிங்கம், தாணுமலேப் பெருமாள், வீரம்மை, அழகம்மை, சிவகாமி, இசக்கியம்மை, பேச்சியம்மை.

இம்மாவட்டத்திலுள்ள கிறித்தவர்கள் வில்லியம், கிறிஸ்டோபர், சர்ச்சில், மத்தியாஸ், நத்தானியல் போன்ற பெயர்களே வைத்துக்கொண்டிருக்கின்றனர். இயேசுவடியான், யோசப்பு போன்று தமிழ் மரபுப் படி அமைந்த பெயர்களும் மிகுதி.

வீடுகளின் பெயர்கள்

கேரளத்தில் வீடுகளுக்கு எண் கிடையாது; எனவே, தெரிந்துகொள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பெயர் உண்டு. இம்மாவட்டத்தில் சிலர் தங்கள் இல்லங்களுக்கு வைத்துக்கொள்ளும் பெயர்களும் உற்று உன்னத்தக்கன. அவை யாவன :—

வலியமாவிரதால வீடு, திருத்துலகம்வீடு. கரும்புலம் விளக்கத்துப் புத்தென் வீடு, திசைவிளங்கி வீடு, மூத்த பிள்ளே வீடு*, பண்ணேயார் வீடு.

ஊர்களின் பெயர்கள்

குமரி மாவட்டத்து ஊர்களின் பெயர்களிலுள்ள இறுதிச் சொற்களும் என் நெஞ்சை ஈர்த்தன. பொழில், விளே, சேரி என்னும் பெயர்களே முதலில் காண்போம்.

* ஊருக்கு ஒரு மூத்த பிள்ளே உண்டு. சிறப்பும் செல்வாக்கும் உள்ள குடும்பத்தில் வழிவழியாக வரும் பெயர் இது. இவரைப் பண்ணேயார் என்றும் அழைப்பர்.

மரங்களும் செடிகளும் செழித்தோங்கி வளரும் சோலையைப் பொழில் என்னும் அழகிய சொல்லால் தமிழ்ப் பெருமக்கள் குறிப்பிட்டு வந்திருக்கின்றனர். ஆலமரங்களாலான அழகிய சோலையை "திருவாலம் பொழில்" என்று சம்பந்தர், தேவாரத்தில் கூறியுள்ளார். குமரி மாவட்டத்தில் ஆரல்வாய்ப் பொழில், ஈத்தாம் பொழில் என்னும் ஊர்கள் உள்ளன. இவை ஆராம் பொழி, ஈத்தாமொழி என மருவி வழங்கி வருகின்றன.

விளைபுலங்களையுடைய ஊர்கள் "விளை" என்னும் பெயரால் வழங்கப்படுவது வழக்கம். தோட்டக் காடுகளும் விளை என்று குறிப்பிடப்படுகின்றன. தென்னந் தோப்பு என்று தமிழ்நாட்டில் கூறுவதுபோல, குமரி மாவட்டத்தில் 'பனை விளை' என்ற சொற்றொடர் பனை மரங்கள் நிறைந்த இடத்தைக் குறிக்கும். 'பருத்தி விளை' என்ற சொற்றொடரையும் கவிமணி பயன்படுத்தியிருக்கிறார்.* கேரத்திலும் மேலைக் கடற்கரையெங்கும் 'விளை' என்ற இறுதிச் சொல்லுடைய ஊர்கள் உள்ளன. நெல்லை மாவட்டத்தில் வாகைவிளை, திசையன்விளை என்னும் ஊர்கள் உள்ளன. வளம் நிறைந்த குமரி மாவட்டத்தில் ஏதாவதொரு பொருளேனும் விளையாத ஊர் இல்லை. ஆகையால் "விளை"கள் பல இருப்பதில் வியப்பொன்றுமில்லை. இதோ அவற்றின் பட்டியல் :—

விளை

அலிவிளை, அஞ்சுவீட்டு விளை, அத்திக்காட்டு விளை, இலந்தை விளை, ஈத்தவிளை, உடையார்விளை, ஒசரவிளை, புளிவிளை, உரப்பனைவிளை, காட்டுவிளை, உரியாவிளை, அம்மாண்டிவிளை, கண்டன்விளை, கண்ணாட்டிவிளை, களிக்காவிளை, குழிகள்விளை, குழிவிளை, கொய்யாரிவிளை,

* பருத்திவிளைக்குச் சென்று பஞ்சு வாங்கினேன்—பாடல் 889—கதர் விற்பனை.

கோழிப்போர்விளை, சரக்கல்விளை, சாத்தான்கோயில் விளை, செம்பாபுரைவிளை, தாமரைக்குட்டிவிளை, திட்டு விளை, நுல்லிவிளை, நெடுவிளை, பழவிளை, பட்டாசாலியார் விளை, பதிட்டவிளை, பால்கிணத்தான்விளை, புன்னைக் காய்விளை, பெருவிளை, மணவிளை, மணக்காவிளை, மணி விளை, மருக்கத்தலவிளை, மவரவிளை, முகிலன்விளை, முருங்கவிளை, வாத்தியார்விளை, விரிவிளை, விளாத்திவிளை, வைரவிளை, வெள்ளியாவிளை.

குளம்

இறச்சகுளம், கல்குளம், தாமரைக்குளம், தலக் குளம், பைங்குளம்.

சேரி

(சேரி சேர்ந்திருப்பதால் வந்த பெயர்) வடசேரி, ஒழுகினசேரி, புரவசேரி.

கறி அல்லது கூட்டு

புளிக்கறி, புளிசேரி, எருசேரி, உப்பேரி.

குமரி மாவட்டத்தில் மலைப்பகுதிகளும் உள்ளன. எனவே கோடு, பாறை, குறிச்சி என்று ஈற்றுச் சொற்க ளுடைய ஊர்களும் காணப்படுகின்றன. சான்றாகச் சில ஊர்களின் பெயர்களைத் தருவோம்.

கோடு

கொல்லங்கோடு, சுருளக்கோடு, விளப்பங்கோடு, திருவாங்கோடு, திருவிடைக்கோடு, திக்கணங்கோடு, மேற்கோடு, பாகோடு, பண்ணிகோடு, பூவங்கோடு, ஆலங்கோடு, எடைக்கோடு.

பாறை

வழுக்கம்பாறை, கிச்சிப்பாறை, பேச்சிப்பாறை.

குறிச்சி

புலியூர்க்குறிச்சி, மணவாளக்குறிற்சி, கக்குறிச்சி, குறிச்சி, முத்தம்மாள்குறிச்சி, திசையன்குறிச்சி.

தமிழகத்தின் பிற மாவட்டங்கள் பலவற்றை நோக்க, குமரி மாவட்டத்தில் காட்டுவளமும் மிகுதி. காடு என்ற இறுதிச் சொல்லுடன் ஏராளமான ஊர் உள்ளன.

காரைக்காடு, ஈத்தங்காடு, விளாங்காடு.

மூடு என்ற இறுதிச் சொல்லுடன் கூடிய ஊர்களும் இம்மாவட்டத்திலுள்ளன. கேரளத்திலும் இதைக் காணலாம். குமரி மாவட்டத்து மூடுகளிற் சில: பனிச்சமூடு, முளகுமூடு, படந்தாலமூடு, வேப்ப மூடு. மூடு என்ற சொல்லுக்கு 'வேர்' என்ற பொருள் உண்டு. தேர் நிற்கும் இடம் 'தேர் மூடு' எனப்படுகிறது. தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் 'தேர் முட்டி' என்ற சொல்லாட்சி உண்டு.

நீர்வளம் நிரம்பிய மாவட்டமாகையால், ''துறை'' களும் மிகுதியாக உள்ளன. புத்தன் துறை, காட்டாத் துறை.

இம்மாவட்ட மக்கள் கனிந்த உள்ளமும் மலர்ந்த முகத்தினருமாக இருந்தும் ஊர்ப் பெயர்களில் மட்டும் ''கோணம்'' இருக்கிறது. இரணியல்கோணம், கல்லுக் குட்டிகோணம், தடிக்காரன்கோணம், பெரிஞ்ச கோணம், கோரடூர்கோணம் என்பனவற்றைச் சான்றாகக் கூறலாம். ஒரு காலத்தில் இவ்வூர்களின் நிலங்கள் தொகுப்பாக ஒருவரைச் சேர்ந்திருக்கக் கூடும். 'முதலியார் ஓலை'களிலும் இச்சொற்கள் காணப்படு கின்றன.

க—9


குடியிருப்பு என்ற இறுதிச் சொல்லுடைய பெயர்களும் இம்மாவட்டமெங்கும் உள்ளன. கலசமரக் குடியிருப்பு, மறவன் குடியிருப்பு, பணிக்கன் குடியிருப்பு, மாலேயணிந்தான் குடியிருப்பு, கலேசிறக்குங் குடியிருப்பு என்பது அவற்றில் சில.

பூச்சிவிளாகம், கார்த்திகைப்படலி, மறுகால்தலே என்ற பெயர்களுடைய ஊர்களும் உள்ளன.

திருவிதாங்கூர் அரசர்களுடைய பெயரால் அமைந்த இடங்களும் அவர்கள் வழிபடும் கடவுளர் பெயரால் ஏற்பட்ட ஊர்களும் உள்ளன. மார்த்தாண்டம், உதய மார்த்தாண்டம், ராமவர்மபுரம், பத்மனுபபுரம் என்பன இவ்வாறு அமைந்த பெயர்களாகும்.

பத்மனுபபுரம் திருவிதாங்கூர் அரசர்களின் குலதெய்வத்தின் பெயரைத் தாங்கும் தலம்; இவ்வூரின் முன்னேப் பெயர் கல்குளம். மார்த்தாண்டம் மார்த்தாண்டபுரம் மகாராஜா பெயரால் வழங்கப்படுகிறது; இவ்வூரின் பழைய பெயர் தொடுவெட்டி, ராமவர்மபுரம், மஹாராஜா ராமவர்மா பெயரால் நாகர்கோயில் நகரில் கொட்டாரத்துக்கு அருகே புதிதாக அமைக்கப்பட்ட குடியிருப்பாகும்.

மடம் என்ற பெயர்களுள்ள ஊர்களும் உள்ளன. இவை ஒருகாலத்தில் சத்திரங்கள் இருந்ததைக் குறிக்கக் கூடும். குமரிக்குச் செல்லும் வழிநெடுக, சத்திரங்கள் இருந்திருக்கலாம். சிறைமடம், சாமியார் மடம், செட்டியார் மடம், வெள்ளிமடம், காணிமடம் என்பவை இதற்குச் சான்று.



புனிதமேரி ஆலயம் - கன்னியாகுமரி.

படம் உதவி:
சென்னை அரசாங்கச் செய்தித் துறை.



இசைத்தூண் - சுசிந்திரம்.

படம் உதவி:
சென்னை அரசாங்கச் செய்தித்துறை.

22. காணத்தக்க இடங்கள்

கன்னியாகுமரி

முக்கடலும் கூடுதுறையாக உள்ள கன்னியாகுமரி, கதிரவன் தோன்றுவது மறைவது ஆகிய காட்சிகளையும் ஓரிடத்திலேயே காணத்தக்க ஒரே இடமாக உள்ளது. சித்திரைப் பவுர்ணமி நாளில் ஒரே நேரத்தில் சூரியன் மேற்கே சாய்வதையும் சந்திரன் கிழக்கே எழுவதையும் ஒருசேரக் காணலாம். கடவுட் பற்றில்லாதவரும், ''இயற்கையின் விந்தை'' என வியந்து பாராட்டும் பெருமை இந்நிகழ்ச்சியால் குமரி முனைக்கு உரியதாக இருக்கிறது.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் பாடும் புறநானூற்றுப் புலவர்,

'' நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும்நின்
வெண்தலைப் புணரி குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந ''

எனக் குறிப்பிடுவது குமரித்துறையிலே ஞாயிறு எழுவதும், மறைவதுமாகியக் காட்சியைக் கூறுகின்றார் என்றே கொள்ளலாம்.

பல தலைமுறைகளாக இக்கன்னியாகுமரியிலுள்ள கோயில் புகழ்பெற்றிருக்கிறது. இது நம் நாட்டின் மிகப் பழமையான கோயில்களுள் ஒன்று. மகாபாரதத்திலும் உபநிஷத்திலும் இக்கோயில் இடம் பெற்றுள்ளது. கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பெரிப்புளூஸ் என்னும் நூலின் ஆசிரியரும், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான டாலமியும் இக்கோயிலைக் குறிப்பிட்

டுள்ளனர். புறநானூறு தவிர, ஐம்பெருங் காப்பியங்க ளாகிய சிலம்பும் மேகலேயும் குமரியைக் குறித்துள்ளன.

இக்கோயிலேப் பற்றிப் புராணக் கதைகள் பலவாறக வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று குறிப்பிடத்தக்கது. பகவதிக்கும் தாணுமாலயனுக்கும் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாரதர், சேவலேக் கூவவிட்டதால், ''விடிந்துவிட்டது; முகூர்த்த நேரம் தவறிவிட்டது'' என்று எண்ணி இறைவனுகிய தாணுமாலயன் சுசீந்திரத் துக்குத் திரும்பிவிடுகிருர். திருமணம் தடைப்பட்டு விடுகிறது. இதனுல் பகவதியம்மன் என்றும் கன்னியாக—குமரியாக—கன்னியாகுமரியிலேயே இருந்துவிடுகிருள். அவளுக்கு வந்த திருமணப் பரிசுப் பொருள்களான பொன்னும் மணியும் நெல்லும் கரும்புமே இன்றும் குமரிக் கரையில் பரந்து கிடக்கும் பலநிற மணலும் பல்வகைக் குன்றுகளும் என்பது ஒரு நம்பிக்கை. உமா தேவி கன்னியாகவே இருந்து சிவபெருமானேயே எண்ணித் தவங் கிடப்பதால் இத்தலம் கன்னியாகுமரி எனப் பெயர் பெற்றதாம்.

கன்னி, குமரி என்ற இரு சொற்களும் ஒரு பொருளேயே குறிப்பன ; எனினும் நுண்ணிய வேறுபாடு உண்டு. குமரி பருவப் பெயராகவும், கன்னி மணமாகாத் தன்மையைக் குறிக்கும் சொல்லாகவும் வழங்கி வரு கின்றன. கன்னியாம் குமரி என பெயர் இரட்டித்து அதன்வழி வலித்தல் விகாரத்தால் 'கன்னியாகுமரி' என்ற சொற்ருெடர் ஏற்பட்டதாகப் புலவர் கூறுவர்.

சேரமான் பெருமாள் என்ற அரசன் இலக்கணங் களின் பெயரால் தம் ஆட்சியில் சில ஊர்களே அமைத்த தாகவும் அவற்றுள் ஒன்றே கன்னியாகுமரி என்றும் கூறுவர்.* இது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

பகவதியம்மன் கோயில்கள் குமரி மாவட்டத்தில் பல இடங்களில் உள்ளன. பகவதி என்னும் பெயர் ஆடவர்க்கும் சரி பெண்களுக்கும் சரி இடப்படுகிறது. பகவதியப்பன் என்ற பெயரும் சிலருக்கு உண்டு. இக் கோயிலில் பல மண்டபங்களும் அழகிய உருவங்களும் உள்ளன. குமரியம்மனின் வடிவம் மிகச் சிறந்த கலைப் பொருளாக, கண்டார் வியந்து பரவசப்படும் அமைப்பும் பொலிவும் நிரம்பப்பெற்றதாக இருக்கிறது. இந்த அம்மன் கிழக்கே பார்த்திருந்தும், கிழக்கே வாயில் இல்லை. வடக்கேயிருந்துதான் கோயிலுக்குள் செல்லவேண்டும். இதற்கு விளக்கங்கூறும் கதையொன்று சொல்லப் படுகிறது. குமரியம்மனின் மூக்கணியின் ஒப்புயர்வற்ற ஒளி கலங்கரை விளக்குப்போலக் கடலில் சென்ற மாலுமி களுக்குத் தெரிந்ததாகவும், அதனுல் கப்பல்கள் அருகே யுள்ள பாறையில் மோதியதாகவும் பின்னர்க் கிழக்கு வாயில் மூடப்பெற்றதாகவும் அதற்குப் பதிலாக வடக்கு வாயில் வைக்கப்பெற்றதாகவும் கூறுவர். கன்னியாகுமரி ஊரானது கோயிலுக்கு வடக்கேயிருப்பதால், ஊரவர் வழிபாட்டுக்கு வர வசதியாகவே வடக்கு வாயில் உளது என்று கூறுவாருமுளர்.

சித்திரைப் பவுர்ணமி, வைகாசி விசாகம், புரட்டாசி நவராத்திரி விழாக்கள் இக்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

---

* ஏனைய ஊர்கள் :

மிதுனம்	—	மிதுனப்பள்ளி	—	மதனப்பள்ளி
கடகம்	—	கடகம்பள்ளி	—	(ஆந்திரா)
சிம்மம்	—	சிங்கவனம்	—	திருவிதாங்கூர்
தனுசு	—	தனுசுக்கோடி	—	இராமேசுவரத் தீவு
கும்பம்	—	கும்பகோணம்	—	தஞ்சை மாவட்டம்
மீனம்	—	மீனம்பாக்கம்	—	சென்னை

இப்போதைய நிலையில் இக்கோயில் 984-இல் இராஜ ராஜ சோழனால் கட்டப்பட்டதெனக் கருதப்படுகிறது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் அமைப்புக்கும் இக்கோயிலின் அமைப்புக்கும் சில ஒற்றுமைகள் உள்ளன.

இக்கோயிலில் சோழ, பாண்டிய, விசயநகர, நாயக்க, திருவிதாங்கூர் அரசர்களின் கல்வெட்டுக்கள் தமிழ், தெலுங்கு மொழிகளிலும் வட மொழியிலும் காணப் படுகின்றன. 11-ஆம் நூற்றாண்டில் எழுந்த நாட்டியச் சிற்பங்களும் இங்கே காட்சி தருகின்றன.

கன்னியாகுமரியிலிருந்து இரண்டு கி. மீ. தொலைவில் குகாநாத சுவாமி கோயில் இருக்கிறது. இடிந்த நிலையி லிருந்தபோதிலும் இதுவும் காணத்தக்கது ; திராவிடக் கட்டிடக் கலைக்குச் சான்றாக விளங்குகிறது.

உணவு விடுதிகள்

வசதியாக வாழ விரும்புபவர்களுக்குத் தமிழ்நாடு அரசாங்கம் நடத்தும் "கேப் ஓட்டல்", கேரள அரசாங் கத்து உணவு விடுதி ஆகியனவும் அவற்றுக்கு அடுத்த படியாக தேவசம் குழுவின் சத்திரங்களும் வாடகைக்குக் கிடைக்கின்றன. இலவசமாக இருப்பதற்குரிய சத்திரங் களும் உள்ளன. அரசாங்க விருந்தினர் தங்குவதற்குரிய மாளிகையும் இங்கு உண்டு.

சிறு உணவு விடுதிகள் பலவும் இங்கே உள்ளன. இவற்றுள் ஒன்றான விவேகானந்த உணவு விடுதி பற்றி ஒரு நிகழ்ச்சியுண்டு. மகாத்மா காந்தி விவேகானந்த வாசக சாலைக்குச் செல்லுவதற்குப் பதிலாக விவேகானந்த உணவு விடுதிக்குள் தவறுதலாகச் சென்றுவிட்டாராம். "காந்தியடிகள் ஆட்டுப் பால்தானே குடிப்பார். காப்பி அருந்தமாட்டாரே ? என் செய்வது ?" என்று உணவு

விடுதி உரிமையாளர் கவலைப்பட்டாராம். அவர் ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாக காந்தியடிகள் தம் தவறுதலை உணர்ந்து வாசக சாலையிருந்த அடுத்த கட்டிடத்துக்குப் போய்ச் சேர்ந்தாராம்.

காந்தி மண்டபம்

பல தலைமுறைகளாகப் பதினாறு கல் மண்டபத்தருகே மக்கள் புண்ணிய நீராடும் படித்துறையும், அண்மைக் காலத்தில் அனைவரும் அச்சமின்றி நீந்துவதற்கு அமைக்கப்பட்ட குளமும் குமரிக் கடற்கரையில் இருக்கின்றன. இவற்றுக்கருகே 12—2—1948-இல் காந்தியடிகளின் இறுதிச் சாம்பல்கள் கரைக்கப்பட்டன. இவ்வாறு புனிதத்தன்மை பெற்ற இடத்தில் எழுப்பப்பட்டிருக்கும் கவினுறு கட்டிடமே காந்தி மண்டபம் எனப்படுவதாகும்.

காந்தி மண்டபம், கடல் மட்டத்திலிருந்து 8 அடி (இரண்டரை மீட்டர்) உயரத்தில் நான்கு மண்டபங்களும் பிரார்த்தனைக் கூடமும் மூன்று கோபுரங்களும் கொண்டு வட இந்தியக் கட்டிடக் கலை முறைப்படி அமைக்கப்பட்டுளது. இதன் மிக உயரமான கோபுரம் 72 அடி (22 மீட்டர்) உயரமுடையதாகும்.

இம்மண்டபம் கட்டும் வேலை 1954-இல் தொடங்கப் பெற்று 1956 அக்டோபரில் மூன்று லட்சம் ரூபாய்ச் செலவில் முடிவடைந்தது. இணைப்புக்குச் சில நாட்கள் முன்னதாக, திருவிதாங்கூர்-கொச்சி அரசாங்கத்தார் இதைத் திறந்து வைத்தனர்.

காந்தியடிகள் பிறந்தது அக்டோபர் இரண்டாம் நாளில் ஆகும். ஆண்டுதோறும் இந்நாளில் சூரிய ஒளி அடிகளாரின் இறுதிச் சாம்பலடங்கிய சமாதிமீது படுமாறு அச்சமாதிக்கு நேர் உயரத்தில் ஒரு துவாரம் போட்டு

மண்டபம் அமைக்கப்பட்டிருப்பது இக்காலத்திலும் சிறந்த பொறியியல் அறிஞர் இருப்பதற்குச் சான்ருகும். வாய்ப்பு உள்ளவர்கள் இந்நாளில் கன்னியாகுமரிக்குச் செல்லுவது நன்று.

நாகர்கோயில் நகருக்கு நன்னீர் வழங்கும் முக்கூடல் குழாய்களிலிருந்து வரும் தண்ணீர் காந்தி மண்டபத்திலும் கிடைக்க வகை செய்திருப்பதும் பாராட்டுக்குரியது.

குமரியும் தமிழ்நாடும்

''வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'' என்ற தொல்காப்பியச் சொற்ரெடர் ஒன்றே, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் உள்ளங்களில் கன்னியாகுமரி சிறப்பிடம் பெற்றிருந்ததைப் புலப்படுத்துகிறது.

'நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல்நாடு'

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. 'தொடியோன் பௌவம்' என்பது குமரிக் கடலேயாகும். வட இந்தியாவிலிருந்து யாத்திரை வருபவர்கள் குமரியில் நீராடிச் சென்றனர் என்ற குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது; 'குரங்கு செய் குமரித்துறை' என்ற வாக்கை, ஆதாரமாகக் கொண்டு இலங்கைக்கு இவ்வழியே இராமரின் படைகள் சென்றதாக ஒரு வரலாறு உண்டு.

குமரி முனையில் ஒரு காலத்தில் குமரி என்ற மலை இருந்ததாகவும் அதில் தோன்றிய குமரி ஆறு பாய்ந்து தெற்கே 700 காதம் வரை பரவியிருந்ததாகவும் பழந் தமிழ் இலக்கியங்களும் வரலாற்று நூல்களும் உரைக்

கின்றன எனவே இக்குமரி தமிழர்தம் பெருமையை நினைவூட்டுவதாகும்.

குமரியம்மன் தமிழ் மூவேந்தராலும் வழிபடப் பெற்ற அம்பிகையாகும். இக்கோயில் தமிழருக்கே உரிய திராவிடக் கட்டிடச் சிற்ப முறையைத் தழுவியதாக இருக்கிறது. பெரிய தலைவாயில், அணிவேலைகள், கருங்கல் தூண்கள், கண்கொள்ளாக் காட்சி தரும் சிலைகள், இசையொலி எழுப்பும் தூண்கள், கோட்டை போன்ற மதிற் சுவர், தமிழ்நாட்டு வரலாற்றை அறிய உதவும் பழமையான கல்வெட்டுக்கள் — இச்சிறப்புக்களை ஒருங்கே கொண்ட குமரிக் கோயில் தமிழர் பேணவேண்டிய கலைக்கூடமாகவும் போற்றத்தக்க கருவூலமாகவும் இருந்து வருகிறது.

கன்னியாகுமரியும் இந்தியாவும்

தமிழ்நாட்டின் வரலாற்ருேடும் பெருமையோடும் கன்னியாகுமரி பின்னிக் கிடப்பதுபோல, இந்திய நாட்டின் தென்கோடியாகவும் எல்லையாகவும் இது அமைந்து புகழ்பெற்றிருக்கிறது.

இந்தியாவெங்குமுள்ள இந்துக்கள் நீராடுவதற்குப் புனிதமாகக் கருதும் ஐந்து இடங்களுள் இதுவும் ஒன்று. குமரியில் நீராடுவது கங்கையில் நீராடிய சிறப்புக்கு ஒப்பானது* என்ற நம்பிக்கையும் பல நூறு ஆண்டுகளாகக் கோடிக்கணக்கான இந்துக்களிடம் இருந்து வருகிறது.

இந்து மதத்தின் பெருமையை மேலைநாட்டினரும் உணரச் செய்தவர் விவேகானந்த அடிகளார் ஆவார்.

---

* கங்கையாடிலென் குமரியாடிலென்—அப்பர் தேவாரம்.

இச்செயலை அவர் செய்த இடம் சிகாகோ என்னும் அமெரிக்க நகரம் ஆகும். அங்கே நடைபெற்ற சமயங்களைப்பற்றிய உலக மாநாட்டில் (World Congress of Religions, Chicago) கலந்து கொள்ளுமுன் அவர் கன்னியாகுமரிக்கு 1892-இல் வருகை புரிந்து கடற்கரையிலிருந்து 200 அடி தொலைவில் கடலிலுள்ள சிறு பாறை ஒன்றில் தவங் கிடந்தார். வேதாந்தக் கருத்துக்களை உலகெங்கும் பரப்ப வேண்டுமென்ற உறுதி'. இப்பாறையில் தவங் கிடந்தபோதே விவேகானந்தருக்கு ஏற்பட்டதாம். இப்பாறைக்கு விவேகானந்தர் பாறை என்னும் பெயர் வழங்கி வருகிறது. இப்பாறையில் நீரூற்று ஒன்றும் முன்னர் இருந்ததாகக் கருதப்படும் குமரியம்மன் கோயிலின் சிதைந்த பகுதிகளும் உள்ளன. இன்றும் இல்லறத்தாரும் துறவிகளும் சிறு படகுகளில் இப் பாறையை அடைந்து சிறு பொழுதேனும் கவலைகளை மறந்து வருகின்றனர்.

விவேகானந்தர் பாறையை அடுத்து, அதனோடு தொடர்புடைய இரட்டைப்பாறை ஒன்றுளது. இதன் பெயர் கிச்சினர் பாறை என்பதாகும். இந்தியப் படைகளின் தலைவராக இருந்த தளபதி கிச்சினர் என்பார் கடற்கரையிலிருந்து இப்பாறைக்கு நீந்திச் சென்றதால் இப்பெயர் வழங்கி வருகிறதாம்.

இந்திய நாட்டின் கவிக்குயில் சரோசினி நாயுடு அம்மையார் 1922-இல் இங்கு வருகை புரிந்தார். காலையில் நெடுநேரங் கழித்தே துயிலெழுதல் இந்த அம்மையாருக்கு உடன்பிறந்த பழக்கமாகும். இதற்கு மாறாக இவர்கள் வெள்ளென எழுந்தது குமரியில்தான்; அதுவும் கதிரவனைக் காண.

மகாத்மா காந்தியடிகள் இங்கு இருமுறை வந்துள்ளார். 'இமய முதல் குமரி வரை' என்றும், 'காஷ்மீரம்* முதல் கன்னியாகுமரி' என்றும் எல்லே கூறப்படும் நாட்டை வாழ்விக்க வந்த காந்தியடிகள் இங்கு வந்து தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். முதல் தடவையாக அவர் 1925-இல் வந்தார்; அப்போது குமரியம்மனை வழிபட விரும்பினர். "சீமைக்குப் போனவரைக் கோவிலுக்குள் விடமாட்டோம்" என்று அப்போது ஆட்சியாளர் கூறிவிட்டனராம். பின்னர், திருவிதாங்கூர்க் கோயில்கள் யாவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப் பெற்றகாலே, அரசாங்கத்தார் காந்தியடிகளே வரவழைத்தனர். 1937 சனவரி 15-ஆம் நாளில் அடிகள் குமரியில் ஆடி, குமரியம்மனையும் வழிபட்டார். குமரிக் கடலேப் பற்றி அவர் அன்று பின்வருமாறு எழுதினர்:

> மூன்று கடல்கள் இணையும் இடம் இவ்வுலகில் இங்கேயன்றி எங்கேயும் இல்லே. புனித நீரான குமரித் துறையைச் சூழ்ந்திருக்கும் கடல் நீரும் குமரியம்மனைப்போன்றே கன்னிப் பெண்ணுகவே இருக்கிறது. ஏன் எனின், இது கப்பல் வரும் துறைமுகம் அன்று!

குமரி முனையும் வெளிநாட்டினரும்

இந்திய நாட்டு மக்கள் அனைவரையும் கவர்ந்திருப்பதைப் போலவே, வெளிநாட்டினர் பலரையும்—பெரு மக்களேயும் பொதுமக்களேயும்—குமரி முனை தன்பால் ஈர்த்திருக்கிறது.

---

* தென் கோடியில் குமரியம்மன் இருப்பதுபோல இந்தியாவின் வட மேற்கு எல்லேயில் காஷ்மீரத்தில் ஸ்ரீபவானி, வட எல்லேயாகிய நேபாளத்தில் குஹ்யேசுவரி, வடகிழக்கு எல்லேயான அசாமில் காமாக்யா (காமாட்சி) என எல்லேதோறும் அம்மன்கள் உள்ளன.

மேலைநாட்டு யவனரும் இயன்பாதுதா போன்ற நாடு பல கண்ட நன்மக்களும் பாராட்டும் தொன்மை கன்னியா குமரிக்கு உண்டு. இத்தலத்தை ''கொமரி'' என்று பெரிப் புளுசு நூலிலும், ''கொமரியா'' என்று தாலமியும் குறிப் பிட்டுள்ளனர். இத்தாலி நாட்டிலிருந்து புறப்பட்டு ஆழிசூழ் உலகெங்கும் பல நாடுகளை ஆற அமரக் கண்ட மார்கோ போலோ கி. பி. 1293-இல் குமரி முனையை வந்தடைந்தார். இந்தோனேசியாவிலுள்ள சாவகத்தை விட்டுக் கிளம்பிய பின்னர், அவர் வழி தவறியதால், துருவ நட்சத்திரத்தைக் காண இயலாது தவித்தார். குமரி முனையை அடைந்தபோதே துருவநட்சத்திரத்தைத் தாம் மீண்டும் கண்டதாகத் தம் குறிப்புக்களில் அவர் எழுதியுள்ளார்.

வரலாற்றில் இடம் பெற்றத்தக்க இப் பேரறிஞர் களைப் போலவே, பொதுமக்களும் உலகெங்குமிருந்து இயற்கையன்னை எழிலுடன் காட்சி தரும் இக்குமரி முனைக்கு வந்தவண்ணமாக இருக்கின்றனர். 24 மணி நேரம் இச் சிற்றூரில் இருந்தால், இந்தியநாட்டு மொழிகள் அனைத்தையும் உலக மொழிகள் சிலவற் றையும் பேசும் மக்கள் கூட்டத்தைக் கண்டும் கேட்டும் இன்புறலாம்.

கன்னியாகுமரியின் புராதனக் கோயில்களைப்பற்றிய பின்வரும் செய்தி, 1900-ஆம் ஆண்டில் எஸ். வி. தாமஸ் எழுதிய ஆங்கில நூல் ஒன்றில் காணப்படுகிறது :—

''ஐரோப்பிய சரித்திரக்காரர் கன்னியாகுமரியைப் பற்றி முதல்முதல் சொல்லுங்காலம் மகா அலெக்சாந்த ருடைய காலத்துக்குச் சரியாய் இருக்கிறது. பெரிப்ளஸ் என்னும் நூல் எழுதப்பட்ட காலத்திலேயே அந்த முனையானது இந்துக்களுக்கு ஒரு புண்ணிய ஸ்தலமாக

இருந்தது என்று நினைக்க ஏதுவுண்டு. அதிலுள்ள கோயில் சிவனுடைய மனைவியாகிய பார்வதி பேரால் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருந்தது. (''குமரி'' என்ருல் அழகிய இளம்பெண், நித்திய இளமையையும் அழகையும் உடைய பார்வதி.) கிரேக்க மாலுமிகளால் பார்க்கப் பட்ட கோயில் எந்த ஸ்தலத்தில் கட்டப்பட்டிருந்த தென்று இப்போது சொல்ல முடியாது. இப்போது கன்னியாகுமரி முனையில் மூன்று கோயில்கள் இருக் கின்றன. அவைகளில் எல்லாவற்றிலும் பழமையானது என்று லேசில் ஒப்புக்கொள்ளக்கூடியது அழிந்துபோய்க் கடலில் மூழ்கிக்கொண்டே வருகிறது. மற்ருென்று உயரமான கன்மலையின்மேல் கட்டப்புட்டிருக்கிறது; அதின் அடிவாரத்தில் கடல் அலைகள் எப்போதும் அடித் துக்கொண்டே யிருக்கின்றன. இந்தக் கோயில் வெளித் தோற்றத்திலும் கட்டட அமைப்பிலும் அதிகப் பழமை யானதாகத் தோற்றுகிறது. அது பார்வதி பேரால் பிரதிஷ்டை பண்ணப்படாமல், சிவனுடைய குமாரன் பேரால் பிரதிஷ்டையாயிருக்கிறது. ஏனென்ருல், கல்லால் கரடுமுரடாய்ச் செய்த கணேசருடைய விக்கிரகம் அதில் இருக்கிறது. மூன்ருவது கோயில்தான் இப்போது சுவாமி தரிசனத்துக்கு வருபவர்கள் வழங்கும் கோயில். அதைப் பார்த்தால் தற்காலம் கட்டப்பட்டதுபோல் தெரிகிறது.

ஆனுல், நாம் நிதானமாய்ச் சொல்லக்கூடியது என்ன வென்ருல், அவைகளில் எல்லாவற்றிலும் அதிக பூர்வமான கோயில் கடலுக்குள் முழுகிப் போயிருக்கவேண்டும் என்றும், நாளாவட்டத்தில் கடல் அந்தக் கன்மலையைத் தாக்க முடியாதென்று கண்டபோது அந்த மலையின்மேல் பார்வதிக்கு வேருெரு கோயில் கட்டப்பட்டது என்றும் நினைக்கலாம். அந்தப் பக்கத்தில் வசிக்கும் செம்படவருக்

குள்ளும் இதே தாற்பரியம்தான் தற்காலம்வரை இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் சொல்லுவது என்னவென்ருல், 1883-ஆம் வருஷத்தில் சூரியன் பச்சை நிறமாகி, சாஸ்திரிகளெல்லாம் அதினிமித்தம் மயங்கின போது, அவ்விடத்தில் கடலானது சில பர்லாங்குகள் தூரம் உள்ளுக்குச் சென்றுவிட்டதாம். அப்போது திடீரென்று பல இடிந்த கட்டடங்கள் கடலில் தோன்றினதாகவும் அவைகளெல்லாம் வெண்கலக் கதவுகளுள்ளவைகளாயிருந்தமையால் சில மீன்பரவர் கண்டு அவைகளைக் கரைக்கு இழுத்துவர முயன்றதாகவும், ஆனுல், அவர்கள் திரும்பி வருமுன் கடல் அவைகளை மறுபடியும் மூடிப் போட்டதாகவும், பிறகு அவர்கள் அவைகளை கரைக்குக் கொண்டுவர முடியாமல் விட்டுவிட்டதாகவும் சொல்லிக்கொள்ளுகிருர்கள். இது நிச்சயமாய் இருக்குமாளுல், கிரேக்கர்கள் கண்டு பிரமிப்படைந்த கோயில் கடலில் முழுகிப் போயிருக்கவேண்டும் என்றும், இப்போது பார்வதிக்குக் கட்டப்பட்டிருக்கும் கோயில் பின்னுல் உண்டானதென்றும் நினைக்க இடமுண்டு.''

குமரியும் பாரதியாரும்

> வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
> வாழும் குமரிமுனை பாப்பா

குமரி முனைக்கு ''வாழும்'' என்ற அடை கொடுத்ததன் கருத்து என்ன? தமிழகத்தின் தென்னெல்லை கடல்கோளால் அழிந்து குறுகிவந்த நிலவரலாற்றைக் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் அறிவர். இப்பொழுதுள்ள குமரிமுனை இனியும் அழியாது வாழவேண்டும் என்பது அவர் ஆசை. அவ்வாசையை ''வாழும்'' என்ற சொல்லால் புலப்படுத்துவர்.

நீலத்திரைக்கடல் ஓரத்திலேநின்று நித்தம்தவஞ் செய்குமரி!

ஓரத்திலே ஏன் நிற்கின்றாள்? தவம் ஏன் செய்கின்றாள்? இவ்வோரத்தோடு கடல் கிடக்கவேண்டும்; முன்னேறி வரக்கூடாது என்பதுவே தவத்தின் நோக்கம் என இப்பாடலுக்கு விபுலானந்த அடிகள் நயங் கூறினாரென்று 'தொல்காப்பியப் புதுமை' என்ற நூலில் டாக்டர் வ. சுப. மாணிக்கம் கூறியுள்ளார்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பும் தொன்மைப் பெருமையும் உடைய குமரியம்மனின் கோயில் அமைந்த கன்னியாகுமரி இயற்கை அன்னை களிநடனம் புரியும் இடமாகவும் கண்கொள்ளாக் காட்சிகள் நிறைந்த சிற்றூராகவும் கதிரவன் காலையில் எழுவதும் மாலையில் மறைவதும் ஆகிய இரு காட்சிகளையும் காணத்தக்க இடமாகவும் சிறப்புப் பெற்றிருக்கிறது.

கன்னியாகுமரிக் கடற்கரையருகே கடற்சிப்பிகள் புளியங்கொட்டை அளவு முதல் கடுகளவு வரை தனித்தனியே கொழித்திருக்கின்றன.

தொழில் வளர்ச்சிக்குத் துணையாகவுள்ள மோனசைட், இல்மனைட் ரூட்டைல், ஜர்க்கா, சில்லிமினேட்டு என்னும் கனிப்பொருள்கள் தேங்கிக் கிடப்பதால், குமரியில் கடலோரமாக மக்கள் நடந்து செல்லும் கரையின்கண்ணுள்ள மணல் பல வண்ணங்களாகக் காணப்படுகிறது. சில இடங்களில் மெருகுதீட்டிய பச்சரிசிபோன்ற மணல், வேறு சில இடங்களில் மிளகாய்த்துள் போன்ற மணல், இன்னுஞ் சில இடங்களில் குங்குமம் போன்ற செம்மணல், காகம் போன்ற கருமணல், குருணையின் உருவத்தை யொத்த மணல் ஆகியவையும் காணப்படுகின்றன.

கடலிலிருந்து எடுக்கப்படும் சங்குகளைச் செப்பனிட்டு அவற்றுக்கு வடிவமும் வனப்பும் வழங்கி வாங்குபவர்

பெயரையும் ஈட்டி விற்பனே செய்து வாழும் மக்களும் குமரித்துறையில் உள்ளனர்.

கத்தோலிக்கம்

கன்னியாகுமரி 5,000 மக்கள் வாழும் ஊர். இம் மக்களில் பெரும்பாலோர் கத்தோலிக்கர் ஆவர்.

இங்குள்ள அர்ச் உபகார மாதா கோயில் (Our lady of mercy) கன்னியாகுமரியிலேயே உயர்ந்த கட்டிடம். இங்கிருந்து ஊரையும் கடலேயும் கண்டு களிக்கலாம். மேலும், தமிழ்நாட்டின் மிகப் பழமை யான கத்தோலிக்கக் கோயில்களில் ஒன்ருகவும் இது இருந்துவருகிறது. இக்கோயில் உச்சியின் பொன்னு லான சிலுவை உள்ளது. இதன் உயரம் 153 அடி (46 மீட்டர்); தங்கச் சிலுவையின் உயரம் 8 அடி (2.42 மீட்டர்). ஓராயிரம் பேர் ஒரே நேரத்தில் தொழுதற்குரிய இத்தேவாலயம் இந்தியாவுக்கு வந்த இயேசுசபைப் பாதிரியாரான தூய (பிரான்சிஸ்) சேவியர் என்பவரால் கட்டப்பட்டதென்பர். அவர் குமரித்துறை மீனவர் களிடையே வாழ்ந்து அவர்களுக்குப் பல உதவிகள் செய்து அவர்கள் அனேவரையுமே கிறித்தவராக்கினர் என்பர். இங்கிருந்தபோது அவர் கோட்டாற்றில் கத்தோலிக்கச் சமயத்தின் தலேமை நிலேயம் நிறுவி, கடற்கரையெங்கும் கத்தோலிக்கக் கோயில்களேக் கட்டினர்; அவை கவினுறு கட்டிடங்களாகக் காட்சி தந்துகொண்டிருக்கின்றன.

கன்னியாகுமரிக் கத்தோலிக்கர் கோயிலில் ஆண்டு தோறும் டிசம்பர் 8 முதல் 17 வரை அமலோற்பவத் திருவிழா நடைபெறுகிறது. அப்போது கன்னி மேரியின் திருவுருவம் ஊரை வலம்வரும். இவ்விழாவில் மீனவராகிய இவ்வூரினர் மிகவும் ஈடுபட்டுக் கத்தோலிக்கத்தில் தமக்குள்ள பற்றுதலேக் காட்டுகின்றனர். மீனவர்தம்

வருவாயாலேயே இக்கோயில் கட்டப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்கர் இங்கு நடத்திவரும் நிறுவனங்கள் கான்வண்டுப் பள்ளியும் தூய அந்தோணிப் பள்ளியும் ஆகும்.

வட்டக்கோட்டை

நாஞ்சில்நாட்டைப் பகைவர் படையெடுப்பினின்றும் பாதுகாக்கும் அரணாக, மார்த்தாண்ட வர்மா மஹாராஜாவின் ஆணைப்படி டி லன்னய் என்னும் டச்சுக்காரனால் 18-ஆம் நூற்றாண்டில் இக்கோட்டை கட்டப்பட்டது. இது, கிழக்குக் கடற்கரையில் கன்னியாகுமரியிலிருந்து ஐந்து கிலோமீட்டர் வடகிழக்கே இருக்கிறது.

வட்டக்கோட்டையின் பரப்பு மூன்றேமுக்கால் ஏக்கர். இதன் மதில் சுவர்களின் உயரம் 25 அடி (8 மீட்டர்); கடலோரமாக உள்ள சுவர் 29 அடி (9 மீட்டர்) அகலமுடையது. ஒருகாலத்தில் இக்கோட்டை அழகியபாண்டியபுரம் வரை பரவியிருந்திருக்க வேண்டுமென்று இதன் சிதைவுகளிலிருந்து தெரிகிறது.

இந்நாளில் சாரணர்களும், மாணவர் தேசியப் படையினரும் சில நாட்கள் தங்கிப் பயிற்சி பெற இக் கோட்டையைப் பயன்படுத்தி வருகின்றனர். மாநாடுகள் கூடுவதற்கேற்ற அமைப்புக்களும் செய்யப்பட்டால் குமரி முனையின் முக்கியத்துவம் முன்னிலுங் கூடுதலாக இருக்கும்.

கோவளம்

இது கன்னியாகுமரிக்கு அருகேயுள்ள கடற்கரைச் சிற்றூர். இவ்வூர்த் தலைவரைப் பற்றிச் 'செண்பகராமன் பள்ளு' என்ற சிறந்த இலக்கியம் தோன்றியிருக்கிறது.

சுசீந்திரம்

குமரி மாவட்டத்தின் புகழ்பெற்ற தலங்களுள்—கன்னியாகுமரிக்கு அடுத்தபடி—இரண்டாவது தலம் சுசீந்திரம். இக்கோயிலுக்கும் குமரியம்மன் கோயிலுக்கும் தொடர்புபடுத்திப் புராணக் கதைகளும் வழங்குகின்றன. தமிழ்நாட்டின் பெரிய கோயில்களுள் சுசீந்திரம் கோயிலும் ஒன்று.

நாகர்கோயில் — கன்னியாகுமரிச் சாலையில் நாகர் கோயிலிலிருந்து ஐந்து கி. மீ. தொலைவில் வயலுந் தென்னையுஞ்சூழ—திருச்சி மாவட்டத்து வயலூர்போல—அமைந்த பதி இது. இந்திரன் இங்கு வந்து இங்குள்ள சிவபெருமானை வழிபட்டுச் சாப நிவர்த்தி பெற்றதால் இத்தலம் சுசீந்திரம் எனப்பட்டது. பிரமன், சிவன், விஷ்ணு ஆகிய மூன்று லிங்கங்களும் ஒன்றின்மேல் ஒன்ருக இம்மூன்று தத்துவங்களையும் காட்டும் வகையில் அமைந் திருப்பதால் இக்கோயிலுக்கு 'தாணுமாலயப் பெருமாள் கோயில்' என்ற பெயர் உண்டு.

எழுநிலை மாடமும் 134·6 அடி உயரமுள்ள கோபுரம், பல மண்டபங்கள் 93,900 சதுர அடி பரப்பு ஆகிய சிறப் புக்கள் இக்கோயிலுக்கு உரியன. கிழக்கு வாயிலிலுள்ள கோபுரம் விசயநகர அரசர்களாலும், செண்பகராமன் மண்டபம் பண்டைச் சேரமன்னர் ஒருவராலும், வீரபாண்டிய மணி மண்டபம் பாண்டிய அரசர் ஒருவ ராலும், கருடாழ்வார் மண்டபம் திருமலை நாயக்கராலும் கட்டப்பெற்றன. அலங்கார மண்டபத்தின் கூரை ஒரே கல்லால் ஆனது. சிற்பச் சிறப்புடைய இம்மண்டபம், சுசீந்திரத்தை வென்று இவ்வூரின் பெயரைச் சதுர்வேத மங்கலம் என்று மாற்றிய இராஜராஜ சோழனுல் 11-ஆம் நூற்ருண்டில் கட்டப்பட்டிருக்கக்கூடும்.

ஊஞ்சல் மண்டபம், சித்திரசபை, வசந்த மண்டபம், வெண்கல்லால் ஆன நந்தி, 16 அடி 4 அங். (5 மீட்டர்) உயரமுள்ள ஆஞ்சநேயர் உருவம், பெண்முகூர்த்தமாகாக் காட்சிதரும் விநாயகர்(கணேசினி), பாவைப் பெண்களின் அரிய கலை வடிவங்கள், ஒரு தூணில் தட்டினால் அந்த இசையின் எதிரொலி கேட்கும் எதிர்வரிசைத் தூண்கள், இந்திரனின் கதையைக் கூறும் சுவரோவியங்கள் வர லாற்றுக் கருவூலமாக உள்ள கல்வெட்டுக்கள்—இவை காணத்தக்கவை.

சிறந்த சிற்பங்கள் எத்துணையோ கோயில்களில் இருந்துங்கூட, சுசீந்திரச் சிற்பங்கள் ஒப்பும் உயர்வும் இன்றித் தனிப்பெருமையுடன் உள்ளன. ஒரு சிலையின் மூக்கில் சிறு குச்சியொன்றைச் செலுத்தி அதன் காதுவழி யாக அக்குச்சியை வெளிக்கொணரலாம். இத்துணை நுட்பமாக அமைந்தது இங்குள்ள திருமலை நாயக்கன் வடிவம். இறைவனின் திருமேனிகளிலும் இத்தகைய கலைப் பெருமை காணப்படுகிறது. நாட்டியமாடும் நங்கை, வெற்றிலை மடித்துத்தரும் மங்கை, குடைபிடித்த கட்டழகி ஆகியோரின் உயிரோவியங்களும் மீண்டும் மீண்டும் காணத்தக்கன.

இக்கோயிலில் தமிழ் மரபு, மலையாள மரபு இரண்டும் நிலவக் காணலாம். கேரள மாநிலமெங்கும் இருப்பது போலப் போற்றிமாரும், தமிழ் உவச்சர்களும் இங்கு வழிபாடு நடத்துகின்றனர். பள்ளியுணர்த்தல் என்ற மலையாள முறை வணக்கம் இங்கு நாள்தோறும் நிகழ் கிறது. மார்கழியில் திருப்பள்ளியெழுச்சி சதயநட்சத் திரத்தில் தொடங்கி மாணிக்கவாசகர் விழாவுடன் முடிவடையும்; இந்நிகழ்ச்சிகள் தமிழ் மரபுப்படி நடை பெறுகின்றன. மார்கழித் தேர்விழாவில் சுசீந்திரத்துத்

தேர் வீதி வலம் வந்து நிலைக்கும்வரை திருவிதாங்கூர் மன்னர் இன்றும் உணவருந்துவதில்லை.

திருவிதாங்கூர் சம்ஸ்தானத்துடன் கொச்சி சம்ஸ்தானம் எப்போதும் நல்லுறவுடன் இருக்கும் என்று கொச்சி மன்னர் 1762-இல் சுசீந்திரம் கோயிலில்தான் சத்தியம் செய்து கொடுத்தார். முன்னைய அரசர்கள் முதல் இக்கால வேந்தர் வரை வழிபடும் சிறப்பு இச் சுசீந்திரத்துக்கு உண்டு.

மார்கழித் திங்களில் திருவாதிரை விழாவில் நடராசர் வீதி புறப்பாடு நடைபெறுகிறது; சிதம்பரத்தில் நிகழும் திருவிழாவையொட்டி இது ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதனை 'நற்கருமசாலை பண்டு' என்ற நிதியிலிருந்து நடத்துகிறார்கள்; கோயில் பணத்திலிருந்து இவ்விழாவுக்குச் செலவு செய்வதில்லை.

சுசீந்திரம் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் வட்டெழுத்தில் எழுதப் பெற்றிருக்கின்றன. தமிழ் எழுத்துக்களில் வட்டெழுத்தே மிகப் பழமையானது ஆகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுப் பேராசிரியரும் இம்மாவட்டத்தினருமாகிய டாக்டர் கே. கனக சபாபதிப் பிள்ளை சிறந்ததொரு ஆராய்ச்சி நூலாக "சுசீந்திரம் கோயில்" என்ற நூலை ஆங்கிலத்தில் ஆக்கியுள்ளார். கோயில்களைப்பற்றி வெளிவரும் நூல்களுக்கு இது வழிகாட்டி நூலாக உளது.

பத்மனுபபுரம் அரண்மனை

தமிழ் மூவேந்தராகிய சேரரின் குடும்பம் சிதைந்த போது சேரர் வழிவந்தவராகிய வேணாட்டார் என்ற ஒரு பிரிவினர் பத்மனுபபுரத்தில் தங்கள் அரண்மனையும்

தலைநகரும் அமைத்துக்கொண்டனர். இங்கிருந்தே திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தை ஆண்டனர். 1733–லேயே தலைநகர் திருவனந்தபுரத்துக்கு மாற்றப்பட்டது.

1956 முதல் இந்த அரண்மனையைச் சுற்றிய நகரம் தமிழ்நாட்டில் இணைந்தும்கூட, அரண்மனை மட்டும் கேரள அரசாங்கத்திடமே இருந்துவந்தது. தமிழ் நாடு அரசாங்கத்தின் இடைவிடாத வேண்டுகோளுக் கிணங்க, 1961 ஏப்ரல் முதல் இந்த அரண்மனையை இந்திய அரசாங்கம் தேசியக் கலைக்கூடமாகத் தன் பொறுப்பில் நடத்திவருகிறது. நாகர்கோயில்-திருவனந்த புரம் சாலையிலுள்ள தக்கலையிலுருந்து ஒரு கி.மீ.தொலைவி லுள்ள இக்காட்சிக்கூடம் குமரி மா வட்டத்துச் சுற் றுலாவில் தவறுது காணவேண்டிய இடமாகும்.

வேளிமலையின் வடபுறத்தே, கிள்ளியாறின் கரையில், நான்கு கி. மீ. சுற்றளவுள்ள கற்கோட்டையினுள் இந்த அரண்மனை இருக்கிறது.

வெளியே தோற்றப் பொலிவு இல்லாவிட்டாலும் உள்ளே அரிய கட்டிடங்களும் ஈடு இணையில்லாக் கலைச் செல்வங்களும் விரிந்துகொண்டே செல்லும் கிளை மாளி கைகளும் இருப்பது இக்காலத்தில் கவினுறு வாயிலுள்ள கட்டிடங்களினுள்ளே சென்றதும் ஏமாற்றம் அடையும் போலி நிலைக்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கிறது.

வரலாறு

இந்த அரண்மனை எப்போது கட்டப்பட்டது என்பது தெரியவில்லை. பல பகுதிகள் பல அரசர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். 16-ஆம் நூற்றுண்டில் இருந்ததாக டச்சு நாட்டினர் குறிப்புக்களிலிருந்து தெரிகிறது. கோட்டை 1600-இல் கட்டப்பட்ட

தாகவும் கோட்டைக்குள் 10,000 போர்வீரர் இருந்த தாகவும் தெரிகிறது. மஹாராஜா மார்த்தாண்டவர்மா காலத்தில் கல்குளத்திலும் உதயகிரியிலும் கோட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. இந்த அரண்மனையும் அவரால் புதுப்பிக்கப்பட்டு இராமசாமி கோயில் புதிதாய்க் கட்டப் பட்டது. 1744-இல் (கல்குளம் அரண்மனை என்ற பெயரில் வழங்கிவந்த) இந்த அரண்மனையை மஹாராஜா மார்த்தாண்ட வர்மா பத்மனுப சுவாமிக்குக் காணிக்கையாக வழங்கி, இதன் பெயரை பத்மனுபபுரம் அரண்மனை என்று மாற்றினுர். அவர் காலத்தில் நாட்டின் பரப்பு வடக்கே புதிதாகப் பெருகியதால், தலைநகர் திருவனந்தபுரத்துக்கு மாற்றப்பட்டது. அவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த ராம வர்மா காலத்தில் 1790-இல் தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்களை அடிக்கும் நாணயச்சாலை பத்மனுபபுரத்தில் நிறுவப்பட்டது.

கோட்டை

பத்மனுபபுரம் கோட்டை 186 ஏக்கர் பரப்புடையது; வத்திக்கான் தனியரசின் பரப்பைவிடப் பெரியது. கோட்டைச் சுவர்கள் ஐந்து, ஆறு ஆள் உயரமுள்ளவை.

அரண்மனை

இதன் பரப்பு ஆறரை ஏக்கர். அரசனுக்கும் அரச குடும்பத்தினர்க்கும் மந்திரி பிரதானிகளுக்கும் சேடியர் களுக்கும் வீரர்களுக்கும் அமைந்த கட்டிடங்கள் இங்கே உள்ளன.

மேல்தட்டில் (மாடியில்) அரசர் வழிபடும் மண்ட பத்தில் ஸ்ரீ பத்மனுப சுவாமியின் அனந்தசயன உருவம் சுவரோவியமாக, திருவனந்தபுரத்திலுள்ள மூலவிக்கிர கத்தைப் போன்றே எழுதப்பெற்றிருக்கிறது.

சரசுவதி கோயில் ஒன்று அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. அரசர் விழுந்து வணங்கும் கல் இங்கே காணத் தக்கது. இந்த விக்கிரகம் திருவனந்தபுரம் நவராத்திரி விழாவுக்கு ஆண்டுதோறும் எடுத்துச் செல்லப்படுகிறது. இக்கோயிலருகே நவராத்திரி மண்டபமும் நடன அரங்கும் உள்ளன. இயல்பாக உள்ள பரப்பளவைவிடக் கூடுதலாகக் காட்சி தரும்படி வெளிப்புறத்தில் தூண்களும் தொங்குவதுபோன்ற கூரையும் இம்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள. இங்கேதான் அரசரும் அமைச்சர்களும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனராம்.

இந்திர விலாசம் என்பது அரசர் பேட்டிகள் கொடுக்கும் இடமாகும். கல்வெட்டுக்கள், சிற்பங்கள், தாமிரலிகிதங்கள், பழங்காலத்துக் காசுகள், போர்க் கருவிகள் ஆகியவை சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் காட்சிக்கூடமாக இது 1940 முதல் பயன்பட்டு வருகிறது. மஹாராஜா மார்த்தாண்ட வர்மாவின் திவானுக இருந்த இராமய்யன் தளவாய் மேற்பார்வையில் இக்கட்டிடம் கட்டப்பட்டது என்பர்.

இராமாயண நிகழ்ச்சிகள் செதுக்கப்பட்ட 43 பலகைகளுள்ள இராமசாமி கோயிலும், 13-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுக்கள் காணப்படும் நீலகண்டசாமி கோயிலும் அரண்மனை எல்லைக்குள் உள்ளன.

அரசரின் தாயார் இருத்தற்குரிய, ''தாய்க் கொட்டாரம்'', ஈராயிரம் பேர் உணவருந்தக்கூடிய மண்டபம், மந்திரசாலை, வேனிற்காலத்தில் அரசர் படுத்தற்குரிய குளிர்கல் (கிருஷ்ணசிலை என்ற கல்லால் அடித்த கட்டில்), சீனர் அன்பளித்த மிகப்பெரிய மண்பாண்டங்கள், ஒரே மரத்தில் செய்யப்பட்ட சன்னலும் வளையமும், ஒரே மரத்தில் செய்யப்பட்ட தூணும் அதில் கடைந்து போடப்

பட்ட வளையமும், தூண்டாமணி விளக்கு, 64 வகையான மருந்துப் பலகைகளால் செய்யப்பெற்ற கட்டில், பத்மனாப சுவாமிக்கு மார்த்தாண்டவர்ம மஹாராஜா படைத்த வாள், 6 பேர்களை ஒன்றாக விலங்கிடும் கருவி, அரசர் நீராடுமிடம் ஆகியன காணத்தக்கவை.

திப்பு சுல்தானின் தோல்வி, திருவிதாங்கூர் மன்னர் முடிசூட்டு விழா, துலாபாரம், அரசரை நாஞ்சில் நாட்டினர் காப்பாற்றியது போன்ற வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் பல ஓவியங்களும் உள்ளன. இவற்றைப் படியெடுத்து திருவனந்தபுரம் கலைக்கூடத்தில் வைத்திருக்கின்றனர்.

இவற்றுள் ஒரு வரலாறு கூறத்தக்கது. திருவிதாங்கூர் மன்னர்க்கு எதிரிகளாக எட்டு வீட்டுப் பிள்ளைமார் என்ற இனத்தவர் இருந்தனர். இவர்கள் மார்த்தாண்ட வர்மா மஹாராஜாவைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்தனர். மஹாராஜா பத்மனாபபுரம் அரண்மனையில் கட்டிலில் படுத்திருந்தபோது, அவருள் சிலர் படுக்கை அறையில் புகுந்தனர். ஒருவர் தம் கரத்திலுள்ள வாளை மேலெடுத்து ஓங்கியபோது மேலேயுள்ள மரக்கட்டையில் வாள் பதிய அதனை உருவி மீண்டும் எடுப்பதற்குமுன் மன்னர் அவனைக் கொன்றுவிட்டார் என்று ஒரு வரலாறு உண்டு. கட்டிலும் வெட்டுப்பட்ட மரக்கட்டையும் இங்கு இருக்கின்றன.

அரண்மனை வாயிலில் காணப்படும் கடிகாரம் 17-ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக் கொல்லன் ஒருவனால் இங்கேயே செய்யப்பட்டது. இதைப்பற்றிய விவரம் வருமாறு:—

உள்ளூர்க் கொல்லன் ஒருவனுக்கு ஐரோப்பாவிலுள்ள கடிகாரத் தொழிற்சாலைகளைப் பார்த்துத் தானும் ஒரு கடிகாரம் செய்ய வேண்டுமென்ற ஆசை அழுத்தமாக

இருந்தது. அரண்மனையைக் காணவந்த வெளிநாட்டினருடன் அவனும் தந்திரமாகச் சென்று அந்நாட்டுக் கடிகாரத் தொழிற்சாலைக்குள் நுழைந்து தான் ஒரு குருடன் என்று சொல்லி அவர்களை ஏமாற்றி அவர்களுடைய தொழில் இரகசியங்களையெல்லாம் தெளிவாகத் தெரிந்துகொண்டு தாய்நாட்டுக்கு வந்து சேர்ந்தானும். பின்னர், தானே ஒரு கடிகாரம் செய்து அரசனுக்குக் காணிக்கையாக வழங்கினனும். அரசனும் அவனைப் போற்றுமுகத்தான் அவனுக்குப் பல பரிசுகளை வழங்கினனும். இக்கடிகாரமே இன்றும் இயங்கிக்கொண்டிருக்கிறது. கைகளை அசைக்கும் சாவி சுருங்குவதும் விரிவதும் கற்கள் எடையினுலேயே அமைந்திருப்பது இக் கடிகாரத்தின் சிறப்பு.

கேரள சிற்ப முறைப்படி அமைக்கப்பெற்ற இராமசாமி கோயிலும், ஆலம்பரை என்று சொல்லப்படும் பகவதி கோயிலும் அங்குள்ள பெரிய அரசமரமும், மதுரை மீனுட்சியம்மனின் உருவம்போன்று அமைத்துத் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மர் கட்டியுள்ள நீலகண்டேசுவரம் என்னும் கோயிலும் இக்கோயிலிலுள்ள மார்த்தாண்டவர்மர், திருமலை நாயகர் உருவச்சிலைகளும் காணத்தக்கன.

உதயகிரிக் கோட்டை

தமிழ்நாடெங்கும் கோட்டைகளும் கொத்தளங்களும் நிரம்ப உள்ளன. சின்னஞ்சிறு குமரி மாவட்டமும் இதற்கு விலக்கன்று. இங்கு இரு கோட்டைகள் உள்ளன. ஒன்று, உதயகிரிக்கோட்டை; மற்றென்று, கன்னியாகுமரி அருகேயுள்ள வட்டக்கோட்டை.

நாகர்கோயிலிலிருந்து (கல்குளம் வட்டத்தின் தலை நகரான) தக்கலைக்குச் செல்லும் வழியில் தக்கலைக்கு

அருகேயுள்ள புலியூர்க்குறிச்சியில் (பத்மனுபபுரம் அரண்மனையிலிருந்து ஒரு கிலோ மீட்டர்த் தொலைவில்) இக்கோட்டை உளது. இது பத்மனுபபுரம் அரண்மனைக்குக் கிழக்கே இருப்பதால், ''சூரியன் உதயமாகும் மலை'' என்னும் பொருளில் உதயகிரி என்று பெயரிடப்பட்டது. இம்மலையின் உயரம் 260 அடி அல்லது 80 மீட்டர். அரண்மனைக்கு அருகேயுள்ள இம்மலை இராணுவ முக்கியத்துவம் பெற்றிருந்ததால், இதையொட்டி ஒரு கோட்டை அமைத்து, திருவிதாங்கூர்ப் படைகள் இங்கு வைக்கப் பட்டிருந்தன.

இக்கோட்டை 1600-இல் கட்டப்பட்டது; 1741 முதல் 1744 வரை மூன்ருண்டுக் காலத்தில் மார்த்தாண்ட வர்மா மஹாராஜாவால் புதுப்பிக்கப்பட்டது. 90 ஏக்கர்ப் பரப்புள்ள இக்கோட்டையின் சுவர்கள் 18 அடி (ஐந்தரை மீட்டர்) உயரத்திற்கு எழுப்பப்பட்டு, 15 அடி (நாலரை மீட்டர்) அகலத்துடன் கருங்கல்லால் கட்டப் பட்டிருப்பதிலிருந்து இதன் உறுதியான வேலைப்பாட்டை உணரலாம்.

துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்துகள், இரும்புக் குண்டுகள், பிற போர்க் கருவிகள் ஆகியவற்றை ஆக்கும் ஆயுதச்சாலையொன்று இங்கு இருந்தது. இதன் மேற் பார்வையாளராயும் திருவிதாங்கூர்ப் படையின் தளபதி யாகவும் இருந்தவர் டி லன்னுய் என்ற டச்சுக்காரரர் ஆவார். இக்கோட்டையிலுள்ள முற்றுப்பெருத கிறித் தவக் கோயிலில் இரு சமாதிகள் உள்ளன. இவை டி லன்னுய், அவர் மனைவி ஆகிய இருவரும் அடக்கம் செய்யப் பெற்ற சமாதிகளாகும். இலத்தின் மொழியிலும் தமிழ் மொழியிலும் இச்சமாதிகளில் டி லன்னுய் வரலாறு பொறிக்கப்பெற்றிருக்கிறது. தமிழில் காணப்படும் வாசகம் வருமாறு:—

உதயகிரி கோட்டை

இந்த திருலோகத்திலே இருந்து பரலோகத்திற்கு சென்றிருக்கும் திரு, பெனடிக்ற்றஸ் டிலனுய் போர்து கீசிய படையுடன் திருவாங்கூரைப் பிடிக்க குளச்சல் துறைமுகம் வந்திறங்கினர். நடந்த சண்டையில் தோல்வியுற்று கைதியாக்கப்பட்டார். 'இவர் ஓர் சிறந்த போர் வீரராக இருந்ததால், திருவாங்கூர் மகாராஜா ஸ்ரீ மார்தாண்டவற்மா தமது பட்டாள தளபதி யாக்கினுர். இவர் காலத்திலிருந்துதான் திருவாங்கூர் பட்டாளம் நாகரீகமடைந்து பீரங்கி முதலிய சுட பழகின. முதலில் அவர்கள் உபயோகித்த பீரங்கி குண்டுகளைத்தான், இந்த வளைவைச் சுற்றிலும் நாம் காண்பது. மகாராஜின் சிறந்த நண்பரான இவரை எல்லோரும் கப்பித்தார் என்றழைத்தனர். இவர் காலத்தில் திருவாங்கூரின் மேல் படையெடுத்த அன்னியரை தோற்கடித்தார். இந்த நாட்டை தன் சொந்த நாடாகவே எண்ணி தம் மனைவியுடனும் மகனுடனும் வாழ்ந்தார். கிறிஸ்து மதத்தினரான இவர் தெய்வ வழிபாடு பண்ண மகாராஜா, கட்டிக் கொடுத்ததே இவ்வழகிய தேவாலயம். யாவரும் இதை கப்பித்தார்பள்ளி என்பார்கள். இவர் கற்ம வீரராக இருந்தார். வேண்டும் நன்மைகளை மகாராஜா செய்து தந்தார். கைதியாகப் பிடிபட்டு சுதந்திர புரடாகி, இந்நாட்டின் வீரத் தளபதியாக காலமானுர். அவர் புகழ் வாழ்க!

தேசிய உணர்ச்சி ஏற்பட்டு, வேலுத்தம்பி தளவாய் கிளர்ந்தெழுந்தபோது, கிழக்கிந்தியக் கும்பெனிப் பட்டாளம் திருநெல்வேலியிலிருந்து ஆரல்வாய் மொழிக் கணவாய் வழி வந்து இக்கோட்டையைப் பிடித்துக் கொண்டது. 19-ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதிவரை

வெள்ளைக்காரப் படைகள் இங்கே இருந்தன. இன்றும் இக்கோட்டையில் எஃகுக் குண்டுகள் பல இடங்களில் காணப்படுகின்றன.

இக்கோட்டை வாயிலில் உயர்ந்த மேடையில் ''விருந்தினர் இல்லம்'' ஒன்றை அரசாங்கத்தார் அழகுற அமைத்திருக்கிறார்கள்.

23. அகஸ்தீசுவரம் வட்டம்

நாகர்கோயில்


இது குமரி மாவட்டத்தின் தலைநகர்; தமிழ்நாட்டின் தென்கோடியிலுள்ள பெருநகர். காலஞ்சென்ற திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தில் திருவனந்தபுரத்துக்குத் தெற்கே பெருநகராக இது ஒன்று மட்டுமே இருந்து வந்தது.

பழையாற்றின் கரையில் அமைந்த இவ்வூர் திருநெல்வேலியிலிருந்து 50 மைல் (80 கி. மீ), திருவனந்தபுரத்திலிருந்து 42 மைல் (68 கி. மீ), கன்னியாகுமரியிலிருந்து 12 மைல் (20 கி. மீ) தொலைவுகளில் உளது.

நகரின் சுற்றுப்புறங்களுக்குச் செல்ல ''டவுன் பஸ்'' களும், வெளியூர்களுக்குச் செல்ல அரசாங்கப் பஸ்களும் தனியார் பஸ்களும், நெடுந்தொலைவிலுள்ள நகரங்களுக்குச் செல்ல அரசாங்கத்தார் நடத்தும் எக்ஸ்பிரஸ் பஸ்களும், ரயில் பயணிகளைக் கொண்டு போகவும் அழைத்துவரவும் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து அவுட் ஏசன்சி போக்குவரத்தும் நாகர்கோயிலுக்கு உண்டு.

இந்நகரின் பழைய பெயர் கோட்டாறு. வரலாற்றுப் புகழ்பெற்ற மயிலாப்பூர் இன்றைய சென்னைமாநகரின் ஒரு

நாகர்கோயில் நகரம்



1. நாகராஜாகோயில்
2. மணிக்கூண்டு
3. கலெக்டர் அலுவலகம்
4. கவிமணி நிலையம்
5. வடசேரி சந்திப்பு
6. ஸ்காட் கல்லூரி
7. சி.பி.பூங்கா
8. மீனாட்சிபுரம்
9. வடிவீசுவரம்
10. கோட்டாறு
11. கன்னியாகுமரிச்சாலை
12. ஒழுகினசேரி
13. இடலாக்குடி

பகுதியாக ஆகிவிட்டதுபோல, பல நூற்றுண்டுகளுக்கு முன் பெருமையுடன் விளங்கிய கோட்டாறு; இன்று இந் நகரின் சிறுபகுதி ஒன்றைமட்டும் குறிக்கிறது. கோட்டாறு, வடிவீசுவரம், ஒழுகினசேரி, வடசேரி ஆகிய சிற்றூர்களும் சேர்ந்து ஏறத்தாழ ஒரு நூறுயிரம் மக்கள் வாழும் நகராக நாகர்கோயில் திகழுகிறது.

இந்நகரில் *1900*-ஆம் ஆண்டளவில் ஒரு நகராண்மைக் கழகம் ஏற்பட்டது. இக்கழகத்தின் வருவாய் (*1960*-இல்) ஏழு இலட்சம் ரூபாய்; இது, இரண்டாந் தர நகராண்மைக் கழகம் ஆகும்.

கிறித்தவ சமூகத்தினர் இந்நகரில் முக்கியமான மக்களினத்தவர் ஆவர். புகழ்பெற்ற தேவாலயங்கள் கட்டியும் கல்வி நிறுவனங்களும் மருத்துவ நிலையங்களும் அமைத்தும் நாகர்கோயிலில் கத்தோலிக்கரும் பிராடஸ்டண்டுகளும் நனிசிறந்து விளங்கி நாளும் வளர்ந்து வருகின்றனர்.

இரு கல்லூரிகள், ஒரு பல்தொழிற் கல்லூரி, ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் கல்விகற்பிக்கும் எண்ணற்ற உயர்நிலைப் பள்ளிகள் இந்நகரிலுள. மருத்துவ மனைகள் மிகுதியால் இந்நகரை ''மருத்துவமனை மலிந்த நகரம்'' (City of Hospitals) என்று சிறப்பிப்பதும் உண்டு.

1956-இல் தென் திருவிதாங்கூர் தமிழ்நாடுடன் இணைந்ததால் புதியதொரு மாவட்டம் ஏற்பட்டது; நாகர்கோயில் இதன் தலைநகராயிற்று. இதனுல் இந்நகரில் அங்கிங்கெனுதபடி எங்கும் அலுவலகங்கள் அமைந்தன; காணுமிடமெங்கும் ஓர் அலுவலர் காட்சியளிக்கிருர். இடவிலையும் வீட்டு வாடகையும் பல மடங்காகிவிட்டன.

கைத்தறி நெசவும் சித்திரச் சரிகை வேலையும் இந்நகரின் குறிப்பிடத்தக்க தொழில்களாக உள்ளன.

மாவட்டத்திலேயே மழை குறைவாக உள்ள இடம் நாகர்கோயிலே ஆகும். மாவட்டமெங்கும் உற்பத்தி யாகும் பொருள்கள் இங்கு வந்து விற்பனையாவதால், இந்நகரில் வாணிகம் வளர்ந்து வருகிறது.

நாகர்கோயில் என்ற பெயர் நாகத்தின் உருவமே இறைவனாக அமைந்த நாகராஜா கோயில் இருப்பதால் ஏற்பட்டிருக்க வேண்டும். 15-ஆம் நூற்றாண்டில் இப் பகுதியைக் களக்காட்டு அரசர் ஆண்டுவந்தார் என்றும் குட்டநோய் அவரை வாட்டியபோது அவர் சர்ப்பசாந்தி செய்து நாகராஜனுக்குக் கோயில் கட்டி நலமடைந்தா ரென்றுங்கூறுவர். ஐந்து தலை நாகங்களின் உருவங்களே இக்கோயிலில் துவாரபாலகர்களாக இருப்பது குறிப்பிடத் தக்கது. கர்ப்பக்கிரகத்தில் எப்போதும் நீர் ஊறிய வண்ணமாக இருப்பதும் அதிலுள்ள புற்றுமண் இறைவழி பாட்டுக்கு வருபவர்க்குப் பிரசாதமாக வழங்கப்பெறு வதும் இக்கோயிலின் சிறப்புக்களாகும். இங்குள்ள கல்வெட்டுக்கள், இக்கோயில் 15-ஆம் நூற்றாண்டில் சமணர் கோயிலாக இருந்தது என்பதையும் இதற்குச் சமணர்கள் நில மானியம் வழங்கிய செய்தியையும் தெரிவிக்கின்றன. இக்கோயில் தூண்களில் சமணத் தெய்வங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

நாகர்கோயில் நகரம் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் பெரு நகராக இருக்கிறது. நாகர்கோயில், கோட்டாறு, இடலாக்குடி, வடிவீசுவரம், வடசேரி, ஆசாரிப்பள்ளம் என்று பல சிற்றூர்கள் உள்ளன.

கோட்டாறு

குமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோயிலின் ஒரு பகுதியாக, கோட்டாறு இருந்து வருகிறது. ஒரு

காலத்தில் கோட்டாறு என்ற பெயர் நாகர்கோயில் நகர் முழுமைக்கும் இருந்தது என்பது 'கோட்டாருன மும்முடி சோழபுரத்து நாகர்கோயில்' என்ற கல்வெட்டுத் தொடரிலிருந்து தெரிகிறது. பிளினி, தாலமி என்பவா களாகிய மேனாட்டு அறிஞர்களும் வாணிபத் துறையில் இவ்வூரின் பழைமைச் சிறப்பினைப் பாராட்டியுள்ளனர். கலிங்கத்துப் பரணியிலும் கோட்டாற்றின் பெயர் குறிப் பிடப்பெற்றிருக்கிறது.

மிளகாய் வத்தல் வாணிகமும் நெல்மிஷன் மண்டி களும் இவ்வூரில் மிகுதியாக உள்ளன.

உடல்நலத் துறையில் கோட்டாறு பின்தங்கியிருக் கிறது. இங்குள்ள தூய சேவியர் தேவாலயத்தில் ஆண்டு தோறும் டிசம்பர் திங்களில் நடைபெறும் திருவிழா முடிவடைந்ததும் காலரா போன்ற தொத்துநோய்கள் சிலசமயம் பரவுகின்றன.

கோட்டாற்றில் இந்துக்கள், கிறித்தவர்கள் ஆகியோர் போல முஸ்லிம்களும் தொகையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய தொழுகைக்குரிய ஜாம்ஆ மசூதிகள் இங்கு உள்ளன. இவ்வூரிலுள்ள பிள்ளையார் சோழர் காலத்தியது என்பர்.

தேவேந்திரனுடைய வெள்ளையானை மலையினின்றும் தன்னுடைய கொம்பாலே கிழித்துவந்து ஓர் ஆற்றை உண்டாக்கிற்று. கோட்டினாலே ஆற்றை ஆக்கி வந்த யானை இவ்வூரில் சிறிது ஓய்வெடுத்தது. எனவே கோட்டாறு எனப் பெயர் வந்தது.

இடலாக்குடி

இவ்வூர் ஆய் அந்திரன் ஆட்சியின் கீழ் இருந்து வந்ததால் இதன் பெயர் 'இடராய்க்குடி' என்று வழங்கி

வந்தது. இடராய்க்குடி என்றிருந்ததற்குக் கல்வெட்டுகள் பல சான்று பகர்கின்றன. இடராய்க்குடி என்னும் பெயரே நாளடைவில் 'இடலாக்குடி' என்ருயிற்று.

இவ்வூர் வாய்க்கால்களால் வளம்பெற்று நெற் பயிரும் தென்னைப் பயிரும் மிக்கது. ஊரையடுத் துள்ள இரு பெரிய குளங்களில் ஒரு காலத்தில் செந்தாமரைப் பூக்களும் வெண்டாமலர் பூக்களும் நிறைந் திருந்ததாகக் கூறுவர்.

இடலாக்குடியில் முஸ்லிம்களே அதிகமாக வாழ் கின்றனர். மசூதிகளும் கோவில்களும் இங்கு உண்டு. இங்குள்ள முஸ்லிம் பள்ளிகளில் வேம்படிப்பள்ளி என்பது புகழ்வாய்ந்தது. இங்குதான் முதல் முஸ்லிம் தமிழ்ப் புலவராம் ஆலிப்புலவர் என்பார் தனது கவிதை நூலாகிய 'மிருஜுமாலை' என்னும் நூலை அரங் கேற்றினர். இந்தப் பள்ளியில் நிற்கும் வேம்பு மரத்தால் பள்ளிக்கு 'வேம்படிப்பள்ளி' எனும் பெயர் ஏற்பட்டது.

ஞானியார் சாகிப் என்று வழங்கப்படும் சைகு முதுயித்தீன் மலுக்கு முதலியார் என்னும் பெயருடைய ஞானமேதையும் இவ்வூரில்தான் பிறந்தார். இவர் ஓர் புலவர் ஞானியாவார். இவா இயற்றிய 'மெய்ஞ்ஞானத் திருப்பாடல்கள்' படிக்கப் படிக்க இனிப்பவை. ஆண்டு தோறும் இவ்வூரில் இவர் அடக்கமாகியுள்ள பள்ளியில் இவர் பாடல்கள் பாடி விழாக் கொண்டாடுகின்றனர். இவர் ஓர் பக்திமான். அற்புதங்கள் பல செய்த அற்புத மகாத்மா. திருவிதாங்கூர் மாகாராஜா இவரிடம் அளவற்ற மரியாதையுடன் நடந்து வந்தார். இவர் அடக்கமாகியுள்ள இடம் 'ஞானியார் பள்ளி' என்று வழங்கப்படுகிறது.

இவ்வூரில் உள்ள மக்களின் முக்கிய தொழில்கள் உழவும் நெசவும் ஆகும். முஸ்லிம்கள் முக்கியமாக நெசவுத் தொழிலைச் செய்து வருகின்றனர். இங்கு ஓர் அரசாங்க உயர்நிலைப் பள்ளியும் உண்டு. அபுல்கலாம் ஆசாத் நினைவுப் பூங்காவும் இங்குண்டு. தமிழறிவு மிக்க வித்துவான்கள் பலர் இங்கு உளர். இங்குள்ள பெரிய நூலகமாகவும் படிப்பகமாகவும் 'சதாவதானி பாவலர் மன்றம்' இருந்து பொதுமக்களுக்குப் பல்வகைகளிலும் சேவை செய்து வருவதோடு தமிழ்ப் பணியும் ஆற்றி வருகிறது. இவ்வூரிற்றான், தமிழ்ப் பெரும் புலவர், கலைக் கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமுதி, சதாவதானி, அல்லாமா (டாக்டர்) கா. ப. செய்குதம்பிப் பாவலர் பெருந்தகை பிறந்து வாழ்ந்தார் என்றால் இவ்வூரின் புகழ் சொல்லுந்தரத்ததா?

(இடலாக்குடியின் வடபகுதிகள் சில 'கோட்டாறு' என்றே முன்னர் வழங்கப்பட்டு வந்தது இவண் குறிப் பிடத்தக்கது.)

அகத்தீசுவரம்

தென்னஞ்சோலைகள் அடர்ந்த சிற்றூர். நாகர் கோயிலிலிருந்து 15 கி. மீ தொலைவிலும் கன்னியா குமரிக்கு அருகேயும் இருக்கிறது. இது நெடுங்காலமாகச் செல்வாக்குள்ள ஊர். இதனாலேயே இவ்வூர்ப் பெயரால் இவ்வட்டம் அமைந்துள்ளது.

லீபுரம்

கன்னியாகுமரிக்கு அருகே வளைகுடாவிலுள்ள சிறு துறைமுகம். கத்தோலிக்க மீனவர் நிறைந்த சிற்றூர்.

புத்தேரி

நாகர்கோயில் - வடசேரியை அடுத்த சிற்றூர். பெரிய ஏரியும் புற்றை வழிபடும் மக்களும் உள்ள

செழிப்பான இடம். மருத்துவ மனையாலும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை வாழ்ந்ததாலும் புகழ் பெற்ற ஊர்.

தேரூர்

இது சுசீந்திரத்தை அடுத்த சிற்றூர். கௌதம முனிவனுடைய சாபத்தைப் பெற்றது. இவ்வூரில் வானவர்கோன் தன் மேனியில் ஏற்பட்ட புண்களை நீக்கும்பொருட்டாகச் சுசிந்தைப்பதியிலுள்ள இறைவனை வழிபடுவதற்குத் தேரூர்ந்து வந்துகொண்டிருந்தான். ஆலயம் நெருங்கியது என்பதை அறிந்த தேவேந்திரன் தான் ஏறிவந்த தேரை நிறுத்திவிட்டுக் கால்நடையாகச் சுசீந்திரம் நோக்கி வந்தான். அவன் தேர் நின்ற இடம் தேரூராக வழங்கி வருவதாகப் புராணக் கதை உண்டு.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பிறந்த பதி இதுவே; அவர் பெயரால் இவ்வூரில் 'கவிமணி நூல் நிலையம்' இருக்கிறது.

நல்லூர்

இது சுசீந்திரத்துக்கு அருகே இருக்கிறது. இங்கு இடையர் குடி மிகுதி. பால், நெய், தயிர் தங்கு தடையின்றிக் கிடைக்கும். இவ்வூர் நல்லூர்தானே ?

மருங்கூர்

நல்லூர், இறைபுதூர் என்னும் ஊர்களைத் தாண்டி இவ்வூரை அடையலாம். இங்குள்ள சிறு குன்றின் மீதுள்ள முருகன் கோயில் மிகப் புகழ் பெற்றது. நன்செய் நிலங்களும் அல்லியும் தாமரையும் நிறைந்த சிறுசிறு குளங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

பறக்கை

இது சுசீந்திரத்தின் தென்மேற்கே யுள்ளது. இங்குள்ள பெருமாள் கோயில் புகழ் பெற்றது ; எழுந்தருளியிருக்கும் பெருமாளின் பெயர் மதுசூதனன். இது பழங்கால ஆலயமாகக் கருதப்படுகிறது. மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி நாளில் இங்குள்ள சுவர்க்க வாசல் வழியாகப் பக்தர்கள் செல்லுவர்.

ஆசிராமம்

இது சுசீந்திரத்தை அடுத்த சிற்றூர். அத்திரி மாமுனிவர் அருந்தவம் செய்து வேள்வியாற்றிய இடம் ஆசிராமம். இங்குள்ள ஊருணி (எனப்படும் குளம்) அவரது வேள்விக் குண்டமெனக் கூறப்படுகிறது. அதில் எத்தகைய நோயுடையோர் நீராடினாலும் அத்தண்ணீர் அவர்களைப் பாதிப்பதில்லை என்று சொல்லப்படுகிறது.

மூன்று கிளைகளையுடைய அரசமரம் நெடுங்காலமாக இருந்து வந்தது. அவற்றிலே திருமூர்த்திகளையும் குழந்தைகளாக மாற்றி அனுசூயை தாலாட்டியதாக வரலாறு வழங்கி வருகிறது.

அத்திரியன் ஆசிரமம் அமைந்த காரணத்தால் ஆசிராமம் என்ற பெயர் ஏற்பட்டது.

திருப்பனந்தாள் ஆதீனத்தாரின் கட்டளை மடம் இவ்வூரின் வடபால் இருந்து வருகிறது.

மயிலாடி

இவ்வூர் சுசீந்திரம் – கன்னியாகுமரிச் சாலையிலுள்ள அஞ்சு கிராமத்திற்கு அருகே இருக்கிறது. கலிங்கத்துப் பரணியில் இந்த ஊரைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

முட்டம்

இது கடற்கரையிலுள்ள சிற்றூர். இவ்வூருக்குள் கடல் துருத்திக்கொண்டு அல்லது முட்டிக்கொண்டு இருக்கிறது. எனினும் இங்கே கப்பல்கள் ஒதுங்குவதில்லை. சிறியதொரு கலங்கரை விளக்கு இங்கு இருக்கிறது.

கடல் உள்நோக்கி அரைவட்ட வடிவில் அமைந்திருப்பதாலும் ஊர் மிக உயரத்திலிருப்பதாலும் உடல் நலத்திற்கே நல்வாழ்விடமாக இச்சிற்றூர் இருக்கிறது. ஈமிரல்லாத காற்று அடிப்பதும் இவ்வூரின் பிறிதொரு சிறப்பு. இவ்வூரிலிருந்து கடலைக் காணும்போது, ஆகாய விமானத்திலிருந்து கடலைக் காண்கிறோம் என்ற உணர்ச்சி தான் ஏற்படும். கிறித்தவ ஆலயங்களும் ஊரின் அமைப்பும் அழகிய காட்சியைத் தருகின்றன. மீன் பிடித்தலும் அமெரிக்காவிற்கு அனுப்புவதற்காகத் தவளைகளைப் பிடித்துப் பாடம் பண்ணுவதும் இவ்வூரின் முக்கியத் தொழில்களாக உள்ளன. இவ்வூர் நாகர்கோயிலிலிருந்து 18 கி. மீ. தொலைவிலுள்ளது. இவ்வூர் வழியாகச் சில ஊர்திகள் மணவாளக்குறிச்சிக்குச் செல்லுகின்றன.

திருநந்திக்கரையில் ஐப்பசிச் சதயநாளில் தன் பிறந்த நாளைக் கொண்டாட, இவ்வூரை (முட்டத்தை) ராஜ ராஜ சோழன், திருநந்திக்கரைக் கோயிலுக்கு அளித்ததாகக் கல்வெட்டு ஒன்றின் வாயிலாகத் தெரிகிறது.

24. தோவாளை வட்டம்

பூதப்பாண்டி

இது தோவாளை வட்டத்தின் தலைநகரம். இவ்வூர் நாகர்கோயிலிலிருந்து பத்து கி. மீ. தொலைவிலிருக்கிறது. ஊரைச் சுற்றி ஆறு இருக்கிறது.

புறநானூற்றில் குறிக்கப்படும் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்னும் பாண்டிய மன்னர் பெயரால் அவன் மகனாகிய பசும்பூண் பாண்டியனால் இவ்வூர் அமைக்கப் பட்டதென்று அறிஞர் கருதுகின்றனர்.*

இவ்வூர்க் கோயிலிலுள்ள சுவாமிக்குப் பூதலிங்கம் என்று பெயர். இப்பெயர் குமரி மாவட்டத்தில் பெரு வழக்கிலிருக்கிறது.

பூதத்தான் கோயிலின் கீழ்ப்பகுதியிலுள்ள செண்பக மரம் 800 ஆண்டுகளாக இருப்பதாக இவ்வூரினர் என்னிடம் கூறினர். 'தொட்டாலொட்டும் நாணப் பூக்கள் கூட்டம் அமைந்திட்ட காட்டேகி மடத்தின் நாட்டம் காணக்காண நாடும் கடவுளருள் கூடும்' என்று இவ்வூர்க் கவிஞர் ஒருவர் பாடியுள்ளார்.

1945 முதல் இவ்வூரில் இவ்வூரினரான ப. ஜீவானந்தம் பெயரால் 'ஜீவா நூலகம்' நடைபெற்று வருகிறது.

இறச்சகுளம்

இங்கு பூதத்தான் உருவம் பெரிய வடிவில் இருக்கிறது.

---

* The Chronology of Early Tamils—K. N. Sivaraja Pillai.

கடுக்கரை

மலையாள மங்கையர் மகிழ்ச்சியுடன் தலைமயிரில் தேய்த்துக் கொள்ளும் ஈஞ்சை என்னும் அழகிய பட்டை இவ்வூரில் கிடைக்கிறது.

வெள்ளமடம்

இவ்வூரில் கால்நடைப் பண்ணை ஒன்று ஏற்பட்டுள்ளது.

தோவாளை

திருவிதாங்கூர் மன்னரான மூலம் திருநாள் கட்டிய மாளிகை இவ்வூருக்கு அழகு செய்கிறது. இவ்வூர்த் தாழம்பூ, முல்லை, பிச்சி, அரளி, மருக்கொழுந்துப் பூக்கள் குமரி மாவட்டமெங்கும் செல்லுகின்றன; நெல்லை மாவட்டத்திலும் இவை விற்பனையாகின்றன.

ஔவையார் அம்மன் கோயில்

இது ஔவையம்மன் கோயில் என்றும் கூறப்படுகிறது.

இக்கோயில் தாழைக்குடியிலிருந்து இரண்டு கி. மீ. வடக்கேயுள்ள செண்பகராமன்புதூரில் நாகர்கோயிலிலிருந்து 11 கி. மீ. தொலைவில் இருக்கிறது. ஆடிச் செவ்வாய்க்கிழமைகளில் இக்கோயிலுக்கு மிகுதியான மக்கள் செல்லுகின்றனர். பிற திங்கள்களிலும் செவ்வாய்க்கிழமைகளில் ஓரளவு கூட்டம் இருக்கும். தமிழ்நாட்டில் ஔவையாருக்குக் கோயில் அமைந்திருப்பது இங்கு மட்டுமே யாகும். ஔவையார் காடெல்லாம் கடந்து ஆறெல்லாம் நீந்தி நாஞ்சில்

வளவனைச் சந்தித்து அவர் கொடைவன்மையைப் பாராட்டினார் என்பதற்கு ஆதாரமாக இக்கோயில் இங்கே அமைந்திருக்கிறது.

இப்பகுதியில் ஔவையார் என்ற பெயர் ஆண் பெண் இருபாலாருக்கும் இடப்படுகிறது.

ஔவையார் கோயில், தாரகமலையின் அடிவாரத்தில் இருக்கிறது. அம்மலைமீதுள்ள அகத்தியர்மலை என்னும் பகுதியில் அகத்தியர் கோயில் இருக்கிறது. அங்கு, தானே ஊறி வழியும் சிறிய ஓடை ஒன்று உண்டு. முழு நிலா நாட்களில் மிகுதியான ஆடவர் இங்கே சென்று இந்த ஓடையில் நீராடி வழிபடுவர்.

திருப்பதிசாரம்

நெல் வயல்கள் சூழ, பழையாற்றின் கரையில் அமைந்த வளமான இச்சிற்றூர் சிறந்ததொரு வைணவத் தலமாகும். இது 108 திருப்பதிகளில் ஒன்று. திருவண் பரிசாரம் என்பது மருவி திருப்பதிசாரம் என்ற பெயர் இத்தலத்திற்கு வழங்கி வருகிறது. ஆழ்வார்களுக்கு நடுநாயகமாக விளங்கும் நம்மாழ்வாரின் தாயாராகிய உடையநங்கையார் அவதரித்த தலமாகையால் வைணவ சமயத்தினர் அனைவரும் இத்தலத்திற்கும் இங்குள்ள திருவாழ்மார்பன் கோயிலுக்கும் சித்திரைத் திருவிழா நாளிலும் மற்ற நாட்களிலும் பெருவாரியாக வருகின்றனர். திருவிதாங்கூர் அரசரும் இங்கு வருவது வழக்கமாக இருந்தது. அரசருடைய கொட்டாரம் இவ்வூரில் இருக்கிறது.

நம்மாழ்வார் இவ்வூரைப்பற்றிப் பின்வருமாறு பாடியிருக்கிறார் :

"வருவார் செல்வார் வண்பரி சாரத்திருந்த, என்
திருவாழ்மார்வற் கென்திறம் சொல்லா செய்வதென்,
உருவார் சக்கரம்சங்குசுமந் திங்குமமோடு,
ஒருபாடுழல்வா ஞேரடியானு முளனென்றே."
(பாட்டு எண். 3475.)

நம்மாழ்வார் பெயரால் இவ்வூரிலுள்ள விவேகாபி விருத்தி புத்தக நிலையம் என்னும் நூலகமும் அரசாங்கத்தார் இவ்வூரில் அமைத்துள்ள நெல்வித்துப் பண்ணையும் இங்கே காணத்தக்கன. இவ்வூர் நாகர்கோயிலிலிருந்து ஐந்து கி. மி. தொலைவிலுள்ளது.

சரக்கல்விளை

நாகர்கோயிலிலிருந்து 5 கி. மீ. தொலைவிலுள்ளது. இங்குள்ள ஆலமரம் பல நூறு கிளைகளையுடையது. அடையாறு ஆலமரம் போன்று இதுவும் காணவேண்டிய ஒன்று.

குறவன்தட்டுவிளை

இந்த இடம் அழகியபாண்டியபுரத்திற்கு அருகே உள்ளது.

நாஞ்சில் நாட்டை ஒரு காலத்தில் ஆண்ட நாஞ்சிக் குறவன் தன் மகனுக்கு மணம் முடிக்க அழகிய பாண்டிய புரம் பெரிய முதலியாரிடம் பெண் கேட்டானும். வஞ்சனையால் இவனைக் குலத்தோடு அழிக்கக் கருதிய இவர் திருமணத்திற்கு இசைந்து பொய் மண்டபம் ஒன்றைக் கட்டி அதில் மாப்பிள்ளை வீட்டாரை இருக்கச் செய்தாராம். உரிய நேரத்தில் அந்த மண்டபத்தைத் தட்டி விட்டுவிட வேண்டுமென்று ஆசாரியிடம் அவர் சொல்லி இருந்தாராம். ஆனல் அவன் அதை மறந்து

விட்டான். அப்போது முதலியார், "புத்திகெட்ட ஆசாரியே பொறியைத் தட்டடா" என்று சொன்னதும் அவன் பொறியைத் தடுக்கி மாப்பிள்ளை வீட்டாரைக் கொல்வித்தான் என்று கூறுவர்.

குறவன்தட்டுவிளையில் பாறையைக் குடைந்து கட்டப்பெற்ற கோயிலும், அதனுள்ளே ஔவையார் உருவம் என்று கருதத்தகும் விக்கிரகமும், வட்டெழுத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டும் உள்ளன.

அழகியபாண்டியபுரம்

நாகர்கோயிலிலிருந்து 13 கி. மீ. தொலைவிலிருக்கிறது. இவ்வூரின் பெயரைக் கொண்டே பாண்டியன் தொடர்புடையதென்று அறிந்துகொள்ளலாம். எந்தப் பாண்டியன் என்பது தெரியவில்லை. கல்வெட்டுக்களில் இவ்வூர் அதியனூரான அழகிய பாண்டியபுரம் என்றும் 'அதியனூர்' என்றும் இரு பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய அழகிய பாண்டியபுரம் ஒருகாலத்தில் 'அதியனூர்' என்று அழைக்கப்பட்டு வந்து, பின் 'அதியனூரான அழகிய பாண்டியபுரம்' ஆகி, இக்காலத்தில் 'அழகியபாண்டியபுரம்' ஆக வழங்கி வருகிறது என்பது அறிஞர்களின் முடிபாகும்.

அரசர்களின் பிரதிநிதிகளாய் நாஞ்சில் நாட்டாருக்குத் தலைமை பூண்டு விளங்கி வந்த முதலியார்கள் எனப்படுவோர் இவ்வூரிலேதான் வாழ்ந்து வந்தார்கள். நாஞ்சில் நாட்டாரிடம் தீர்வை வசூலிக்கும் உரிமையும், அவற்றை மன்னருக்குச் செலுத்தும் பொறுப்பும் இவர்களுக்கிருந்தன. இவர்கள் அளவுகடந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள் வந்த பின்னரே சுசீந்திரம்

தேரோட்டத்தில் வடம் தொட்டு இழுக்க வேண்டும் என்ற வழக்கம் இருந்தது.

இச்சிறப்புக்களுக்குரிய பெரிய முதலியார் வீட்டில் கிடைத்த திருவிதாங்கூர் அரசர்கள் பொதுமக்களுக்கு அறிவித்த அறிக்கைகள், அரசாங்க ஆணைகள் ஆகியன அடங்கிய ஓலைச்சுவடிகளிற் சிலவற்றைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை வெளியிட்டிருக்கிறார். எனவே இவ்வூர், இப்பகுதியின் அரசியல் வரலாற்றுச் செய்திகளின் கருவூலம் போன்றது.

ஆரல்வாய்மொழி

திருநெல்வேலியிலிருந்து குமரி மாவட்டத்திற்குள் நுழையும்போது அதன் வாயிலில் அமைந்த ஊர் இது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்கோடியிலுள்ள கணவாயைச் சார்ந்த ஊராகும். குமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைவதற்கு முன்னர் இங்கு சுங்கச் சாவடி இருந்தது; மருத்துவச் சோதனைகளும் இங்கு செய்யப் பட்டன. இங்கிருந்து நாகர்கோயில் 13 கி. மீ. தொலைவு.

இவ்வூரின் பெயர் இப்போது பேச்சுவழக்கில் 'ஆரும் போளி' என்று சொல்லப்படுகிறது. இது 'ஆரவாய் வழி' அல்லது 'ஆரைவாய் வழி' என்பவற்றின் திரிபாக இருக்கக்கூடும். 'ஆரல்' 'ஆரை' என்னும் சொற்களுக்கு மதில் என்னும் பொருளுண்டு. கோட்டை போன்று முப்புறமும் சூழ்ந்த பொதிய மலைத் தொடரின்கண் அமைந்துள்ளமையால் இவ்வழி ஆரல்வாய் வழி அல்லது ஆரைவாய் வழி என்று பெயர் பெற்றிருக்கக்கூடும்.

'அறைவாய்' என்பது கணவாய் என்னும் பொருளுடைய சொல்லாகும். அறைவாய் வழி என்பதே

அரவாய் வழி, ஆரவாய் வழி என்று படிப்படியாகச் சிதைந்து ஆரவாய்மொழி என்னும் வடிவத்தைப் பெற்றிருக்கவும் கூடும்.

பொழில் என்னும் ஈற்றுச் சொல்லே மொழி என்று சிதைந்திருக்கக் கூடும்.

எல்லையிலுள்ள ஊராகையால் இவ்வூர் பல போர் களைக் கண்ட ஊர்; வீரர் பலரைக் கொண்ட ஊர் எனலாம்.

இவ்வூரில் மழை மிகக் குறைவு. ஆனால் எந்த இடத்திலும் ஓராள் மட்டம் தோண்டினால் தட்டின்றித் தண்ணீர் கிடைக்கும். கம்பு, சோளம், கடலை வேளாண்மை இவ்வூரில் மிகுதியாக இருக்கிறது. ஆரல் வாய்மொழிக் கீரை எங்கும் புகழ்பெற்றது.

இவ்வூரருகேயுள்ள முப்பந்தலடி என்னும் இடத்தி லேயே சேர, சோழ பாண்டிய அரசர்கள் சந்தித்ததாக வரலாறு உண்டு. நாஞ்சில் நாடு பாண்டிய நாட்டுடன் சேராது சேர நாட்டுடன் இருக்கவேண்டுமென்று முப் பந்தலடி மக்களே முடிவு செய்தனராம்.

முப்பந்தலடி இசக்கி கோயிலில்—குமரி முனையில் போலவே காவல் கடவுளாக—பகவதி அம்மன் ஆரல்வாய் மொழிக் கணவாயைக் காத்து வருவதாக மக்கள் நம்பு கின்றனர்.

25. கல்குளம் வட்டம்

தக்கலை

கோட்ட ஆட்சியாளர் அலவலகமும், கல்குளம் வட்ட அலுவலகமும், நீதிமன்றங்களும், தேவாலயங்களும், சர் சி. பி. இராமசாமி ஐயர் நினைவு மண்டபமும் இங்குள்ளன. பத்மனுபபுரம், இந்நகராண்மைக்கழக எல்லைக்குட்பட்டது.

கிறித்தவர்களும் இந்துக்களும் முஸ்லிம்களும் இங்கு சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள முஸ்லிம் பள்ளிவாசல் புகழ்வாய்ந்தது. பீர் முகம்மது சாகிப் என்னும் பெயருடைய ஞானமேதை இந்தப் பள்ளியில் தான் அடக்கம் செய்யப்பட்டிருக்கிருர். இவர் இளமையில் துறவறத்தை மேற்கொண்டிருந்தவர் என்று தெரிகிறது. இவர் இளமையில் தவத்தில் இருந்த இடம்தான் இன்று கேரளத்தில் பீர்மேடு என்று வழங்கப்படுகிறது. பின்னர் இவர் தற்கலையில் மணமுடித்து இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வந்தார். இவர் ஓர் புலவர் ஞானி. இவர் இயற்றிய நூல்களுள் ஞான மணிமாலை, ஞானப் புகழ்ச்சி, ஞானப்பூட்டு, ஞானப்பால், ஞானக்குறம் இவை சிறந்தவை. இவர் பெயரால் ஆண்டுதோறும் இங்கு விழா நடத்தப்பட்டு வருகிறது. அவ்வமயம் இந்தப் பள்ளியில் இவரின் பாடல்களைப் பாடி வருகின்றனர். தற்கலை என்னும் இந்த ஊரே இப்பொழுது தக்கலை என்று வழங்கி வருகிறது.

தக்கலை நகராண்மைக் கழகத் தலைவராக இருந்த ஜனுப் என். எஸ். சாகுல் ஹமீது என்னுஞ் செல்வர் அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர் ஆவார்.

ஆளூர்

இது நாகர்கோயிலிலிருந்து மேற்கே எட்டு கி. மீ. தொலைவில், திருவனந்தபுரம் சாலையிலுள்ள சுங்காங் கடைக்கு* அருகேயிருக்கிறது. விக்கிரமசோழ பாண்டிய புரம் என்னும் பெயரால் இவ்வூர் பழங்காலத்தில் குறிப் பிடப்பெற்றிருந்தது. இவ்வூர்க் கோயிலிலுள்ள வழிபடு கடவுளுக்குச் சோழபாண்டீசுவரர் என்று பெயரிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வூரில் முஸ்லிம்கள் மிகுதியாக வாழ்கின்றனர்; நெசவுத் தொழில் சிறப்பாக நடை பெறுகிறது.

மிளகுமூடு

தக்கலைக்கு அருகே உள்ளது. கன்னிப் பெண்களுக்கு பின்னல் தையல் தொழில்களைக் கற்பிக்கும் கத்தோலிக்கர் நிறுவனம் நடத்தி வருகிறார்கள்.

திற்பரப்பு

பத்திரகாளி குண்டு, தெங்கம்புதூர் என்ற இரு சிறிய அருவிகள் இங்கு உள்ளன. பழங்காலத்து அணையும், மலைபடு பொருள்கள் விற்பனையாகும் வியாழக்கிழமைச் சந்தையும் இங்கே காணத்தக்கவை. இவ்வூரிலிருந்து பேச்சிப்பாறை அணைக்கும் பெருஞ்சாணி அணைக்கும் செல்லலாம்.

இரணியல்

சேரமான் பெருமாள் உயிரோடு சொர்க்கம் புகுந்த அரண்மனை இவ்வூரில் இருக்கிறது. ''மலையாள அங்கவஸ் திரங்கள்'' இங்கு நெய்யப்படுகின்றன.

---

* இது சுங்கக் கடவு என்றும் பெயர்பெறும். நாஞ்சில் குறவன் தன் நாட்டு எல்லையில் சுங்கம் வசூலித்த இடம் இதுவே.

மணலிக்கரை

நாயர்கள் மிகுதியாக வாழும் ஊர்; நம்பூதிரி மடம் உள்ள ஊர்.

வாழ்வச்சகோட்டம்

சாமியார் மடத்திற்கு அருகே உளது. திருவிதாங்கூர் வரலாற்றோடு தொடர்புடைய ஊர் இது. 'வாள் கொழு கிச்ச கோட்டம்' 'வாள் வைத்த கோட்டம்' என்பனவே சரியான பெயர் என்பர். இவ்வூரில் தமிழர்கள் வாள் செய்து வைத்திருந்தனர் என்றும் போரில் வெற்றிகண்டு திரும்பிய மன்னன் விழா எடுத்தான் என்றும் புறத்திணையிலிருந்து அறியக் கிடக்கிறது.

தலக்குளம்

வேணாட்டு வேங்கை தளவாய் வேலுத்தம்பி தோன்றிய ஊர்.

திருநந்திக்கரை

மலைவளம் நிறைந்த பேச்சிப்பாறைக்குச் செல்லும் வழியிலுள்ள இவ்வூர் பழமையான கோயிலால் புகழ் பெற்றது. சிவலிங்கமே உருண்டு திரண்டதென எண்ணுமாறு அமைந்த பாறை ஒன்றினைக் குடைந்து அமைக்கப்பெற்ற கோயில் இங்கேயிருக்கிறது. கோயி லுள்ளே புகுவதற்கு வாயிலும், மேலிருந்து மழை நீர் வாயிலுக்கு நேரே வாராமல் மேலே ஓடையும் அழகுபட அமைக்கப்பெற்றிருக்கின்றன. மலையடிவாரத்தில் சிவன் கோயில் ஒன்றுள்ளது.

திருநந்திக்கரைக் கோயில் கல்வெட்டு, முதல் ராஜ ராஜ சோழன் (*985-1012*) தன் பிறந்த நாளாகிய

ஐப்பசிச் சதய நாளில் திருநந்திக் கோயிலில் திருவிழா நடத்தியதைத் தெரிவிக்கிறது. இச்செய்தியைக் கலிங் கத்துப்பரணியும் கவினுற உரைக்கிறது.

இந்நாளில் திருநந்திக்கரை, அடக்க முடியாத காளை களாலும் மலைபடு பொருள்கள் விற்கும் ஞாயிற்றுக் கிழமைச் சந்தையாலும் புகழ்பெற்றிருக்கிறது.

முத்துக்குழிவயல்

நாகர்கோயிலிலிருந்து ஏறத்தாழ 45 கி. மீ. தொலைவில் மலைமீதுள்ள இவ்வூர், உடல்நலத்துக்கேற்ற நல்வாழ்விடமாக அமைக்க மிகவும் ஏற்றது.

நெய்யூர்

இவ்வூர் மருத்துவ நிலையத்தால் பெரும் புகழ் பெற்றது. கிறித்தவ சமயத்தைப் பரப்பும் கழகம் இங்கு 17-ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து பெரும் பணியாற்றி வருகிறது. இங்கு 1830–இல் ஏற்பட்ட அச்சகத்திலிருந்து தமிழில் பல நூல்கள் வெளி வந்துள்ளன. 'தேசோபகாரி' என்னும் திங்கள் இதழ் 1861 முதல் பல ஆண்டுகள் இங்கிருந்து நடத்தப் பட்டது; இது சித்திரப் படங்களுடன் வெளியிடப்பட்டது.

திருவாட்டாறு

முப்புறமும் ஆறு சூழ அமைந்த இவ்வூர் நாகர் கோயிலிலிருந்து 30 கி. மீ. தொலைவில் இருக்கிறது.

வளைந்து வட்டமாக வருவதால் இந்த ஆறு வாட் டாறு எனப்பட்டது. ஆற்றின் பெயரே அவ்வளைவினுள் இருக்கும் ஊருக்கும் பெயராயிற்று. திரு ஆ ராட்டு திருவாட்டாறு ஆயிற்று என்று சிலர் சொல்லுகிறுர்கள்.

திருவாட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோயில் மலை நாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றனுள் ஒன்ருகும். திருவனந்தபுரத்தில் இருப்பதுபோல இங்கும் ஒற்றைக்கல் மண்டபம் உண்டு. ஐப்பசி, பங்குனி மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அருவிக்கரையிலுள்ள கண்ணன் கோயில் காணத்தக்கது.

புறநானூற்றில் 396-ஆம் பாடலில் மாங்குடி கிழாரால் பாடப்பெற்ற வாட்டாற்று எழினியாதன் என்ற வள்ளல் இவ்வூரினன் ஆவான்.

மகம்மதிய மன்னரான திப்பு சுல்தான் படையெடுத்தபோது, சிறிய படையைக்கொண்டு அவர்களை முறியடித்து வெற்றி கண்ட கேரள வர்மராஜா என்ற திருவிதாங்கூர்ப் படைத்தலைவன், திருவாட்டாற்று எம்பெருமானை வாழ்த்திப் பாடிய 'படை சங்கிர்த்தனம்' என்னும் பாடலை, இங்கு வழிபடும் பக்தர்கள் பாடி வருகின்றனர்.

வேளிமலைக்குமாரர் கோயில்

குமாரர் கோயில் எனப்படும் ஊர் நாகர்கோயிலிலிருந்து 16 கி. மீ. தொலைவிலிருக்கிறது. திருவனந்தபுரம் செல்லும் வழியிலுள்ள வில்லுக்கீறியிலிருந்து வெள்ளிக்கிழமைகளில் மட்டும் இவ்வூருக்கு நாகர்கோயிலிலிருந்து பஸ் போக்குவரத்து உண்டு.

ஒரு குன்றின்மீது இக்கோயில் கட்டப்பெற்றிருக்கிறது. வள்ளி திருமணம் இங்கேதான் நடைபெற்றது என்ற கருத்துக்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இம்மலையின் பெயராகிய 'வேளி' என்னுஞ் சொல், திருமணம் என்ற பொருளில் மலையாள மொழியில் வழங்கிவருகிறது;

திருப்பரங்குன்றத்தில் தெய்வானை மட்டுமே முருகனுடன் இருப்பதுபோன்று இம்மலையில் வள்ளியம்மை மட்டுமே முருகனுடன் இருக்கிறது. கோயிலை அடுத்துக் கிழவன் சோலை, முக்கூடல், வேங்கைமரம், வட்டச்சோலை, வள்ளிச்சோலை, கல்யாண மண்டபம் ஆகியவையும் இக்குன்றில் காணப்பெறுகின்றன.

சோழநாட்டிலுள்ள சுவாமி மலையே திருவேரகம் என்று அருணகிரிநாதர் பாடியுள்ளார். ஆனால், இக் குமாரர் கோயில்தான் திருவேரகம் என்று குமரி மாவட் டத்து மக்களும் ஏனைய மாவட்டத்திலுள்ள சிலரும் உறுதியாக நம்புகின்றனர். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர், 'புலராக் காழகம் புலர உடீஇ உச்சிக் கூப்பிய கையினர்' என்று கூறும் ஈர உடையுடன் ஆலயஞ் சென்று வழிபடும் வழக்கம் குமரி மாவட்டத்திலிருப்பதால் இத்தலமே ஏரகம் என்று கருத ஆதாரமிருக்கிறது.

சிலப்பதிகாரம் குன்றக் குரவையில் 'வெண்குன்றும் ஏரகமும்' என்ற தொடரின் உரையில் 'வெண்குன்றம்–சுவாமிமலை' என அரும்பத உரையாசிரியர் உரை எழுதியுள்ளார். திருமுருகாற்றுப்படை உரையில் உரை யாசிரியர் நச்சினார்க்கினியர், 'ஏரகத்துறை தலுமுரியன்' என்றவிடத்து 'ஏரகம் - மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்றார். மலைநாடு என்பது சேரநாடாகும். எனவே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் என்னும் வேளிமலைக் குமாரர் கோயில், குன்றுதோறாடல், பழமுதிர்ச் சோலை என்பனவே ஆறு படை வீடுகளாகும்.

இவ் வேளி மலையைப்பற்றித் திரிகூடராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சியில் குறத்திவாயிலாக,

'தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே' என்றும், 'எந்நா வேள்விமலைப் பிள்ளையார்* வந்துதித் தார்' என்றும் கூறியுள்ளார். வேள்விமலை என்பதே இப் போது வேளிமலை என மருவி விட்டது.

இங்குள்ள முருகனுக்கு மணவிட குமாரர் என்று பெயர்; இவ்வுருவம் திருவனந்தபுரம் நவராத்திரி விழாவுக்கு எடுத்துச் செல்லப்படும்; திருவிதாங்கூர் மன்னர் இந்த மணவிட குமாரரிடம் அம்பு பெற்றே வேட்டைக்குச் செல்லுவார்.

இந்த முருகன் உருவம் 8½ உயரமும் வள்ளியம்மை 6 அடி உயரமும் உள்ள எழில்மிக்க வடிவங்களாக மூலத் தானத்தில் காட்சியளிக்கின்றன. வள்ளி திருமணம் பங்குனி உத்தர நாளில் கொண்டாடப்படுகிறது. இத் திருவிழாவையொட்டி சமய சம்பந்தமான மாநாடு ஆண்டுதோறும் நடைபெறுகிறது.

குளச்சல்

நகராண்மைக்கழகமுள்ள இச்சிறுநகரம் துறைமுகத் தாலும் மீனவராலும் புகழ்பெற்றது நாகர்கோயிலி லிருந்து இவ்வூர் 23 கி. மீ. தொலைவில் இருக்கிறது.

கத்தோலிக்கர், பிராடஸ்டண்டு ஆகிய இரு பிரிவின ராலும் இங்கே கிறித்தவ மதம் சிறந்து விளங்குகின்றது. இவர்களுடைய பல தேவாலயங்களும் இந்துக்களின் கோயிலும் வேலைப்பாடுடன் கூடிய அழகான மசூதியும் இவ்வூரிலுள.

கத்தோலிக்க மீனவர் பத்தாயிரம் பேர் இவ்வூரி லுள்ளனர். கடலுக்குள்ளே 15 கி. மீ. தொலைவுவரை

* மூத்த பிள்ளையார்—முருகன்
இளைய பிள்ளையார்—விநாயகர்

சென்று விரால் முதலிய மீன்களை இவர்கள் பிடித்து வருகின்றனர். இத் தொழிலுக்கு ஊக்கம்தரும் முறையில் பல ஏற்பாடுகள் இவ்வூரினரும் மீன்துறை அமைச்சருமான திருவாட்டி லூர்தம்மாள் சைமனின் முயற்சியால் அரசாங்கத்தாரால் செய்யப்பட்டு வருகின்றன.

கப்பல் தங்குவதற்குதவும் பாலம் ஒன்றை ஆறரை லட்சம் ரூபாய்ச் செலவில் இத்துறைமுகத்தில் மூன்றும் திட்ட காலத்தில் கட்டுவதென்று முடிவு செய்யப் பெற்றிருக்கிறது.

பத்மனுபபுரத்தில் திருவிதாங்கூர் அரசர்கள் தலைநகர் வைத்திருந்தபோது, ஐரோப்பிய நாட்டவர் பலர் திருவிதாங்கூர் அரசருடன் உறவு கொள்ளவும் கன்னியா குமரியைக் காணவும் குளச்சல் வழியே வந்து சென்றனர். இதனுல் குளச்சல் வணிக வாயிலாக இருந்தது. டச்சுக் காரர்கள் 18--ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இலங் கையில் செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அங்கிருந்து குளச்சலுக்குப் படைகளை அனுப்பிக் கோட்டாறுவரை பிடித்து, பத்மனுபபுரத்தைத் தாக்கவும் முயன்றனர். அப்போது நடைபெற்ற போரில் டச்சுக்காரர் திருவிதாங் கூர்ப் படையால் முறியடிக்கப்பட்டனர். டச்சுப் படை அடைந்த இப்படுதோல்வியையும் திருவிதாங்கூர்ப் படை களின் வெற்றியையும் குளச்சல் துறைமுகத்தில் இன்றும் காணப்பெறும் ''வெற்றித் தூண்'' நினைவூட்டுகிறது.

26. விளவங்கோடு வட்டம்

குழித்துறை

நாகர்கோயிலுக்கு மேற்கே 31 கி. மீ. தொலைவில், தாம்பிரபரணிக்கரையிலுள்ள இந்நகரில் 12,000 மக்கள் வாழ்கின்றனர். முந்திரிப் பருப்பு விற்பனை இங்கு மிகுதி.

ஆற்றின் கரையில் மகாதேவர் கோயிலும், வெடி சாஸ்தா கோயிலும், திருமலை நாயக்கர் வருகை நினைவாகக் கட்டப்பெற்ற மண்டபமும் உள்ளன. குழித்துறை சித்திரால் கோயில் பகவதி கோயிலாக இப்போது இருந்துவந்த போதிலும் முன்னர் இது பௌத்த ஆலயமாகவே இருந்தது. பௌத்த விக்கிரகம் ஒன்று காணப்படுவதும், பௌத்த சமயத்தைப் புகட்டிய குருகுலம் இருந்ததாகக் கூறும் கல்வெட்டும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. இது சமண ஆலயம் என்பது ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமியின் கருத்தாகும்.

மார்த்தாண்டம்

தையல் வேலையும் கைத்தொழில் வேலைகளும் இங்கே சிறந்து விளங்குகின்றன. தமிழ்நாடு அரசாங்கத்தார் இங்கு தொழில் குடியிருப்பு ஒன்றை நடத்தி வருகின்றனர். முட்டை, தேன், கன்றுகாலிகள் விற்பனை இவ்வூரில் நடைபெறுகிறது. இங்கிருந்து பேச்சிப்பாறை அணைக்குச் செல்லலாம்; 23 கி. மீ. தொலைவு. திருவாட்டாறு திருநந்திக்கரை ஆகிய இடங்களுக்கும் மார்த்தாண்டத்திலிருந்து செல்லலாம்.

தேங்காய்ப்பட்டினம்

பெயருக்கேற்பத் தென்னஞ்சோலைகள் நிறைந்த கடற்கரைச் சிற்றூர். குழித்துறை ஆறு இங்கேதான் கடலில் கலக்கிறது. கயிற்றுத் தொழில் சிறந்து விளங்கும்

ஊர்களில் இதுவும் ஒன்று. மீன்பிடி தொழிலும் இப் பட்டினத்தில் நடைபெறுகிறது. இங்கு முஸ்லிம்கள் மிகுதி யாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் குழித்துறையி லிருந்து 11 கி. மீ. தொலைவில் இருக்கிறது.

குன்னத்தூர்

உதச்சிக்கோட்டை என்ற வரலாற்றுத் தொடர் புடைய கோட்டை இவ்வூரில் இருக்கிறது. இவ்வூரின ராகிய ராஜா கேசவதாஸ் 18-ஆம் நூற்றாண்டில் ராம வர்ம மஹாராஜாவின் திவானாக இருந்தார். திருவிதாங்கூர் அரசர்கள் மீண்டும் பத்மனாபபுரம் அரண் மனைக்கு வந்து அதைத் தலைநகராக வைத்துக்கொள்ள அவர் முயன்றார்; அம்முயற்சி பலியாமையால், பத்மனாப புரத்தில் நாணயச்சாலை நிறுவினார்.

கொல்லங்கோடு

கடற்கரையிலுள்ள ஊர். கன்னியாகுமரியிலிருந்து இவ்வூருக்கு நேராகச் சாலை அமைந்து வருகிறது. இங் குள்ள பகவதி கோயிலில் பங்குனியில் பெருஞ்சிறப்புடன் ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

27. பிற்சேர்க்கை

ஆட்சிப் பிரிவுகள், மக்கள்தொகை, பரப்பு முதலியன

வட்டம்	பரப்பளவு (சதுர மைல்)	மக்கள் தொகை 1951	மக்கள் தொகை 1961
அகத்தீசுவரம்	107	2,25,405	2,76,859
கல்குளம்	229	2,87,519	3,40,513
தோவாளை	142	52,980	62,267
விளவங்கோடு	167	2,60,476	3,17,213
கன்னியாகுமரி மாவட்டம்	646	8,26,380	9,96,852

மக்கள் நெருக்கடி—சதுர மைலுக்கு 1267

மழை ஓராண்டுக்கு 1470·6 மில்லி மீட்டர்.

இம்மாவட்டத்திலுள்ள நகராண்மைக் கழகங்கள்

என்	நகரின் பெயர்	தரம்	1961-இல் மக்கள் தொகை
1.	நாகர்கோயில்	1	1,06,497
2.	குளச்சல்	3	15,685
3.	பத்மனுபபுரம் (தக்கலே உட்பட)	3	14,519
4.	குழித்துறை (மார்த்தாண்டம் உட்பட)	3	13,728

இம்மாவட்டத்திலுள்ள நில வருவாய்த்துறை அமைப்புப்படி உள்ள

பகுதிகளின் பட்டியல்

1. அகத்தீசுவரம் வட்டம்

1. கன்னியாகுமரி
2. அகத்திசுவரம்
3. தாமரைக்குளம்
4. குலசேகரபுரம்
5. மருங்கூர்
6. இரவிபுதூர்
7. சுசிந்திரம்
8. பறக்கை
9. தெங்கம்புதூர்
10. தர்மபுரம்
11. நீண்டகரை "பி"
12. நீண்டகரை "ஏ"
13. வடிவீசுவரம்
14. தேரூர்
15. நாகர்கோயில்
16. வடசேரி

2. தோவாளே வட்டம்

1. திருப்பதிசாரம்
2. செண்பகராமன்புதூர்
3. தோவாளே
4. அனந்தபுரம்
5. அழகியபாண்டியபுரம்
6. தரிசனங்கோப்பு
7. பூதப்பாண்டி
8. தாழக்குடி
9. இறச்சகுளம்
10. ஈசாந்திமங்கலம்
11. சிறைமடம்
12. அருமைநல்லூர்

3. கல்குளம் வட்டம்

1. கடியப்பட்டணம்
2. மணவாளக்குறிச்சி
3. தலக்குளம்
4. ஆளூர்
5. இரணியல்
6. குளச்சல்
7. கப்பியறை
8. வாழ்வச்சகோட்டம்
9. திருவிதாங்கோடு
10. தக்கலே
11. கல்குளம்
12. கோதைநல்லூர்
13. மேக்கோடு
14. ஆத்தூர்
15. திருவாட்டாறு
16. அருவிக்கரை
17. பொன்மனே
18. திருப்பரப்பு

4. விளவங்கோடு வட்டம்

1. கீழ்மிடாலம்
2. மிடாலம்
3. கிள்ளியூர்
4. கீழ்க்குளம்
5. பேயன்குளம்
6. ஆறுதேசப்பத்து
7. ஏழுதேசப்பத்து
8. கொல்லங்கோடு
9. மெதுகும்மல்
10. விளவங்கோடு
11. குன்னத்தூர்
12. பாகோடு
13. பளுகல்
14. இடைக்கோடு
15. அருமனே
16. களியல்

இம்மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகள்

பாராளுமன்றத்திற்கு இம் மாவட்டத்தில் ஒரு தொகுதி மட்டுமே இருக்கிறது. இத் தொகுதிக்கு, நாகர்கோயில் தொகுதி என்று பெயர்.

தமிழ்நாடு சட்டசபைக்கு ஆறு தொகுதிகள் உண்டு. அவற்றின் பெயர் வருமாறு :

1. குளச்சல்
2. கிள்ளியூர்
3. விளவங்கோடு
4. பத்மனுபபுரம்
5. நாகர்கோயில்
6. கன்னியாகுமரி

இப்பட்டியலைத் தந்துதவியவர் குமரி மாவட்டத்துச் செய்தித் துறை அலுவலர்.

வட்டம்	வட்டாரங்கள்
அகத்தீசுவரம்	1. அகத்தீசுவரம்
	2. ராஜாக்கமங்கலம்
விளவங்கோடு	3. கிள்ளியூர்
	4. மேல்புரம்
	5. முன்சிறை
தோவாளை	6. தோவாளை
கல்குளம்	7. குருதன்கோடு
	8. தக்கலை
	9. திருவாட்டாறு

குமரி மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க திருவிழாக்கள்

இந்துக்கள்

கன்னியாகுமரி: சித்திரா பவுர்ணமி, வைகாசித்திருவிழா, ஆடி அமாவாசை, புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா, மகாதானபுரத்தில் குமரி அம்மன் வேட்டைத் திருவிழா.

சுசீந்திரம் : சித்திரையில் தெப்பத் திருவிழா, கார்த்திகையில் சோமவாரம், மார்கழியில் திருவாதிரையையொட்டித் தேர்த் திருவிழா.

நாகர்கோயில் : ஆவணி ஞாயிற்றுக்கிழமை, தை மாதத்தில் தேர்த் திருவிழா.

வேளிமலை குமாரர் கோயில் : வைகாசி விசாகம், கார்த்திகை மாதக் கடைசி வெள்ளிக்கிழமை யன்று குங்கும அபிஷேகம், பங்குனியில் திருக்கல்யாணம்.

மண்டைக்காடு: மாசி மாதம் கடைசிச் செவ்வாயன்று "கொடை" விழா, பங்குனி மாதத்தில் பரணிக் கொடை.

தாழக்ககுடி: ஔவையார் கோயிலில் ஆடி தை மாசி மாதங்களில் செவ்வாய்க் கிழமைகளிலும் பங்குனித் திருக்கல்யாண நாளிலும் திருவிழாக்கள்.

சாமித் தோப்பு: ஆவணி கோயில் திருவிழா.

பூதப்பாண்டி: தைத் தேர் திருவிழா, சித்திரைத் திருவிழா.

மூவறுவிழா: தீபாவளியின்போது சூரன் திருவிழா, கார்த்திகை நாளில் சொக்கப்பனை.

குழித்துறை: ஆடி வாவு பலி.

கொல்லங்கோடு: பங்குனி தூக்கம் திருவிழா.

திருப்பதிசாரம்: சித்திரைத் திருவிழா.

திருவாட்டாறு: ஐப்பசி பங்குனி மாதங்களில் திருவிழாக்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கூர் மன்னரின் உரிமைகள்

கன்னியாகுமரி, சுசீந்திரம், திருவாட்டாறு, மண்டைக்காடு, வடிவீசுவரம், நாகர்கோயில், வேளிமலைக் குமாரர் கோயில் போன்ற 19 கோயில்களில் திருவிதாங்கூர் மன்னரின் பிறந்த நாளில் ஆண்டுதோறும் சிறப்பாக வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கன்னியாகுமரிக் கோயிலில் திருவிதாங்கூர் மகாராணியின் சார்பில் நாள்தோறும் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.

கல்குளம் நீலக்கந்தசாமி ஆனந்தவல்லி அம்மன் கோயிலில், நவராத்திரியை முன்னிட்டு ஆனந்தவல்லி அம்மனுக்கு அரசர் செலவில் முழுக்காப்பு வழிபாடு நிகழ்கிறது.

திருமலை நாட்டாளம் கோயிலில் 12 ஆண்டுகளுக் கொருமுறை நடைபெறும் திருவிழாவுக்குத் திருவிதாங்கூர் அரண்மனையிலிருந்து ஒரு போத்தி இக் கோயிலுக்கு அனுப்பப்படுகிறார்.

கன்னியாகுமரி, சுசீந்திரம் கோயில்களுக்கு முன்னாள் அரசர்கள் காணிக்கையாகச் செலுத்தியுள்ள நகைகளைச் சரிபார்க்கும் உரிமை திருவிதாங்கூர் அரசர்க்கு உண்டு.

சுசீந்திரம் கோயில் திருவிழாத் தேதிகள் அரசருக்கு அறிவிக்கப்படுகின்றன. தேரோட்டத்திற்குப் பிறகு தேர் எப்பொழுது நிலைக்கு வருகிறது என்பது பற்றிக் கோயில் அலுவலர்கள் திருவிதாங்கூர் மன்னருக்குத் தெரிவிக்கவேண்டும்.

குறிப்பிட்ட 19 கோயில்களில் நிரை, புதரை நடத்தல், கோயில் நிலங்களில் விதை விதைத்தல் ஆகியவற்றுக்கான தேதிகளைத் திருவிதாங்கூர் மன்னரே முடிவு செய்கிறார்.

ஒவ்வோர் ஆண்டிலும் அரசர் முடிவு செய்யும் நாளிலும் நேரத்திலும் பத்மநாபபுரம் அரண்மனையிலிருந்து சரசுவதி அம்மனும் வேளி மலையிலிருந்து சுப்பிரமணிய சுவாமியும் சுசீந்திரத்திலிருந்து முன்னேற்ற நங்கை அம்மனும் திருவனந்தபுரத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அரண்மனையில் பூசை முதலியன நடைபெற்ற பிறகு விசய தசமிக்குப்பின் அவ்வுருவங்கள் திரும்ப எடுத்துச் செல்லப்படுகின்றன. இது குறித்த ஏற்பாடுகள் அரசரின் விருப்பப்படி செய்யப்படுகின்றன.

அரசருடைய இந்த உரிமைகளை ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு சட்டசபை 1959-இல் சட்டம் இயற்றியிருக்கிறது.

முஸ்லிம் விழாக்கள்

திட்டிவிளையிலும் தக்கலையிலும் பள்ளிகளில் நேர்ச்சை பெருநாள் நடைபெறுகிறது.

மகூதிகள்

பாவா காசிம் பள்ளிவாசல், கோட்டாறு. (இதுவே இம்மாவட்டத்தில் மிகப் பழமையானது)

பீர்முகமது சாகிபு பள்ளிவாசல், தக்கலை.

ஞானியார் சாகிப் பள்ளிவாசல், கோட்டாறு.

செய்து அப்துல் காதர் புலவர் சமாதி, கோட்டாறு.

கிறித்தவர்களின் விழாக்கள்

கன்னியாகுமரி: அர்ச் தேவமாதா கோயில் திருவிழா.

கோட்டாறு: நவம்பர் டிசம்பரில அர்ச் சவேரியார் கோயில் திருவிழா.

கண்டன்விளை: அர்ச். தெரசா கோயில் திருவிழா.

பெத்தேல்புரம்: சர்ச் கன்வென்சன்.

இம் மாவட்டம் பயனடைந்துள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்

பெயர்	ஆண்டு	செலவு	பாசன வசதியடைந்த ஏக்கர்
பெருஞ்சாணி	*1953*	*44* லட்சம்	*6,000*
நெய்யாறு	*1961*	*41* ,,	*9,200*
பேச்சிப்பாறை	*1905*	*27* ,,	*56,000*

இம்மாவட்டத்தில் நிலவும் அளவைமுறை

1 கோட்டை	*21* மரக்கால்
1 மரக்கால்	*8* படி

குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்

கொல்லம் ஆண்டு	கி.பி. ஆண்டு	நிகழ்ச்சி
	825	கொல்லம் ஆண்டுமுறை தொடங்கிற்று.
292	1117	இராசசிம்மன் என்ற பாண்டிய அரசனைத் திருவிதாங்கூர் அரசர் போரில் தோற்கடித்தார்.
508	1333	திருவிதாங்கூர் அரசர்களின் தலைநகரம் பத்மனாபபுரத்திலிருந்து திருவனந்தபுரத்துக்கு மாற்றப்பட்டது.
720	1544	கோட்டாறு, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கிறித்தவ தேவாலயங்கள் ஏற்பட்டன.
776	1600	கல்குளத்திலும் உதயகிரியிலும் கோட்டைகள் கட்ட திருவிதாங்கூர் அரசர்கள் முடிவு செய்தனர். இச் செலவுக்கென நாஞ்சில்நாட்டு மக்களிடம் ஒரு மா அளவுள்ள நிலத்துக்கு ஒரு பணம் வீதம் வரி வசூலிக்கப்பட்டது.
795	1619	பத்மனாபபுரம் என்று சொல்லப்படுகிற கல்குளத்தில் கோட்டை கட்டி முடிக்கப்பெற்றது.
810	1635	மதுரையை ஆண்ட மன்னராகிய திருமலைநாயக்கர் நாஞ்சில் நாட்டைப் படையெடுத்தார்.
820	1645	இராமப்பையன் படையெடுப்பு.

904	1729	மார்த்தாண்ட வர்ம மஹாராஜா வேணாட்டின் தலைவர் ஆனார். திருவிதாங்கூர் அரசர்களின் சீரும் சிறப்பும் மிக்க வரலாறு இந்நிகழ்ச்சியோடு தொடங்கிற்று.
916	1741	போர்த்துகீசியர் படையெடுத்து, குளச்சலில் நடைபெற்ற போரில் திருவிதாங்கூர்ப் படைகளிடம் படுதோல்வியடைந்தனர்.
927	1762	திருவிதாங்கூர் அரசர்களுடன் என்றென்றும் நண்பர்களாக இருப்பதாக, கொச்சி அரசர் சுசீந்திரம் கோயிலில் சத்தியம் செய்து கொடுத்தார்.
941	1776	கன்னியாகுமரி என்னும் சிற்றூர் திருவிதாங்கூர் ஆட்சிக்கு உட்பட்டது.
942	1777	திருவிதாங்கூர்ப் படைகளின் தளபதியாக 37 ஆண்டுக் காலம் பணிபுரிந்த டி லன்னாய் என்ற டச்சுக்காரன் உயிர் நீத்தான்; உதயகிரி கோட்டை இன்றும் இவன் புகழைப் பாடிக்கொண்டிருக்கிறது.
966–974	1801–1809	தளவாய் வேலுத்தம்பி அமைச்சராக இருந்து ஆட்சி செலுத்தினார்.
974	1809	தளவாய் வேலுத்தம்பி தற்கொலை செய்துகொண்டார்.
986–994	1811–1819	தளபதி மன்றோ என்பார் திருவனந்தபுரத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்து ஆட்சி செலுத்தினார். இந்த எட்டாண்டுகளில் இப்பகுதியெங்கும் கிறித்தவம் பரவிற்று.

கொல்லம் ஆண்டு	கி.பி. ஆண்டு	நிகழ்ச்சி
1085	*1860*	திருவிதாங்கூர் அஞ்சல் துறை அமைந்தது. ஒரு சக்கரம் கூலி கொடுத்து அஞ்சல்கள் அனுப்பப்பட்டன.
1049	*1874*	முதல் தடவையாக தமிழ்மொழியில் ஒரு நாளிதழ் வெளி வந்தது. இது, நாகர்கோயிலிலிருந்து வெளியான ''திருவிதாங்கூர் அபிமானி'' என்பதாகும்.
1051	*1876*	தேரூரில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பிறந்தார்.
1067	*1892*	சுவாமி விவேகானந்தர் கன்னியாகுமரிக்கு வருகை.
1068	*1893*	நாகர்கோயிலில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரி ஏற்பட்டது.
1070	*1895*	புத்தேரியில் ''சால்வேசன் ஆர்மி'' மருத்துவ நிலையம் தொடங்கப்பெற்றது.
1086	*1911*	கடற்கரையிலுள்ள மணலை கனிவள ஆராய்ச்சிக்குப் பயன் படுத்தும் தொழிற்சாலை மணவாளக்குறிச்சியில் ஏற்பட்டது.
1097	*1922*	திருவிதாங்கூர் அரசாங்கம் கன்னியாகுமரிக்கு அருகே பழத் தோட்டம் ஒன்றை நிறுவியது.
1102	*1927*	நாஞ்சில்நாட்டு வேளாளர்கள் மருமக்கள் தாயமுறையைப் பற்றிய புதிய சட்டம் திருவிதாங்கூர்ச் சட்டசபையில் இயற்றப்பட்டது.
1105	*1930*	கோட்டாறு கத்தோலிக்க டயோசிஸ் ஏற்பட்டது.

1104–14	1929–39	பொருளாதார மந்தம். நிலவரி கட்ட இயலாதவர்களுடைய சொத்துக்கள் ஏலம் போடப்பெற்றன. சில இடங்களில் நாஞ்சில்நாட்டு வேளாளர்களிடமிருந்து பிற சமூகத்தார் கைகளுக்குச் சொத்துக்கள் மாறின.
1106	1931	இப்பகுதியை ஆண்ட கடைசித் திருவிதாங்கூர் மன்னரான சித்திரைத்திருநாள் பாலராமவர்மா மகாராஜா, திருவிதாங்கூர் மன்னராக முடி சூட்டப்பெற்ருர்.
1110	1934	தென் திருவிதாங்கூர் வணிகர் மன்றம் தொடங்கப்பெற்றது.
1112	1936	சர் சி. பி. இராமசாமி ஐயர் திருவிதாங்கூர் சமஸ்தானத்துத் திவான் ஆனுர்.
		மகாத்மா காந்தி கன்னியாகுமரிக்கு வருகை. இந்தியாவிலேயே முதல் தடவையாக இங்கும் திருவிதாங்கூரின் பிறபகுதிகளிலும் இந்துக் கோயில்கள் அரிசனங்களுக்குத் திறந்து விடப்பட்டன.
1113	1938	திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்குச் சிமிண்டுச் சாலை போடப்பட்டது.
1114	1939	திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் மாநாடு நாகர்கோயிலில் நடைபெற்றது ; தமிழர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை.
1120	1945	டிசம்பர் 16-இல் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் என்று நிறுவனம் தோன்றியது. இப்பகுதி தமிழ்நாட்டில் சேருவதற்கு இந்நிகழ்ச்சியே முதற்படியாக அமைந்தது.

கொல்லம் ஆண்டு	கி.பி. ஆண்டு	நிகழ்ச்சி
1122	*1947*	கன்னியாகுமரி உள்ளிட்ட ஐக்கிய கேரளம் அமைக்க, மலையாளிகள் முயன்றனர் (மே மாதத்தில்).
1122	*1947*	ஆகஸ்டு 15-இல் இந்தியா சுதந்தர நாடு ஆயிற்று. திருவிதாங்கூரும் ஒரு சுதந்தர நாடு என்று சர் சி. பி. இராமசாமி ஐயர் அறிவித்தார். சில வாரங்களுக்குப் பின்னர் திவான் பதவியிலிருந்து அவர் விலகிக்கொண்டார்.
1123	*1948*	ஜனவரி 30-இல் மகாத்மா காந்தியடிகள் புது டில்லியில் சுட்டுக் கொல்லப்பட்டார். பிப்ரவரி 12-இல், காந்தியடிகளின் அஸ்தி கன்னியாகுமரியில் கரைக்கப்பட்டது.
1123	*1948*	மார்ச்சு மாதத்தில் திருவிதாங்கூர் பிரதிநிதித்துவ சபைக்கு நடைபெற்ற தேர்தலில் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அபேட்சகர் 14 பேர் வெற்றி பெற்றனர்.
1124	*1949*	பட்டம் தாணுப்பிள்ளையின் அரசாங்கம், தமிழர்களின் எதிர்ப்பாலும் பிற காரணங்களாலும், கவிழ்ந்தது. தமிழர்களின் எண்ணிக்கையை சட்டசபையில் குறைப்பதற்காகவும் மலையாளிகளின் எண்ணிக்கையை மிகுதியாக்கவும், திருவிதாங்கூர் கொச்சி ஆகிய இரு சமஸ்தானங்களையும் இணைக்க முயற்சி தொடங்கியது. இம்முயற்சியை எதிர்த்து, ஏப்ரல் 13-இல் (சித்திரை 1உ) திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் சட்டமறுப்பு இயக்கம் நடத்தினர். திருவிதாங்கூர், கொச்சி ஆகிய இரு சமஸ்தானங்களையும் சென்னை மாநிலத்

துடன் இணைத்துவிட வேண்டுமென்று திருவிதாங்கூர்த் தமிழர்கள் வேண்டினர் ; இவ் வேண்டுகோளை, இந்திய அரசாங்கத்தின் சமஸ்தான இலாகா ஆலோசகர் வி. பி. மேனன் ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

1124 *1949* ஜூலை 1-இல் இப்பகுதியும் திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தின் எஞ்சிய பகுதிகளோடு சேர்ந்து கொச்சி சம்ஸ்தானமும் அடங்கிய திருவாங்கூர்-கொச்சி என்ற புதிய இராச்சியம் ஏற்பட்டது. இந்த இராச்சியம் இந்திய யூனியன் உறுப்பு இராச்சியமாக அமைந்தது. திருவிதாங்கூர் மன்னரின் அதிகாரம் மறைந்து, அவர் ''இராசப் பிரமுகர்'' என்ற பெயரில் பெயரளவுக்கு ஆட்சித் தலைவர் ஆனார். திருவிதாங்கூர்த் தமிழருக்கு சர்தார் பட்டேல் உறுதிமொழி கூறினார்.

1125 *1950* இந்தியாவின் அரசியல் சட்டம் அமலுக்கு வந்தது.

1126 *1951* இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமலுக்கு வந்தது. திருவிதாங்கூர் — கொச்சி இராச்சியத்தில் இருந்ததால் கன்னியாகுமரிப் பகுதி ஒரு பயனும் பெறவில்லை.

1128 *1953* பெருஞ்சாணி அணை திறந்துவைக்கப்பட்டது.

1130 *1954* திருவிதாங்கூர்த் தமிழக விடுதலை நாள் ஆகஸ்டு 11-இல் கொண்டாடப்பெற்றது. திருவிதாங்கூர் - கொச்சி சட்டசபைத் தேர்தலில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் பெரிய அளவில் வெற்றி பெற்றனர்.

திரு நேசமணி தலைமையில் தமிழர் ''சத்தியாக்கிரகம்'' செய்தனர். தமிழர்களைச் சுட்டதால் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளின் காரணமாக, பட்டம் தாணுப்பிள்ளையின் அரசாங்கம்

கொல்லம் ஆண்டு	கி.பி. ஆண்டு	நிகழ்ச்சி
		பதவியிலிருந்து விலக நேர்ந்தது. பல கிளர்ச்சிகள் நடந்தன. தமிழர்-மலையாளிகள் உறவு சீர்குலைந்தது.
1130	*1954*	கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை மறைவு.
1131	*1956*	இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமலுக்கு வந்தது. இராச்சியங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று "இராச்சிய புனரமைப்புக் குழு" சிபார்சு செய்திருந்ததால், இந்தியா வெங்குமுள்ள எல்லைத் தகராருள பகுதிகளில் போலவே, இங்கும் தொழில் பொருளாதாரத் துறைகளில் ஒரு செயலும் நடைபெறவில்லை. வளர்ச்சித் திட்டங்களில் இப்பகுதி புறக்கணிக்கப்பட்டது.
		அக்டோபர் மாதத்தில் மகாத்மா காந்தி நினைவு மண்டபம் கன்னியாகுமரியில் கட்டி முடிக்கப்பெற்றது.
		நவம்பர் 1-இல் இந்தியாவெங்கும் மொழி அடிப்படையில் இராச்சியங்கள் அமைக்கப்பட்டன. திருவிதாங்கூர் மஹாராஜாவான சித்திரைத்திருநாள், தம் 45-ஆவது பிறந்த நாளாகிய இந்நாளில் ராஜப்பிரமுகர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்கள் திருவிதாங்கூர்-கொச்சி இராச்சியத்துத் திருவனந்தபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, சென்னை இராச்சியம் என்ற பெயருள்ள தமிழ்நாட்டில் சேர்க்கப்பட்டன. நாகர்கோயிலைத் தலைநகராகக் கொண்ட கன்னியாகுமரி என்ற புதுமாவட்டம் உருவாயிற்று.

1136	1956	நெய்யாற்றின்கரை, தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் வட்டங்களிலுள்ள தமிழர்கள் விடுதலை கிடைக்காமல் கேரள இராச்சியத்திலேயே தொடர்ந்து இருந்துவரலாயினர். இது தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் பெரு அளவில் வருத்தம் தந்தது. எனினும், கன்னியாகுமரி மீண்டும் தமிழ்நாட்டின் தென் எல்லையாகவேண்டும் என்ற மூன்று கோடித் தமிழர்களின் எண்ணம் இன்று நிறைவேறிற்று. நாகர்கோவிலில் ''இணைப்பு விழா'' முதலமைச்சர் காமராசர் தலைமையில் கொண்டாடப்பெற்றது.
1132	1957	கன்னியாகுமரியில் கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி தொடங்கிற்று.
1134	1959	நெய்யாறு நீர்ப்பாசனத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
		இம்மாவட்டத்தினராகிய சூரங்குடி டாக்டர் N. A. நூர் முகமது, இத்தாலிய சோமாலிலண்டு அரசாங்கத்துக்கு ஆலோசகராக ஐக்கிய நாடுகள் அவையினரால் நியமிக்கப்பட்டார்.
1135	1960	கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரிய அளவில் ரப்பர் பயிரிடும் திட்டம் உருவாகி, வேலை தொடங்கப்பெற்றது.
		நாகர்கோயிலிலிருந்து திருச்சி, கோயம்புத்தூர் போன்ற இடங்களுக்கு அரசாங்க பஸ் போக்குவரத்து ஏற்பட்டது.
1136	1961	பத்மனாபபுரம் அரண்மனை, தேசியப் பொருட்காட்சி நிலையமாக இந்திய அரசாங்கத்தாரால் எடுத்துக்கொள்ளப் பெற்றது.

	நாகர்கோவில்	கன்னியாகுமரி	சுசீந்திரம்	தக்கலை	பத்மனாபபுரம்	உதயகிரி	குளச்சல்	குழித்துறை	கொல்லங்கோடு	மணவாளக்குறிச்சி	பேச்சிப்பாறை அணை	பெருஞ்சாணி அணை	திருவனந்தபுரம்	திருநெல்வேலி
நாகர்கோவில்	கி.மீ.	19	5	15	17	13	23	32	48	16	40	35	68	80
கன்னியாகுமரி	19	...	15	35	37	34	42	53	68	35	60	54	86	85
சுசீந்திரம்	5	15	...	20	21	19	27	37	51	21	45	40	69	85
தக்கலை	15	35	19	...	1	1	12	17	32	18	24	19	51	95
பத்மனாபபுரம்	17	37	21	1	...	3	13	15	30	19	23	18	50	97
உதயகிரி	13	33	17	1	3	...	13	18	33	19	26	21	51	93
குளச்சல்	23	42	27	12	13	13	...	23	39	5	87	33	64	103
குழித்துறை	32	53	37	17	15	17	23	...	15	29	24	19	33	112
கொல்லங்கோடு	47	67	53	32	30	34	39	15	...	43	36	34	19	126
மணவாளக்குறிச்சி	17	37	21	17	19	19	6	29	43	...	42	37	70	97
பேச்சிப்பாறை அணை	40	59	45	24	23	26	37	24	38	42	...	17	58	120
பெருஞ்சாணி அணை	35	54	40	20	18	21	32	19	34	39	18	...	53	115

நாகர்கோயிலிலிருந்து சில ஊர்களின் தொலைவுகள்

	கி. மீ.
வள்ளியூர்	48
நாங்குனேரி	77
தூத்துக்குடி	135
கொச்சி துறைமுகம்	351
சென்னை	715

குறிப்பு

இந்நூலில் ஆளப்பெற்றிருக்கும் தமிழ்ச் சொற்களின் விவரம்

நாடு	இந்திய நாடு
மாநிலம்	தமிழ்நாடு
மாவட்டம்	டிஸ்டிரிக்டு
மாவட்ட ஆட்சித் தலைவர்	கலக்டர்
கோட்டம்	ரெவினியூ டிவிசன்
வட்டம்	தாலுகா
வட்டாரம்	பிளாக்

சைவத்திலும் வைணவத்திலும் ஊறித் திளைத்தது நாஞ்சில் நாடு. மூவர் தமிழும் முழங்கும் நாடு. முத்தமிழ் முழக்கம் கேட்கும் நாடு.

இது நன்செய் மிகுந்த வளநாடு. நாஞ்சில் வள்ளுவன் ஆண்ட நாடு. மாமதில்போல் மலைசூழும் நாடு. வானம் மாதம் மும்மாரி பொழியும் நாடு.

* * *

பண்ணை பெருத்த பழநாடு—சுற்றிப்
பார்த்திடக் கண்கள் குளிருநாடு
மண்ணையும் பொன்னாக மாற்றும்நாடு--கவி
வாணர் புகழும் தமிழ்நாடு.

—கவிமணி

BIBLIOGRAPHICAL DATA

Author's Name : S.M.L. Lakshmanan Chettiar, Somalay
Pseud. b. 1921

Title : Kanniakumari Maavattam
Vol. No, 3 in a series of books entitled "Namathu Tamilnadu."

Language : Tamil

Edition : First

Place of Publication : Madras

Publisher's Address : Paari Nilayam, 59, Broadway, Madras–1

Price : Rs 3-00

Pages : 208

Size of the book : 18 cm

Month of Publication : September 1961

Brief Indication of Contents :

This is a book giving encyclopaedic information on geography, history, educational institutions, industries, development projects. mineral resources, cultural trends, local dialects and places of tourist interest in the Kanniakumari District of Madras State. Maps of Nagercoil City and the District, Photographs, travel information and Statistical tables are appended.

Library Classification No.

Colon V. 44138. N. 6
Ko

Dewey 915. 482
L 234 K

மாவட்ட வரிசைகள் தமிழில் ஒரு சிறந்த முயற்சி. படித்ததோடும், கேட்டதோடும் நின்று விடாமல் 'சோமலெ' அவர்கள் முடிந்த வரையில் பல இடங்களை யும் நேரில் பார்த்து, பல ஆண்டுகள் முயன்று இவ் வரிசையை எழுதத்தொடங்கியுள்ளார்கள். ஆசிரியரின் இனிய எளிய தமிழ்நடையும், சுவைபடச் சொல்லும் ஆற்றலும், அங்கங்கே காணும் நகைச் சுவையும், மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுக் காட்டும் பகுதிகளும் படித்து இன்புறத் தக்கன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரித்தான நாட்டுப் பாடல்கள், அம்மாவட்டத்தில் மட்டும் வழங்கும் வழக்குச் சொற்கள் போன்ற பல புதிய பகுதிகளைக் கொடுத்திருப்பது இந்நூல்கள் முன்னர் வெளிவந்த கெஜட்டியர் போன்றவை அல்ல என்பதை யும் காட்டும். செந்தமிழ் நாட்டை அறிந்து நம் சிந்தை குளிரச் செய்வன 'சோமலெ' அவர்களின் தமிழ் நாடு மாவட்ட வரிசை நூல்கள்.

இந்த வரிசையில் இதுவரை வெளிவந்துள்ள நூல்கள்

★ சேலம் மாவட்டம்	ரூ. 3-00
★ கன்னியாகுமரி மாவட்டம்	ரூ. 3-00
★ கோயம்புத்தூர் மாவட்டம்	ரூ. 4-00
★ வட ஆர்க்காடு மாவட்டம்	ரூ. 3-00
★ தஞ்சாவூர் மாவட்டம்	ரூ. 6-00

இவை பாரிநிலைய வெளியீடுகள்

